# தொல்காப்பியம்

## உரைவளம்

## சொல்லதிகாரம்

# வேற்றுமையியல்


தொகுப்பாசிரியர்

ஆ. சிவலிங்கனார்

பதிப்பாசிரியர்

கோ. விசயராகவன்





உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# தொல்காப்பியம் சொல்லதிகாரம்

## (உரைவளம்)

## வேற்றுமையியல்


தொகுப்பாசிரியர்

ஆ. சிவலிங்கனார்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113

# நூல்விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **தொல்காப்பியம் - வேற்றுமை யியல்** |
| பதிப்பாசிரியர் | : | ஆ. சிவலிங்கனார்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>தரமணி, சென்னை - 600 113. |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை 600 113<br>தொலைபேசி எண் 044/22542992 |
| வெளியீட்டு எண் | : | A - 78 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு அக்டோபர் 1983 |
| மீள்பதிப்பு | : | 2015-2016 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6கிகி டி.என்.பி.எல்<br>வெள்ளை |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : | 10 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : | 24+248 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1000 |
| விலை | : | ரூ120/- (ரூபாய் நூற்றி இருபது மட்டும்) |
| அச்சகம் | : | ஸ்ரீசரவணா அச்சகம்<br>144, தம்புத் தெரு<br>சென்னை - 600 001 |
| பொருள் | : | இலக்கணம் |

முனைவர் **கோ. விசயராகவன்**

எம்.ஏ., எம்.ஃபில், எம்.பி.ஏ., பி.எட்., பிஎச்.டி.

இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

## அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை 12 நூல்கள் வெளிவந்துள்ளன. இப்போது 13 ஆம் நூலாக வேற்றுமையியல் உரைவளம் வெளிவருகிறது.

கிளவியாக்க உரைவள நூலிற்போலவே இதனிடத்தும் இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடர், பெயரறியப்படா ஒருவர் ஆகியோர் உரைகளும், வெள்ளைவாரணனார், சுப்பிரமணிய சாஸ்திரியார், ஆதித்தர், பதிப்பாசிரியர் ஆகியோர் கருத்துரைகளும், தற்கால மொழியியலறிஞர் கருத்துரைகளும் சூத்திரங்களுக்கு ஆங்கில மொழி பெயர்ப்புகளும் அடங்கியுள்ளன.

சிறந்த முறையில் உரைகளைத் தொகுத்துப் பதிப்பிக்கும் ஆ. சிவலிங்கனாரையும் அவர்க்கு உதவியவர்களையும் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு தமிழ்நாடு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். ஒல்லும்வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு தமிழ்நாடு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளை அவரது 67ஆம் ஆண்டு பிறந்தநாளில் நூலை வெளியிட்டு பதிவு செய்கின்றோம்.

தமிழ் வளர்ச்சிக்கும் இந்நிறுவன வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய மாண்புமிகு கே.சி. வீரமணி**

அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சியில் எங்களை வழிநடத்திவரும் **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம்** இ.ஆ.ப. அவர்களுக்கும் எம் இனிய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இந்த நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீசரவணா அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# பதிப்புரை

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடும் தொல்காப்பியச் சொல்லதிகார வேற்றுமையியல் உரைவளமாகிய இந்நூலில், சூத்திரங்களுக்கு இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடனார், ஒருவர் ஆகியோர் உரைகளும், வெள்ளைவாரணனார், ஆதித்தர் சுப்பிரமணிய சாஸ்திரியார் ஆகியோரின் உரைகளுள் தேவையான உரைகளும் குறிப்புகளும், மொழியியல் ஆய்வாளர் குறிப்புகளும், பதிப்பாசிரியர் கருத்துரைகளும், பிற்கால இலக்கண நூல்களின் ஒப்புமைச் சூத்திரங்களும், இலக்குவனார் கமீல் சுவபில் ஆகியோரின் ஆங்கில மொழிப்பெயர்ப்புகளும் இடம் பெற்றுள்ளன.

தொல்காப்பியச் சூத்திரங்களைப் பிரித்துப் பதிப்பிக்காமல் பிரிக்காமலேயே பதிப்பிக்க வேண்டும் எனச் சில அறிஞர் கூறுவதற்கு ஏற்ப முதலில் சூத்திரங்கள் பிரிக்கப்படாமலும், பின்னர் பிறைக்கோட்டுள் பிரிக்கப்பட்டும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இதனைக் கண்ணுறும் அறிஞர் கருத்து விரும்பப் படுகிறது.

இந்நூல் உருவாவதற்கு உதவிய டாக்டர் ச. சிவகாமி, டாக்டர் வை. இரத்தினசாபபதி, புலவர் க. வா. சச்சிதானந்தம், சுவடியியல் பயிற்சி மாணவி லலிதா ஆகியோருக்கு நன்றியுடையேன். இந்த நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீசரவணா அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.

ஆ.சி.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | III |
| பதிப்புரை | IV |
| பொருளடக்கம் | V |
| System of Transliteration | VI |
| சுருக்கவிளக்கம் | VII—VIII |
| வேற்றுமையியல்—உருபாய்வும் பொருட்சுருக்கமும் | IX—XXIV |
| வேற்றுமையியல் - விளக்கம் ... ... ... | 1—9 |
| வேற்றுமைத்தனையென்பது ... ... ... | 9—15 |
| வேற்றுமையின் பெயரும் முறையும் ... ... ... | 15—21 |
| எழுவாய் வேற்றுமை ... ... ... | 21—26 |
| எழுவாயின் பயனிலை ... ... ... | 27—47 |
| தொகைப் பெயர் பயனிலையேற்றல் ... ... ... | 47—57 |
| பெயர் யாவும் பயனிலையேற்கும் ... ... ... | 57—67 |
| உருபு நிற்கும் இடம் ... ... ... | 67—75 |
| பெயர் இலக்கணம் ஒன்று ... ... ... | 65—82 |
| இரண்டாம் வேற்றுமையும் பொருளும் ... ... ... | 82—109 |
| மூன்றாம் வேற்றுமையும் பொருளும் ... ... ... | 109—139 |
| நான்காம் வேற்றுமையும் பொருளும் ... ... ... | 140—153 |
| ஐந்தாம் வேற்றுமையும் பொருளும் ... ... ... | 154—169 |
| ஆறாம் வேற்றுமையும் பொருளும் ... ... ... | 170—190 |
| ஏழாம் வேற்றுமையும் பொருளும் ... ... ... | 191—214 |
| உருபுகள் தொகும் என்றல் ... ... ... | 214—224 |
| இணைப்பு ... ... ... | 228—232 |
| பயன்படுத்தப் பெற்ற நூல்கள் ... ... ... | 233—234 |
| சொல், தொடர், உதாரண அகராதி ... ... ... | 235—247 |
| சூத்திரமுதற்குறிப்பு அகராதி ... ... ... | —248 |

## System of Transliteration

### உயிரெழுத்துகள்—Vowels

| இலக்குவனார் | தமிழ் சுவடியில் |
|---|---|
| அ—a | a |
| ஆ—ā | ā |
| இ—i | i |
| ஈ—ī | ī |
| உ—u | u |
| ஊ—ū | ū |
| எ—e | e |
| ஏ—ē | ē |
| ஐ—ai | ai |
| ஒ—o | o |
| ஓ—ō | ō |
| ஔ—au | au |

### மெய்யெழுத்துகள்—Consonant

| | |
|---|---|
| **வல்லினம்** | |
| க்—k | k |
| ச்—s | c |
| ட்—ṭ | ṭ |
| த்—th | t |
| ப்—p | p |
| ற்—ṟ | ṟ |
| **மெல்லினம்** | |
| ங்—ṅ | ṅ |
| ஞ்—ñ | ñ |
| ண்—ṇ | ṇ |
| ந்—n | n |
| ம்—m | m |
| ன்—ṉ | ṉ |
| **இடையினம்** | |
| ய்—y | y |
| ர்—r | r |
| ல்—l | l |
| வ்—v | v |
| ழ்—ḻ | ḻ |
| ள்—ḷ | ḷ |

# சுருக்கவிளக்கம்

அகம்—அகநானூறு
ஆதி—ஆதித்தர்
ஆ.மொ—ஆங்கிலமொழிபெயர்ப்பு
இ.கொ.—இலக்கணக் கொத்து
இல—இலக்குவனார்
இல—(இ.வி)—இலக்கணவிளக்கம்
இ-ள்—இதன் பொருள்
இளம்—இளம்பூரணர்
இறை. கள—இறையனார் களவியல்
உ-ம்—உதாரணம்
எழு, எழுத்—எழுத்ததிகாரம்
எ-று—என்றவாறு
ஒரு—ஒருவர்
க. சு.—கமீல் சுவலபில்
கலி—கலித்தொகை
சிவ—சிவலிங்கனார்
சீவக—சீவக சிந்தாமணி
சுப்—சுப்பிரமணிய சாஸ்திரியார்
சு. வே.—சுவடி வேறுபாடு
சூ.—சூத்திரம்.
சொல்—சொல்லதிகாரம்
தொல்—தொல்காப்பியம்
தொன்—தொன்னூல் விளக்கம்
நச்.—நச்சினார்க்கினியர்
நற்—நற்றிணை
நன்—நன்னூல்
நாலடி—நாலடியார்
நான்மணி—நான்மணிக்கடிகை
நேமி—நேமிநாதம்
பி. இ. நூ.—பிற்கால இலக்கண நூல்கள்
பி. கு.—பிற்குறிப்பு
பிர.—பிரயோக விவேகம்
புண—புணரியல்

பு. வெ. மா.—புறப்பொருள் வெண்பா மாலை

புறம்—புறநானூறு

பேரா—பேராசிரியர்

பொருள்—பொருளதிகாரம்

முத்து.—முத்து வீரியம்

வீர—வீரசோழியம்

வெள்—வெள்ளைவாரணனார்

வேற்—வேற்றுமையியல்

வேற். ம—வேற்றுமை மயங்கியல்

# வேற்றுமையியல் - உருபு
# ஆய்வும், பொருட் சுருக்கமும்

## 1. வேற்றுமையுருபுகள்

### வேற்றுமை

வேற்றுமையுருபு என்பது வேற்றுமையாகிய உருபு என விரியும். உருபுக்கு வேற்றுமை என்ற சிறப்புப் பெயர் உண்டு. வேறுபடுத்துவது எதுவோ அது வேற்றுமை எனப்படும். உருபு தான் சாரும் பெயர்ப் பொருளை வேறுபடுத்தலின் வேற்றுமை எனப்படும். "ஐ யெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (தொல். சொல். 71) என்றார் தொல்காப்பியர். "பொருள் வேற்றுமை செய்வன வேற்றுமை" (நன், 291) என்றார் நன்னூலார்.

இடைச் சொற்கள் யாவும் தாம் சாரும் சொற்களின் பொருள்களை வேறுபடுப்பனவே. அதனால், 'இடைச் சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே' (தொல். சொல். எச்ச. 59) என்றார் தொல்காப்பியர். என்றாலும் ஐ, ஒடு முதலிய உருபிடைச் சொற்களே வேற்றுமை என்ற பெயர் பெற்றன, நெய் என்பது பசு நெய்க்கே ஆனது போல. ஐ முதலிய வேற்றுமைச் சொற்கள், தாம் பெயர்களிற் சார்ந்து வேறுபடுத்துதலும், சாராமல் மறைந்து நின்று வேறுபடுத்துதலும் என இரண்டு உடையன. மற்றைய இடைச் சொற்கள் சார்ந்து நின்றே வேறு படுப்பன. அதனால் வேற்றுமை என்ற பெயர் வேற்றுமையுருபு களுக்கேயுரியதாயிற்று என்னலாம்.

### வேற்றுமை எட்டு

வேற்றுமை எட்டு; உருபுகளும் எட்டு. அவை பெயர், ஐ, ஒடு கு, இன், அது, கண், விளி என்பனவாம். அவற்றுள் பெயரும் விளியும் தனித்தனவாக இல்லாமல் பெயர்ச்சொல் வடிவே அமைவன. மற்றையன தனித்தனிச் சொற்கள். அதனால் வேற்றுமையுருபு ஆறு என்பர்.

> ஐ ஒடு கு இன் அது கண் என்னும்
> அவ்வா றென்ப வேற்றுமை யுருபே (தொல். எழு. 113)

என்றார் ஆசிரியர் தொல்காப்பியர். நிலைவருமொழிகளாகச் சொற்கள் புணர்க்கப்படுதற்குரிய வகையில் வேற்றுமையுருபு ஆறெனப்பட்டன. தொடர் அமைப்பு முறையில் எட்டாகும்.

வேற்றுமைதாமே ஏழெனமொழிப (தொல். சொல். 62) எனத் தொல்காப்பியர் கூறியது அவர்க்கு முன்னோர் கொண்ட கருத்தையேயாம். தம் கருத்தாக—வழிநூல் செய்வார் கருத்தாக†

விளிகொள் வதன்கண் விளியொ டெட்டே (ஷ 63) என்றார்.

இதனால் வெளிப்படையாகத் தனிவடிவம் உடைய வேற்றுமையுருபுகள் ஆறு என்றும், விளியை நீக்கி எழுவாயுடன் ஏழு என்றும், விளியுடன் எட்டுஎன்றும் தொல்காப்பியர் காலத்தி லேயே வேறுபாடு இருந்துளது என அறியலாம். என்றாலும் தொல்காப்பியர் 'விளியொடு எட்டே' எனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறுதலின் அவர் கருத்து எட்டு என்பதேயாம். இனி அவ்வெட்டுருபுகள் பற்றிக் காண்போம்.

**முதல் வேற்றுமையுருபு**

முதல்வேற்றுமைக்கு உருபு தனியாக இல்லை. ஒரு பெயர் வருமொழியுடன் தொடரும் போது தன் தனித்தன்மையினின்றும் அதாவது பெயர்ச்சொல் என்ற நிலையினின்றும் வினைமுதல் என்ற பொருளைப் பெறுகின்றது. இம்மாற்றமே வேற்றுமை எனப்பட்டது.

எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே (தொல்) சொல்-65.

எனத் தொல்காப்பியரும்,

எழுவாய் உருபு திரிபில் பெயரே (நன். 295)

என அவரை ஒட்டி நன்னூலாரும் வரையறுத்தனர்.

'வேலன் வந்தான்' என்பது போலவே 'வேலன் ஆனவன் வந்தான்', 'வேலன் என்பவன் வந்தான்' என்பனவும் வழக்கில் இருத்தலின், ஆனவன், என்பவன் என்பனவற்றையும் வேற்றுமை யுருபு என்று பிற்கால இலக்கண நூலார் அமைத்தனர்.

''ஆயவன் ஆனவன் ஆவான் ஆகின்றவன் முதல்
ஐம்பாற் சொல்லும் பெயர்ப்பின் அடைதல் உருபு
என வெவ்வேறு உரைத்தனர் பலர்'' (இலக்கணக் கொத்து. 25)

என்றார் இலக்கணக் கொத்துடையார். அவரும் அவற்றை முழுமையாக உருபு என ஒப்பவில்லை.

''எழுத்தெனப்படுப...முப்பஃதென்ப'' (தொல். 1) என்று கூறிய தொல்காப்பியர் 'எனப்படுப' என்பதை உருபாகக் கருதியிருப்பரேல், 'பெயர்தோன்று நிலையே எழுவாய் உருபு' எனக் கூறியிருக்கமாட்டார்.

'வேலன் வந்தான்' என்று சொல்பவர் யாரும் 'வேலன் ஆனவன் வந்தான்' என்றோ 'வேலன் என்பவன் வந்தான்' என்றோ சொல்வதில்லை அவ்வாறு சொல்பவர் வேலனின் ஏதோ ஒரு சிறப்புக் கருதியே சொல்வர். எழுத்து 33; அவற்றுள் சிறப்பெழுத்துகள் 30 எனக் கூறவந்தவர் 'எழுத்தெனப் படுப' எனக் கூறினார். எனவே ஆனவன் என்பவன் என்பது போலும் சொற்கள் உருபுகள் என்று கூறுவது பொருந்தாது.

'வேலன் வந்தான்'என ஒருவன் ஒருவனிடம் கூறின் அவ் வேலன் இருவர்க்கும் முன்னர்த் தெரிந்தவனாவான். 'வேலன் என்பவன் வந்தான்' என ஒருவன் ஒருவனிடம் கூறின், வந்தவன் பெயர் வேலன் என்பதைத் தெரிவிப்பதாக அமையும் 'வேலன் ஆனவன் வந்தான்' எனின், தெரிந்த பலருள் வேலன் என்ற பெயருடையவன் வந்தான் எனப் பெறப்படும் எனவே ஆனவன் என்பவன் போலும். சொற்கள் பொருட்சிறப்புக்காக வருவன என்பது அறியலாம். ஆதலின் உருபுகள் ஆகா உருபுகள் எல்லாம் இடைச் சொற்கள். அதனால் அவற்றைச் சொல்லுருபுகள் என்பதும் பொருந்தாது ஏன் எனின் அவை வினைப்பொருள் உடையன.

மேலும், வேலன், என்பவன் என்னும் இரண்டு சொற்களும் ஒரு சொல்லாகி 'வந்தான்' என்பதனோடு தொடர்கின்றன.

> பெயரின் ஆகிய தொகையுமா ருளவே
> அவ்வும் உரிய அப்பா லான (தொல். சொல். 67)

என அவைபற்றி ஆசிரியர் அமைத்தார்.

**இரண்டாம் வேற்றுமையுருபு**

இரண்டாம் வேற்றுமையுருபு 'ஐ' ஒன்றே. இவ்வுருபு எந்த மாற்றமும் பெறவில்லை. இதன்பொருள் செயப்படு பொருளாம். வீட்டைக் கட்டினான் எனவரும்.

> ''இன்று பேச்சு வழக்கில் ஐ, அ—எ என்ற நிலைகளில் அமைகின்றது அவனைக் கண்டேன் என்பதை அவனக் கண்டேன், சோற்றைத் தின்றான்என்பதைச் சோத்றெத் தின்றான் என்று பேசுவதைக் காண்கின்றோம்''

என்பர் ச. வே. சுப்பிரமணியன்.

அகர இகரமும் ஐகாரமாகும், அகர எகரமும் ஐகாரம் ஆகும். எனவே ஐ என்பது அகர நிலையிலும் எகர நிலையிலும் ஒலிக்கப் படுவது வழக்கில் உண்டு. மலை—மல—மலே எனக் காணலாம். கன்னடத்தில் என்னைப்பார் என்பது 'நன்ன நோடு' என வழங்கும். காலப்போக்கில் இரண்டாம் வேற்றுமையுருபாக(ஐயின் திரிபாக) அ என்பதையும் கொள்ள நேரினும் வியப்பதற்கில்லை.

**மூன்றாம் வேற்றுமையுருபு**

மூன்றாம் வேற்றுமையுருபாக 'ஒடு' என்பதொன்றே தொல்காப்பியர் கூறினார். அது வினைமுதற் பொருளிலும் கருவிப் பொருளிலும் வரும் என்றார் (தொல் சொல் 73)

"ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்"
"நாவொடு நவிலாது" (சிலம்பு; 5 137)

இவற்றில் ஒடு உருபு கருவிப்பொருளில் வந்துளது. ஆனால் வினை முதற் பொருளில் வந்ததற்கு உதாரணம் காணப்படவில்லை.

அரசனொடு கட்டிய கோயில், வாளொடு வெட்டினான் என்பன போலத்தான் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னர் வழங்கியிருத்தல் வேண்டும். அவ்வழக்கு அவர்காலத்தில் அருகி 'ஆன்' உருபு பெருகியிருக்கவேண்டும்.

'ஒடு' உருபை முதலில் மூன்றாம் வேற்றுமைக்கு முன்னோர் கருத்துப்படிக் கூறியவர் உடம்பொடு புணர்த்தலால்,

ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும் (தொல் சொல் 97) எனவும்,

கு ஐ ஆன் என (தொல். சொல்-108)

எனவும் ஆன் உருபைக் கூறினார். அன்றியும் ஒடு உருபின்பால் சார்த்தப்படும் பொருள் கூறத் தொடங்கும்போது, 'அதனின் இயறல்' (சொல். 74) என 'ஆன்' உருபின் பொருளதாய்க் கூறினார்.

அதனாற் செயற்படற் கொத்த கிளவி (தொல், சொல். 110) என்று தாமே சுட்டுப்பெயரில் ஆன் உருபைச் சேர்த்துக்கூறினார்.

ஒடு உருபைக் கூறியது முதல் நூலாசிரியர் கருத்தைக் கூறினார் என்றும்,ஆன் உருபைச்சேர்த்தது தாம் வழிநூல் செய்தலின் வழி நூலாசிரியர் மதம் பற்றிக் கூறினர் என்றும் கொள்ளலாம்.

ஒடு உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வருவதைத் தொல்காப்பியர் அதனொடு மயங்கல் (எள்ளொடு விராய அரிசி)

அதனொடியைந்த ஒரு வினைக்கிளவி (ஆசிரியனொடு மாணாக்கன் வந்தான்)

அதனொடியைந்த வேறுவினைக்கிளவி (மலையொடு பொருத யானை)

அதனொடியைந்த ஒப்பல் ஒப்புரை (பொன்னோடிரும் பனையர்)

என நான்கு பிரிவில் கூறினர். இவை நான்கும் உடனிகழ்ச்சி என ஒன்றாகும்.

இன்று ஒடு உருபு உடனிகழ்ச்சி ஒன்றிலேயே அடங்கிவிட்டது. அதனால் 'நாவொடு நவிலா' என்ற இடத்தில் 'ஒடு' தன் பொருளைவிட்டு 'ஆன்' என்பதன் பொருளில் வந்ததாகவும் கூறினர்.

'ஒடு' என்பது 'ஓடு' எனவும், 'ஆன்' என்பது 'ஆல்' எனவும் பின்னர்த் திரிந்தன. 'ஒடு' உருபு வற்புறுத்தற் பொருட்டும், 'உறுதிப்படுத்தற் பொருட்டும் 'ஓடு' எனத் திரியும். 'அவனோடு வா' எனப் பேச்சு வழக்கில் காணலாம். இதுவே செய்யுளில் இசையின்பம் கருதி நீளலும் உண்டு.

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு (குறள் 632)

என்னும் குறட்பாவில் 'ஆள்வினையொடு' என்பது 'ஆள்வினை யோடு' என நீண்டது காண்க. இங்கு 'ஒடு' என்பது உம்மைப் பொருள் தருவதோர் இடைச் சொல்லாயினும் சொல் ஒற்றுமை காண்க. அதனால் இக்காலத்தில் பேச்சு வழக்கில் 'ஓடு' என்பதே நிலைப்பதாயிற்று. 'ஒடு' என்பது செய்யுளோடு நின்றது.

'ஆன்' உருபு தொல்காப்பியர்க்குப் பின்னர் 'ஆல்' எனத் திரிந்தது. 'ஆல்' உருபு செல்வாக்குப் பெற'ஆன்' உருபு உலக வழக்கொழிந்து செய்யுளில் நின்றது. அதற்குக் காரணம் 'ஆன்' என்பதொரு சாரியை வந்ததே என்னலாம்

'பரணி நாளில் கொண்டான்' என்றபொருளில், 'பரணியான் கொண்டான்' என்ற தொடர் வழங்கப்பட்டது. இதில் 'ஆன்' என்பது சாரியை. 'பரணியான்' என்பது ஏழாம் வேற்றுமைப் பொருளது. இதில் 'ஆன்' என்பது மூன்றாம் வேற்றுமையாயின் 'கொண்டான்' என்ற வினைக்குப் பரணி கருவியாகாது. எனவே இதில் உள்ள 'ஆன்' மயக்கத்துக்குரியது. ஆதலின் அதனைப் போக்க நாளடைவில் 'ஆல்' என்பதனை உருபாகக் கொண்டனர் என்னலாம். உலக வழக்கில் 'ஆல்' உருபு உண்டே தவிர 'ஆன்' உருபு இல்லை.

எனவே இன்று மூன்றாம் வேற்றுமையுருபுகளாக 'ஓடு' என்பதும் 'ஆல்' என்பதுமே அமைந்தன. நன்னூலாரும் ஆல் ஆன் ஒடு ஓடு (நன். 297) என வரிசைப்படுத்தியதும் காண்க.

'ஒடு' என்பது 'உடன்' எனவும் வரும். 'உடன்' என்பதில் 'அன்' என்பதே 'ஆன்' என்றாகியது. 'வாளொடு வந்தான்', வாளுடன் வந்தான், வாளொடு வெட்டினான், வாளுடன்

வெட்டினான் என வழங்கிய பின்னர், வாளுடன் வெட்டினான் என்பது வாளான் வெட்டினான் என மாறியிருக்க வேண்டும்.

ஒடு-வின் மூலம் 'உடு' ஆகலாம். உகரம் ஒகரமாகத் திரியும். உடம்பு-ஒடம்பு, உயரம்-ஒயரம், துடை-தொடை, துளை-தொளை, துளைத்தல்-தொளைத்தல் எனக் காணலாம். எனவே 'உடு' என்பது 'ஒடு' என்றாகிறது. 'உடன்' என்றது உடு+அன் எனபபிரிந்து, உடு ஒடு ஆகிய பின்னர் 'அன்' என்பது 'ஆன்' ஆகியிருக்க வேண்டும். ஒடு பெரு வழக்காக 'ஆன்' மறையும் நிலையில் இருந்த காலம் தொல்காப்பியர்க்கு முற்பட்ட காலம். அதனால் 'ஒடு' ஒன்றை மட்டில் மூன்றாம் வேற்றுமையுருபு என்றார். அவர் காலத்தில் 'ஆன்' தனித்து 'வாளான்' என்பது போல வழங்கினமையின் அதை உடம்பொடு புணர்த்தலால் சேர்த்தார்.

இவ்வகையில் உடன் என்பதே உடு+அன் எனப் பிரிந்து உடு ஒடு ஆகி ஒடுவும், அன் ஆனாகி ஆனும் மூன்றாம் வேற்றுமை யுருபுகள் ஆயின. 'உடன்' என்ற சொல்லைச் சொல்லுருபு எனக் கொண்டனர் பிற்காலத்தார்.

'வாள் கொண்டு வெட்டினான்' என வரும் வழக்கை வைத்துக் 'கொண்டு' என்பது கருவிப் பொருளுக்குச் சொல்லுரு பாக வரும் என்பர். 'மண் வைத்துக் குடம் செய்தான்' என்றும் வழக்குண்மையால் 'வைத்து' என்பதும் சொல் உருபு என்ன லாம். 'வாள் கொண்டு' என்னும்போது, 'வாளைக் கொண்டு' என்று விரிதலின் 'கொண்டு' என்பதை உருபாகக் கொள்வது கூடாது. உருபு மேலும் ஓர் உருபை விரிக்குமாறு அமையாது, அதனால் மூன்றாம் வேற்றுமைக்குச் சொல்உருபு கொள்ளுதல் பொருந்தாது. 'அவனுடன் இவன் வந்தான்' என்றதில் 'உடன்' என்பது சொல்லுருபு என்னலாம். ஆயினும் அது சொல்நிலையில் இன்றி 'ஒடு' என்பது போன்று உருபு நிலையிலேயே இருப்ப தாகக் கொள்ளுதல் வேண்டும்.

### நான்காம் வேற்றுமையுருபு

நான்காம் வேற்றுமையுருபு 'கு' ஒன்றேயாம். தொழிற் பெயரை விட்டுப் பிறபெயர்ச் சொற்களில் வரும்போது எச்சப் பொருளாகவும் அமைகிறது. 'உணற்கு வந்தான்' என்றால் 'உண்ண வந்தான்' எனச் செய என்னும் வாய்பாட்டு வினை யெச்சப் பொருளிலும் வருகிறது. 'உணற்கு' என்பதில் குகரம் உருபா வினையெச்ச விகுதியா என்பது தடுமாற்றத்திற்குரியது,

'கு' உருபு 'கண்' உருபின் திரிபாகலாம் எனக் கருதுகின்றேன்.

அவனுக்குச் சேர்த்தான்
ஊர்க்குச் சென்றான்
மாதத்துக்கு நாள்முப்பது
மலர்க்கு மணம்
அழகுக்கு அழகு
வாழ்க்கைக்குத் துணை
வாழ்க்கைக்குக் குறை என்ன?

இக்காட்டிய யாவும் ஏழாம் வேற்றுமை 'கண்' உருபுப் பொருளில் வருவதைக் காணலாம். வேற்றுமை மயக்கம் எனலாம் ஆயினும் குவ்வுருபுக்கெனத் தனிச்சிறப்புப் பொருள் இல்லை. ஏற்றுக்கோடல் என்பது பொருளாயினும் இடப்பொருளும் அமைந்துவிடுதலைக் காணுகிறோம். எனவே கண், கு என மாறிற்றோ, கு, கண் என மாறிற்றோ என ஆய்வு செய்தற்குரிய நிலையில் இரண்டுருபுகளும் உள்ளன என்பது மட்டும் தெளிவு.

**ஐந்தாம் வேற்றுமையுருபு**

ஐந்தாம் வேற்றுமையுருபாக 'இன்' ஒன்றே கூறினர் தொல்காப்பியர். நன்னூலார் 'இல்' என்பதும் கூறினார். இவ்விரண்டுருபுகளும் செய்யுள் வழக்கிலேயே அமைந்துவிட்டன. உலக வழக்கில் 'இல்' மட்டும் வந்தாலும் 'இருந்து' என்ற சொல்லை உடன் கொண்டே வருகின்றது. வீட்டைக் கட்டினான், வாளால் வெட்டினான், முருகனுக்குக் கொடுத்தான், முருகனது புத்தகம் என்பன போல மரத்தின் வீழ்ந்தான்—மரத்தில் வீழ்ந்தான் என்பது உலக வழக்கில் இல்லை. மரத்தில் இருந்து வீழ்ந்தான் என்றே பேசப்படுகின்றது. இதற்குக் காரணம் என்னை?

'வீட்டில் வந்தான்' என்றால் 'வீட்டிலிருந்து வந்தான்' எனப் பொருள்தரும் போது ஐந்தாம் வேற்றுமையாகிறது. அதுவே 'வீட்டின்கண் வந்தான்' எனப் பொருள் தரும்போது ஏழாம் வேற்றுமையாகிறது. 'காட்டில் ஓடியமான்' என்பதையும் அவ்வாறே காணலாம். எனவே இவ்விரண்டு வேற்றுமைகளின் வேறுபாடு அறியவே 'இருந்து' என்ற சொல் தேவைப்படுகின்றது. 'வீட்டிலிருந்து வந்தான்' 'காட்டிலிருந்து ஓடியமான்' என்றே கூற வேண்டுவதாயிற்று.

இனித் தொல்காப்பியர் 'இன்' ஒன்றே கூற 'இல்' என்பது வந்ததெப்படி என வினவலாம்.

'இன்' என்பது சாரியையாகவும் பயன்படுகின்றது. வாளினை வாளினால், வாளினுக்கு, வாளினது, வாளின் கண் என எல்லா

உருபுகளோடும் இன் சாரியை வரும். வாளின் வெட்டினான் என மூன்றாம் வேற்றுமையிலும், முருகனின் மகன் என நான்காம் வேற்றுமையிலும், முருகனின் புத்தகம் என ஆறாம் வேற்றுமையிலும், வீட்டின் இருந்தான் என ஏழாம் வேற்றுமையிலும் உருபுகள் இல்லாமல் 'இன்' சாரியை வந்துளது. ஆனால் 'மலையின் வீழ் அருவி' என்பதை 'மலையினின் வீழ்அருவி' என இன் உருபின் மேல் இன் சாரியை வருதல் இல்லை. ஒருகால் வரும் என்றே கொண்டால் 'மலையின் வீழ் அருவி' என்பதில் உள்ள 'இன்' வாளின் வெட்டினான்' என்பது போல உருபு இன்றி வந்ததா, அல்லது அதுவே உருபா என்ற ஐயம் நேர்கிறது. அதனால்,

இன் என வரூஉம் வேற்றுமை யுருபிற்கு
இன்என் சாரியை இன்மை வேண்டும். (தொல். எழுத் 131)

என ஆணையிட வேண்டுவதாயிற்று. காலப் போக்கில் உலக வழக்கில் 'இன்' என்பதற்குப் பதில் 'இல்' உருபே அமைந்தது. னகரம் லகரமாக உலக வழக்கில் திரியும். திறன்—திறல், வரின்—வரில், உண்ணின்—உண்ணில் எனக் காண்க. 'ஆன்' உருபு 'ஆல்' எனத் திரிந்ததும் இங்கு நோக்கத்தக்கது.

**ஆறாம் வேற்றுமையுருபு**

தொல்காப்பியர் 'அது' ஒன்றே ஆறாம் வேற்றுமையுருபு என்றார். ஒருமை பன்மைப் பாகுபாடு கூறவில்லை. முருகனது கை, முருகனது கைகள் என இரண்டிலும் 'அது' உருபு வரும் என்பதே அவர் கருத்து. பிற்காலத்து நன்னூலார் ஒருமைக்கு அதுவும், பன்மைக்கு 'அ'வும் உருபுகள் என்றார். மேலும் 'ஆது' என்பதும் ஒருமையுருபு என்றார். 'அது' என்பது செய்யுளில் மட்டும் ஓசை நோக்கி 'ஆது' என வரும். எனதுகை—எனாது கை எனக் காண்க. உலக வழக்கில் எனதுகை என்பது மட்டுமேயுண்டு. அன்றியும் யான், நீ, தான் என்பன திரிந்து என் நின் தன் என வரும் போது எனாது நினாது தனாது என 'ஆது' வருமேயன்றி 'முருகனாது கை' என்பதுபோல இயற்பெயர் வழி வருதல் இல்லை. அதனால் செய்யுளில் அது என்பதை நீட்டும் வழி நீட்டல் என்ற முறைப்படி ஓசைக்காக நீட்டினமை கண்டு நன்னூலார் (அவர் முன்னோர் வீரசோழிய நூலாரும்) ஆதுவைப் புகுத்திவிட்டனர்.

இனி அகர உருபைப் புகுத்தியது ஏன் எனக் காண்போம். கட்டினான் வீட்டை, வெட்டினான் வாளால் என்பன போலப்

பிற உருபுகள் தொடர் மொழியின் ஈற்றில் நின்றாலும் தத்தம் பொருளில் மாறுபடுதல் இல்லை. 'முருகனது கை' என்பது, 'கை முருகனது' என மாறி நிற்கின், 'முருகனது என்பது 'முருக னுடையது' என்ற பொருளில் குறிப்பு வினை முற்றாகிறது. அப்போது, 'முருகனது' என்பது ஒருமையாகிறது. 'முருகனது கைகள்' என்பதை 'கைகள் முருகனது' என மாற்றின் ஒருமை பன்மை வழுவாகின்றது, 'முருகனது' என்பது ஆறாம் வேற்றுமை யாயின் முருகன்+அது எனப் பிரிக்கப்படும்; குறிப்பு வினை முற்றாயின் முருகன்+அ+து எனப் பிரிக்கப்படும். இவ்வாறு வேறுபாடு காணாமல் 'அது' என ஒரு சொல்லாகவே கொண்ட மையால் நன்னூலார்க்குச் சிக்கல் ஏற்பட்டது. அதனால் அவர், முருகனது என்பதில் 'து' வை ஒருமையாக மயங்கினமையால் பன்மைக்குத் தனி உருபு தேவை என எண்ணினார் போலும். 'எனது கை' என்பது 'கை எனது' என வருவதுபோல ''நினவ கூறுவல் எனவ கேண் மதி'' 'நினவ' 'எனவ' என்பன 'நின்னுடையன' 'என்னுடையன' எனப் பொருள்தருதலின் அகரத்தைப்பன்மையுருபாகக் கொள்ள லாம் என்ற முடிவுக்குவந்தார். (வந்தன என்பதில் அகரம் பன்மை விகுதியாதலைக் காண்க) 'என கைகள்' என்பது உதாரணம் ஆயிற்று. எனவே மற்றைய வேற்றுமைகளில் இல்லாத ஒருமை பன்மை வகை ஆறாம் வேற்றுமைக்கு மட்டும் கொண்டது, 'அது' உருபுக்கும் 'து' விகுதிக்கும் வேறுபாடு காணாமையேயாகும். ''ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே'' (நன். 293) என்ற அவர் சூத்திரமும் மயக்கப் பொருளைத் தந்தமையால் உரைகூறு வோரும் ஆறாம் வேற்றுமையுருபு மற்றை வேற்றுமையுருபுகளை யும் ஏற்று வரும் எனக் கூறியதாகக்கொண்டு சாத்தனதனை சாத்தனதனால் முதலியவாக உதாரணம் காட்டினர்.

எனவே ஒருமைக்கும் பன்மைக்கும் 'அது' உருபு ஒன்றே சாலும். 'தன கைகள்' என்பதற்குப் பதில் 'தனது கைகள்' என்றே கூறலாம். 'தன கைகள்' என்பதில் 'தன' என்பது தன் னுடையவாகிய எனப் பொருள்பட்டு அத்தொடர் இரு பெயரொட்டாகும்.

'முருகனுடையகை' என வருவது கொண்டு 'உடைய' என்பது சொல் உருபு என்பர். 'அது' என்பதன் திரிபாக 'உடைய' என்பனதக் கொள்ளலாம், அன்றி 'உடன்' என்பது 'ஒடு' என ஆகி மூன்றாம் வேற்றுமைக்கும் 'உடைய' என்றாகி ஆறாம் வேற்றுமைக்கும் ஆகியது என்னலாம்.

இனி முருகனின் கை என்ற விடத்தில் 'இன்' என்பது ஆறாம் வேற்றுமை உருபுப் பொருளில் வருதலின் 'இன்' என்பதும் ஆறன் உருபாகலாம் என்பாரும் உளர். அங்ஙனமாயின் வாளின் வெட்டினான், வீட்டின் இருந்தான் எனவும் வருதலின் பிற வேற்றுமைகளுக்கும் உருபாம் எனவும் கூற நேரும். எல்லாவுருபுகளுடனும் வருதலின் 'இன்' சாரியை என்பதற்கே ஏற்புடையதாம். உலக வழக்கில் 'முருகனின் கை' என வழங்குதல் இல்லை.

### ஏழாம் வேற்றுமையுருபு

ஏழாம் வேற்றுமையுருபு 'கண்' ஆகும். இக்காலத்தில் 'இல்' என்ற ஒன்றே வழக்கில் உள்ளது. வீட்டில் இருந்தான் என்பதே வழக்கு.

கால், கடை, இடம், இல், இன் முதலிய உருபுகளும் உண்டு என்பர் நன்னூலார். தொல்காப்பியர் கால் முதலியன ஏழாவதன் பொருளில் வரும் என்றார். அவை உருபு என்பாரும் உருபின் பொருள்பட வருவன என்பாரும் என இருவகையர் உளர்; உருபு என்றால் அது எல்லாப் பெயர்ச் சொற்களிலும் சேர்க்கப்படும். கால் முதலியன குறிப்பிட்ட சொற்களில்தான் சேர்க்கப்படும். 'ஊர்க்கால் நிவந்த பொதும்பர்' என்பதை, ஊர்க்கண் நிவந்த பொதும்பர் என்னலாம் 'வீட்டுககண் இருந்தான்' என்பதை 'வீட்டுக்கால் இருந்தான்' என்பதில்லை. இப்படியே பிறவும்.

'கண்' உருபு வருமிடத்தில் வந்த இன்சாரியை பிறகு உருபு நிலையடைந்திருக்க வேண்டும். வீட்டின்கண் இருந்தான் என்பது பின்னர் 'கண்' உருபு தொக 'வீட்டின் இருந்தான்' என வந்து 'இன்', 'இல்' எனமாறி 'வீட்டில் இருந்தான்' என வந்ததாகலாம். 'இல்' வழக்கு பெரும்பான்மையாகவே இன்னும் கண்ணும் அருகிச் செய்யுளளவில் நின்றன.

### எட்டாம் வேற்றுமையுருபு

எட்டாம் வேற்றுமைக்குத் தனி உருபு இல்லை. பெயரினது விகாரமே உருபு. அண்மை சேய்மைக்கு ஏற்ற விகாரம்பலவாகும். இவ்வேற்றுமையின் நோக்கம் ஒருவனைத் தன் முகமாக அழைப்பதுவேயாம். தனியுருபு இன்மையின் ஆய்வுக்குரிய தன்று.

### தொகுப்புரை

1. பெயரை வேறுபடுத்தலின் உருபு, வேற்றுமையெனப் பட்டது.

2. முதல் வேற்றுமை பெயர் தோன்று நிலையே. ஆனவன் முதலியன உருபுகள் ஆகா.

3. 'உடன்' என்பதன் திரிபே 'ஒடு' உருபும் 'ஆன்' உருபும்

4. ஐந்தன் உருபு இன். அது இல் எனத் திரிந்து நிலைத்தது; இன் அருகியது.

5. ஆறன் உருபு அது ஒன்றே. ஒருமைக்கும் பன்மைக்கும் உருபு அது. அகரப்பன்மை வழக்கு பிற்காலத்தது.

6. ஏழாம் வேற்றுமையுருபு 'கண்' ஒன்றே. கால், கடை முதலியன அதன் பொருள் படுவன.$

## 2. பொருட் சுருக்கம்

**முதல் வேற்றுமை :**

வேற்றுமை ஏழ் என்று கூறுவர் (1) விளியைச் சேர்த்து எட்டாகும் (2)அவற்றின் பெயர்கள் பெயர் வேற்றுமை, ஐ வேற்றுமை, ஒடு வேற்றுமை, குவ் வேற்றுமை, இன் வேற்றுமை, அது வேற்றுமை, கண் வேற்றுமை, விளி வேற்றுமை எனப் பெறும். (3,8) அவை யாவும் பெயர்ச் சொல்லின் இறுதியில் வரும். (3) பெயர் வேற்றுமை என்பது எழுவாய் வேற்றுமை என்றும் சொல்லப் பெறும். அதுவே முதல் வேற்றுமையாம். அது பெயர்ச்சொல்லின் ஈற்றில் வரும் என்பதில்லாமல் அப் பெயர் முழுதுமே எழுவாய் வேற்றுமை எனப்படும். (4)

எழுவாய் வேற்றுமை கொண்டுமுடியும் சொற்கள் பயனிலை யெனப்படும். கொண்டு முடிதலாவது பொருள் தொடர்ந்து முடிதல். அதனைப்பயனிலையென்றோ பொருள்நிலையென்றோ கூறுவர். அவ்வாறு எழுவாய் கொண்டு முடியும் வகைகள் ஆறாம்(5) அவை உதாரணங்களுடன் வருமாறு:

---

$ குறிப்பு: இதுவரையுள்ள பகுதி சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழித்துறை 13-11-1980-இல் நடத்திய சிறப்புக் கருத்தரங்கில் படிக்கப்பட்டது. தமிழ்மொழித் துறைப் பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கட்கு நன்றி.

(1) பொருண்மை சுட்டல்: ஒரு பொருளின் பொதுவான உண்மைத் தன்மையைச் சுட்ட வருவது. ஆவுண்டு என்பது

(2) வியங்கொள வருதல்: எழுவாயானது அதாவது முதலில் உள்ள சொல்லானது ஏவலைக் கொள்ளுமாறு வருதல்—ஏவலைக் கொள்ளுமாறு வருதலாவது ஏவற்சொல்லைக் கொண்டு முடிதல். ஆ செல்க என்பது

(3) வினை நிலையுரைத்தல்: அவ்வெழுவாயினது தொழிலைச் சொல்லுதல். அதாவது அவ்வெழுவாய் தன் தொழிலைக் கூறும் சொல்லைக் கொண்டு முடிதல். ஆ கிடந்தது.

(4) வினாவிற்கு ஏற்றல்: அவ்வெழுவாய் தான் வினாவப் பட்டு வருதல். அதாவது வினாப் பொருளைத் தரும் சொல்லைக் கொண்டு முடிதல். ஆ யாது என்பது.

(5) பண்புகொள வருதல்: அவ்வெழுவாய் தன் பண்பினைக் கொண்டு முடியுமாறு வருதல். அதாவது தன் பண்பினையுணர்த்தும் சொல்லைக் கொண்டு முடிதல். ஆ கரிது என்பது.

(6) பெயர்கொள வருதல்; அவ்வெழுவாய் வேறும் ஒரு பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிதல். ஆ பல என்பது.

இப்படிக் கொண்டு முடியும் செயலை மேற்கொள்வதால் எழுவாய் வினைமுதல் எனப்படும்.

பெயர்ச்சொல் தனிப் பெயர்ச் சொல்லாக இருந்து எழுவாயாகிப் பயனிலை கொள்வது மட்டுமன்றி அறுவகைத் தொகைத் தொடர்மொழிகளாகவும் இருந்து பயனிலை கொள்ளும். (6)
)

சாத்தன் மகன் வந்தான் (=சாத்தனுக்கு மகன் வந்தான் என்பது சாத்தன் மகன் என நான்காம் வேற்றுமைத்தொகைத் தொடராக இருந்து ஒரு சொல் போலாகி, வந்தான் என்னும் பயனிலை கொண்டது. இப்படியே,

கொல் யானை வந்தது—வினைத் தொகை
கருங்குதிரை வந்தது—பண்புத் தொகை
புலி மறவர் வந்தனர்—உவமத் தொகை
இராப்பகல் கழிந்தன—உம்மைத் தொகை
பொற்றொடி வந்தாள்—அன்மொழித் தொகை

என்பனவற்றையும் அறிக.

எழுவாய் வேற்றுமை பயனிலை கொள்ளும்போது வெளிப் படையாக வந்தே பயனிலை கொள்ளும். அதுவே சிறந்தது. வெளிப்படாது பயனிலை கொள்வதும் உண்டு; அது சிறந்த தன்று. யான் வந்தேன் என்பதில் யான் என்னும் எழுவாய் உண்டு. அது வந்தேன் என்னும் வினைநிலை யுரைத்தலாகிய பயனிலை கொண்டது. 'யான் வந்தேன்; பின்னர் உண்டேன்' என்பதில் உண்டேன் என்பதற்கு எழுவாய் வெளிப்படையாக இல்லை; எனினும் யான் என்பது வெளிப்படாமல் இருந்து உண்டேன் என்பதைக் கொண்டு முடிந்தது என்னல் வேண்டும் இதனைத் தோன்றா எழுவாய் என்பர். (7)

பெயர்ச்சொற்களுள் வினையடியாக வரும் பெயரும் உண்டு. அது வினைப்பெயர் அல்லது வினையாலணையும் பெயர் எனப் படும். அப்பெயர்ச்சொல் காலம் காட்டும். பிறபெயர்ச் சொற்கள் காலம் காட்டா. (9)

**இரண்டாம் வேற்றுமை**

முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் பெயர் வடிவிலேயே இருப்பன. இரண்டு முதல் ஏழு வரையுள்ள ஆறு வேற்றுமைகளும் ஆறு உருபுகளைத் தனித்தனியுடையன. இரண் டாம் வேற்றுமைக்கு உருபு ஐ. அது ஐ வேற்றுமை எனவும்படும். அது தெரிநிலை வினை குறிப்பு வினை என்னும் இரண்டினையும் அடிப்படையாகக் கொண்டு வரும். உதாரணம் குடத்தை வனைந்தான், குடத்தை உடையன் என்பன. வினை என்பது செயல். வினை நிகழ்ந்தது என்றால்—செயல் நிகழ்ந்தது என்றால் அதனால் ஒரு பொருள் தோன்றி விடும். அப்பொருள் செயப்படு பொருள் எனப்படும். எனவே தெரிநிலை குறிப்பு வினைகளின் அடிப்படையில் இரண்டாம் வேற்றுமை தோன்றும் என்றால் செயப்படுபொருள் காரணமாகத் தோன்றும் என்பதாம். அச்செயப்படு பொருள்களின் வகை இருபத்தெட்டு ஆகும். அவை காப்பு முதலாகச் சிதைப்பு ஈறாக உள்ளன. ஊரைக் காக்கும் என்பது முதலாக நாட்டைச் சிதைக்கும் என்பது ஈறாக உதாரணங்கள் கூறலாம். (10)*

---

* இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமையீறாக உள்ளவற்றுக்கு அவற்றின் பொருட் பாகுபாட்டின் விரிகளையும் உதாரணங்களையும் அவ்வச் சூத்திரங் களின் உரைகளிற் காண்க.

## மூன்றாம் வேற்றுமை

ஒடு வேற்றுமை மூன்றாம் வேற்றுமையாகும். மூன்றாம் வேற்றுமைக்கு ஆன் என்பதும் உருபாகும். அது வினைமுதற் பொருள் கருவிப்பொருள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு வரும். வினை முதலானது இயற்றும் வினைமுதல் ஏவும் வினை முதல் என இருவகைப்படும். நாயால் கடிக்கப்பட்டான்; இது இயற்றும் வினை முதல். அரசனால் தூக்கிடப்பட்டான்; இது ஏவும் வினைமுதல். கருவியும் இரு வகைப்படும், முதற்கருவி துணைக்கருவியென. மண்ணான் இயன்ற குடம் என்பது முதற்கருவி; வாளான் வெட்டினான் என்பது துணைக் கருவி.

அதனின் இயறல் முதலாக இன் ஆன் ஏது என்பது ஈறாக உள்ள பத்து வகையிலும் பிற வகையிலுமாக மூன்றாம் வேற்றுமைப் பொருள் வரும். உதாரணம் தச்சனாற் செய்யப் பட்ட தேர் என்பது முதலாக முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது என்பது ஈறாகவும் பிறவாகவும் காண்க.

ஆன் உருபு வினைமுதல் கருவியாகியவற்றிற்கு வர ஒடு உருபு உடன்நிகழ்ச்சிப் பொருவில் வரும். சாத்தனொடு கொற்றன் வந்தான் எனக்காண்க. (11)

## நான்காம் வேற்றுமை

கு என்னும் வேற்றுமை நான்காம் வேற்றுமையாம். அது கோடற் பொருளில் வரும் புலவர்க்குப் பரிசில் என்பது உதாரணம். அது அதற் பொருட்டாதல் முதலாகச் சிறப்பு என்ப தீறாகவுள்ள பொருள்வகைகளிலும் பிறவகைகளிலும் வரும். கரும்பிற்குவேலி என்பது முதலாகக் கற்பார்க்குச் சிறந்தது செவி' என்பதீறாகவும் பிறவாகவும் உதாரணம் காண்க. (12)

## ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமையாக இன் வேற்றுமை கூறப்படும். அது 'இதனின் இத்தன்மைத்து இது' என்னும் படியான பொருளில் வரும். காக்கையிற்கரிது களம் பழம் என்பது உதாரணம். அது வண்ணம் முதலாகப் பற்று விடுதல் ஈறாக இருபத்தெட்டும் பிறவு மான வகைகளில் வரும். உதாரணங்களாகக் காக்கையிற்கரிது

களம்பழம் என்பது முதலாக ஊரிற்பற்றுவிட்டான் என்பதீறாகவும் பிறவாகவும் காண்க. (13)

### ஆறாம் வேற்றுமை

அது என்னும் வேற்றுமை ஆறாவதாம். அது என்பது ஒருமைக்கு உரியதாகலின் பன்மைக்கு அ என்னும் உருபைக் கொள்ளல் வேண்டும். அவ்வேற்றுமை 'இதனது இது' என்று சொல்லும் கிழமை (உரிமை)ப் பொருளில் வரும் அக்கிழமை தற்கிழமை, பிறிதின் கிழமை என இருவகைப்படும், எனது கை—தற்கிழமை, எனது ஆடை—பிறிதின் கிழமை. தற்கிழமை ஐந்து பகுதிப்படும். அவை:

1. ஒன்று பல குழ்இய தற்கிழமை—எள்ளது குப்பை
2. வேறு பல குழ்இயதற்கிழமை — படையது குழாம்
3. ஒன்றியற் கிழமை—நிலத்தினது அகலம்.
4. உறுப்பின் கிழமை—யானையது கொம்பு
5. மெய்திரிந்தாய கிழமை—எள்ளது சாந்து

என்பன. பிறிதின் கிழமைக்கு வகையில்லை. கிழமைப் பொருளின் விரி இயற்கை முதலாகத் திரிந்து வேறுபடுதல் ஈறாகவுள்ள பதினாறும் பிறவுமாம். உதாரணங்களாகச் சாத்தனது இயற்கை முதலாக எள்ளதுசாந்து ஈறாக உள்ளனவும் பிறவும் காண்க. (14)

### ஏழாம் வேற்றுமை

ஏழாவது கண் வேற்றுமையாகும்: அது தொழில் செய்யும் இடம், நிலம். காலம் என்னும் மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு வரும் இடத்திடம், நிலத்திடம். காலத்திடம் எனக் கூறப்படுதலின் பொதுவில் ஏழாவதற்குப்பொருள் இடப்பொருள் என்ப. உ-ம்: உண்டற் கண் வந்தான், உண்ணுமிடத்தின்கண் வந்தான், உண்ணும் நேரத்துக்கண் வந்தான். கால், புறம், அகம் முதலிய பல சொற்களும் கண் உருபு இருக்க வேண்டிய இடத்தில் நின்று ஏழாம் வேற்றுமையிடப் பொருள் தரும். உதாரணமாக ஊர்க்கால் நிவந்த சோலை, ஊர்ப்புறத்திருந்தான். ஊரகத்திருந்தான் முதலியவாகக் காண்க. (15) வேற்றுமைத் தொகைத் தொடர்மொழிகளை விரிக்குமிடத்து உருபுகளுடன் தேவையான பிற சொற்களையும் பொருள் இயைபுக்குத் தக்கவாறு கொண்டு வந்து சேர்த்து விரித்துக் கொள்ளல் வேண்டும். மரம் குறைத்

தான் என்ற இரண்டாம் வேற்றுமைத் தொகைத் தொடரை ஐ வேற்றுமையுருபை வருவித்து மரத்தைக் குறைத்தான் என விரிக்கலாம். 'பொற்றொடி' என்பதைப் 'பொன்னால் தொடி' என மூன்றாம் வேற்றுமையுருபை விரித்தாலும் பொருள் இயைபு இன்மையால் இயைபுடைய ஆகிய என்னும் சொல்லையும் உடன் விரித்துப் பொன்னாலாகிய தொடி என்று விரித்துக் கொள்ளல் வேண்டும். ஆதலின் வேற்றுமைத் தொகைத் தொடர்களை விரிக்க வேண்டின் பொருள் இயைபுக்கு ஏற்ற சொற்கள் யாவும் உரியவாகும் என்க (17).

ஆ. சிவலிங்கனார்

# தொல்காப்பியம்-சொல்லதிகாரம்

## (உரைவளம்)

### வேற்றுமையியல்

**இளம்பூரணர்**

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், வேற்றுமையெனப் பட்ட சில பொருள் உணர்த்தினமையின் வேற்றுமையியல் என்னும் பெயர்த்து. மேல் ஓத்தினுள் நால்வகைப்பட்ட சொற்களையும் பொருள்கள் மேலாமாறு கூறிப் போந்தான்; அவற்றில் முதலது பெயர்ச்சொல். அதனது இலக்கணம் உணர்த்திய எடுத்துக் கொண்டான். இது மேல் ஓத்தினோடு இயைபு. எங்ஙனம் உணர்த்தினானோ எனின், 'பயனிலை செப்ப லும் உருபேற்றலும் காலந்தோன்றாமையும்பெயரது இலக்கணம்' என உணர்த்தினான் என்பது.

**சேனாவரையர்**

நான்கு சொற்கும் பொதுவிலக்கணம் உணர்த்தினார், அதற்கிடையீடின்றி அவற்றது சிறப்பிலக்கணம் உணர்த்துதல் முறைமையாயினும், வேற்றுமையிலக்கணம் உணர்த்துதற்கு வேறிடம் இன்மையானும், பொதுவிலக்கணமாதல் ஒப்புமை யானும், உருபேற்றல் பெயர்க்கிலக்கணமாகலின் வேற்றுமை யுணர்த்திப் பெயர் உணர்த்தல் முறைமையாகலானும், கிளவி யாக்கத்திற்கும் பெயரியற்கும் இடையே வேற்றுமையிலக்கணம் உணர்த்திய எடுத்துக்கொண்டார். வேற்றுமையாவன *பெயரும்

---

* பெயர்—எழுவாய் வேற்றுமை. இடைச்சொல்—ஐ முதலிய உருபுகள்.

ஓர் இடைச் சொல்லும் ஆகலின் அவற்றது இலக்கணமும் பொது விலக்கணமேயாம்.

வேற்றுமையிலக்கணம் என ஒன்றாயினும் சிறப்புடைய எழு வகை வேற்றுமையும் அவற்றது மயக்கமும் விளிவேற்றுமையும் தனித்தனி யுணர்த்தத் தகும் வேறுபாடு †யாப்புடைமையான் மூன்றோத்தான் உணர்த்தினார்.

பொதுவிலக்கணம் உணர்த்திச் சிறப்பிலக்கணம் உணர்த்துதல் முறையாகலின், முதற்கண்ணதாகிய பெயர்ச்சொற்குப் பயனிலை கோடலும் உருபேற்றலும் காலந் தோன்றாமையுமாகிய இலக்கணம் உணர்த்துவார், இயைபு பட்டமையான் வேற்றுமை யிலக்கணம் உணர்த்தினார் என மேலோத்தினோடு இவ்வோத் திடை யியைபு கூறினாரால் உரையாசிரியர் எனின்: அற்றன்று; இவ்வோத்துப் பெயரிலக்கணம் நுதலியெடுத்துக் கொள்ளப்பட்ட தாயின், உருபேற்றலும் பயனிலை கோடலும் காலந் தோன்றா மையுமாகிய பெயரிலக்கணம் முன்னோதி, இயைபு படுதலான் வேற்றுமை யுணர்த்தும் கருத்தினராயின் அவற்றையும் இன்ன இலக்கணத்த என உணர்த்திப் பின்னும் எடுத்துக்கொண்ட பெயரிலக்கணமே பற்றி யோதிப் பெயரியல் என ஓர் ஓத்தான் முடியற்பாற்றன்றே? அவ்வாறன்றி, வேற்றுமையிலக்கணமே முன்கூறி, 'அன்றியனைத்தும் பெயர்ப் பயனிலையே' (சொல். 69) எனவும், 'ஈறு பெயர்க்காகும் இயற்கைய வென்ப' (சொல். 69) எனவும் வேற்றுமையிலக்கணம் கூறி, அச்சூத்திரத்தாற் பயனிலை கோடலும் உருபேற்றலும் பெயர்க்கிலக்கணம் என்பது உய்த் துணர வைத்துப் பின்னும் வேற்றுமையிலக்கணமே யுணர்த்தி இதனை வேற்றுமையோத்து என்றும், அவற்றது மயக்கம் உணர்த்திய ஓத்தை வேற்றுமை மயங்கியல் என்றும், சிறப்பில்லா விளிவேற்றுமை யுணர்த்திய ஓத்தை விளி மரபு என்றும் நுதலிய தனாற் பெயர்கொடுத்து மூன்று ஓத்தாக வைத்து, பெயரியல் என வேறோர் ஓத்திற்குப்பெயர் கொடுத்தமையானும், 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (சொல். 155) என்பது முதலாகிய ஐந்து சூத்திரமும் பெயர் இலக்கணம் உணர்த்தும் ஓத்தின்முன் வையாது இடைவைத்தல் பொருந்தாமையானும், இவ்வோத்துப் பெயரிலக்கணம் நுதலியெடுத்துக் கொள்ளப்பட்ட தன்று; வேற்றுமையிலக்கணமே நுதலி யெழுந்ததெனவே படும்; அதனான் *அவர்க்கது கருத்தன் றென்க.

---

† யாப்புடைமை = வலியுடைமை

* சேனாவரையர் உரையில் இவ்வாறு வரும் தொடரில் 'அவர்க்கு' என்பது ஆசிரியர் தொல்காப்பியர்க்கு என்பதைக் குறிக்கும்

அஃதேல், 'பெயர் நிலைக்கிளவி காலந்தோன்றா' (சொல். 70) எனப் பெயர் இலக்கணம் ஈண்டுக் கூறியது என்னையெனின், பயனிலை கோடலும் உருபேற்றலும் பெயரிலக்கணம் என்பது ஈண்டுப் பெறப்பட்டமையான், அவற்றோடியையக் காலந் தோன்றாமையும் ஈண்டே கூறினார், பெயரிலக்கணமாதல் ஒப்புமையான் என்பது.

தெய்வச்சிலையார்

இஃது என்ன பெயர்த்தோ வெனின், வேற்றுமையியல் என்னும் பெயர்த்து; பொருள்களை வேறுபடுத்தினமையாற் பெற்ற பெயர். என்னை வேறுபடுத்தியவாறு எனின், ஒரு பொருளை ஒருகால் வினைமுதலாக்கியும், ஒருகாற் செயப்படு பொருளாக்கியும், ஒருகாற் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பது ஆக்கியும், ஒருகால் நீங்க நிற்பதாக்கியும், ஒருகால் உடைய தாக்கியும், ஒருகால் இடம் ஆக்கியும் இவ்வாறு வேறுபடுத்தது என்க. *மேல் அல்வழித் தொடர் கூறி இனி வேற்றுமைத்தொடர் கூறுகின்றார். ஆதலின் அதன்பின் கூறப்பட்டது.

நச்சினார்க்கினியர்

இவ்வோத்து செயப்படு பொருள் முதலியனவாகப் பெயர்ப் பொருளை வேறுபடுத்து உணர்த்தலின், வேற்றுமையோத்து என்று காரணப்பெயர் பெற்றது. முன்னர் நான்கு சொற்கும் பொது இலக்கணம் உணர்த்திய அதிகாரத்தானே இப்பொது இலக்கணம் கூறுகின்ற ஓத்தினையும் சேரக் கூறினார். அப்பொது இலக்கணம் என்னையெனின், வேற்றுமை தாமும் பெயரும் ஒரு சார் வினைச் சொல்லும் இடைச் சொல்லும் உரிச்சொல்லுமாகிய பொது இலக்கணமாதல் உடைமையானும்,

எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே (சொல். வேற். 4) எனவும்,

'அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே' (சொல். வேற். 5) எனவும்,

ஈறு பெயர்க் காகும் இயற்கைய என்ப' (சொல். வேற். 8) எனவும்,

---

* கிளவியாக்கத்தில் கூறப்பட்டன பெரும்பாலும் அல்வழித் தொடர்க்கேயாகும் என்று இவ்வாறு கூறினார்.

'பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா' (சொல். வேற். 9) எனவும், தொழிற்பெயர் காலந் தோன்றும் எனவும் மேற்கூறும் சிறப்புடைப் பெயர்க்குப் பொது இலக்கணம் ஈண்டுக் கூறுதல் உடைமையானும் இவ்வோத்துப் பொது இலக்கணமே கூறிய தாயிற்று.

ஆயின், வேற்றுமை மயங்கியலும், விளிமரபும் இடை வைத்தது என்னை எனின், இவ்வேற்றுமையின் மயக்கம் யாப்பு டைமையின் வேறு ஓத்தாக்கி, விளி இவை போற் சிறப்பின்மை யின் வேறு ஓர் ஓத்தாக்கி வைத்தார். இங்ஙனம் வைத்துப் பின்னர்ச் சிறந்த பெயர், வினை, இடை, உரிகளை முறையே கூறி, இவற்றுள் எஞ்சி நின்ற இலக்கணத்தை எச்சவியலிற் கூறினார் என்றுணர்க.

பொருண்மை சுட்டல் (வேற். 5) முதலிய ஆறு பொருளை யும் குறித்து அவற்றால் தான் வேறுபட நிற்றலானும், முடிக்குஞ் சொல்லைத் தான் விசேடித்து நிற்றலானும் எழுவாயும் வேற்றுமையாயிற்று.

கல்லாடனார்

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின் வேற்றுமை யோத்து என்னும் பெயர்த்து. வேற்றுமையென்பது சில பொருளையுணர்த்தினமையாற் காரணப் பெயராயிற்று. மற்று, வேற்றுமையென்னும் பொருண்மை யென்னையெனின், பொருள் களை வேற்றுமை செய்தலிற் பெயர் முதலிய வெட்டற்கும் வேற்றுமையென்று பெயராயிற்று. யாதோ வேற்றுமை செய்தவாறெனின், ஒரு பொருள் ஒருவழி யொன்றனைச் செய்யும் வினைமுதலாகியும், ஒருவழி யொன்று நிகழ்தற்கு ஏது வாகியும், ஒருவழியொன்று செய்தற்குக் கருவியாகியும், ஒருவழி யொன்று செய்தற்குச் செயப்படு பொருளாகியும், ஒரு வழி யொன்று கொடுப்பதனை ஏற்பதாகியும், ஒருவழியொன்றற்கு உவமமாகியும், ஒருவழியொன்று நீங்குதற்கு இடமாகியும், ஒரு வழி யொன்றற்கு எல்லையாகியும், ஒருவழி யொன்றற்குக் கடமையாகியும், ஒருவழி யொன்று செய்தற்கு இடமாகியும், ஒரு வழி முன்னிலையாதற் பொருட்டு விளிக்கப்படுவதாகியும், இன்னோரன்ன பிறவும் ஆகிய பொதுப்பட நிற்றல் உடைத்து.

அவ்வாறு நின்றதனைப் பெயர் முதலியன வொரோ வொன் றாகச் சென்று அப்பொதுமையின் வேற்றுமைப் படுத்தி ஒரு பொருட் குரிமை செய்து நிற்றலின் வேற்றுமை யெனப்பட்டது. இவ்வாறெட்டற்கும் பொதுப்பட நின்றதோர் பொருள்நிலை

யல்வது பொதுப்பட நின்ற தோர் சொன்னிலைமை வழக்கிடைக் காணாமால் எனின், அவ்வாறு வழக்கில்லை யெனினும், சாத்தன், சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண், சாத்தா என வொன்றன் வடிவோடு ஒன்றன் வடிவு ஒவ்வாது இவ்வேற்றுமைகள் வரும்வழிச் சாத்தன் என்னும் வாய்பாடு எங்கும் நின்றமையிற் பொது நிலைமையென்பது உணரப்படும். எழுவாய் அதனோடு வேற்றுமைப் பட்டதோ வெனின், சாத்தனை யென்றது போல்வதோர் வாய்பாடில் லெனினும் அவ்வேழனோடும் ஒவ்வா நிலைமையுடைமையின் இதுவும் ஓர் வாய்பாடாயிற்று என வுணர்க. அன்றியும், செயப் படுபொருள் முதலாயினவற்றின் வேறுபடுத்துப் பொருள் மாத்திரம் உணர்த்தலின் எழுவாய் வேற்றுமையாயிற்று என் பாரும் உளர்.

அல்லதூஉம், வேற்றுமை யென்பது பன்மைபற்றிய வழக் கெனினும் அமையும். இவ்வேற்றுமை செய்யும் வழிப் பலசொல் லொருபொருளாகியும், பல பொருள் ஒரு சொல்லாகியும் வரும்.

இனிப் பலசொல் லொருபொருளாகி வரும்வழி, பல வேற்றுமை பல சொல்லாகியும், ஒரு வேற்றுமை பல சொல்லாகி யும் வரும்- அவை ஆமாறறிந்து கொள்க.

மேலோத்தினோடு இவ்வோத்து இயைபு என்னையோ வெனின், மேல் ஓத்தினுள் நான்கு வகைப்பட்ட சொற் களையும் பொருள்கண்மேலாமாறு சொல்லிப் போந்தார்; அவற்றுள் முதலாவது பெயர்ச்சொல் ஆதற்கிலக்கணம் உணர்த்திய எடுத்துக் கொண்டார் என்பது. யாங்ஙனம் உணர்த்தினாரோ வெனின், எல்லாப் பெயர்களும் எழுவாயாகிப் பயனிலை கோடலும், ஒருவழி எழுவாயாகாது வேறோர் நிலைய வாய் நிற்றலும், உருபேற்றலும், ஒருவழிச் சிலபெயர் உருபே லாது நிற்றலும், காலந்தோன்றாமை நிற்றலும், ஒருவழித் தொழிற்பொருள் ஒரு கூறாயக்கால் காலந்தோன்றி நிற்றலும், விளியேற்று நிற்றலும், சிலபெயர் விளியாது நிற்றலும், இன்னோ ரன்ன பிறவும் பெயரது இலக்கணம் என வுணர்த்தினார் என்பது.

பெயரது இலக்கணமேயன்றி உருபிலக்கணம் உணர்த்தினா ரால் எனின் அவ்வாராய்ச்சியும் பெயரது இலக்கணமாய் விடுத லுடைமையின் அமையும் என்பது.

## வெள்ளைவாரணனார்

வேற்றுமையிலக்கணம் உணர்த்தினமையால் இது வேற்றுமை யியல் என்னும் பெயருடையதாயிற்று. கிளவியாக்கத்துள் பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்கும் பொது

விலக்கணம் உணர்த்தினார். அப்பொதுவிலக்கணத்தினைத் தொடர்ந்து அவற்றது சிறப்பிலக்கணம் கூறுதல் முறை. ஆயினும் வேற்றுமை என்பன ஒருசார் பெயரும் இடைச் சொல்லும் எனப் படும். இந்நுட்பத்தினைக் கருதிக் கிளவியாக்கத்திற்கும் பெயரியலுக்கும் இடையே வேற்றுமையிலக்கணம் உணர்த்த எடுத்துக் கொண்டார். வேற்றுமையிலக்கணம் என்பது பொரு ளால் ஒன்றாயினும், சிறப்புடைய எழுவகை வேற்றுமைகளும், அவற்றது மயக்கமும், எட்டாவது எனப்படும் விளிவேற்றுமையும் தனித்தனி இயல்களால் உணர்த்தத் தகும் பொருள் வேறுபாடு உடைமையின், அவற்றை வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என மூன்றியல்களால் உணர்த்தினார்.

## ஆதித்தர்

ஒரு பெயர் வேறுபட்ட பலவகையாகப் பொருள் தரும் இயல்பு பற்றிக் கூறுவது வேற்றுமையியல்.

1. மரம்—மரம் பழுத்தது, மரம் நின்றது.
2. மரத்தை—மரத்தை வெட்டினான், வளர்த்தான்
3. மரத்தால்—மரத்தால் செய்த பெட்டி
4. மரத்துக்கு—மரத்துக்கு உரம் வை.
5. மரத்தின்—மரத்தின் திண்ணியது இரும்பு.
6. மரத்தினது—மரத்தினது வேர்-இலை-காய்.
7. மரத்தில்—மரத்தில் பறவை
8. மரமே—கூப்பிடுமுறை

2 முதல் 8 வரையும் உள்ள ஒட்டுச் சொற்கள் மரம்பற்றி வேறுபொருள் தந்து நிற்பன ; ஆதலின் இவை வேற்மையுருபு எனப்பட்டன. ஆயின் 1 மரம் என்பதில் வேறுபாடு இல்லையே, அது எவ்வாறு வேற்றுமையாகும் என்னும் வினா எழுகிறது. அது ஏனைய ஏழுக்கும் வேறுபட்டு, முதற் பொருளாய் நிற்பதால் முதல் வேற்றுமையெனப்பட்டது.

## சுப்பிரமணிய சாஸ்திரியார்-ஆய்வுரை

சேனாவரையர் கூற்றுப் பொருந்துமா என்று இங்கு ஆராய்வேன்.

அவர் வேற்றுமையியலைக்கிளவியாக்கத்தின்பின் வைத்தற்குக் கூறும் காரணங்கள் மூன்றாம். அவற்றில் 'வேறிடம் இன்மையால்' என்னும் முதற்காரணத்தைப் பற்றி ஆராய வேண்டுவதின்று.

'கிளவியாக்கத்தில் நான்கு சொற்கும் பொதுவிலக்கணம் உணர்த்தினார் ; இங்கு வேற்றுமையாகிய பெயர்க்கும் இடைச்

சொல்லுக்கும் பொதுவிலக்கணம் உணர்த்துகின்றார்' என்பது இரண்டாவது.

'உருபேற்றல் பெயர்க்கிலக்கணமாகலின், வேற்றுமை யுணர்த்திப் பெயர் உணர்த்தல் முறையாகும்' என்பது மூன்றாவது.

கிளவியாக்கத்தின் முதற்பத்துச் சூத்திரங்களில் பெயருக்கும் வினைக்கும் பொதுவான விஷயங்களைக் கூறி, மற்றைச் சிற்சில சொற்களைக் கொண்ட வாக்கியம் எவ்வாறிருக்க வேண்டும் என்பதைப் பெரும்பாலும் ஆசிரியர் கூறினரேயன்றிப் பொதுவாக நால்வகைச் சொற்களுக்கும் இலக்கணம் கூறினரா? அவ்வாறு நூலாசிரியர் கூறியதாகக் கருதி, இங்கும் பொது விலக்கணமாதல் ஒப்புமை வேண்டும் என்றும் 'வேற்றுமையாவன பெயரும் ஓர் இடைச்சொல்லும் ஆகலின், அவற்றதிலக்கணமும் பொது விலக்கணமேயாம்' என்றும் சேனாவரையார் கூறுவது பொருத்தம் இன்று.

மூன்றாவது காரணம் கொள்ளின், உரையாசிரியரை அவர் மறுத்தவாறு, உருபேற்றலை யுணர்த்தும் சூத்திரம் இவ்வோத்துக்கு முதற் சூத்திரமாய் இருக்க வேண்டிய தன்றோ?

நச்சினார்க்கினியர் "அப்பொது விலக்கணம் என்னை யெனின். வேற்றுமை தாமும் பெயரும் ஒருசார் வினைச் சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் ஆகிய பொது விலக்கணமாதல் உடைமையானும்" என்று கூறுமிடத்து உரிச் சொல் எவ்வாறு வேற்றுமையாகும்? வேற்றுமையாயின் அவ்விடத்து அவை பெயரென்றே கொள்ள வேண்டாவோ? அன்றியும், 'எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே' எனவும், 'அன்றியனைத்தும் பெயர்ப் பயனிலையே' எனவும், 'ஈறு பெயர்க்காகும் இயற்கைய என்ப' எனவும், 'பெயர் நிலைக் கிளவி காலந்தோன்றா' எனவும், தொழிற் பெயர் காலந் தோன்றும் எனவும் மேற்கூறும் சிறப்புடைப் பெயர்க்குப் பொது விலக்கணம் ஈண்டுக் கூறுதல் உடைமையானும்" என்று கூறினர். இங்குச் சிறப்புடைப் பெயர்க்குப் பொது விலக்கணம் ஆசிரியர் கூறினரா? அன்றி, வேற்றுமையுருபு எங்கு வரும் என்றும் பெயர் எப்போது எழுவாய் வேற்றுமையாவது என்றும், தொழிற் பெயர்க்கும் பின் வேற்றுமையுருபு வரும் என்றும் விதி கூறினரா?

மூவர் கூறும் இயைபும் பொருத்தம் அற்றது; தெய்வச் சிலையார் கூறும் இயைபே மிகப் பொருந்தும். எழுவாய் வேற்றுமை, விளிவேற்றுமை வருமிடங்களில் அவை அல்வழியாமே யெனின், பன்மை பற்றி அவ்வாறு கூறினர் எனக,

**வேற்றுமை:** வேற்றுமையென்பது பெயர்ப் பொருளைச் செயப்படு பொருள் முதலாயினவாக வேறுபடுத்துணர்த்துவது என்று சேனாவரையர் கூறினர். அவ்வாறு வேறுபடுத்து உணர்த்துவது, 'ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்னும் அவ்வாறென்ப வேற்றுமை யுருபே' (எழு.புண 11) என்னுமிடத்து வேற்றுமை உருபு என்று ஆசிரியர் கூறினர். ஆகலின் வேற்றுமையுருபு என்பதை வேற்றுமையாகிய உருபு என்று விரித்தல் வேண்டும். ஆயின் அவ்வவ்வேற்றுமையுருபை யிறுதியிற் கொண்ட பெயரை அவ்வவ்வேற்றுமையென்று உபசாரத்தால் உலகில் வழங்குகின்றனர். இவ்வாறு வேற்றுமையும் வேற்றுமையுருபும் ஒன்றே எனக்கொள்ளின், எழுத்ததிகாரத்தில் ஆசிரியர் 'அவ்வாறென்ப வேற்றுமையுருபே' என்று கூறி, இங்கு 'வேற்றுமை தாமே யேழென மொழிப', 'விளிகொள்வதன்கண் விளியோடெட்டே' என்று கூறுவது எவ்வாறு பொருந்துமெனின், அங்கு வேற்றுமையுருபு ஆறென்றும், இங்கு வேற்றுமைப் பொருள் எட்டென்றும் கூறினர் என்க.

**ச. வே. சுப்பிரமணியன்**

வேறு + மை = வேற்றுமை என அமைகின்றது. வேறுபட்ட தன்மை எனப் பொருள் கொள்ளலாம்.

'பொருள் வேற்றுமை செய்வன...வேற்றுமை' என நன்னூலும்(291)இலக்கண விளக்கமும் (193) 'வேற்றுமைப்படுத்தலின் வேற்றுமையாம்' எனத் தொன்னூல் விளக்கமும் (55) வேற்றுமைக்கு விதி கூறுகின்றன.

வேற்றுமை எழுத்திலக்கணமா, சொல்லிலக்கணமா, தொடர் இலக்கணமா என்ற கேள்வியும் எழுகிறது. சொற்களின் சேர்க்கையாகிய புணர்ச்சியைப்பற்றிக் கூறும் போது வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி எனவகுத்துக் கொள்கின்றனர். புணர்ச்சியில் அமையும் எழுத்து வேறுபாடு தொடரியல் அமைப்பை யுணர்த்துகின்றது

காட்டாக, புலவன் கண்டான்—அல்வழிப் புணர்ச்சி.
புலவற் கண்டான்—வேற்றுமைப் புணர்ச்சி.

என்பதைக் கொள்ளலாம். புலவன் கண்டான் என்பதில் 'புலவன்' எழுவாய்; புலவற் கண்டான் என்பதில் 'புலவற்' செயப்படு பொருள். புலவனைக் கண்டான் என அமைகிறது. 'கொழுநற் றொழுதெழுவாள்' (குறள்.55)என்பதுமது. எழுவாய்ப்புணர்ச்சி அல்வழிப் புணர்ச்சியாகவே கொள்ளப்படுகின்றது. 'புலவற் கண்டான்' என்ற வேற்றுமைப் புணர்ச்சியில் வேற்றுமைத் தொகை ன்—ற் ஆன எழுத்து மாற்றத்தால் உணர்த்தப்

படுகிறது. இவ்வெழுத்து மாற்றத்திற்குக் காரணம் ஆக அமையும் வேற்றுமையை, எழுத்திலக்கணத்தில் தொடங்கிய வேற்றுமை உருபுகள் இடைச் சொற்களாக அமைவதால் சொல்லிலக்கண நிலையும் அமைந்து, தொடரியலையுணர்த்துவதால் தொடர் இலக்கணம் என்றும் கொள்ள வேண்டியிருக்கின்றது. வேற்றுமை தொடரியலுக்கு அடிப்படையாக அமைவதால் தான் தொல்காப்பியம் தொடரியல் செய்திகளைக் கூறுகிற கிளவியாக்கத்துக்கு அடுத்த இயலாக வேற்றுமையியலை வைத்துள்ளது. இதைச் சொல்லிலக்கணம் என்ற உணர்வில், பெயருக்குப் பின்பு வேற்றுமை யுருபுகள் வருவதால் பெயரியலில் அமைக்கின்றது நன்னூல். தொல்காப்பியம் பொருளடிப்படையில் இலக்கணம் அமைத்துள்ளதால் வேற்றுமை, மயக்கம், விளி இவைகளை யுணர்த்திய பின்பு பெயரிலக்கணம் கூறுகின்றது. நன்னூல் பெரும்பான்மையும் புறநிலையடிப்படையில் இலக்கணம் கூறுவதால், புறநிலையில் பெயருக்குப் பின்பு வேற்றுமை யுருபுகள் வருவதால் பெயரிலக்கணம் கூறிப் பெயரிலேயே வேற்றுமையிலக்கணமும் கூறுகின்றது. (இலக்கணத் தொகை. சொல். பக். 70, 71)

வேற்றுமை இத்தனை என்பது

* 63. †வேற்றுமை தாமே யேழென மொழிப (1.)

(வேற்றுமை தாமே ஏழ் என மொழிப)

ஆங்கில மொழிபெயர்ப்பு

இலக்குவனார்

They (my predecessors) say that ease are seven.

கமீல் சுவலபில்

They say that cases are indeed seven.

இளம்பூரணர்

என்பது சூத்திரம். மற்று இத் தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், தன்னால் உணர்த்தப்படும் பொருளை இனைத்து என்று வரையறுத்தல் நுதலிற்று.

---

* சூத்திரத்தின் முன்னர் உள்ள எண் சொல்லதிகாரச் சூத்திரத் தொடர் எண், பின்னர் உள்ள எண் வேற்றுமையியல் சூத்திரத் தொடர் எண்

† இதனையும் அடுத்த சூத்திரத்தையும் இணைத்து ஒரே சூத்திரமாகக் கொள்வர் தெய்வச் சிலையார்.

உரை: வேற்றுமையென்று சொல்லப்படுவன எழுவகைய என்றவாறு.

இவ்வேற்றுமைகள் பொருள்களை வேற்றுமை செய்யுமாறு அவற்றவற்றுச் சிறப்புச் சூத்திரத்தான் அறிக.

### சேனாவரையர்

இதன் பொருள்: வேற்றுமையாவன ஏழ் என்று சொல்லுவர் தொல்லாசிரியர், என்றவாறு.

செயப்படுபொருள் முதலாயினவாகப் பெயர்ப் பொருளை வேறுபடுத் துணர்த்துதலின் வேற்றுமையாயின. செயப்படு பொருள் முதலாயினவற்றின் வேறுபடுத்துப் பொருண்மாத்திரம் உணர்த்தலின் எழுவாயும் வேற்றுமையாயிற்று. அல்லதூஉம் வேற்றுமையென்பது பன்மை பற்றிய வழக்கெனினும் அமையும்.

தாமே என்பது கட்டுரைச் சுவைபட நின்றது.

### தெய்வச்சிலையார்

(இச்சூத்திரத்தை அடுத்த சூத்திரத்துடன் சேர்த்துப் பொருள் கூறுதலின் ஆங்கு உரை காண்க.)

### நச்சினார்க்கினியர்

இச்சூத்திரம் வேற்றுமை இனைத்து என்கின்றது. இதன்பொருள்: வேற்றுமை தாமே ஏழ் என மொழிப— வேற்றுமையாவன ஏழ் என்று சொல்லுவர் தொல்லாசிரியர்; என்றவாறு.

தாமே என்பது *சந்த இன்பம் செய்து நின்றது.

### கல்லாடனார்

மற்றித் தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், தன்னால் உணர்த்தப்படும் பொருளை இனைத்தென்று வரை யறுத்தல் நுதலிற்று.

இதன் பொருள்: வேற்றுமையென்று சொல்லப்படுவன தாம் ஏழ் என்று சொல்லுவர் ஆசிரியர், என்றவாறு.

---

* சேனாவரையர் கட்டுரைச்சுவை என்பது இச்சந்த இன்பத்தை.

தாம் என்பது சந்த இன்பம். ஏ என்பது ஈற்றசையாம் என்க.

ஒருவர்

என்பது வேற்றுமையென்று சொல்லப்படுவன வெழுவகைய. வேற்றுமையாவது சொற்களை வேற்றுமை செய்வது. $எழுவகை யாவது சாத்தன் உண்டான் என்றவிடத்து எழுவாயும், சாத்தன் சோற்றையுண்டான் என்றவிடத்து இரண்டாவதும், சாத்தன் கொற்றனொடு வந்தான் என மூன்றாவதும், சாத்தற்குக் கொடுத்தான் என நாலாவதும், சாத்தனின் வலியன் என்ற விடத்து ஐந்தாவதும், சாத்தனது ஆடை என்றவிடத்தாறாவதும், சாத்தன் இருந்தான் முற்றத்துக்கண் என ஏழாவதும் ஆம். இப்படியாக வேற்றுமைப்பட்டுப் பொருள் கொண்டு வருதலான் வேற்றுமை ஏழ் எனப்பட்டது.

**64. விளிகொள் வதன்கண் விளியொ டெட்டே (2)**
**[விளிகொள்வதன்கண் விளியொடு எட்டே]**

ஆ. மொ:

இல.

If vocative, which is formed when one is addressed, is included, it amounts to eight.

க. சு.

It amounts to eight if vocative formed when one is addressed is included.

**பிற்கால இலக்கண நூல்கள்**

**வீரசோழியம்-29**

எட்டாம் எழுவாய் முதற்பெயர் வேற்றுமை.

**நேமிநாதம் 40**

வேற்றுமை எட்டாகும்.

---

$ இவ்வுரைப் போக்கு சாத்தன் என்பதே ஏழ் வகைப் பட்ட வேறுபாடுடையது என்பது போலச் செல்லினும் பெயரையும் ஐ முதலிய உருபுகளையும் கருதியது எனக் கொள்க.

**நன்னூல் 291**

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை.

**இலக்கண விளக்கம். 193**

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன ஏழென மொழிப
விளிகொள் வதன்கண் விளியலங் கடையே.

**இலக்கணக் கொத்து-13**

வினைமுதல் விளியே செயப்படு பொருளே
கருவி கொள்வோன் நீக்கம் குறையே
இடமென எட்டும் வடமொழி வேற்றுமை
ஏழ்ஆறு என்று இயம்பும் தமிழ்நூல்

**தொன்னூல் விளக்கம் 55**

வேற்றுமைப் படுத்தலின் வேற்றுமையாம் இவை
....................................எட்டே

**முத்துவீரியம்—பெயரியல் 49**

வேற்றுமை தானே விளியோ டெட்டே

இளம்.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஒழிந்த வேற்றுமை யுணர்த்துதல் நுதலிற்று.

உரை: விளிகொள்வதன்கண் விளியோடு எட்டு வகைப்படும்; எ—று.

வேற்றுமை விளிகொள்வது என்பது பெயரதன்கண் விளி என்றவாறு. விளித்தல் என்பது [1]கூறுதல்

இதுவும் மேலவற்றோடு ஒத்த சிறப்பின்றாகலான் வேறு போந்துகூறினார் என்பது. என்னை ஒவ்வாவாறு எனின், இதனை யேற்கும் பெயரும் ஏலாப்பெயரும் உள என்க. அஃதாமாறு விளி மரபினிற் கூறுதும்.

சேனா.

இ-ள்: விளி கொள்வதன்கண்ணதாகிய விளியோடு தலைப் பெய்ய வேற்றுமை எட்டாம்; எ—று.

வேற்றுமை என்பது அதிகாரத்தான் வந்தது. முன்னர்,

---

1. கூவுதல் என்பது கூறுதல் என்றிருக்கிறது.

விளியெனப்படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப (சொல் 118)

என்பவாகலின், விளி கொள்வது என்றது விளி கொள்ளும் பெயரை. அதன்கண்விளி என்றதனால் பெயருமன்று; பெயரின் வேறுமன்று. விளிவேற்றுமையாவது திரிந்தும் இயல்பாயும் நிற்கும் பெயரிறுதி என்பதாம்.

'வேற்றுமை தாமே ஏழென மொழிப' எனப்பிறர் மதம்கூறி இச்சூத்திரத்தால் தந்துணிபு உரைத்தார்.

தெய்.

**வேற்றுமை தாமே ஏழென மொழிப**
**விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே**

இவ்வோத்தினுள், தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின் வேற்றுமைஇனைத்தென வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: வேற்றுமையென்பனதாம் ஏழ் என்று சொல்லுப ஒரு சாரார். விளிகொள்வதன்கண் நிகழும் விளியோடு எட்டாம்; எ-று.

ஏகாரம் தேற்றம். விளி கொள்வது என்றது பெயரை. ஏழ் என்று சொல்லுவார் விளிவேற்றுமையை எழுவாயுள் அடக்குவார்.

நச்.

இஃது ஒழிந்த வேற்றுமையும் கூறித் தொகை கூறுகின்றது.

இ-ள்: விளிகொள்வதன்கண் விளியோடு—விளி ஏற்கும் பெயர்க்கண்ணதாகிய விளியோடு முற்கூறியவற்றைத் தலைப் பெய்ய, எட்டே—வேற்றுமை எட்டாம்; எ—று;

விளிகொள்வதன்கண் விளிஎன்றதனால், பிறிதோர் இடைச் சொல்லை ஏலாதுதானே திரிந்தும் இயல்பாயும் நிற்கும் பெயர் இறுதி விளி என்பது பெற்றாம்.

கல்.

என்—ன், ஒழிந்த வேற்றுமை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: விளி கொள்வதன்கண் விளியோடு எட்டு வகைப்படும். வேற்றுமை; எ—று.

விளிகொள்வது என்பது பெயரின்கண் விளி என்றவாறு. விளி யோடு எட்டெனாது பெயர்க்கண் விளி என்றதனால் பெற்றது என்னையெனின், மற்ற வேற்றுமைபோலப் பெயர்ப்புறத்துப் பிரியவாராது அப்பொருளே யீறுதிரிதல் முதலாய வடிவினதாகி வருதல் உணர்த்திய என்றவாறு.

'வேற்றுமை தாமே எட்டெ' ஒரு சூத்திரமாகக் கூறாதது என்னையெனின் இதனது சிறப்பின்மை யறிவித்தற்கு வேறு கூறினார் என்பது

யாதோ சிறப்பின்மை யெனின் விளியேலாப் பொருள்களும் உண்மையின் என்பது.

அஃதேல் பயனிலை கொள்ளாப்பெயரும் உளவாமல் எனின், அதனோடு இதனிடை வேற்றுமையுண்டு, அஃது ஒருவழிக் கொள்வது ஒருவழிக் கொள்ளாதாய் நிற்கும்; அதுதானும் சிறு பான்மை; இஃதுயாண்டும் கொள்ளாதெனக் கொள்ளாவாயே நிற்கும் என்பது.

*வேற்றுமையினை ஏழ் என்பது, எட்டென்பதாகின்றது சொல்லானோ பொருளானோ? சொல் எனினும் பல வகைய, பொருளெனினும் பல வகைய. யாதோ கொள்ளுமாறெனின்; ஒருவழிச் சொல்லானும் ஒருவழிப் பொருளானும் என்பது.*

இவ்வாறன்றி எல்லாஞ் சொல்லான் என்பதும் ஒன்று. பல சொல்லும் உளவெனினும், ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்பன பெரு வழக்கின வாகலின் உருபினுள் அவ்வாறனையுமே கொண்டு அவற்றோடு எழுவாயினையும் விளியினையும் கூட்டி யெட்டென்றார் என்பது.

ஒரு.

என்பது விளியேற்கும் பெயரோடு வேற்றுமையெட்டாம். 'விளி கொள்வதன்கண்' என்றதனால் விளியேலாதனவும் உள; அவை விளிமரபிற் காண்க.

வெள்.

இது முன் கூறியதல்லாத மற்றொரு வேற்றுமையும் கூறி வேற்றுமைகளின் தொகை கூறுகின்றது.

இ-ள்: விளியேற்கும் பெயரின் கண்ணதாகிய விளியோடு முற்கூறியவற்றையும் கூட்டியெண்ண வேற்றுமையெட்டாம்; எ-று.

விளி கொள்வது என்றது, பெயரை. அதன்கண் விளி யென்றது, பிறிதோர் இடைச்சொல்லை ஏலாது தானே திரிந்தும் இயல்பாயும் நிற்கும் பெயர் இறுதியினை. வேற்றுமை ஏழ் எனக் கொள்வோர் விளி வேற்றுமையை யெழுவாயுள் அடக்குவர்,

** இப்பகுதி கழகப் பதிப்பில் இல்லை.

படர்க்கைச் சொல்லையும் பொருளையும் முன்னிலைச் சொல்லும் பொருளுமாக வேற்றுமை செய்வது விளி வேற்றுமையாதலின் இதனை எழுவாயுள் அடக்காது தனி வேற்றுமையாகக் கொள்வதே தமது துணிபு என்பார் 'வேற்றுமை தாமே ஏழென மொழிப' எனப் பிறர் மதம் கூறி, 'விளிகொள் வதன்கண் விளியோடெட்டே' என்று தம் துணிபு உரைத்தார் தொல்காப்பியனார்.

ஆதி.

பொருள்: (பல பெயர்கள்) விளிக்சப்படு முறையால் விளிக்கும் இயல்பும் சேர்ந்து வேற்றுமை எட்டு ஆகும்.

நான் நாம் நீ நீர் அவன் அவர் எவன் எவள் இத்தகைய பெயர்கள் விளிக்கப்படாமையின் 'விளி கொள்வதன் கண்' எனப் பெரும்பான்மைப் பெயர்கள் விளி பெறுவன எனக் குறிப்பால் காட்டினார்.

'விளியோடு வேற்றுமை எட்டே என்பதே போதுமானது.

வேற்றுமையின் பெயரும் முறையும்

**65. அவைதாம்**
**பெயரை யொடுகு**
**வின்னது கண்விளி யென்னு மீற்ற** (3)

(அவைதாம்
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண் விளி என்னும் ஈற்ற)

ஆ, மொ

இல.

They are 'Peyar' 'ai', 'Odu' 'Ku', 'in' 'athu', 'Kan' 'Viḷi' standing at the end.

க, சு.

They are Peyar (nominative), - ai (accusative)-oṭu (sociative), - ku (dative) in (ablative), - atu (genitive) -kaṉ (locative) and finally Vocative (viḷi)

பி. இ. நா.

நேமி. 40.

காண்தகுபேர் ஐஒடு குஇன் அதுகண் விளிஎன்று
ஈண்டுரைப்பின் வேற்றுமை எட்டாகும்

நன். 292.

பெயரே ஐஆல் குஇன் அதுகண்
விளியென்றாகும் அவற்றின் பெயர்முறை

தொன். 55.

பெயர் ஐஆல் குஇன் அதுகண் விளி எட்டே

முத்து. பெ. 50.

பெயர் ஐ ஒடு கு இன் அது கண்விளி

இளம்.

இச்சூத்திரம் என் நுதலிற்றோவெனின், வேற்றுமைகளின் பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று,

உரை: அப்பெயரே பெயர்; அம்முறையே முறை; ஈற்ற என்பது இவ்விளிவேற்றுமை ஈறாகவுடைய என்றவாறு; அவை தாம் என்பது மேற்சொல்லப் பட்டன; எ—று.

சேனா.

இ-ள்: எட்டெனப்பட்ட வேற்றுமையாவன விளி வேற்று மையை இறுதியாகவுடைய பெயர், ஐ, ஒடு, கு, இன் அது கண்ணாம்; எ-று.

பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்பன பல பெயர் உம்மைத் தொகை. அஃது ஒரு சொல்லாய 'விளி என்னும் ஈற்ற' என்பதனான் விசேடிக்கப்பட்டது பெயரும் ஐயும் ஒடுவும் குவ்வும் இன்னும் அதுவும் கண்ணும் எனவிரியும்.

'சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்' என்ப தனான் ஒடுவென்றும் அதுவென்றும் ஓதினாராகலின், ஆன் உருபும் அகரவுருபும் கொள்ளப்படும்.

விளி வேற்றுமையினது சிறப்பின்மை விளக்கிய 'பெயர் ஐ ஒடு கு இன் அது கண் விளி என்னாது 'விளியென்னும் ஈற்ற' எனப்பிரித்துக் கூறினார்.

தெய்

வேற்றுமைச் சொற்கு ஈற்றெழுத்து வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற் சொல்லப்பட்ட வேற்றுமைகள்தாம் பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி யென்று சொல்லப்பட்ட ஈறு களையுடைய எ—று.

விளியீறாவது விளிக்கண்வரும் எழுத்துக்கள். பிறவும் வேற்றுமையீறுகள் உளவாயினும் 'சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்' என்பதனால் இவை எடுத்து ஓதப்பட்டன. எடுத்தோதாதன மூன்றாவதன்கண் ஆன் ஆல் ஒடு ; ஆறாவதன் கண் அ ; ஏழாவதன்கண் இடப்பொருண்மையுணர்த்தும் சொற்கள்.

உ-ம் : சாத்தன், சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண், சாத்தா எனவரும்.

*ஐ முதலாயின மற்றொரு பெயர்க்கு ஈறாகி வருதலின் பெயர் ஈறு என்பது விளங்கும். அங்ஙனமே பெயரும் மற்றொரு பெயர்க்கு ஈறாகி வரல் வேண்டும் எனின், அஃதன்று கருத்து. பெயர்தானே ஈறாகியும், பிற எழுத்தோடு கூடி ஈறாகியும் வரும் என்று கொள்ளப்படும். இவ் வேற்றுமைகளை இவ்வீற்று வேறுபாட்டானே, பெயர் வேற்றுமை, ஐகார வேற்றுமை, ஒடு வேற்றுமை, கு வேற்றுமை. இன் வேற்றுமை, அது வேற்றுமை, கண் வேற்றுமை விளி வேற்றுமை யெனவும் குறி யிட்டு வழங்குப. அஃது யாண்டுப் பெறுதும் எனின், 'ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' (வேற். 9), 'ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி'(வேற். 10 என்புழியும் பிறாண்டும் பெறுதும்.

நச்.

இஃது, அவற்றின் பெயரும் முறையும் உணர்த்துகிறது.

இ-ள் : அவைதாம்—எட்டு எனப்பட்ட வேற்றுமையாவன, விளி என்னும் ஈற்ற—விளி வேற்றுமையை இறுதியாக வுடைய, பெயர் ஐ ஒடு கு இன் அது கண்—பெயரும் ஐயும் ஒடுவும் குவ்வும் இன்னும் அதுவும் கண்ணும் ஆம், எ-று.

'சிறப்புடைய பொருளைத் தானினிது கிளத்தல்' என்பதனான் ஒடுவும் அதுவும் ஓதினாரேனும், மூன்றாவதற்குச் சிறுபான்மை ஒடும் ஆனும், ஆறாவதற்கு அகரவீறும் ஆதுவும் கொள்க.

கல்.

என்-எனின், வேற்றுமைகளது பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று.

---

* "ஐ முதலாயின......என்பதும் மற்றொரு பெயர்க்கு ஈறாகி" என உரைக் கோவையில் காணப்படுகின்றது

இ-ள் : மேல் வேற்றுமையென்று சொல்லப்பட்டவைதாம் பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி‡ யிறுதியாக வுடையன எ-று.

அப்பெயர் பெயர்; அம்முறை முறை. எழுவாய் வேற்றுமை ஏனை வேற்றுமைக்கும் சார்பாதல் நோக்கி முன் வைக்கப் பட்டது. விளி வேற்றுமை. எல்லாவற்றினும் சிறப்பின்மை நோக்கிப் பின் வைக்கப்பட்டது.

ஐயினை இரண்டாவது என்றும், ஒடுவினை மூன்றாவது என்றும், இவ்வாறே இவை கூறுதற்குக் காரணம் உண்டோ எனின், காரணமும் இல்லை ; காரணம் இல்லையேல் வேண்டிய வாறு கூறினும் அமையும் எனின், அமையாது ; முன் நூலுள் ஓதிய முறை அது வென்பது.

ஒரு.

என்பது எட்டு வேற்றுமையும், விளி வேற்றுமையை இறுதி யாகவுடைய பெயரும், ஐயும், ஒடுவும், குவ்வும், இன்னும், அதுவும், கண்ணும் ஆம்.

வெள்.

இது வேற்றுமைகளின் பெயரும் முறையும் உணர்த்து கின்றது.

இ-ள்: எட்டெனப்பட்ட வேற்றுமையாவன பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளியென்று சொல்லப்பட்ட ஈறுகளை யுடைய, எ—று:

பெயர் தானே ஈறாகியும் பிற எழுத்தோடு கூடி ஈறாகியும் வரும் என்பார் 'பெயர்...விளியென்னு மீற்ற' என்றார். பெயர் என்றது, பெயர் தோன்றும் நிலையதாகிய எழுவாய் வேற்றுமை யினை. ஐ இரண்டாவதன் உருபு. ஒடு மூன்றாவதன் உருபு. கு நான்காவதன் உருபு. இன் ஐந்தாவதன் உருபு. அது ஆறாவதன் உருபு. கண் ஏழாவதன் உருபு. விளியீறாவன திரிந்தும் இயல் பாயும் விளிக்கண் வரும் எழுத்துக்கள். சிறப்புடைப் பொருளைத்

‡ "விளியென்று கூறும்வழி யிறுதிக் கண் நிற்கின்ற அவ்விளி வேற்றுமையினையிறுதியாகவுடையன, எ-று" — இது உரைக் கோவையிற் காணப்படுகின்றது.

தானினிது கிளத்தல் என்பதனால் இவை எடுத்து ஓதப்பட்டன. எடுத்தோதாதன மூன்றாம் வேற்றுமைக்கண் ஆன், ஆல், ஒடு என்பனவும் ஆறாம் வேற்றுமைக்கண் ஆது என்னும் ஒருமை யுருபும் அ என்னும் பன்மையுருபும், ஏழாம் வேற்றுமைக்கண் இடப் பொருண்மையுணர்த்தும் கால், புறம், அகம் முதலிய சொற்களுமாகும்.

உ-ம்: முருகன், முருகனை, முருகனொடு, முருகற்கு, முருகனின், முருகனது, முருகன்கண், முருகா என வரும்.

... ... ... ... ... ... ... ... ...

எத்தகைய தொழிலும் கருத்தா இல்லாமல் நிகழாது. ஆதலின் அதனைச் செய்து முடிக்கும் வினை முதற் பொருளைத் தருவதாய்த் திரிபில்லாது நின்ற பெயர் எழுவாய் வேற்றுமை யென முதற்கண் வைக்கப்பட்டது. வினை முதல் ஒரு தொழிலைச் செய்யுங்கால் அச்செயலால் தோன்றிய பொருள் செயப்படு பொருள் எனப்படும். (படுதல் —தோன்றுதல்) இத்தகைய செயப்படு பொருளாகப் பெயர்ப் பொருளை வேறுபடுத்துவது ஐயுருபாகலின் அஃது இரண்டாம் வேற்றுமை யெனப்பட்டது. வினை முதல் ஒரு காரியத்தைச் செய்து முடித்தற்கு இன்றியமை யாது வேண்டப்படுவது கருவி. இத்தகைய கருவியாகப் பெயர்ப் பொருளை வேறுபடுத்துவது ஒடு உருபு ஆதலின் அது மூன்றாம் வேற்றுமையெனப்பட்டது. ஒருவர் ஒரு காரியத்தைக் கருவியாற் செய்வது தமக்கும் பிறர்க்கும் உதவுதற் பொருட்டேயாம்; இவ்வாறு தரப்படும் எவ்வகைப் பொருளையும் ஏற்றுக் கொள்வ தாகப் பெயர்ப் பொருளை வேறுபடுத்துவது 'கு' வ்வுருபாதலின் அது நான்காம் வேற்றுமை எனப்பட்டது. ஒருவர் ஒரு பொருளைப் பிறர்க்குக் கொடுக்குங்கால் அப்பொருள் அவரை விட்டு நீங்குதலைக் காண்கிறோம். இவ்வாறு நீங்கற்குப் பொருளாகப் பெயர்ப்பொருளை வேறுபடுத்துவது 'இன்' உருபா தலின் அஃது ஐந்தாம் வேற்றுமையாயிற்று. ஒருவரிடத்து நீங்கிய பொருளை ஏற்றுக் கொண்டவன் அப்பொருளைத் தன்னுடையது எனக் கிழமை (உரிமை) பாராட்டுதல் இயல்பு; இங்ஙனம் உரிமை பாராட்டுதற்குரிய கிழமைப் பொருளாகப் பெயர்ப் பொருளை வேறுபடுத்துவது 'அது' வுருபாதலின் அஃது ஆறாம் வேற்றுமை யாயிற்று. மேற்குறித்த எல்லா நிகழ்ச்சிக்கும் இன்றியமையாதது இடமாகும். தன்னையேற்ற பெயர்ப் பொருளை இடப்பொரு ளாக வேறுபடுத்துவது 'கண்'ணுருபாதலின் அஃது ஏழாம் வேற்றுமையாயிற்று. இவற்றின் வேறாகப் பெயர்ப் பொருளை

எதிர்முகமாக்குவது விளிவேற்றுமையாதலின் அஃது எட்டாம் வேற்றுமையென இறுதிக்கண் வைக்கப்பட்டது.

மேற்குறித்த வேற்றுமைகள் எட்டனையும் முறையே பெயர் வேற்றுமை, ஐகார வேற்றுமை, ஒடு வேற்றுமை, குவ்வேற்றுமை, இன் வேற்றுமை, அது வேற்றுமை, கண் வேற்றுமை, விளி வேற்றுமை எனப் பெயர் தந்து வழங்குதலும், இவற்றுள் ஐ முதல் கண் ஈறாகவுள்ள ஆறினையும் முறையே இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது என எண் முறையாற் பெயரிட்டு வழங்குதலும் தொல்காப்பியனார் காலத்தும் அவர்க்கு முன்னும் வழங்கிய தமிழியற் குறியீடுகளாகும். இவ்வுண்மை இவ்வேற்றுமையியற் சூத்திரங்களால் நன்கு புலனாம்.

சுப்.

இச்சூத்திரத்தால் வேற்றுமைகளின் பெயர் உணர்த்தப் பட்டன என்று உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் இம்மூவரும் கொண்டனர். அவரது கொள்கையில் 'விளியென்னும் ஈற்ற' என்பது 'பெயர் ஐ ஒடு கு இன் அது கண்' என்ற தொகைமொழிக்கு அடைமொழி.

தெய்வச்சிலையார் அவ்வாறு கூறாது "மேற் சொல்லப்பட்ட வேற்றுமைகள்தாம் பெயர் ஐ ஒடு கு இன் அது கண் விளியென்று சொல்லப்பட்ட ஈறுகளையுடைய;எ - று, விளியீறாவது விளிக்கண் வரும் எழுத்துக்கள்" என்று உரைத்தார். இதனால் அவரது கொள்கையில் இச்சூத்திரம் வேற்றுமையுருபுகளையும், அவை பெயரின் ஈற்றில் வரும் என்பதையும் உணர்த்துகின்றது என்று கூறலாகும். அவ்வாறாயின் "ஐ ஒடு கு ... அவ்வாறென்ப வேற்றுமையுருபே" (எழு. 113) என்றஎழுத்ததிகாரச் சூத்திரமும் "கூறிய முறையின் உருபுநிலை திரியாது, ஈறு பெயர்க்காகும் இயற்கைய என்ப" (சொல். 69) என்ற சொல்லதிகாரச் சூத்திரமும் வேண்டா. ஆதலின்,'ஐ யெனப்பெயரிய வேற்றுமை', 'ஒடுவெனப் பெயரிய வேற்றுமை' என்று குறியிட்டுக் கூறும் ஆசிரியர், இங்கு வேற்றுமைகளின் பெயரைப் பெயர் வேற்றுமை, ஐ வேற்றுமை,ஒடுவேற்றுமை...விளி வேற்றுமை என்று உணர்த்துகின்றார் என்பதே பொருந்தும்.

ச. வே. சுப்பிரமணியன்

தொல்காப்பியம் ஆறுவேற்றுமைகளுக்கு ஒவ்வொரு உருபைக் கூறுகின்றது. பொருள்கள் மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன. பிற்

காலத்தில் உருபுகள் ஒன்றுக்கு மேல் வளர்ந்தன பொருள்களின் எண்ணிக்கை குறைந்தது. இதுவே, புறநிலையில் (structural) இலக்கண அமைப்பு வளர்ந்ததையும், பொருள்நிலையில் (sementical) நோக்கும் எண்ணம் குறைந்ததையும் உணர்த்து கின்றது. காட்டாக 'ஒடு' மூன்றாம் வேற்றுமையுருபாகத் தொல் காப்பியம் கூறுகிறது. பின்புள்ள இலக்கணங்கள் ஆல், ஆன், ஓடு, ஒடு என நான்கை அமைக்கின்றன. வேற்றுமைத் தொகை யில் வேற்றுமைப் பொருள்தான் தொக்கி நிற்பதாகத் தொல் காப்பியம் கூறுகின்றது. வேற்றுமை என்பது பொருளா உருபா என்ற கேள்விகள் எல்லாம் கேட்கப்படுகின்றன. இவற்றை யெல்லாம் சிந்தித்துச் சில நூற்பாக்களை அமைக்கின்றார் இலக் கணக் கொத்து ஆசிரியர் (சூ. 16 - 24) (இலக்கணத் தொகை-சொல். பக். 71)

### எழுவாய் வேற்றுமை

**66. அவற்றுள்**
**எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே. (4)**

ஆ. மொ.

இல.

Of them, the first case will have the noun unchanged.

க. சு.

Among them, the naminative case is used to denote the subject of an action.

பி. இ. நூ.

**வீர. 30.**

ஒருவன் ஒருத்தி ஒன்றாம் சிறப்பொடு பல்லோர் பலவைக் கருது முறையிற் கலப்பன வேற்றுமை காண்

**நேமி. 41**

பெயர் எழுவாய் வேற்றுமையாம்

**நன். 295**

எழுவாய் உருபு திரிபில் பெயரே.

**பிரயோக விவேகம் 7.**

பன்னும் பகாப்பதப் பெயரே பிராதி பதிக மது
துன்னுங் குறிபெற் றொருமை இருகை தொலைவில் பன்மை
என்னும் பிரதமை சேர்ந்து எழுவாய் எனலாம். இவைபோய்
மன்னும் பிறவுருபு ஆறொடவ்வாறு வடமொழிக்கே
தேற்றுந் தமிழுக் கெழுவாய் விபத்தி திரிபில் பெயரே

**இல.** 197.

அவற்றுள்
எழுவாய் உருபு திரிபில் பெயரே

**இ. கொ.** 25.

எழுவாய் வேற்றுமைக்கு உருபே இன்று

**தொன்.** 56.

எழுவாய் உருபாம் இயல்பிற் பெயரே

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், நிறுத்த முறை யானே முதற்கண் நின்ற பெயர்வேற்றுமை யுணர்த்துதல் நுதலிற்று.

உரை; எழுவாய் வேற்றுமைப் பெயர் முதல் வேற்றுமைப் பெயர் என்றவாறு. இனித் 'தோன்று நிலை' என்றதனால், மேல் சூத்திரத்துக்கூறப்படும் அறுவகைப் பயனிலையும் தோன்ற நிற்கும் பெயர் எழுவாய் வேற்றுமையாவது என்றவாறாம்.

என்னை, 'ஆயன் சாத்தன் வந்தான்' என்புழி ஆயன் என்பதூஉம் பெயர், சாத்தன் என்பதூஉம் பெயர்; ஆயினும், இரண்டிற்கும் இரண்டு பயனிலை தோன்ற நில்லாமையாற் சாத்தன் என்பதூஉம் வந்தான் என்பதூஉம் ஆயன் என்பதற்கேபயனிலை. அதனால்‡ சாத்தன் என்பது ஆண்டு எழுவாய் வேற்றுமையாயிற்று என்பது

‡ சாத்தன் என்பதும் வந்தான் எனபதும் ஆயன் என்பதற்குப் பயனிலை என்றவர், சாத்தன் என்பது எழுவாய் வேற்றுமை யாயிற்று என்றது, 'ஆயனாகிய சாத்தன்' எனக்கொண்டு கூறியதாம். தெய்வச்சிலையார் ஆயன் என்பதனைச் சாத்தற்கு அடையாக்கிச் சாத்தன் என்பதையே எழுவாயாக்குவர், அவர் உரை பார்க்க.

இனி, பெயரை எழுவாய் வேற்றுமையென்றும் விளி வேற்றுமையென்றும் உரைத்தீரால், இரண்டனுக்கும் தம்முள் வேற்றுமையென்னெனில், ஈறு திரியா துருபேற்றல் எழுவாய் வேற்றுமையது இலக்கணம்; †ஈறு திரிந்து உருபேற்றல் விளி வேற்றுமையது இலக்கணம் என்பது அறிக.

சேனா.

இ- மேற்சொல்லப் பட்ட வேற்றுமையுள், முதற்கட் பெயரென்று கூறப்பட்ட வேற்றுமையாவது பெயர் தோன்றிய துணையாய் நிற்கும் நிலைமையாம்; எ—று

பெயர் தோன்றிய துணையாய் நிற்கும் நிலைமையாவது உருபும் விளியும் ஏலாது* பிறிதொன்றனோடு தொகாது நிற்கும் நிலைமை. எனவே உருபும் விளியும் ஏற்றும் பிறிதொன்றனோடு தொக்கும் நின்ற பெயர் எழுவாய் வேற்றுமையாகா தென்ற வாறாம்.

உ-ம்: ஆ, அவன் எனவரும்.

தெய்.

மேல் வேற்றுமை எட்டு என்பதும், அவற்றுக்கண் வரும் ஈறும் கூறினார் அல்லது, அவற்றது பெயரும் முறையும் கூறிற்றிலர் அன்றே, அவை கூறுவார், முற்பட முதல் வேற்றுமை யாவது இஃது என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேற் சொல்லப்பட்டவற்றுள் முதல் வேற்றுமை யாவது பெயர் தோன்றும் நிலை; எ—று.

அஃதேல், பெயர் என அமையும்; 'தோன்று நிலை' என்ற தனாற் பயன் என்னைஎனின், பெயர் கண்டுழியெல்லாம் வேற்றுமையென்று கொள்ளற்க என்பது அறிவித்தற் கெனக் கொள்க. அஃதுயாதோ எனின், ஆயன் சாத்தன் வந்தான் என்ற

---

† அண்மை விளி ஈறுதிரிதல், இல்லையாதலின் இக்கூற்று ஆய்தற்குரியது—சிவ.

* பிறிதொன்றனோடு தொகாமையாவது பிறிதொரு சொல்லொடு சேர்ந்து தொடராகவாராமை. அது ஆவலிது என்பது போலன்றி ஆ என நிற்பது,

வழி, ஆயன் என்பது சாத்தற்கு அடையாகிநிற்றலானும், $வருதற் றொழில் சாத்தனொடு முடிதலானும், இரு பெயரும் ஒரு பொருட்கண் வருதலின் இரண்டினையும் வேற்றுமையெனப் படாது ஆகலானும் இறுதி நின்றதே வேற்றுமை யெனப்படுவது என்று கொள்க.

இதனை எழுவாம் வேற்றுமை யடுக்கென்றார் உளரால் எனின், 'ஆயன் சாத்தனை வெட்டினான்' என்றவழி, இறுதி நின்ற பெயர் உருபேற்று இரண்டாம் வேற்றுமையாயிற்று. ஆண்டு உருபு ஏலாத ஆயன், முதல் வேற்றுமையாதல் வேண்டும். அவ்வாறாக, வெட்டினான் என்பது ஒற்றுமைப்பட்டு முடியா தாகலான் அது பொருளன்று என்க.

அஃதற்றாக, பெயரை முதல் வேற்றுமையென்னாது எட்டு வேற்றுமையுள்ளும் யாதானும் ஒன்றை முதல் வேற்றுமை யெனினும் அமையும் எனின், "ஒருவன் ஒன்றைஒன்றானே யியற்றி, ஒருவற்குக் கொடுப்ப, அவன் அதனை அவனினின்றும் தனதாக்கி ஓரிடத்து வைத்தான் கொற்றா" என்ற வழி, செய் கின்றான் முதல் வேற்றுமையாகி இம்முறையே கிடத்தலின் அமையாது என்க.

அஃதேல் "யாற்றினது கரைக்கண் நின்ற மரத்தை அறச் சாலையியற்றுதற்கு ஊரினின்றும் வந்து மழுவினானே வெட்டி னான் சாத்தன்" என்றவழி, எழுவாயாகிய பெயர் ஏழாவதுமாய் நின்றதால் எனின், சொல்லுவான் குறிப்பினான் முதல் வேற்றுமையாயிற்று என்பது கருத்து: யாதானும் ஒரு தொழிலும் செய்வான் உள்வழி அல்லது நிகழாமையின் அது செய்து முடிக்கும் கருத்தா முன் வைக்கப்பட்டான். அவன் ஒரு பொருளைச் செய்து முடிக்குங்கால் செய்யத்தகுவது இது எனக் குறிக்க வேண்டுதலின் செயப்படு பொருள் இரண்டாவது ஆயிற்று. அவ்வாறு அப்பொருளைச் செய்து முடிக்குங்கால் அதற்காங் கருவி தேடுமாதலின் அக்கருவி மூன்றாவதாயிற்று. அவ்வாறு செய்து முடித்த பொருளைத் தான் பயன் கோடலே யன்றிப் பிறர்க்கும் கொடுக்கும் ஆதலின் அதனையேற்று நிற்பது நான்காவது ஆயிற்று. அவ்வாறு கொடுப்புழி அவன் கையினின்றும் அப்பொருள் நீங்கி நிற்பது ஐந்தாவதாயிற்று.

---

$ 'வருதல்... முடிதலானும்' — இது உரைக்கோவையில் இல்லை.

அவ்வாறு நீங்கின பொருளைத் தனதென்று கிழமை செய்தலின் அக்கிழமை ஆறாவதாயிற்று. ஈண்டுகூறப்பட்ட எல்லாவற்றிற்கும் இடமும் காலமும் பொதுவாகி நிற்றலின், அவை ஏழாவது ஆயின. இவையிற்றோடு ஒத்த இயல்பிற்று அன்றி எதிர்முகம் ஆக்குதற் பொருட்டு ஆதலின், விளி என்பது எல்லாவற்றினும் பிற்கூறப்பட்டது.

அஃதேல் ஆறாவதாகிய கிழமை கொண்டான்கண் ஆதலே யன்றிச் செய்தான்கண் இயையாதோவெனின், தோற்றுவித்தாற்குக் கிழமை சொல்லாமலும் பெறும், அதனைக் கொண்டாற்கே கிழமைக் கூறல் வேண்டுவது என்க.

நச்.

இது முறையானே எழுவாய் வேற்றுமை கூறுகின்றது.

இ-ள் : அவற்றுள் — மேற்கூறிய வேற்றுமை எட்டனுள், எழுவாய் வேற்றுமை—முதல் வேற்றுமையாவது, பெயர் தோன்றும் நிலையே — பெயர்ப் பொருள் அறுவகைப்பட்ட பயனிலையும் தன்கண் தோன்ற நிற்கும் நிலைமை எ-று.

அஃது உருபும் விளியும் ஏலாது நிற்கும் நிலையது ஆயிற்று.

உ-ம்: மக்கள், ஆ என வரும்.

இதனை முற்கூறியது என்னை எனின், 'சாத்தன்குடத்தைக் கையால் வனைந்து கொற்றற்குக் கொடுத்தான்' என வினை முதல் நின்று ஏனையவற்றை நிகழ்த்துதல் வேண்டுதலின் அவ் வினைமுதலாகிய எழுவாயை முற்கூறினார்; அன்றியும் மேல் இரண்டாவது மூன்றாவது என்று ஆளுமிடத்து இதனை முதல் வேற்றுமை யென்றே ஆளவேண்டுதலின், அப்பொருள் தருதற்கு முன்னிற் சூத்திரத்திற் பெயரென்று கூறிய அதற்கே எழுவாய் வேற்றுமை என்று வேறு ஓர் பெயர் கொடுத்தார். இதற்கு இப்பெயர் கூறிய அதனானே உருபும் விளியும் ஏற்பனவற்றைப் பெயர் என்று வழங்குதல் பெற்றாம். அஃது 'ஈறுபெயர்க்காம்' என்றதனானும் உணர்க.

கல்.

என்-எனின், நிறுத்த முறையானே முதற்கண் நின்ற பெயர் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற்சொல்லப்பட்ட வேற்றுமை எட்டனுள் முதல் வேற்றுமையாவது, பெயர்ச்சொல் பயனிலைப்பாடு தோன்ற நிற்கும் நிலைமை, எ—று.

உ-ம்: ஆ, மக்கள் என வரும்.

விளியோடு இதனிடை வேற்றுமை யென்னையெனின், ஈறு திரிதலும், ஈறு திரியாமையும், ஈறு திரியாத வழி ஒருவழிப் படர்க்கையாதலும், முன்னிலையாதலும் எனக் கொள்க.

ஒரு-

என்பது எழுவாய் வேற்றுமை உருபும் விளியும் ஏலாது பெயராகவே தோன்றும் நிலைமையதுவாம்.

உ-ம் ஆ என வரும்.

ஆதி.

இவ்வெட்டுள் எழுவாய் வேற்றுமை என்பது பெயர் விகாரம் இன்றித் தன் அளவில் நிற்பதே.

'குழந்தை பிறந்த மேனியாய் இருக்கிறது' என்றால் ஆடை அணிகலன்கள் இன்றி வெற்றுடம்பாய் இருக்கிறது எனப் பொருள். அவ்வாறே 'பெயர் தோன்று நிலையே' எனின், அது இடைச் சொல் உரிச்சொல் ஒட்டுதல் இன்றித் தனிப்பெயரள வாகவே நிற்கிறது.

மரத்தை, மரத்தால் என்று மாறாமல், மரம் என்று தன் சுய நிலையாக—மாறாப் பெயராக நிற்கிறது.

ஆய்வு: எழுவாய் என்பது பெயரில் மாறுபாடற்ற உரு என்பது ஆராயத் தக்கது.

ஆ நமக்குப் பால் தருகிறது — ஆ எழுவாய்
ஆன் நமக்குப் பால் தருகிறது — ஆன் ,,
எம் கோ நல்லன் — கோ ,,
எம் கோன் நல்லன் — கோன் ,,
குறள் அரிய நீதிகளைக் கொண்டது — குறள் ,,
திருக்குறள் அரிய நீதிகளைக் கொண்டது — திருக்குறள் ,,
ஒரு குழி தோண்டப்பட்டது — குழி ,,
ஒரு படுகுழி தோண்டப்பட்டது — படுகுழி ,,

ஆன், கோன், திருக்குறள், படுகுழி—இவற்றின் 'ன' சாரியை, இடைச்சொல் திரு, படு உரிச்சொல் சேர்த்தும் பெயர் எழுவாயாக நிற்பதாகக் காண்கிறோம்.

எழுவாயின் பயனிலை

67. பொருண்மை சுட்டல் [1]வியங்கொள வருதல்
விளைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே (5)

[பொருண்மை சுட்டல் வியம்கொள வருதல்
வினைநிலை உரைத்தல் வினாவிற்கு ஏற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதல்என்று
அன்றி அனைத்தும் பெயர்ப் பயனிலையே]

ஆ. மொ:

இல.

Denoting the being of a thing, having operative mood
indieating the action of a thing, having a question
expressing the nature of a thing, having a noun
these are the predieates of the 'Peyar' or the first ease

க. சு.

Pointing out the existence of a subject denoting
wish are order,
indicating the action of the subject expressing a question
denoting the quality,
denoting the noun—
these are the predieates of a subject

பி. இ நூ.

நேமி. 41.

பெயர் எழுவாய் வேற்றுமையாம் பின்பு அதுதான் ஆறு
பயனிலையும் ஏற்கப் படுதல்

நன். 295.

வினைபெயர் வினாக்கொளல் அதன் பய னிலையே.

இல. 197. ஷை ஷை

இல. கொ. 25

எழுவாய் வேற்றுமைக்கு உருபே இன்று
பெயரே பயனிலை கொள்ளுந் தன்மையே
பயனிலை தன்னைக் கொண்ட தன்மையே

---

சு வே:

1. வியங்கோள்

வினைமுதல் ஆதலே விகாரப் பெயரே
பெயர்ப்பின் விகுதி பெறுதலே ஆயவன்
ஆனவன் ஆவான் ஆகின்றவன் முதல்
ஐம்பாற் சொல்லும் பெயர்ப்பின் அடைதலே
உருபென வெவ்வேறு உரைத்தார் பலரே

**தொன்**. 56.

எழுவாய் உருபாம் இயல்பிற் பெயரே
மீண்டதன் பொருளாம் வினைபெயர் வினாவே

**முத்து**. பெ. 54.

வியங்கோள் வினைநிலை வினாவே பெயர்பண்பு
அதன்பொருள் என்மனார் அறிந்திசி னோரே

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், மேற் சொல்லப் பட்ட எழுவாய் வேற்றுமையென்பது இவ்வறுவகைப்பட்ட பயனிலையும் ஏற்பது என்பது உணர்த்துதல் நுதலிற்று.

'ஆவுண்டு' என்பது [1]பொருண்மை சுட்டல்
'ஆ செல்க' என்பது வியங்கொள வருதல்
'ஆ கிடந்தது' என்பது வினைநிலை யுரைத்தல்
'ஆ எவன்' என்பது வினாவிற் கேற்றல்
'ஆ கரிது' என்பது பண்புகொள வருதல்
'ஆ பல' என்பது பெயர்கொள வருதல்

இவையெல்லாம் பெயர்வேற்றுமைப்பொருள் என்பது. [2]'அன்றி யனைத்தும்' என்பது அத்துணைப் பொருள் எல்லாம் என்றவாறு.

**சேனா.**

உ-ம்: பொருண்மை சுட்டல்—ஆவுண்டு என்பது
வியங்கொள வருதல்—ஆ செல்க என்பது
வினைநிலையுரைத்தல்—ஆ கிடந்தது என்பது

---

1. பொருண்மை—பொருளின் உண்மைத் தன்மை. ஆவுண்டு என்பதில் உண்டு என்பது ஆவின் உண்மையைச் சுட்டியது. அச்சுட்டும்சொல்லாகிய உண்டு என்பதை, ஆ கொண்டதானது பொருண்மை சுட்டலைக் கொண்ட தாம்.

2. அ என்னும் சுட்டு அன்றி எனத் திரிந்தது. அன்றி யனைத்தும்—அவையனைத்தும்

வினாவிற்கேற்றல்—அஃதியாது, அஃதெவன் என வினாச் சொல்லொடு தொடர்தல்.

பண்புகொளவருதல்—ஆகரிது என்பது; தன்னின முடித்தல் என்பதனால், ஆ இல்லை, ஆ அல்ல என்னுந் தொடக்கத்துக் [3]குணப்பொருள வல்லா வினைக்குறிப்போடு தொடர்தலும் கொள்க.

பெயர்கொள வருதல்—ஆ பல என்பது

அன்றி அனைத்தும் பெயர்ப் பயனிலையே என்பது அவ் வாறும் பெயர் வேற்றுமைப் பயனிலையாம், எ—று,

முடிக்கும் சொற்பொருள் அத்தொடர்மொழிக்குப் பயனாக லின் பயனிலை யென்றார். உண்டென்பது பண்பு முதலாயின சுட்டாது உண்மையே சுட்டலின் வேறு கூறினார். [4]பொய்ப் பொருளின் மெய்ப்பொருட்கு வேற்றுமை யுண்மையாகலின், அவ் வுண்மையைப் பொருண்மை யென்றார்.

[5]வியங்கொள வருதல் வினைநிலை யுரைத்தற்கண்ணும், வினாவிற்கேற்றல் பெயர் கொள வருதற் கண்ணும், வினைக் குறிப்பாய வழிப் பண்பு கொள வருதற்கண்ணும் அடங்கு மாயினும், வினையும் பெயரும் பண்பும் முடிக்குஞ் சொல்லாதலே யன்றி முடிக்கப்படும் சொல்லாதலும் உடைய; வியங்கோளும் வினாவும் முடிக்குஞ் சொல்லாயல்லது நில்லாமையின் அவ்வேறு பாடறிவித்தற்கு வேறு கூறினார் என்பது.

பெயர் தோன்று நிலை (சொல். 65) என்றதனானும், 'அன்றியனைத்தும் பெயர்ப் பயனிலையே' யென்பதனானும், பெயர் தோன்றிய துணையாய் நின்று பயனிலைத் தாதல் எழுவாய் வேற்றுமையது இலக்கணம் என்பது பெற்றாம்.

---

3. குணப்பொருளவல்லா வினைக்குறிப்பு: இல்லை அல்ல என்பன எதிர்மறை. அவை உள்ள குணங்கள் இல்லை. அதனாம் அவை பொருளின்கண் குணமாகா. எனினும் எதிர்மறைக் குறிப்பு வினையாம்.

4. பொய்ப்பொருள்—அழியும் பொருள். ஆ அழிவது. மெய்ப் பொருள் ஆ என்னும் பொதுப்பொருள்—சாதிப் பொருள். ஓர் ஆ அழியும்; ஆச்சாதி தொடர்ந்து நிற்கும். ஆவுண்டு என்பது ஆச்சாதி உண்டு என்பதாம். நச். விளக்கம் பார்க்க.

'ஆபல' என்புழிப் பலவென்பதற்குப் பயனிலை யாது எனின், அது பயனிலையாய் ஆ என்பதனை முடித்தற்கு வந்ததாகலின், தான் பிறிதோர் சொல் நோக்காது ஆ என்பதனோடு தொடர்ந்து அதனை முடித்தமைந்து மாறும் என்பது.

அஃதேல் பயனிலை கொள்ளாதது எழுவாய் வேற்றுமையா மாறு என்னையெனின்:- உருபேற்றல் பெயர்க்கு இலக்கண மாயினும் உருபு ஏலாத வழியும் பெயராமாறு போல எழுவாய் வேற்றுமை பயனிலை கொள்ளாத வழியும் எழுவாய் வேற்றுமை யேயாம் என்பது. இலக்கியம் எங்கும் செல்லாதன இலக்கணம் ஆமாறு என்னையெனின்:- ஆண்டு இலக்கணமாவன உருபு ஏற்றற்கு ஏற்ற தன்மையும் பயனிலையும் பயனிலை கோடற்கு ஏற்ற தன்மையும் ஆகலின், அத்தன்மை எல்லாவற்றிற்கும் உண்மையின் இலக்கணம் ஆம் என்பது.

அகரச் சுட்டு 'அன்றி' யென ஈறு திரிந்து நின்றது. 'அன்றி யனைத்தும் பெயர்ப்பயனிலை' யெனவே, பயனிலை கோடல் பெயர்க்கு இலக்கணம் என்பதூஉம் பெற்றாம்.

தெய்.

எழுவாய் வேற்றுமைக்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று. இ-ள்: பொருண்மை சுட்டல் என்பது, [1]முடிக்குஞ்சொல் எழுவாயாகி நின்ற பொருள் தன்னையே சுட்டி, அதன் தொழில் முதலாயின சுட்டாது நிற்கும் நிலைமை; எ—று.

உ-ம்: சாத்தன் உளன் என வரும்.

[2]வியங்கொள வருதலாவது தொழிலைப் பெயர்ப் பொருண்மை கொள்ளுமாறு வரும் ஏவற்சொல்.

உ-ம்: சாத்தன் செல்க.

---

1. சாத்தன் உளன்: இதில் முடிக்குஞ் சொல் உளன் என்பது. இதன் எழுவாய் சாத்தன்; அது பொருள். அச்சாத்தன் என்பவன் உள்ளான் என அவன் உண்மைத் தன்மையையே சுட்டுகிறது 'உளன்' என்பது.
2. சாத்தன் செல்க: செல்க என்பது ஏவற் சொல். அதில் உள்ள தொழில் செல்லுதல். அதைக் கொள்வது சாத்தன் எனும் பெயர்ப் பொருள். பொருள் என்பது பொருண்மை என வந்தது.

[3]வினைநிலை யுரைத்தலாவது அப்பொருளின் தொழிலின் நிலைமையை உணர்த்த வருஞ் சொல்

உ-ம்: சாத்தன் சென்றான்

[4]வினாவிற் கேற்றலாவது, அப்பெயர்ப் பொருண்மையை வினாவுதற்கு ஏற்புடைய சொல்.

உ-ம்: சாத்தன் யாவன்? சாத்தன் யாண்டையன்? சாத்தன் எத்தன்மையன்? என்பன.

[5]பண்பு கொள வருதலாவது. அப்பொருண்மை பண்பு கொள்ளுமாறு வருஞ்சொல்.

உ-ம்: சாத்தன் கரியன், நெடியன் என்பன.

[6]பெயர்கொள வருதலாவது, அப்பெயர்ப் பொருண்மை யுணரப் பிறிது ஓர் காரணத்தான் வந்து முற்பெயரோடு ஒட்டுப் படாது நிற்பது.

உ-ம்: சாத்தன் வணிகன், முடவன் என்பன.

என்று அன்றி அனைத்தும் பெயர்ப் பயனிலையே என்பது, என்று சொல்லப்பட்ட அவ்வனைத்தும் பெயர்க்குப் பயனிலை யாம்; எ—று.

[7]பயனிலை யென்பது, பெயர் வாளாது நிற்குமாயின் செப்பின்கட் பயனின்றாம் ஆகலான், அதனை முடிக்கும் சொல்

3. சாத்தன் சென்றான்: சாத்தன் பொருள். அதன் தொழில் செல்லுதல். அதை உணர்த்தியது சென்றான் என்பது.
4. சாத்தன் யாவன்: பொருண்மை சாத்தன். அதனை வினாவ ஏற்புடைய சொல் யாவன்.
5. சாத்தன் கரியன். பொருண்மை சாத்தன். அப்பொருள் கருமையாகிய பண்பினைக் கொள்ளும் படி (பண்பினை யுடையது என்னும்படி) வரும் சொல் கரியன்.
6. சாத்தன் வணிகன்: சாத்தனும் பெயர் வணிகனும் பெயர். இரு பெயரும் தொடர்புடையனவல்ல; எனவே ஒட்டுப்படவில்லை. எனினும் வணிகத் தொழிலினா னான காரணம் பற்றி அவன் தொழிலையுணர்த்தும் காரணத்தான் வந்து நின்றது.
7. பயனிலை—முடிக்கும் சொல். செப்பு—விடை. முருகன் என வாளா கூறின் பயன் இல்லை. அதனால் அதனை முடிக்கும் ஒரு சொல் கூறியாக வேண்டும். (முருகன் வந்தான்.) ஒரு பெயரைச் சொல்வதின் பயன் நிலை பெறும் இடம் பயனிலையாயிற்று.

பயனிலை என்றாயிற்று. அஃதேல், இவையெல்லாம் பெயர்ப் பொருண்மையைச் சுட்டி நிற்றலின், பொருண்மை சுட்டல் என அடங்கும் எனின், அடங்குமாயினும் பொருண்மை சுட்டல் பொருண்மை மாத்திரத்தைக் குறித்தலானும், வியங்கொள வருதல் அப்பொருண்மை புடை பெயர்தற்கு நிமித்தம் ஆகி வருதலானும், வினை நிலையுரைத்தல் அப்பொருளின் புடை பெயர்ச்சியாகலானும், வினாவிற்கேற்றல் அவ்வாறன்றி வினாவப்படும் நிலைமையதாகி நிற்றலானும், பண்பு கொள வருதல் அப்பொருட்கண் உள்ளதோர் குணத்தைக் குறித்து நிற்றலானும், பெயர் கொள வருதல் அப்பொருண்மை முழுதும் உணரப் பிறிதோர் வாய்பாடாக வருதலானும் வகுத்துக் கூறினார் என்க.

[1]சாத்தன் தலைவன் ஆயினான், இரும்பு பொன் ஆயிற்று என்பன எவ்வாறு வந்தன எனின், அவையும் பொருளின் புடை பெயர்ச்சியாகலானும், ஒன்றுஒன்றாகித் திரிதலாகிய வினையான் வருதலானும், வினைநிலையுரைத்தலுள் அடங்கும்: அஃதேல், தலைவன், பொன் என்னும் பெயரை எழுவாய் என்றுமோ பயனிலை என்றுமோ எனின் இரண்டும் அல்ல; தலைவன் ஆதல், பொன் ஆதல் எனத் திரிபு குறித்து நின்றன, பெயர் குறித்து நின்றன எனப்படா என்க.

அன்றியனைத்தும் பெயர் முடிபு என்னாது பயனிலை என்றதனான் பயனிலை பெயர்க்கு முன்னிற்றலேயன்றிப் பின்னிற்றலும் ஆம் என்று கொள்க

உ—ம்: உளன் சாத்தன், செல்க சாத்தன், வந்தான் சாத்தன், யாண்டையான் சாத்தன், கரியன் சாத்தன், வணிகன் சாத்தன் எனவரும்.

---

1. சாத்தன், தலைவன் என்பன இரண்டும் பெயர். ஆயினான் முடிக்குஞ்சொல். சாத்தன் ஆயினான், தலைவன் ஆயினான் என இரண்டு எழுவாய் உள போலத் தெரிகிறது. சாத்தன் எவனாயினான் எனின் தலைவன் ஆயினான் என்பதால் தலைவன் என்பது தலைவனா தலைக் குறித்தலின் தனிப் பெயர் அன்று; அதனால் எழுவாய் அன்று. சாத்தன் என்பதை முடிக்கும் சொல் ஆயினான் என்பது; தலைவன் அன்று. அதனால் பயனிலையும் அன்று. இப்படியே இரும்பு பொன் ஆயிற்று என்பதில் இரும்புக்கும் கொள்க.

[2]ஈண்டுக் காட்டப்பட்ட உதாரணத்துள் வினைபற்றி வருவன எல்லாம் முற்றுச்சொல் பெயர் கொண்டு முடிந்ததாம்; பயனிலை மாறி நின்றன ஆகாவெனின், முற்றுச் சொல் எனவே முடிந்த சொல் என்பது பெறுதும்; அது பின்னும் மற்றொரு சொல்லை அவாவி நிற்கும் என்றல் பொருந்தாமையானும்,

மற்றுச் சொல் நோக்கா மரபின அனைத்தும்
முற்றி நிற்பது முற்றியல் மொழியே

என அகத்தியனார் ஓதுதலானும்,[3] மொழி மாறுதல் இலக்கண மாக எச்சவியலுள் ஓதுகின்றமையானும் அது சொல்லறியாதார் உரையென்க.

நச்.

இஃது அவ்வெழுவாய் ஆறு பயனிலையும் ஏற்கும் என்கின்றது.

இ—ள்: பொருண்மை சுட்டல்—ஒரு பொருளினது பண்பு முதலியன சுட்டாது அப்பொருட்டன்மையது உண்மைத் தன்மையே சுட்டி வருதல், வியங்கொள வருதல்—தான் ஏவலைக் கொள்ள வருதல், வினைநிலையுரைத்தல்—தனது தொழிலினைச் சொல்ல வருதல், வினாவிற்கு ஏற்றல்—தான் வினாவிற்குப் பொருந்திவருதல், பண்பு கொள வருதல்—தனது பண்பினைத் தான் கொள்ள வருதல், பெயர் கொள வருதல்—தான் பெயரைக் கொண்டு முடிய வருதல், என்று அன்றி அனைத்தும்—என்று சொல்லப்பட்ட அவ்வனைத்து வரவும், பெயர்ப் பயனிலையே—அவ்வெழுவாய் வேற்றுமையது பயனாகிய நிலைமை; எ—று.

தன்னை முடித்தற்குப் பின்வரும் சொல்லின் பொருண்மையைத் தான் அவாவி நிற்கும் நிலை வேறுபாட்டைப் பயனிலை என்றார்.

உ-ம்: ஆ வுண்டு, ஆசெல்க, ஆ கிடந்தது, ஆயாது; ஆ எவன்?, ஆகரிது, ஆபல எனவரும்.

---

2. ஈண்டு ... உதாரணம்: உளன் சாத்தன் முதலியன.
3. எச்சவியலில் ''அவைதாம், தத்தம் கிளவி அடுக்குந வரினும், எத்திறத்தானும் பெயர் முடிபினவே'' என்பதில் எத்திறத்தானும் என்பதனாற் கொள்வர் பிறர். இச்சூத்திரத்தை இவர் வினையியலுள் சேர்த்தார். இவர் இங்கு எச்சவியலுள் ஓதுவதாகக் கூறியது அறியக் கூடவில்லை.

தன்னின முடித்தல் என்பதனான், ஆ இல்லை, ஆ வல்ல என வினைக் குறிப்பும் கொள்க.

'பொருள்' என்னாது 'பொருண்மை' என்றாா, அப்பொருளினது தன்மை உணர்த்துதற்கு. பொருள் தன்மையாவது, அப்பொருள்களின் சாதித்தன்மை. [1]'ஆ' என்னும் பொருள் கெட்டதேனும், அவ்வாவினது சாதித்தன்மை எக்காலத்தும் கெடாது நிற்கும் என்பது உணர்த்துதற்கு 'ஆவுண்டு' என்றார். கட்புலனாகிய ஆ கெடவும், அச்சாதித்தன்மை கெடாது என்பது தோன்றப் 'பொருண்மை சுட்டல்' என்று சூத்திரம் செய்தார்.

வினைநிலையுரைத்தல் தன் தொழில்; வியங்கொள வருதல் மேல் தன்கண் தொழில் நிகழ்வதாக ஒருவன் ஏவப்படுதல்; இரண்டற்கும் இதுவே வேறுபாடு.

வினை நிலையுரைத்தலும், பண்பு கொள வருதலும், பெயர் கொள வருதலும் முடிக்குஞ் சொல்லாதலேயன்றி, முடிக்கப்படும் சொல்லாதலும் உடைய; வியங்கோளும் வினாவும் முடிக்குஞ் சொல்லாயல்லது நில்லா. வினைக்குறிப்பு முடிக்குஞ் சொல்லாயல்லது வாராது.

'ஆபல' என்பது பிறிது ஓர் சொல் நோக்காது, ஆ என்பதனோடு அமைந்து[2] மாறும்.

முன்னிற்சூத்திரத்துத் 'தோன்று நிலை' என்றதனானே [3]'ஆயன் சாத்தன் வந்தான்' எனப் பண்பு ஒட்டு ஆகாது விட்டிசைத்து நின்று மற்றோர் எழுவாயின் பயனிலையோடு தானும் பயனிலை கோடலும், 'ஆயன் வந்தான் சாத்தன்' என வினைப் பின்னும் நிற்றலும், [4]'சாத்தன் தலைவன் ஆயினான்' எனப்

---

1. ஓர் ஆ என்பது அழியும். ஆனால் ஆச்சாதியே அழிவதில்லை. எனவே ஆ உண்டு என்றால் ஒரு பசு உண்டு என்றல் பொருளன்று; பசுச்சாதி உண்டு என்பதே பொருள்.
2. மாறும்: ஆபல என்பது வேறு சொல் நோக்காமல் அதுவே பல ஆ எனவும் வரும்.
3. ஆயன் ஆகிய சாத்தன் என இரு பெயரொட்டுப் பண்பு ஆகாமல் ஆயன், சாத்தன் எனத் தனித்தனி நின்று வந்தான் என்பதனோடு முடிதல்
4. சாத்தன் எழுவாய். ஆயினான் பயனிலை. தலைவன் என்பது ஆயினான் என்பதற்கு அடைமொழி

பயனிலைக்கு அடையாய் நிற்றலும், [5]'சாத்தன் கண் நல்லன்' எனச் சினை வினை முதற்கு ஏற்றிக் கூறலும், இம்மணி நிறம் நன்று' எனப் பண்பின் தொழிலைப் பண்பு அடைந்த பொருட்கு ஏற்றிக் கூறலும், 'இக்குதிரை நடை நன்று' எனத் தொழிலின் தொழிலைத் தொழில் அடைந்த பொருட்கு ஏற்றிக் கூறலும், 'இவ்யாறுநீர் ஒழுகும்' என இடத்துநிகழ் பொருளின் தொழிலை இடத்திற்கு ஏற்றிக் கூறலும், 'இறைவன் அருளால் எம் உயிர் காக்கும்', 'இறைவன் அருளலின் யாம் உயிர் வாழ்தும்' என எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த பெயர் தானும் எழுவாயாய்ப் பயனிலை கோடலும், அஃது உருபு ஏற்றலும், 'ஆ செல்க, செல்க ஆ' என முன்னும் பின்னும் பயனிலை நிற்றலும் பிறவும் கொள்க.

[6]'சிறுமை பெருமையிற் காணாது துணிந்தே' (நற். 50) எனவும், 'கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கி' (புறம் 117 : 6) எனவும் வரும் பண்புகளும் பொருள் இயைபு இன்றேனும் பெயர் கொள வருதற் பாற் படுதலும், [7]'ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்' எனப் பல பெயர் ஒருங்கு எழுவாயாய் நின்று ஒரு பயனிலை கோடலும் இதனான் கொள்க. இன்னும் எழுவாய் வேற்றுமையின் விகற்ப மெல்லாம் வழக்கினகத்து அறிந்து இவ்விலேசான் முடித்துக் கொள்க.

கல்.

என்-எனின், மேற் சொல்லப்பட்ட எழுவாய் வேற்றுமை என்பது, ஆறுவகைப்பட்ட பயனிலையும் ஏற்று நிற்பது* என்றவாறு.

---

5. நல்லன் என்பதில் நன்மை கண்ணுடையது. அன் சாத்தனைக் குறிப்பது. அதனால் நன்மையாதலாகிய சினை வினை நல்லனாயினான் என முதல்மேல் ஏற்றிக் கூறப் பட்டது.
6. சிறுமை பெருமைகட்குப் பொருள் இயைபு எதிராக வின். இல்லை. கோலுககுச் செம்மைப் பண்பு (நிறம்) இன்மையின் பொருள் இயைபு இல்லை.
7. ஆசிரியன்...சாத்தன் யாவும் ஒருவனையே குறிக்கும்.

* நிற்பது உணர்த்துதல் நுதலிற்று—உரைக்கோவைப் பாடம்.

இ-ள் : பொருட்டன்மை கருதி வரும் வரவும், ஏவலைக் கொள்ள வரும் வரவும், தனது தொழிலினைச் சொல்ல வரும் வரவும், வினாவுதற் பொருண்மைக்கு ஏற்று வரும் வரவும், தனது பண்பினைக் கொள்ள வரும் வரவும் என்று சொல்லப்பட்டவை யனைத்தும் வரும் பெயர்ச் சொல்லது பயனாகிய நிலைமை : எ-று.

என்றது, முதல் வேற்றுமையாவது இவ் ஆறு பொருண்மை யும் தோன்ற நிற்பது என்றவாறு. அவ்வப் பொருண்மையை விளக்குவன பின்வரும் சொற்கள் என்றவாறு.

பெயர்ப் பயனிலை யென்றது பின் வருகின்ற சொற்களே யன்று; அவ்வச் சொல்லின் பொருண்மையினைக் குறித்த பெயர் நிற்கும் நிலைமை வேறுபாடுகளை ; எ-று.

நிலை என்னாது பயனிலை என்றது அப்பெயர்களைக் கேட்பின் இப்பொழுது இன்ன பொருள் இன்ன நிலைமைத்து என உணரும் உணர்ச்சிக்குப் பயன்பட நிற்கும் நிலைமைய என்றற்கு என்பது.

உ-ம் : பொருண்மை சுட்டல் : ஆவுண்டு என்பது. இதன் பண்பு முதலியவற்றைக் கருதாது பொருட்டன்மையைக் கருதி நிற்றலால் பொருண்மைசுட்டல் எனப்பட்டது. உண்மை என்பது பண்பன்றோ எனின் அன்று. †அப்பொருட்டன்மை என்பது போலும் கருத்து.'ஆஇல்லை' என்பதும் இதன்கட் பட்டடங்கும்.

வியங்கொள வருதல் : 'ஆ செல்க' என்பது இது மேற் சொல்லுகின்ற வினை நிலை யுணர்த்தலுள் அடங்கும் ; ஆயினும் வேறுபாடுண்டு. அது தன் கண் நிகழ்ந்ததோர் வினை; இது தன் கண் தொழில் நிகழ்வதாக ஒருவனால் ஏவப்பட்டு நிற்கும் நிலை யென வுணர்க.

வினை நிலையுரைத்தல் : ஆ கிடந்தது என்பது.
வினாவிற் கேற்றல் : ஆயாது என்பது.

---

* இவர் உரை பெரிதும் நச். உரையைத் தழுவியது.

† அப்பொருட்...கருத்து : அப்பொருட்டன்மை என்பது கருத்து. போலும் என்பது வாளா நிற்பது.

சு. வே.

1. ஆயாது. ஆவோ என வரும். ஆவோ என்பது தவறு. ஆயாது என்பதில் யாது என்பது வினா வினைச் சொல். ஆவோ என்பதில் ஓ இடைச்சொல். எழுவாயும் பயனிலையுமாக ஆவோ என்பது முடிதல் இல்லை.

பண்பு கொள வருதல் : ஆ கரிது என்பது. இதுவும் வினை நிலையுரைத்தலுள் அடங்காதோ வெனின், அடங்கும் எனினும் வினைக் குறிப்பாகலான் வேறு கூறினர் என்பது.

பெயர் கொள வருதல் : ஆ பல, அது என்பது.

மேற்சூத்திரத்து எழுவாய் வேற்றுமை பெயர் என்னாது 'தோன்றுநிலை' என்றதனால் பெயர்கள் ஒரோவழி எழுவாயாகத் தான் பயனிலை கொள்ளாது மற்றோர் எழுவாயின் பயனிலையோடு தானும் பயனிலையாயும், ஒரோவழித்தானே பயனிலையாயும், ஒரோவழி எழுவாயோடு இயைபுபடாது பயனிலைக்கு அடையாயும் பிறவாறாயும் வருவனவும் உள என்பது கொள்ளப்பட்டது.

உ-ம் : தானும் பயனிலையாவது 'ஆயன் சாத்தன் வந்தான்' என்பது. இது ஆயன் வந்தான், சாத்தன் வந்தான் என வினைப் பின்னும் நிற்கும் என்பது. சாத்தன் என்பது எழுவாய். ஆயன் என்பது முன்னே பயனிலையாய் நின்றதன்றோ எனின், அவ்வாறும் ஆம் எனினும் சொல்லுவான் கருத்து அன்னதன் றென்பது,

'ஆயனாகிய சாத்தன்' என்பது பண்புத் தொகையாமாலோ வெனின், ஓசை பிளவுபட்டிசைத்தலான் ஆகா தென்பது.

[1]தானே பயனிலையாயது ஆபல என்பது. பயனிலைக்கு அடையாயது சாத்தன் தலைவனாயினான் என்பது.

பிறவாய் வருதல் : 'ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்' என்பது. ஒரு பெயர் எழுவாய் நில்லாது பலபெயரும் ஒருங்கே எழுவாயாய் நிற்பன எனக் கொள்க.

இன்னும் இவ்விலேசினான், பெயர்கள் எழுவாயாய்ப் பயனிலை கொண்டமைந்து முற்றிநில்லாது, எழுவாய் தானும் பயனிலையுங் கூடி ஒரு சொல் நீர்மைப்பட்டு மற்றோர் எழுவாய்க்குப் பயனிலையாய் வருவனவும் கொள்ளப்படும்.

அவை சினையின் தொழிலை முதற்கேற்றிக் கூறலும், பண்பின் தொழிலைப் பண்படைந்த பொருட்கு ஏற்றிக் கூறலும், தொழிலின் வினையைத் தொழிலடைந்த பொருட்கு ஏற்றிக்

---

1. தானே—பெயரே. பல என்னும் பெயர் ஆ என்பதற்குப் பயனிலை,

கூறலும், இடத்து நிகழ் பொருளின் தொழிலை இடத்திற்கு ஏற்றிக் கூறலும் என இன்னோரன்ன பல வகைப்படும்.

உ-ம் : சினை வினை முதற்கு ஏற்றிக் கூறல் 'சாத்தன் கண் நல்லன்,' 'இவ்யானை கோடு கூரிது என்பன போல்வன.

பண்பின் வினை பண்படைந்த பொருட்கு ஏற்றிக் கூறல் : இம்மணி நிறம் நன்று, இம்மலர் நாற்றம் பெரிது என்பன.

தொழிலின் வினையைத் தொழிலடைந்த பொருட்கு ஏற்றிக் கூறல் : இக்குதிரை நடை நன்று, இத்தேர் செலவு கடிது என்பன.

இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்திற்கேற்றிக் கூறல்: இவ்ஆறு நீர் ஒழுகும், இவ்வயல் நெல் விளையும் என்பன.

இன்னும் அவ்விலேசானே எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த பெயர், தானும் எழுவாயாய்ப் பயனிலை கொண்டும் உருபேற்றும் வருவனவும் கொள்ளப்படும்.

உ-ம் : [1]'இறைவன் அருளில் எம் உயிர் காக்கும்' எனவும், 'இறைவன் அருளலின் யாம் உயிர் வாழ்தும்' எனவும் வரும் இஃது ஆறாவதாம் எனினும் நோக்கு அஃதன்றென்பது.

பயனிலை முன்னும் பின்னும் நிற்றலும், பயனிலை சில சொல் இடை கிடப்ப வருதலும் ஈண்டே கொள்ளப்படும்.

ஆ செல்க, செல்க ஆ என முன்னும் பின்னும் நின்றது.[2] 'ஆ சாத்தன் உய்ப்ப, எருமை தன் கன்றினோடு மருங்காகத் தான் இவ்வூரினின்றும் அவ்வூரின்கட் செல்லும்' இஃது இடைக் கிடந்த சொல்லோடு வந்தவாறு.

---

1. இறைவன் என்னும் எழுவாய்க்கு அருளல் பயனிலை. அப்பயனிலையாகிய அருளல் தான் எழுவாயாய்க் காக்கும் என்னும் பயனிலை கொண்டது.
அந்த அருளல் என்பது இன் என்னும் ஐந்தன் உருபு ஏற்று அருளலின் என நின்றது.

2 ஆ......செல்லும். இதில் ஆ எழுவாய். செல்லும் பயனிலை. இடைப்பட்டன எல்லாம் இடைக்கிடந்த சொற்கள்,

[3]இறைவன் அருளல் என்பது எழுவாயொடு பொருள் இயைபு இன்றாயினும், வினைமுதற் பொருள் தோன்ற லந்தமையின் பெயர் கொள வருதல் என வழங்கும் என்பது.

'சிறுமை பெருமையிற் காணாது துணிந்தே' எனவும், 'கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கி' எனவும் வரும் பண்புகளும் பொருளியைபில எனினும் ஒருவாற்றான் பெயர் கொள்ள வந்ததன்மேற்பட்டு அடங்கும் என்பது.

இன்னும் எழுவாய் வேற்றுமையின் விகற்பங்கள் எல்லாம் வழக்கினகத்து அறிந்து இவ் விலேசினகத்து அமைத்துக் கொள்க.

ஒரு

என்பது, எழுவாய் வேற்றுமை பொருண்மை சுட்டல் முதலாகிய ஆறுவகைப்பட்ட பயனிலையையும் ஏற்கும்.

உ – ம்: பொருண்மை சுட்டல்: ஆவுண்டு என்பது
வியங்கொள வருதல்: ஆசெல்க என்பது
வினைநிலையுரைத்தல் : ஆகிடந்தது என்பது
வினாவிற்கேற்றல் : ஆவோ என்பது
பண்பு கொளவருதல் : ஆகரிது என்பது
பெயர்கொள வருதல்: ஆ ஒன்று, பல என்பது

'பொருள்' என்னாது பொருண்மை என்றதனால், ஆ என்னும் பொருள் கெட்டதேனும், அவ் ஆவினது சாதித் தன்மை எக்காலத்தும் கெடாதுநிற்கும் என்பது கொள்க.

**ஆதி.**

இயல்பை அறிவித்தல், வியங்கோள் வினை கொள்ளுதல், வினைமுற்றுக் கொள்ளுதல், வினாக் கொள்ளுதல், பண்பினை யறிவித்தல், பெயர் கொண்டு முடிதல் அன்ன அனைத்தும் எழுவாய்க்குப் பயனிலையாம்.

| | | |
|---|---|---|
| அவன் வந்துள்ளான் | — | பொருள் சுட்டல் |
| அவன் வாழ்க | — | வியங்கோள் |
| அவன் வந்தான் | — | வினைமுற்று |
| அவன் வருவானா? | — | வினா |

---

3. 'இறைவனருளால் யாம் உயிர் வாழ்தும்' என்பதில் அருளால் என்பது மூன்றாம் வேற்றுமையாயினும் வாழ்தற்கு அது வினை முதல் ஆதலின் இவ்வாறு எழுதினார். பொருத்தம் ஆய்க.

அவன் நல்லன் — பண்பு; குறிப்பு வினை
அவன் இராமன் — பெயர்.

வந்துளன் என்பதில் வந்துள்ள தன்மையைச் சுட்டிக் காட்டுகிறதேயன்றி, வந்தான் என வினையைக் குறிக்கிறதன்று. அன்றி—அன்ன. 'தன்மைய' என்றதால் இத்தகைய பிறவும் எனப் பொருள் பெறுகிறோம். இப்பயனிலைகளை எதிர் மறையிற் கொண்டும் பொருள் தெளிக.

சுப்.

இச்சூத்திரத்தில் பெயர்ப்பயனிலை என்பது உத்தேசியம். 'பொருண்மைசுட்டல்...அன்றியனைத்தும்' என்பது விதேயம். பயனிலை என்பது உத்தேசியமாய் இருப்பின், அது முன்னர் எச்சூத்திரத்துக் கூறப்பட்டது எனின், முற்சூத்திரத்தில் எழுவாய் என்பது உணர்த்தப் பட்டமையானும், எழுவாய் என்பது பயனிலையின்றிப் பெறப்படாமையானும் கொள்ளப் படும் என்னலாம். இங்குப் பயனிலை என்பது முன்னோரிட்ட குறி. இச்சூத்திரத்தால் பயனிலை எத்துணை வகைப்படும் என்று உரைக்கப்பட்டது.

சேனாவரையர் 'ஆபல' என்புழிப் பல என்பதற்குப் பயனிலையாதெனின்' என்று ஆசங்கித்து, ''அதற்கு, அது பயனிலையாய், ஆவென்பதனை முடித்தற்கு வந்ததாகலின், தான் பிறிதோர் சொன்னோக்காது ஆ என்பதனோடு தொடர்ந்து, அதனை முடித்தமைந்து மாறும் என்பது'' என்று விடையளித்து, பின், ''அஃதேல் பயனிலை கொள்ளாதது எழுவாய் வேற்றுமை யாமாறு என்னை யெனின்'' என்று கூறுவதால்[1] பல என்பது எழுவாய் வேற்றுமை என்பதே அவர் கருத்தாம். ''எழுவாய்வேற்றுமை பெயர் தோன்று நிலையே'' என்னுஞ் சூத்திரத்திற்குஉரையாசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் இம்மூவர் கொண்ட பொருளை நோக்கின், பல என்பது எழுவாய் வேற்றுமையன்று, அதற்குப் பயனிலை யின்மையின். சேனாவரையர் 'உருபேற்றற் கேற்ற தன்மையும் பயனிலையும் பயனிலை கோடற்கேற்ற தன்மையும், எழுவாய் வேற்றுமைக்கு இலக்கணம் என்றார் 'ஆபல' என்னுமிடத்துப் பல என்பதனை எழுவாய் வேற்றுமையாகக் கொள்ளுவதற் காகப் 'பயனிலை கோடற்கேற்ற தன்மையும்' என்ற

---

1. பூவராகம் பிள்ளை விளக்கம் பார்க்க.

தொடரைச் சேர்த்துள்ளார். இங்குப் பல என்பதற்குப் பயனிலை யில்லாவிடினும் 'பல உள்ளன' முதலிய இடங்களில் பயனிலை கொள்ளுவதால், பல என்ற சொல் பயனிலை கொள்ளுவதற்கு உரிமை பூண்டது என்பது அவர் கருத்து. அதனை மற்றவர்போல் எழுவாய் வேற்றுமையாகக் கொள்ளாது [1]குறிப்புவினையாகக் கொள்ளின் இலக்கணத்தில் அத்தொடர் வேண்டா. முற்சூத்திரத்தில் உருபு விளியேலாதது முதல் வேற்றுமையென்று பொருள் கூறினமையின் 'உருபேற்றற்கேற்ற தன்மையும்' என்பதனை இலக்கணத்துட் சேர்த்தனர். அச் சூத்திரத்திற்கு ஏனையோர் கூறிய பொருளைக் கொள்ளின் அத்தொடரும் வேண்டா.

இச்சூத்திரத்தானும் முற்சூத்திரத்தானும் உருபேற்றல் பயனிலை கோடல் என்பன பெயர்க்கு இலக்கணம் என்பது பெறப்பட்டது என்பர் உரைகாரர்கள். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (சொல் 155) என்று ஆசிரியர் சொல்லி லக்கணம் கூறினமையானும், பெயர்ப் பொருளைக் குறிப்பதே பெயர் என்பது அக்குறியீட்டாற்பெறப்படுதலானும் பெயரியலிற் கூறிய பெயர்ச் சொற்கள் அனைத்தும் பெயர்ப் பொருளையே உணர்த்துகின்றமையானும் அவ்வாறு கொள்ள வேண்டிய கட்டுப் பாடின்று.

சிவ.

பொருண்மைசுட்டல் என்பதில் பொருண்மை என்பதற்குப் 'பொருள்தன்மை'என மற்றைய உரையாளர் யாவரும் கொள்ளத் தெய்வச்சிலையார் மட்டில் 'பொருள்' என்றே கொண்டார்.

'ஆ உண்டு' என்பதில் 'உண்டு' என்பது குறிப்பிட்ட ஒரு பசுவைக் குறிக்காமல் பசுச்சாதியைக் குறித்ததாகக் கொண்டனர் முன்னையோர். குறிப்பிட்ட ஒரு பசுவையே குறித்தாகக் கொள்வர் தெய்வச்சிலையார் அதனால்தான் மற்றையோர் ஆவுண்டு என (ஆ என்பது ஆச்சாதியைக் குறிப்பதாக) உதாரணம் காட்டத் தெய்வச்சிலையார் 'சாத்தன் உளன்' எனக் குறிப்பிட்ட ஒருவனைவைத்து உதாரணம் காட்டினார். (சாத்தன் என்பது ஒரு சாதியன்று )'உளன்'என்பதைக் குறிப்பு வினையாகக்

---

1. ஆ பல என்பதில் பல என்பதற்குப் பலவாகவுள்ளன என்னும் பொருள் கொண்டால் குறிப்புவினை.

கொண்டு 'சாத்தன் உளன்' என்பதை வினைநிலை யுரைத்தல் என்பதில் கொள்ளலாம்.

'ஆவுண்டு' என்பதில் ஆ என்பது ஒரு சாதியை யுணர்த்தின் மெய்ப்பொருள் என்றும், ஒரு ஆவினையுணர்த்தின் அது அழிவதாதலின் பொய்ப்பொருள் என்றும் கருதுவது, காலக்குறைவும் நெடுமையும் கருதியதாகுமேயன்றி அச்சாதியும் அழியுமானால் அவ்வுதாரணம் பொருந்தாமல் போகும். 'யாளி உண்டு' என்று இக்காலத்தில் கூறமுடியாது. ஒரு காலத்திலிருந்து அழிந்து பட்டது. அன்னப்பறவை உண்டு என்றும் இல்லையென்றும் கூறுகிறார்கள். அதனால் எக்காலத்தும் உண்மைத்தன்மையுள்ள பொருளையே உதாரணம் காட்டவேண்டும். அது 'தெய்வம் உண்டு' என்பதாகத்தான் அமையும். அடுத்த நிலையில் நிலம் உண்டு, நீர் உண்டு, நெருப்பு உண்டு, காற்று உண்டு, வான் உண்டு என்று உதாரணம் காட்டலாம்.

சுட்டல், வருதல், உரைத்தல், ஏற்றல், என்பனவற்றுக்குச் சுட்டல், வருதல், உரைத்தல், ஏற்றல் என்பனவாகவே மற்றையுரையாளர் பொருள் கொள்ளத் தெய்வச்சிலையார் மட்டில் சுட்ட வரும் சொல், வரும்சொல், உரைக்கும் சொல், ஏற்குஞ்சொல் என்பனவாகக் கொள்வர். சுட்டல் முதலியவற்றை எழுவாயின் செயலாக அதாவது நிலைமொழியின் செயலாக மற்றையோர் கொள்ளத் தெய்வச்சிலையார் பயனிலைச் சொல்லின் அதாவது வருமொழியின் செயலாகக் கொள்வர். முன்னையோர் கருத்தே ஏற்புடையதாம். நன்னூலார்,

> "எழுவாய் வேற்றுமை திரிபில் பெயரே
> வினைபெயர் வினாக்கொளல் அதன் பயனிலையே"

என்று கூறியது முன்னையோர் கருத்தையொட்டியேயாம்.

> பொருண்மை சுட்டல்...அனைத்தும்—எழுவாய்
> பெயர்ப்பயனிலை—பயனிலை.

இவ்வாறேயாவரும் கொள்ள, இதை மாற்றிக் கூறுவர் சுப்பிரமணியசாஸ்திரியார். 'இப்படி மாற்றிக்கொள்வதற்குக் காரணம், முன் சூத்திரத்தில் 'எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே' எனக்கூறியிருத்தலின் அவ்வெழுவாய்க்கு வரும் பயனிலை எத்தகையதாகும் என்பதைக் கூறவேண்டுவதுண்மையின் — அப்பயனிலையாவது இத்துணைப் பகுதிப் பொருளில் வரும் எனக்கூறுவது இச்சூத்திரமாதலின் அத்தொடர்பு கருதியமை போலும்.

பூவராகம் பிள்ளை.

(சேனாவரையத்துக்கு விளக்கம்)

ஆவுண்டு என்பது ஒரு பசுவை அல்லது பல பசுக்களைக் குறித்து வந்ததன்று. பசுச் சாதியின் பொதுத் தன்மை குறித்து வந்தது. இதனையே "உண்டு என்பது......அவ்வுண்மையைப் பொருண்மை என்றார்" என்று கூறினார். பொய்ப் பொருள்: உலகிற் காணப்படும் பசு. அஃது அழியுந்தன்மையுடையதாகலின் பொய்ப்பொருள் என்றார். மெய்ப்பொருள் என்றது பசுவினத்தின் பொதுத் தன்மையை. ஒரு பசு இறந்து விட்டால் பசுவினத்தின் பொதுத்தன்மை அழிந்து விடாது. அதனால் அதனை மெய்ப் பொருள் என்றார். இக்கருத்தைப் "பொருள் என்னாது... பொருண்மை சுட்டல் என்று சூத்திரஞ் செய்தார்" என்ற நச்சினார்க்கினியர் உரையால் நன்கு உணரலாம்.

பண்புகொள வருதல் — பண்புச்சொல் பயனிலையாக வருதல். ஆகரிது என்பதில் கரிது என்பது குறிப்பு வினை முற்றாயினும் கருமைப் பண்பு பற்றி வருதலால் பண்பு கொள வருதற்கு உதாரணமாயிற்று. இனி 'ஆகருமை' என்று காட்டினால் கருமை பண்புச் சொல்லாயினும் பெயர்ச் சொல்லேயாகும். ஆகவே பண்புணர்த்துவது பெயர்ச் சொல்லாகவோ குறிப்பு முற்றாகவோ வருதல் வேண்டுமாதலின் குறிப்பு முற்றாக உதாரணம் காட்டினார். இக்கருத்துப் பற்றியே, "வினாவிற்கேற்றல் பெயர் கொள வருதற் கண்ணும் வினைக் குறிப்பாய வழிப் பண்பு கொள வருதற் கண்ணும் அடங்குமாயினும்" என்றார். வினாச் சொல் பெயராகவோ குறிப்பு முற்றாகவோ நிற்கும் என்பது கருத்து.

"வினையும் பெயரும் பண்பும்......வேறு கூறினார் என்பது". வினையும் பெயரும் பண்பும் தாம் மற்றொரு பெயருக்கு முடிக்குஞ் சொல்லாதலேயன்றி (பயனிலையாதலேயன்றி)த் தாம் நின்று மற்றொரு சொல்லைக் கொண்டு முடிதலும் உண்டு. சாத்தன் பாடினான் என்பது எழுவாய்த் தொடர். (எழுவாய் வேற்றுமை வினை முற்றாகிய பயனிலை கொண்டது.) பாடினான் சாத்தன் என்பது வினைமுற்றுத் தொடர் (வினை முற்றுப் பெயர்ப்பயனிலை கொண்டது) இவ்விரண்டு தொடருக்கும் வேறுபாடு உண்டு. 'சாந்தன் என் செய்தான் எனச் செயலிற் கருத்துள்ளவிடத்து, சாத்தன் பாடினான் என எழுவாய்த் தொடர் வரும். பாடினவன் யார் எனப் பாடிய செயல் உணர்ந்து அதனைச் செய்தவன் யார் என்று வினை முதலை உணர்வதில் கருத்துள்ளவிடத்துப் பாடினான்

சாத்தன், என வினை முற்றுத் தொடர் வரும். இவ்விரண்டு தொடர்களில் முதலில் வினை முடிக்குஞ் சொல்லாகவும், இரண்டாவதில் வினை முடிக்கப்படுஞ் சொல்லாகவும் வந்தது.

அவ்வாறே பெயர்ச்சொல் எழுவாயாய் நின்று முடிக்குஞ் சொல்லோடு முடிதலும், வினைமுற்றிற்குத் தான் முடிக்குஞ் சொல்லாதலும் உண்டு. இதற்கு மேற்காட்டிய உதாரணங் களையே கொள்ளலாம்.

பண்புச் சொல்லும் இவ்வாறே 'ஆகரியது' என்பதில் கரியது முடிக்குஞ் சொல்லாதலும், 'கரியதுஆ' என்பதில் கரியது முடிக்கப்படுஞ் சொல்லாதலும் காணலாம். இவற்றிற்குப் பொருள் வேறுபாடு முற்கூறியவாறே கொள்க.

வியங்கோள் ஏவுதற் பொருளையுடையது. அதனை வாக்கியத்தில் முற்கூறினும் பிற்கூறினும் பொருள் வேறு பாடில்லை. 'சாத்தன் செல்க' என்றாலும் 'செல்க சாத்தன்' என்றாலும் பொருள் வேறுபாடில்லை. வினை முற்றுப் பகுதியால் தொழிலும் விகுதியால் பாலும் உணர்த்துவதால் அது நிற்கும் இடத்திற்கேற்பப் பொருள் வேறு படுகின்றது. வியங்கோள் பால் உணர்த்தாமல் ஏவுதற்றொழில் மட்டும் உணர்த்துவதால், அது தொடரில் முன்நிற்பினும் பின் நிற்பினும் பொருள் வேறுபாடிலதாயிற்று; அதனால் அது முடிக்குஞ் சொல்லாகவே வரும் என்றார்.

வினாச் சொற்களில் யாவன், யாவள் முதலிய சில சொற்கள் பால்காட்டு மேனும், வினாப் பொருள் ஒன்றே அவற்றிற்கு முதன்மைக் கருத்தாகலின் வினாவும் முடிக்குஞ் சொல்லாகவே வரும் என்றார். இவ்வாறு இவற்றின் வேறுபாடுகளை அமைத்துக் கொள்க.

"ஆபல என்புழி ... மாறும் என்பது". ஆபல என்பது எழு வாய் பெயர் கொண்டு முடிந்ததற்குக் காட்டப்பட்ட உதாரணம். இதில் பல என்பது பெயராதலின், அஃது எழுவாயாய்ப் பயனிலை கொள்ளலாமே, அதற்குப் பயனிலையாது? என்ற வினாவுக்கு, பல என்ற பெயர் மற்றொரு பெயருக்கு (ஆ என் பதற்கு)ப்பயனிலையாக வந்ததாகலின் அப்பெயர் இங்குப் பயனிலையை நோக்காது என்று கூறினார்.

"அஃதேல் பயனிலை கொள்ளாதது எழுவாய் வேற்றுமை யாமாறு என்னையெனின்" என்றது, 4 ஆம் சூத்திரத்தில் ஆ அவன் என்ற உதாரணங்களைப் பற்றியது. ஆடையை வாங்கி

னான் என்பதில் ஆடை இரண்டாம் வேற்றுமை உருபேற்றுச் செயப்படு பொருளாயிற்று. ஆடை வாங்கினான் என்பதில் ஆடை இரண்டாம் வேற்றுமையுருபு ஏலாமையின் செயப்படு பொருளாகாது என்பதில்லை; செயப்படு பொருளேயாகும். அஃதாவது, பொருள் எழுவாயாகவும் செயப்படு பொருள் முதலியனவாகவும் வேறுபடுவதே வேற்றுமையாகும். ஐ முதலிய உருபுகள் அங்ஙனம் வேறுபடுதலைக் காட்டும் அறிகுறிகளே யாகும். (ஆயினும் ஐ முதலிய உருபுகளே பொருளை வேறு படுத்துகின்றன என்று கூறுதல் மரபு) ஆதலால் உருபுகள் வந்தா லும் வாரா விட்டாலும் பொருள் வேறுபடுதல் உண்டு என்பது கருத்து. அதுபோலவே பெயர் எழுவாய் வேற்றுமை யாகு மிடத்துப் பயனிலை கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் எழு வாய் வேற்றுமையாந் தன்மை அதற்கு உண்டு என்பது கருத்து என்றார்.

''உருபேற்றற் கேற்ற தன்மையும் பயனிலையும், பயனிலை கோடற் கேற்ற தன்மையாகலின்'' என்பதில், ''பயனிலையும்'' என்பது வேண்டாததாகவுள்ளது. உருபேற்றற் கேற்ற தன்மை பெயர்ச் சொற்குரியது; பயனிலை கோடற் கேற்ற தன்மை எழு வாய்க்குரியது. இடையேயுள்ள 'பயனிலை' என்பது வேண் டாதது ஒன்றாதல் காண்க.

செ. வை. சண்முகம்

சொற்பாகுபாட்டின் அடிப்படையில் பார்க்கும் போது தமிழில் வாக்கிய அமைப்பு 1 பெயர்+பெயர் (அவன் கொற்றன்) 2 பெயர்+வினை (கொற்றன் வந்தான்) போன்ற இருவகை அடிப்படையிலானது என்று கூறுவர். தொல்காப்பியர் அவ்வாறு விதந்து கூறாவிட்டாலும் பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல், வினைநிலையுரைத்தல், வினாவிற்கேற்றல், பண்பு கொள வருதல் என்ற ஐந்தையும் வினையியலில் கூறியுள்ளதால் அவை பெயர்+வினை வாக்கிய அமைப்பிலும், பெயர் கொள வருதல் என்பது பெயர்+பெயர் வாக்கிய அமைப்பிலும் அடங்கும் என்பது தெளிவு .........

பொருண்மை சுட்டல் என்பதை ஒரு பொருளின் உண்மைத் தன்மையைச் சுட்டி நிற்கும் என்று நச்சினார்க்கினியர் விளக்கி யுள்ளார். பெரும்பாலான உரையாசிரியர்கள் 'ஆவுண்டு' என்று சான்று கொடுத்துள்ளனர். இதை உண்மைத்தன்மை வாக்கியம் (Existential Sentence) எனக் கொள்ளலாம். இதன் சிறப்புத் தன்மை, இவ்வாக்கியத்தில் வரும் பெயர்கள் பொதுப் பெயராக

(indifinite) இருப்பதும் இவ்வாக்கியத்தைப் பெயரெச்சத் தொடராக மாற்ற முடியாததும் ஆகும்.

வியங்கொள வருதல் என்பதற்கு எல்லா வுரையாசிரியர்களும் வியங்கோளை மட்டுமே குறிப்பதாகக் கொண்டுள்ளனர். ஆனால் இது ஏவலையும் குறிப்பதாகக்கொள்ளலாம். இரண்டுமே நிகழ் காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் உரியதாகக் (கால விகுதியை ஏற்காவிடினும் அக்காலத்தைக் குறிக்கும் தனிச் சொற்களை ஏற்கும்) கொள்ள வேண்டும். இவற்றைக் குறிக்கும் ஏவலையும் வியங்கோளையும் புதைநிலையில் அமைக்கவேண்டும் என்பர் மாற்றிலக்கண ஆசிரியர்கள். வினாவிற்கேற்றலில் வினாவைக் குறிக்கும் சொல் புதை நிலையில் இருக்கும். பண்புகொள வருதல் என்பதைக் குறிப்புவினை வாக்கியங்களாகக் கருதலாம்.*

## தே. ஆண்டியப்பன்

எழுவாயோடு ஏற்படும் உறவின் அடிப்படையில் பயனிலையைப் பாகுபடுத்தும் முயற்சிகளைப் பலரும் மேற்கொண்டுள்ளனர். தொல்காப்பியரும் பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல் முதலிய ஆறனைக் குறிப்பிடுகின்றார். இவற்றுள் பொருண்மை சுட்டல், வினாவிற்கேற்றல், பண்புகொள வருதல் என்பன எழுவாயின் இயல்பைக் குறிக்கும். இயல்பு குறிக்கும் பயனிலைகள் ஏவல் உருவம் பெறுவதில்லை. என்ன செய்தான், என்ன நிகழ்ந்தது என்னும் வினாக்களுக்கு விடை கிடைப்பதில்லை. தொடர்காலக் குறிப்பும் (Progressive aspect) அமைவதில்லை. இவை மாற்றிலக்கணத்தார்க்கு இன்பமூட்டும் செய்திகள்.

வினைநிலை உரைத்தலும், வியங்கொள வருதலும் செயலைக் குறித்த பயனிலை (action predicate) அமைகிறது என்பதைக்காட்டும். என்ன நிழ்ந்தது என்னும் வினாவிற்கு விடையும் கிடைக்கும். இங்கு திரிபு வினை (Process) பற்றி எதுவும் பேசவில்லை. இருப்பினும் 'அன்றி அனைத்தும் பெயர்ப் பயனிலையே' என்பதால் திரிபு வினையும் அடங்கும் எனலாம். சாத்தன் தலைவன் ஆயினான்; இரும்பு பொன் ஆயிற்று இவை தெய்வச் சிலையார் எடுத்துரைத்த சான்றுகள். அவையும் பொருளின்

---

* வேற்றுமைபற்றித் தொல்காப்பியர், தொல்காப்பிய மொழியியல் பதிப்பு: அகத்தியலிங்கம், க. முருகையன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர். (1972).

புடைபெயர்ச்சி ஆகலானும், ஒன்று ஒன்றாகித் திரிதலாகிய வினையான் வருதலானும் வினைநிலை யுரைத்தலுள் அடங்கும் என்பார் அவர். *இனியரோ தன்னின முடித்தல் என்னும் உத்தியால் ஆ இல்லை. ஆ வல்ல என்னும் வினைக் குறிப்பையும் கொள்க என்பார். சங்கஇலக்கியத்தில் அலராகின்று, புலம் பாகின்று, இல்லாகின்று, நகையாகின்று என வரும் திரிபு வினைகளைப் பலரும் சிந்தித்திருக்கலாம்.

வேலை இல்லை, திருடர் இல்லை போன்ற தொடர்களும் பொருண்மையை எதிர் நிலையில் சுட்டும் அதனால் ஆஇல்லை போன்ற வினைக் குறிப்பையும் கொள்க என்றார் இனியர்.

காசு கிடந்தது என்னுந் தொடரை வினையாகக் கருதலாமா? காசுக்கு, வினை (action) இன்மையால் பொருண்மை சுட்டிய வினைச் சொல் (State umbient) என எண்ண வேண்டியதாயிற்று. 'பால் சூடாக இருக்கிறது' என்னும்போது பொருளின் இயல்பையே பேசுகிறோம் அறிந்தேன் உணர்ந்தேன் என்பன வற்றை அறிஞர் கென்னி வினையாக (activities) எண்ணு வதில்லை. அனுபவம் (Experience) என்பர். இவற்றையெல்லாம் பார்க்கும்போது தாமரை மேலது, வாழைகீழது, பேனா எமது போன்ற தொடர்களையும் பொருண்மை சுட்டலுள் அடக்கலாமே என்று நினைக்கிறோம்.*

தொகைப்பெயர் பயனிலை ஏற்றல்

**68. பெயரி னாகிய தொகையுமா ருளவே**
**அவ்வு முரிய வப்பா லான** (6)

[பெயரின் ஆகிய தொகையும் ஆர் உளவே
அவ்வும் உரிய அப்பால் ஆன.]

ஆ. மொ.

இல.

There are compounds of nouns which are eligible to stand as the first case in the same category.

---

* நச்சினார்க்கினியர்.

... ... ... ... ... ... ...

* காப்பியர் நெறி—சொல்லியல் பக் 32-33 முத்துப் பதிப்பகம், மதுரை. (1977)

க ரு.

There are also compounds made of nouns ;
they too are in the same category.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், தொகைச் சொல்லும் பயனிலை ஏற்கும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

[1]உரை : அறுவகைத் தொகைச் சொல்லும் எழுவாய் வேற்றுமைப் பயனிலைப்பாடு பிழையாது வரும், எ-று.

வ-று : யானைக் கோடு உண்டு
யானைக் கோடு செல்க
யானைக் கோடு வீழ்ந்தது
யானைக் கோடு யாது
யானைக் கோடு வெளிது
யானைக் கோடு பத்து

எனவரும் பிறவும் அன்ன.

[2] இனி ஒரு கருத்து :—'பெயரினாகிய தொகையுமா ருளவே' என்பது பெயரும் பெயரும் தொக்க தொகையும் உள என்றவாறு.

$ உம்மையான் வினையும் பெயரும் தொக்க தொகையும் எழுவாய் வேற்றுமைப் பயனிலைப்பாடு பிழைாது வரும் என்று கொள்க.

அது, [1]கொல்யானை என்பது.

சேனா

இ-ள் : பெயரும் பெயரும் தொக்க தொகையும் உள ; அவையும் உரிய எழுவாய் வேற்றுமையாய்ப்பயனிலை கோடற்கு எ-று.

---

1, 2 : இரு வேறு உரைகள் போலத் தோன்றினும் கருத்து ஒன்றே. இரண்டாவதில் வினைத் தொகையில் முன் மொழி வினை என்பதே வேறுபாடு.

$ இக்கருத்தைச் சேனாவரையர் மறுப்பர். கொல் என்பது வினைச் சொல் என இளம்பூரணர் கருதுகிறார். பெயர்ச் சொல் என்பர் சேனாவரையர் (சொல் 415 பார்க்க)

1. 'கொல் யானை வந்தது' என உதாரணம் காண்க.

உ-ம் : யானைக் கோடு கிடந்தது, மதிமுகம் வியர்த்தது, கொல்யானை நின்றது, கருங்குதிரை யோடிற்று, உவாப்பதி னான்கு கழிந்தன, பொற்றொடி வந்தாள் என வரும்.

பெயரினாகிய தொகையும் என்னும் உம்மையாற்பெயரொடு பெயர் தொக்கனவேயன்றி, நிலங்கடந்தான் எனப் பெயரோடு வினை வந்து தொக்க வினையாகிய தொகையுமுள என்பதாம். ஆகவே பெயரொடு பெயரும், பெயரொடு தொழிலும் தொக்கன தொகை யென்பது பெற்றாம்.

[2] 'அவ்வுமுரிய' எனப் பொது வகையாற் கூறினாரேனும், ஏற்புழிக் கோடல் என்பதனான் எழுவாய் வேற்றுமையாதற்கு ஏற்புடைய பெயரினாகிய தொகையே கொள்ளப்படும்.

[3] இருதொடர்படச் சூத்திரித்து இடர்ப்படுவது என்னை? பெயரினாகிய தொகையும் எழுவாய் வேற்றுமையாம் என்றோத அமையாதோவெனின், அங்ஙனம் ஓதின் பெயரொடு பெயரும், பெயரொடு வினையும் தொக்கன தொகைச் சொல்லாம் என்னும் தொகையிலக்கணம் பெறப்படாதாம் ; அவ்விலக்கணம் உணர்த்துதற்கு இவ்வாறு பிரித்தோதினார் என்பது.

---

2. அவ்வும்—அவையும் = பெயரினாகியதொகையும் வினையினாகிய தொகையும். அவ்வும் உரிய என்றதனால் அவ்விரண்டும் எழுவாயாதற்குரிய எனக் கொள்ளாமல் பெயரினாகிய தொகையே உரிய எனக் கொள்ளல் வேண்டும்.
3. 'பெயரினாகிய தொகையுமாருளவே' என்பது ஒரு தொடர். 'அவ்வுமுரிய அப்பாலான' என்பதுஒரு தொடர். 'பெயரினாகிய தொகையும் எழுவாய் வேற்றுமையாம். என்றால், தனிப் பெயரேயன்றிப் பெயரினாகிய தொகையும் எழுவாயாம் என்ற கருத்துப்பெறப்படுமேயன்றி வினையினாகிய தொகையும் உண்டு என்பது பெறப்படாது. இத்தொடரில் உள்ள தொகையும் என்பதன் உம்மை தனிப் பெயர் என்பதையே தழுவும். தொகையுமருளவே என்பதில் உள்ள உம்மை வினையினாகிா தொகையை எதிரதாகத் தழுவும் வேறுபாடு காண்க.

பெயரினாகிய தொகையும் என்ற உம்மையான் வினையினாகிய வினைத் தொகை தழுவப்பட்டதென்றும்[1] எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய (சொல். 20) என்பதனால் தொகைச் சொல் எல்லாம் எழுவாய் வேற்றுமையாதல் பெறப்படுதலின், ஈண்டு 'அவ்வும் உரிய அப்பாலான' என்றது தொகைச் சொற்குப் பயனிலை கோடல் மாத்திரம் எய்துவித்தற் கென்றும் உரையாசிரியர் கூறினாரால் எனின், அற்றன்று. வினைத் தொகைக்கு நிலைமொழி வினை யென்பது உரையாசிரியர்க்குக் கருத்தன்மை 'வினையின் தொகுதி காலத்தியலும்' (சொல். 415) என்னுஞ் சூத்திரத்திற் சொல்லுதும் இனி எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய என்பதற்கு (சொல் 420) ஒரு சொல் நடையவாம் என்பதல்லது எழுவாய் வேற்றுமையாம் என்னும் கருத்தின்மையானும், அக்கருத்துண்டாயின் அவையும் எழுவாய் வேற்றுமையாய் நின்று 'அன்றியனைத்தும் பெயர்ப்பயனிலையே' (சொல். 66) என்றதனால் பயனிலை யெய்துமாகலின் 'அவ்வுமுரிய அப்பாலான' என்றல் கூறியது கூறிற்றாம் ஆகலானும், அதுவும் உரையாசிரியர் கருத்தன் றென்க.

அஃதேல் தொகையும் எழுவாய் வேற்றுமையாம் என்பதே இச் சூத்திரத்துக்குக் கருத்தாயின் 'எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே' (சொல் 65) என்னுஞ்சூத்திரத்தின் பின் வைக்க எனின், பெயர் தோன்றிய துணையாய் நிற்றலும் பயனிலை கோடலுமாகிய எழுவாய் வேற்றுமை இலக்கணம் இரண்டுந் தொகைச் சொற்கும் எய்துவித்தற்கு அவ்விரண்டு சூத்திரத்திற்கும் பின் வைத்தார் என்பது. ஆண்டுவைப்பின்

---

1. இப்பகுதி இளம்பூரணத்தில் இல்லை. உரையாசிரியர் என்பார் இளம்பூரணர் அல்லர் என்பதற்கு இதுசான்று இச்சூத்திரம் தொகைச் சொல்லும் பயனிலை ஏற்கும் என்பது உணர்த்துதல் நுதலிற்று என்றாரேயன்றி, தொகைச் சொற்குப் பயனிலை கோடல் மாத்திரம் எய்துவிவித்ததாக இளம்பூரணர் கூறவில்லை. உரையாசிரியர் கூற்றை மறுக்கும் சேனாவரையர் முடிவில் 'அதுவும் உரையாசிரியர் கருத்தன்றென்க' என்பது மாறுபாடு உடையது. உரையாசிரியர்க்கு. கருத்தன்று என்பதற்கு விளக்கம் இல்லை – சிவ. இப்பகுதிக்கு உரையிறுதியில் பூவராகம் பிள்ளை விளக்கம் பார்க்க.

'அன்றி அனைத்தும் பெயர்ப் பயனிலையே (சொல் 66) என்ற தனாற் பயனிலை கோடல் பெயர்க்கேயாய்த் தொகைக்கு எய்தாதாம் என்பது.

தெய்

எய்தியதன் மேற் சிறப்புவிதி வகுத்தலை நுதலிற்று.

இ—ள்: பெயரான் ஆகிய தொகைச் சொல்லும் உள, அவையும் எழுவாயாகிப் பயனிலை கோடற்கு உரிய; எ-று.

[1]பல்பொருட்கேற்பின் நல்லது கோடல் என்பதனால் பல பொருள் குறித்த பெயரே கொள்ளப்படும். உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை,

உ-ம்: யானை குதிரை யுள; செல்க, வந்தன, கரிய, யாண்டைய, பல எனவரும்.

அஃதேல் பலபொருள் குறித்து வருதல் வேண்டும் என்ற தென்னை? ஒரு பொருட்கண் வரும் பெயரும் தொகையாகாதோ எனின், தொகையாம் ஆயினும் இறுதிக்கண்நின்ற பெயர் பயனிலை கொண்டும் ஏனைய பெயர் பயனிலை ஏலாதும் நிற்கும், இவை இரண்டுபெயர் மேலும் பயனிலை ஒத்துவருதலின் வேறோதப்பட்டன.

---

1. ஏற்புழிக்கோடல் என்பதனால்—பாடம். பெயரினாகிய தொகை என்பது பலவேறு பொருள் குறித்த பெயர்த் தொகையையும், ஒரு பொருள் குறித்த பெயர்த் தொகையையும் குறிக்கும். குதிரை, யானை, வந்தன் என்பது பல பொருள் குறித்த தொகை. குதிரையும், யானையும் வருதல் தொழிலைத் தனித்தனி செய்வன. இளங்கண்ணன் சாத்தன் என்பது ஒரு பொருள் குறித்த தொகை; இதில் சாத்தன் வந்தான் எனக் கூறுவதே அமைதி. 'இளங்கண்ணன் வந்தான்' எனத் தனியாகக் கூறுதல் தவறு. கூறின் இளங்கண்ணன் வேறு சாத்தன் வேறு எனப்படும் எனவே இச்சூத்திரம் பெயரினாகிய தொகை எனப் பொதுப்படக் கூறினும் பல் பொருட் கேற்பின் நல்லது கோடல் என்னும் உத்தியால் பல பொருள் குறித்தபெயரே கொள்ளல்வேண்டும்.'குதிரை யானை வந்தன என்பதில் பயனிலையை இரண்டும் ஏற்பதும்,'இளங்கண்ணன் சாத்தன் வந்தான் என்பதில் சாத்தன் மட்டும் பயனிலை ஏற்பதும் காண்க. இவர் உரை சிறப்புடையதே.

நச்.

இது தொகைப் பெயரும் பயனிலை கொள்ளும் என்கின்றது.

இ-ள்: பெயரினாகிய தொகையுமார் உளவே—பெயரும் பெயரும் தொக்க தொகையும் உள (உம்மையால் பெயரும் வினையும் தொக்க தொகையும் உள);அவ்வும் உரிய அப்பாலான-அவ்விரண்டனுள் பெயரும் பெயரும் தொக்க தொகையும் உரிய அவ்வெழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கொள்ளுமிடத்து; எ—று.

அவ்வும் உரிய என்றது, இரண்டற்கும் பொதுவேனும் ஏற்புழிக்கோடலான் ஒன்றற்கேயாயிற்று.

உ-ம்: யானைக் கோடு கிடந்தது, மதிமுகம் வெயர்த்தது, கொல்யானைநின்றது, கருங்குதிரை ஓடிற்று,உவாஅப்பதினான்கு கழிந்தன, பொற்றொடி வந்தாள் என வரும்.

[1]நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் எனப்பெயரோடு வினை தொக்கன எழுவாயாய்ப் பயனிலை கொள்ளாது முற்றாய் நிற்கும் என்று உணர்க. இதனால்தொகை இருவகை என்பதூஉம் கூறினார் ஆயிற்று.

கல்.

என்—எனின் தனிப்பெயரேயன்றித் தொகைப் பெயர்களும் பயனிலை கொள்ளும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இரண்டு பெயர்ச்சொல் முதலாக வுளவாகிய தொகைச்சொற்களும் உள; எ-று. உம்மையான் ஒரு வினையும் பெயர் முதலாகவுளவாகிய தொகைச்சொல்லும் உண்டு. அவ்விரு திறத்துத் தொகைச் சொல்லும் மேற்சொல்லப்பட்ட பயனிலைக் கூற்றின்கண் உரிய என்பது.

---

1. நிலங்கடந்தான் என்பது, நிலங்கடந்தானாகிய ஒருவன் எனப் பொருள்படின் 'நிலங்கடந்தான வந்தான். என எழுவாயாய்ப் பயனிலை பெறும். அப்போது கடந்தான் என்பது வினையாலணையும் பெயராகும் அதனால் அது பெயரும் பெயரும் தொக்க தொகையாகும். இவ் வாறே 'குன்றத்திருந்தான் வந்தான், என்பதற்கும் கொள்க.

உ-ம், யானைக்கோடு உண்டு, செல்க, வீழ்ந்தது, [1]யாது, பெரிது, பல எனவரும். இவை பெயரினாகிய தொகை'

கொல்யானையுண்டு, செல்க, வீழ்ந்தது, [2]யாது, பெரிது, பல என இவை வினையினாகிய தொகை.

தொகையும் பயனிலை கொள்ளும் என்கின்றமையின் இவையும் எழுவாயாகற்பால பிற; அதற்கு விதியாதோ வெனில், எச்சவியலுள் 'எல்லாத் தொகையும்' (எச்ச 24) என்னும் சூத்திரத்துக்[3] கூறப்படும் என்பது.

ஒரு.*

என்பது பெயரும் பெயரும்தொக்கதொகையும் உள: அவையும் உரிய அவ் எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கோடற்கு.

உ-ம்: யானைக்கோடு உண்டு, செல்க, வீழ்ந்தது, [4]கோடோ, பரிது, பல எனவரும்.

உம்மையால் வினையொடு பெயர் தொக்கதூஉம் எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை பெறும்.

உ-ம்: கொல்யானை உண்டு, செல்க என ஒட்டிக் கொள்க.

அன்றியும் 'தொகையுமாருளவே' என்றதனால், அறுவகைப் பட்ட தொகைச் சொல்லும் எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கொள்ளும் என்க.

உ-ம்: யானைக் கோடு கிடந்தது, மதிமுகம் வியர்த்தது, கொல்யானை நின்றது, கருங்குதிரை ஓடிற்று, உவாப்பதினான்கு கழிந்தது, பொற்றொடி வந்தாள் என வரும்.

---

* இவர் இளம்பூரணர் கருத்தையும் பிறர் கருத்தையும் தழுவியவர்,

1. யானைக்கோடோ என்பது உரைக்கோவைப் பாடம்—தவறு.
2. கொல்யானையோ என்பது உரைக்கோவைப் பாடம்—தவறு.
3. உரையிற் கூறப்படும் (பாடம்)
4. இவ்வுதாரணம் தவறு

ஆதி.

*பெயர்களாலாகிய தொடர் மொழிகளும் உள. அவை எழுவாயாக நின்று பயனிலை கோடற்கு உரியவையாம். 'மாட்டுக் கொம்பு கரியது' எழுவாய்-மாட்டுக் கொம்பு.சீப்புப்பல் உடைந்து போயிற்று; எழுவாய்-சீப்புப்பல். புனுகுப்பூனை ஓடிப் போயிற்று; எழுவாய் புனுகுப்பூனை. இங்கு தொடர் மொழிகள் தனிப் பெயர் போல எழுவாயாயின.

அப்பாலான = முன் சொன்ன பயனிலை கொள் முறைக்கு.

அ = அவை; தனிச்சுட்டு அஃறிணைப் பன்மைப் பெயராயிற்று.

சுப்.

உரையாசிரியர், பெயர் எவ்வாறு பயனிலை கொள்ளுமோ அவ்வாறே தொகைச் சொல்லும் கொள்ளும் என்று உம்மைக்குப் பொருள் கொண்டார். பின்னர் வினையும் பெயரும் தொக்க தொகையும் என்று உம்மைக்கு வேறு ஒருவர் கருத்து என்றும் கூறினர்.

சேனாவரையர், "உம்மையாற் பெயரொடு வினை வந்து தொக்க வினையினாகிய தொகையும் உள என்பதாம்" என்று கூறுகின்றார்.

எழுவாய் வேற்றுமையைப் பற்றிக் கூறும் இவ்விடத்தில் 'உம்மையாற் பெயரும் வினையும் தொக்க தொகையும் உண்டு' என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? நிலங்கடந்தான் என்பதைத் தொகைச் சொல் என்று கருதி, அதற்குப் பிரமாணம் யாண்டும் இன்மையின் உம்மைக்கு இவ்விடத்திற்கு ஏற்புடைத்தாகாத பொருளைக் கொண்டனர். பெயரினாகிய தொகை என்பதனாற் பெயரை வருமொழியாகக் கொண்ட அறுவகைத் தொகைச் சொல்லும் பெறப்படுதலின், உரையாசிரியர் உம்மைக்குத்தம் கருத்தாகக் கூறிய பொருளே சிறக்கும். சேனாவரையத்தில், பெயரினாகிய தொகையும் என்ற உம்மையான் வினையினாகிய வினைத் தொகை தழுவப்பட்டதென்று உரையாசிரியர் கூறியதாகக் கூறி, "வினைத் தொகைக்கு நிலைமொழி வினையென்பது உரையாசிரியர்க்குக் கருத்தன்மை, 'வினையின் தொகுதி காலத்தியலும்' என்னும் சூத்திரத்திற் சொல்லுதும்" என்றுரைக்கப்பட்டுள்ளது. இருவர்க்கும் கொல்யானை முதலிய தொகைச் சொற்கள் எழுவாய் வேற்றுமையாய் இருந்து பயனிலை கொள்ளும் என்பதில் மாறுபாடில்லை. அச்சொற்கள்

* இவ்வுரை இளம்பூரணரைத் தழுவியது.

வினைத் தொகை என்பதிலும் மாறுபாடில்லை. கொல் என்பது பெயரெச்சம் தொக்கு நிற்கும் வினையா? தாதுவா? என்பதில் மாத்திரம் வேறுபாடுளது. அதனை வினையின் தொகுதி காலத்தி யலும் (சொல் 415) என்னுமிடத்து ஆராய்வேன்.

இச்சூத்திரத்தில் பயனிலை கோடல் மாத்திரம் விதேயம் என்றும், 'எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய' (சொல்.420) என்பதன்கண் எழுவாய் வேற்றுமையாய் நிற்றல் விதேயம் என்றும் உரையாசிரியர் கொண்டனர் எனச் சேனாவரையர் கருதி, ''எல்லாத் தொகையும் ஒரு சொல்நடைய என்பதற்கு ஒரு சொல் நடையவாம் என்பதல்லது எழுவாய் வேற்றுமையாம் என்னும் கருத்தின்மையானும், அக்கருத்துண்டாயின் அவையும் எழுவாய் வேற்றுமையாய் நின்று 'அன்றியனைத்தும் பெயர்ப் பயனிலையே' என்றதனாற் பயனியை யெய்துமாகலின் 'அவ் வுமுரியவப்பாலான' என்றல் கூறியது கூறிற்றாமாகலானும் அதுவும் உரையாசிரியர் கருத்தன்றென்க'' என்னும் சொற் றொடரால் மறுத்தனர்.

ஆனால் இச்சூத்திரவுரையில் உரையாசிரியர் 'எழுவாய் வேற்றுமைப் பயனிலைப்பாடு' என்று கூறுவதாலும், 'எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய' என்ற சூத்திரவுரையின்கண் 'அறுவகைத் தொகைச் சொல்லும் எழுவாய் வேற்றுமை இயல்பாம்' என்று பொருளும், 'அவை பல சொன்மைப்படப் பொருளிசையா' என்று கருத்தும் உரைக்கின்றமையானும், எழு வாய் வேற்றுமையாதல் பயனிலை கொள்ளுதல் இவ்விரண்டும் இச்சூத்திரத்தில் விதேயம் என்பதும், தொகை எழுவாய் வேற் றுமையாதல் அங்கு விதிக்கப்படவில்லை என்பதும் அவர் கருத் தென்பது விளங்கும். ஆதலின் அம்மறுப்புக்கு இடமின்று.

உரையாசிரியர் தெய்வச்சிலையார் இவ்விருவர் கூறியவையே இச்சூத்தித்திற்குக் கருத்தாயினும், பொருள் கூறுமிடத்து அவர்கள் இரு தொடர்ப் படுத்தினர்.

இரு தொடராகக் கொள்ளின் சூத்திரம் ஒன்றாமாறில்லை. அக்கருத்தமையச் சூத்திரம் ஒன்றாமாறு எங்ஙனம் எனின், அப்பாலான பயனிலை கொள்ளுமிடத்து, அவ்வுமுரிய—எழு வாய்ப் பொருளுக்கும் பெயர் வேற்றுமைக்கும் உரியவான, பெயரினாகிய தொகையும்—பெயரானே வந்த தொகையும், உள —உண்டு எனக் கொள்ளுதலேயாம்.

பூவ.

பெயரினாகிய தொகை—வருமொழி பெயர் வந்தியைவதால் உண்டாகும் தொகை. வினையினாகிய தொகை—வருமொழி வினைவந்தியைவதால் உண்டாகுந் தொகை. எனவே பெயரி னாகிய தொகை, வினையினாகிய தொகை என்பன நிலைமொழி பெயராக நிற்க, வருமொழி பெயராகவும் வினையாகவும் வந்தியைவதால் உண்டாவன என்பது சேனாவரையர் கருத்து.

பெயர் நிலைமொழியாக நிற்க வருமொழி பெயர்வரினும் வினைவரினும் பெயரினாகிய தொகை. வினை நிலைமொழி யாக நிற்க வருமொழி பெயராக வருவது வினையினாகிய தொகை. எனவே பெயரினாகிய தொகை வினையினாகிய தொகை என்ற வேறுபாடு நிலைமொழி வேறுபட்டால் வருவது என்பது உரையாசிரியர் கருத்து.

நிலைமொழி வினையாயின் அது தொகை நிலைக்கு வாராது. வினைமுற்று பெயரெச்சம் வினையெச்சம் என வினைச் சொற் கள் மூன்று வகைப்படும். வினையெச்சத்திற்கு வருமொழி பெயராகாது. ஏனைய வினைமுற்றும் பெயரெச்சமும் நிலை மொழியாக நின்று பெயர் கொள்ளுமாயின், அவை வினை முற்றுத் தொடர், பெயரெச்சத் தொடர் என்று, அவ்வழியில் தொகாநிலையாவதன்றித் தொகைநிலையாகா. அதனால் வினையினாகிய தொகை என்பதற்கு மேற்கூறியவற்றை விடுத்து வினைத் தொகையை எடுத்து, அதற்கு நிலைமொழி வினை யென்று கருதி, அதுநிலைமொழியாக நின்று பெயரோடு சேர்வது வினையினாகிய தொகையென்றார் உரையாசிரியர். வினைத் தொகைக்கு நிலைமொழி வினையன்று என்பது சேனாவரையர் கருத்து. அதனை எச்சவியலில் வினைத்தொகை (415) யிலக் கணத்திற் காணலாம்.

பெயர் நிலைமொழியாக நிற்க, வருமொழி வினை வரினும் பெயர் வரினும் பெயரினாகிய தொகை யென்பது உரையாசிரியர் கருத்தாகக் கொள்ளாமல், நிலைமொழியும் வருமொழியும் பெய ராகவே வருவது பெயரினாகிய தொகை என்று கொண்டால், நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் என்றாற் போன்றன உரை யாசிரியர் கருத்துப்படி தொகையாகாமலே போய்விடும்.

'எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய' என்பதனால்... உரையாசிரியர் கூறினாரால் எனின்......'எல்லாத் தொகையும்

ஒரு சொன்னடைய (எச்ச 24) என்ற சூத்திரத்தால் தொகைச் சொல் எல்லாம் ஒட்டி ஒரு சொல்லாகி, ஒவ்வொரு தொகையும் ஒவ்வொரு பெயர்ச் சொல்லாகும். எல்லாப் பெயரும் எழுவாய் வேற்றுமையாகும் என்ற விதிப்படி அவைகளும் எழுவாய் வேற்றுமையாகும். 'அவ்வு முரிய அப்பாலான' என்று இங்குக் கூறியதனால், அங்ஙனம் எழுவாய் வேற்றுமையாகிய தொகைகள் பயனிலை கொள்ளும் என்று உணர்த்துகின்றார் என்பது உரை யாசிரியர் கருத்து.

எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய என்பதனால் தொகைச் சொற்கள் ஒட்டி ஒரு சொற் போல இசைக்கும் என்பதே கூறப்பட்டது. அங்ஙனமன்றி அச்சூத்திரத்தால் தொகையெல்லாம் எழுவாய் வேற்றுமையாகும் என்பது உணர்த்தப் படுமாயின், தொகைகள் எழுவாய் வேற்றுமையாகி விட்டால் 'அன்றியனைத்தும் பெயர்ப் பயனிலையே' என்ற தனால், அவைகள் பயனிலை கோடலையும் பெறும். 'அவ்வு முரிய' என்று தனியே கூறல் மிகையாகும் என்பது சேனா வரையர் கருத்து. எச்சவியல் 24ஆம் சூத்திரக் கருத்தை வேற்றுமையியல் 6 ஆம் சூத்திரத்தோடு இயைத்தல் பொருந் தாமை காண்க.

பெயர்யாவும் பயனிலை ஏற்கும்.

**69.** **எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி**
**யவ்வியல் நிலையல் செவ்வி தென்ப** (7)

*[எவ்வயின் பெயரும் வெளிப்படத் தோன்றி*
*அ இயல் நிலையல் செவ்விது என்ப].*

ஆ. மொ.

இல.

The nouns of all persons, being
understood, stand
in the nature of having predicate
this is the right way - say the learned

க. சு.

It is correct, they say, that every noun
be explicitely mentioned in such positions.

பி. இ. நூ.

இல. 198.

எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அல்வியல் நிலையல் செவ்விது என்ப

இளம்.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், †இதுவும் எழுவாய் வேற்றுமைக்கு ஆவதோர் திறம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: எல்லாப் பெயரும் [1]பயனிலைப்பட நிற்றற்றன்மையில் திரியாமை அதற்குச் செவ்விது என்ப; பிறிது அதற்குச் செவ்விய தாகாமையும் உடையது, எ-று.

யாதோ எனின் உருபேற்றலும் பெயரது இலக்கணம்; அவ்வுரு பேற்றலை உடையதாகாது எனலும் ஆம்.

[2]ஒரோ பெயர் என்பது என்னை? நீயிர் என்பது பெயர்; பெயராயினும் நீயிரை என உருபேலாது. பிறவும் அன்ன.

சேனா

இ-ள்: மூன்றிடத்துப் பெயரும் செவிப்புலனாகத் தோன்றி நின்று பயனிலை கோடல் செவ்விதென்ப ஆசிரியர், எ-று.

எனவே அவ்வாறு தோன்றாது நின்று பயனிலை கோடலும் உண்டு; அது செவ்விதன்று என்ற வாறாம்.

பெயர் என்றது ஈண்டு எழுவாயை.

உ-ம்: கருவூர்க்குச் செல்லாயோ சாத்தா என்றவழிச் செல்வல் எனவும், யான் யாது செய்வல் என்றவழி இது செய் எனவும், இவன் யார் என்ற வழிப் படைத்தலைவன் எனவும் செப்பியவழி, யான் நீ இவன் என்னும் எழுவாய் வெளிப்படாது நின்று, செல்வல், இதுசெய், படைத்தலைவன் என்னும் பயனிலை கொண்டவாறு கண்டு கொள்க.

---

†. இன்னும் (பாடம்)

1. பயனிலைப்பட நிற்றல் தன்மை—பயனிலை கொள்ளும் படி வெளிப்படையாக நிற்றல்தன்மை.

2. ஒரோபெயர்—ஒரு சில பெயர்,

[1]'எவ்வயிற் பெயரும்' என்றது என்னையெனின், செல்வல், இதுசெய் என்னுந் தன்மை முன்னிலை வினைகளான யான், நீ யென்பனவற்றின் பொருளும் உணரப்படுதலின் யான் செல்வல், நீயிதுசெய், எனப்பெயர் வெளிப்படுதல் பயமின்றாயினும் வழக்கு வலியுடைத்தாகலின், அவ்வாறு வருதல் பயமின்றெனப் படாதென்பது விளக்கிய 'எவ்வியற் பெயரும் என்றார் என்பது.

[2]அவ்வியலான் நிலையல் என விரியும். பயனிலைக்கு [3]இரு நிலைமையும் ஓதாது எழுவாய்க்கே ஓதுதலாற் பயனிலை வெளிப் பட்டே நிற்கும்.

[4]எவ்வயிற் பெயரும் பயனிலைகோடல் செவ்விதென, உரு பேற்றல் செவ்விதன்றாம் எனவுரைத்து 'அவ்வாய் நீயிர் என்பன உருபேலா வென்று காட்டினாரால் உரையாசிரியர் எனின்:— அவ்வாய் என்பது இடைச் சொல்லாய் ஆண்டு என்னும் பொருள் பட நின்றவழி உருபேயன்றிப் பயனிலையும் ஏலாதாம். இனி அவ்வழிக்கண் 'நும்' என்பது திரிந்து நீயிர்' என நின்ற திரிபைப் பெயரெனக் கொண்டு உருபேலாது என்றாராயின், நீ என்பதன் திரிபாகிய 'நின்' என்பதனையும் பெயராகக்

---

1. படர்க்கை வினைமுற்றுக்குரிய எழுவாய் வகைப் பாகுடையது. வந்தான் என்றால் அவன் என்பது எழுவாயாயினும் அவன் என்பவன் யாவன் என்னும் வினா எழ இன்னான் (முருகன், வேலன் என்பனபோல) என்று கூறியாக வேண்டும். வந்தேன் என்னும் வினை முற்றுக்கு யான்என்றே எழுவாய் அமையும். அதே போல் வந்தாய் என்பதற்கு நீ என்பதே அமையும். தன்மை முன்னிலைகளில் வகைப்பாடில்லை. வகைப் பாடுள்ள படர்க்கைப் பெயர்களும் வகைப்பாடில்லாத் தன்மை முன்னிலைப் பெயர்களும் ஆகியவற்றையெல் லாம் தழுவுதற்கு எவ்வகைப் பெயரும் என்றார்—சிவ.
2. அவ்வியலால் நிலையல்—எழுவாய் வேற்றுமைக்குரிய இயல்பால் நிலையல்.
3. வெளிப்பட இருத்தலும் வெளிப்படாதிருத்தலுமாகிய இருநிலை.
4. இத்தொடர் இள‌ம்பூரணத்தில் இல்லை. உரையாசிரியர் இளம்பூரணரல்லர் என்பதற்கு இதுவும் ஓர் சான்று. இத்தொடர் இளம்பூரணத்தில் விடுபட்டிருக்க வேண்டும் என்பர் கு. சுந்தரமூர்த்தி.

கொண்டு பயனிலை கொள்ளாது என்றும் கூறல் வேண்டும்; அன்றி நும்மின் திரிபாகிய நீயிர் என்பதனை 'எல்லா நீயிர் நீயெனக் கிளந்து' (சொல் 174) என இயற்கைப் பெயரோடு ஒருங்கு வைத்தது நீயிர் என்னுந் திரிபே இயல்பாக வேற்றுமைக் கண் நும் எனத்திரியினும் அமையும் எனும் கருத்தினராயன்றே? அதனான் இயல்பாகக் கொள்ளப்பட்ட நிலைமைக்கண் நீயிர் என்பதனை உருபேலாது என்றாராயின் நும் எனத் திரிந்து உரு பேற்பதனை உருபேலாது என்றல் பொருந்தாதாம். அதனான் அது போலியுரை யென்க.

தெய்.

இது எழுவாய் வேற்றுமைக்கு உரியதோர் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மூன்றிடத்துப் பெயரும் வெளிப்படத் தோன்றிப் *பயனிலையோடு நிற்றல் செவ்விது, எ-று.

எனவே, வெளிப்படத் தோன்றாது பயனிலை கோடல் செவ்விது அன்று என்றவாறாம்

அவையாவன:-சோறு உண்ணாயோ சாத்தா என்ற வழி உண்பல்' என்பது. இச்செப்பின்கண் 'யான் உண்பல்' என எழு வாயும் பயனிலையுமாக நிற்கற்பாலது, உண்பல் என்னும் *பயனிலை வெளிப்பட்டு 'யான்' என்னும் பெயர் தோன்றாது நிற்பினும், அப்பொருள்பட நிற்றலின் அத்தொடர் வழு எனப் படாமையால் செவ்விதன்றாயிற்று. இஃது இத்தொடர்ச்சிக்கண் வழு அமைத்தவாறு. இது தன்மை.

'யான் யாது செய்வல்' என்றானை 'இது செய்' என்பது. இதன்கண் 'நீ' என்னும் பெயர் வெளிப்படாது நின்றது. இது முன்னிலை.

'அவன் யார்' என்றார்க்குப் 'படைக்கை மறவன்' என்றவழி 'அவன்' என்னும் பெயர் தோன்றாது நின்றது. இது படர்க்கை.

---

* பயனிலைப் பட (பாடம்)

[1]அஃதேல், இவை, பெயரெச்சம் என்று எச்சவியலுள் (34) கூறுகின்றதனுள் அடங்காதோ எனில், அடங்குமாயினும், எழுவாயும் பயனிலையும் ஆகி நிற்குங்கால், பெயர் தோன்றாது நிற்பின் வழுவாம் என்பதனால் ஈண்டுக் கூறல் வேண்டும் என்க.

*இன்னும் இச்சூத்திரத்திற்குப் பொருள் வெளிப்படத் தோன்றிப் பயனிலை கோடல் செவ்விது எனவே, வெளிப்படத் தோன்றாத பெயர் திரிபுடைய என்றவாறாம்.

அவையாவன:- இரும்பு பொன் ஆயிற்று, குயவன் குடத்தை வனைந்தான் என்றவழி, எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடைக் கிடந்த பொன், குடம் என்பன ஆயிற்று என்பதனோடும் வேற்றுமையுருபினோடும் திரிந்தவாறு கண்டு கொள்க.

அஃதற்றாக, வனைந்தான் என்பது குயவனோடு முடிய, இடைக்கிடந்த குடத்தை என்பதற்கு முடிபு யாதோ எனின், அது 'குடத்தை வனைந்தான்' என ஒரு சொல் நீர்மைப் பட்டுக் 'குயவன்' என்பதற்குப் பயனிலையாகி நிற்பின் அல்லது வேறு முடிபு உரைக்கப்படா என்க.

---

1. பெயரை எஞ்சி நிற்கும் சொல் பெயரெச்சம். உண்ட என்பது சாத்தன் என்பதை எஞ்சி நின்றதாயின் அது பெயரெச்சம். 'உண்டசாத்தன்' எனவரும். உண்டான் என்பது எவன் என்னும் வினாவிற்கேற்பச் சாத்தன் என்னும் பெயரை எஞ்சி நிற்பதாகலின் அதுவும் பெயரெச்சம் எனப்படும். அதனால் தோன்றா எழுவாய் எனத் தனியே இச்சூத்திரத்திற் கூறவேண்டுவதில்லை. இவ்வாறு தெய்வச்சிலையார் எண்ணி அமைதியாகத் "தோன்றா எழுவாய் பெயரெச்சத்துள் அடங்குமாயினும், எழுவாயும் பயனிலையுமாக வரும்போது எழுவாய் வெளிப்பட்டில்லையென்றால் அது வழுவாம்; எனினும் வெளிப்படாமை வழுவமைதியிற் கொள்வதற்காக இங்குக் கூறினார்." என்றார். பெயரெச்சத்துக்கு இவர் கொண்ட விளக்கம் நன்றாயினும் பயனிலை எழுவாயை (பெயரை) எஞ்சியிருப்பதும் பெயரெச்சம் எனக் கொண்டது தவறு—சிவ.

இக்கருத்தை மற்றையோர் கூறவில்லை. 'இன்னும்... எனவே' என்பது வரை உரைக்கோவையில் இல்லை.

ஆயின் எழுவாயும் பயனிலையும் என எல்லாச் சொல்லும் அடங்கும்; வேற்றுமை எட்டு எனல் வேண்டா எனின், 'குயவன் வனைந்தான்' என்ற வழி, வனையப்பட்டதும், அதற்காம் கருவியும், அத்னாற் பயனும், பிறவும் தோன்றுமாதலின், அப்பொருள்களே வேற்றுமையாகி இடைக்கிடக்கின்றன என்க. இவையெல்லாம் இடைக்கிடப்பன வாகலின், செய்கின்றானை முன் வைக்கப் பட்டது.

*நச்.

இஃது அவ்வெழுவாய் புலப்பட்டும் புலப்படாதும் நிற்கும் என்கின்றது.

இ-ள்: எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி—மூன்றிடத்து எழுவாயும் செவிப்புலனாகத் தோன்றி நின்று, அவ்வியல் நிலையல் செவ்விது என்ப—பயனிலை கோடல் செவ்விது என்ப ஆசிரியர், எ-று.

எனவே, அவ்வாறு தோன்றாது நின்று பயனிலை கோடலும் உண்டு; அது செவ்விது அன்று என்றவாறாம்

'அவ்வியல் நிலையல்' என்பது எவ்வியல் நிலையலோ எனின், மேற்கூறிய ஆறு பயனிலையும் கொண்டு நிற்றல் செவ்விது. அப் பயனிலை கோடலில் திரியாவாய்ப் பயனிலைப் பட்டு நிற்றல் 'செவ்விது' எனவே, பிறிது ஏற்றற்குச் செவ்விது ஆகாமையும் உடைய; அவை, 'நீயிர்' என்பதும், அவ்வாய்க் கொண்டான் என்பதும் உருபேற்றற்குச் செவ்விய அல்ல.

'கருவூர்க்குச் செல்வையோ சாத்தா' என்ற வழிச் 'செல்வல்' எனவும், 'யான் எது செய்வல்' என்ற வழி 'இது செய்' எனவும், 'இவன் யார்' என்ற வழி 'படைத்தலைவன்' எனவும் செப்பிய வழி, யான், நீ, இவன் என்னும் எழுவாய் வேற்றுமை வெளிப் படாது நின்று, 'செல்வல்', 'இது செய்', 'படைத் தலைலன்' என்னும் பயனிலை கொண்டவாறு காண்க.

கல்.

என்—எனின், பெயர் உருபேற்கும் வழிப் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

---

* இளம்பூரணர், சேனாவரையர் ஆகியோர் கருத்துகளை ஏற்றனர்.

இ-ள்: எவ்விடத்துப் பெயரும் விளங்கத் தோன்றி மேற் சொல்லப்பட்ட வேற்றுமையாய்ப் பயனிலை கொள்ளும் இயல் பின்கண்ணே நிற்றல் செவ்விது என்று சொல்லுப ஆசிரியர், எ-று.

$மேற்காட்டின இவ்விதி மேல் பெற்றாமன்றோவெனின், மேற் பெற்றதனையே ஈண்டும் தந்து வலியுறுத்தார் பிறிது ஒன்று விளக்கிய என்பது; அஃது யாதோ எனின், பயனிலை ஏற்றலிற் செவ்விது என, உருபேற்றலும் பெயர்க்கு இலக்கணம் அன்றே, அதனிற் செவ்விய ஆகாதனவும் உள என்பது.

*நீயிர் என்பது பெயர்; நீயிரை என உருபு ஏலாது. அது நும் என்னும் பெயர் அல்வழிப் புணர்ச்சித் திரிபு என்றது. உம்மை என உருபு ஏற்குமால் எனின், பிற சந்தித்திரிபுபோல நிலை மொழி நிலை தோற்ற நில்லாது திரிபின் பிறிதோர் பெயர் நிலை பட நிற்றலின் வேறோர் பெயர் என வேண்டியது போலும். இதனகத்து விகற்பமெல்லாம் உரையிற் கொள்க. இந்நிகரன ஒருருபும் ஏலாதன. அவ்வாயக் கொண்டான் என்பது. அவ்வாய்க் கட்கொண்ட......விழா உருபு ஏலாதது இந்நிகரன பிற உருபேற்கு மேனும் அறிந்து கொள்க.

ஒரு.

என்பது தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்று இடத்துப் பெயரும் விளங்கத் தோன்றி, எழுவாய் வேற்றுமை யாய்ப் பயனிலை கோடல் செவ்விது என்ப.

---

$ உ-ம். மேற்ககாட்டின மேல் என்பது உரைக் கோவைப் பாடம்

* இப்பகுதி பின்வருமாறு இருத்தல் வேண்டும் என்பர், சுப்பிரமணிய சாஸ்தியார், கு சுந்தரமூர்த்தி. "நீயிர் என்பது பெயர்; நீயிரை என உருபேலாது. இது நும் என்னும் பெயரது அல்வழிப் புணர்ச்சித் திரிபு என்பது. உம்மை என உருபு ஏற்குமால் எனின், பிற சந்தித்திரிபு போல நிலை மொழி தோற்ற நில்லாது திரிந்தபின் பிறி தோர் பெயர் நிலைமைப்பட நிற்றலின் வேறோர் பெயர் என வேண்டியது போலும். இதனகத்து விகற்ப மெல்லாம் உரையிற் கொள்க. இந்நிகரன ஒருருபும் ஏலாதன. அவ்வாய்க் கொண்டான் என்பது அவ்வாய்க் கடகொண்டான் என ஏழாம் உருபு ஏலாதது.

முன் எழுவாய் வேற்றுமைப் பெயர் இன்னது என்று வரைந்தது இன்மையின், அம்மூன்றிடத்துப் பெயருமே எழுவாய் வேற்றுமைப் பெயர் என்று உணர்த்தியவாறு காண்க.

**ஆதி.**

(தனிமொழி தொடர் மொழி) எவ்வகை மொழியாயினும் (எழுவாய்) வெளிப்படையாக நின்று பயனிலை கொள்ளுதலே சிறப்புடையது,

முகம் வியர்த்தது — தனிமொழி எழுவாய்

மதிமுகம் வியர்த்தது — தொடர் மொழி எழுவாய்

[1]இவ்வாறன்றி 'அப்போது வியர்த்தது' எனத் தோன்றா எழுவாயாக வைப்பதும்; சென்றேன், சென்றாய், சென்றான் எனத் தோன்றா எழுவாயாகத் தன்மை முன்னிலை படர்க்கை இடப்பெயர்களன்றி எழுதுவதும் சிறப்பாகா. அவ்வியல் நிலையின்—பயனிலை கொள்ளுமுறை உளதாயின். செவ்விது—செம்மையானது.

**சுப்.**

உரையாசிரியர் 'அவ்வியல் நிலையல்' என்பதற்குப் 'பயனிலைப்பட நிற்றற் றன்மையிற் றிரியாமை' எனப்பொருள் கூறினர். அஃதாவது பெயர் எழுவாயாய் இருக்கும் போது கொண்ட உருவத்தினையே வேற்றுமையுருபேற்கும் போதும் கொள்ளுதலும், மாறுபடாமல் இருத்தலும் என்பது. சேனாவரையர் தெய்வச்சிலையார் இருவரும் அச்சொல்லுக்குப் 'பயனிலை கோடல்' எனப்பொருள் கொண்டனர். உரையாசிரியர் கொண்ட கருத்தைக் கொள்ளின் தோன்றா எழுவாயுடைய முற்றுவினையின் பிரயோகம் பெறப்படாமையின், சேனாவரையர், தெய்வச்சிலையார் கொள்கையே சிறக்கும்.

**பூவ.**

அவ்வாய் நீயிர்...உரையாசிரியர் எனின்...அவ்வாய்...ஆண்டு ...அவ்விடத்து:—அவ்வாய்க் கொண்டான் என்றால் 'கொண்

1. அப்போது வியர்த்தது என்பது பிழை; இதில் தோன்றா எழுவாய் எது என்பது விளங்கவில்லை. சென்றேன் என்பதில் வினை விகுதி நோக்கித் தன்மையான் என்பது தோன்றா எழுவாய் என்னலாம். எனினும் சிறப்பில்லை.

டான்' என்பது 'சாத்தன்' என்றாற் போன்ற ஏதேனும் ஒரு தோன்றா எழுவாய்க்குப் பயனிலையாகும்; 'அவ்வாய்' என்பதற்குப் பயனிலையாகாது. அவ்வாய் என்பது கொண்டான் என்னும் பயனிலைக்கு* அடைமொழியாக நிற்பது. ஆதலால் அவ்வாய் என்பது உருபேலாது என்று கூறுதல் வேண்டாததொன்று.

நீயிர் என்ற சொல்பற்றித் தொல்காப்பியர் கருத்துக் குழப்பமாகவுள்ளது. யான் நீ முதலிய சில சொற்கள் எழுவாய் வேற்றுமையில் இயல்பாக நிற்கும், இரண்டாவது முதலிய வேற்றுமைகளை ஏற்கும்போது, என், நின் என்றாற் போலத் திரிந்து நின்று அவ்வுருபுகளையேற்கும். (உருபியல். 7.)

நும் என்ற சொல் (இவற்றிற்கு மாறாக) இரண்டாவது முதலிய வேற்றுமைகளில் இயல்பாக (நிம் என்று) நின்று, எழுவாய் வேற்றுமையில் 'நீயிர்' எனத் திரியும் என்றார். (எழுத்து. புள்ளி. 31) பெயரியல் 20 ஆம் சூத்திரத்தில் 'எல்லாம்நீயிர் நீ எனக் கிளந்து'என நீயிர் என்பதனை இயற்கைப் பெயர் (திரிபில்லாத பெயர்) வரிசையில் வைத்துக் கூறியுள்ளார். அதனால் நீயிர் என்பது இயற்பெயர் என்றும் , நும் என்பது அதன் திரிபு என்றும் கொள்ள இடம் உண்டாகின்றது.

நும் என்பது இரண்டாவது முதலிய வேற்றுமைகளை ஏற்கும்; எழுவாய் வேற்றுமையை ஏலாது. அதன் திரிபாகிய நீயிர் என்பது எழுவாய் வேற்றுமை ஏற்கும். பிற வேற்றுமைகளை ஏலாது. இந்நிலையில் திரிந்த பெயராகிய நீயிர் என்பதனை இயற்கைப் பெயர் போல வைத்து, அஃது எழுவாய் வேற்றுமை தவிர பிற வேற்றுமைகளை ஏலாது என்று கூறினால், நீ என்பதன் திரிபாகிய நின் என்பதனையும் இயற்கைப் பெயர் போலக் கொண்டு, அஃது எழுவாயாகிப் பயனிலை கொள்ளாதெனல் வேண்டும். அங்ஙனம் உரையாசிரியர் கூறவில்லை. நீ என்பது எழுவாய் வேற்றுமை ஏற்கும். அதன் திரிபாகிய நின் என்பது பிற வேற்றுமைகளை ஏற்கும் என்ற கருத்தையே கொண்டுள்ளார். அங்ஙனமே நும் என்பது பிற வேற்றுமைகளை ஏற்கும்; அதன் திரிபாகிய நீயிர் என்பது எழுவாய் வேற்றுமையாகிய பயனிலை கொள்ளும் என்று கூறுவதே பொருத்தமாகும்.

---

* அடைமொழியாக வரும் இடைச் சொல்லாகும். அவ்வாய் என்பது இடைச்சொல்; உருபு ஏலாது. ஆதலின் உருபேலாததனை உருபு ஏலாது எனக் கூறுதல் வேண்டா என்பது கருத்து.

திரிந்த பெயராகிய நீயிர் என்பது திரியாத நிலையில் (நும்) பிற உருபுகளை ஏற்பதாக இருக்க, அது பிற உருபுகளை ஏலாது என்றல் பொருந்தாது.

இனி, நீயிர் என்பதனைப் பெயரியலில் (சூ.20) இயற்கைப் பெயர் வரிசையில் வைத்துக் கூறினதால், நும் என்பது அதன் திரிபாகக் கொள்ள வேண்டியதாக இருப்பதனால் நும் என்று திரிந்து பிற உருபுகளை ஏற்கும் நீயிர் என்ற பெயரைப் பிற உருபுகளை ஏலாத பெயர் என்று கூறுதலும் பொருந்தாது. இவ்வாறு உரையாசிரியர் கருத்தைச் சேனாவரையர் மறுத்தார்.

சிவ.

பொருள்: மூவிடத்துள் எவ்விடத்துப் பெயரும்—தனிப் பெயரும் தொகைவயினாகிய பெயரும்—வெளிப்படத் தோன்றி நின்று வேற்றுமையியல்பில் நிலைத்தல் சிறந்தது; வெளிப்படத் தோன்றாமல் வேற்றுமைத் தன்மையில் நிலைத்தல் சிறந்ததன்று.

இவ்வாறு இச்சூத்திரத்துக்குப் பொருள் கொண்டு, தோன்றா எழுவாய், தோன்றாச் செயப்படுபொருள், தோன்றாக் கருவிப் பொருள், தோன்றாக் கோடற்பொருள், தோன்றா நீங்கற் பொருள், தோன்றா இடப்பொருள் என ஆறு வேற்றுமைகளுக்கும் இச்சூத்திரம் கூறப்பட்டதாகக் கொள்க.

இவற்றுக்கு உதாரணம் உலக வழக்கிலும், தொல்காப்பியர் ஆட்சியிலும் காணலாம்.

உ-ம்: (1) உலக வழக்கு: முருகா உண்டாயா என்ற வழி உண்டேன் என்பதில் யான் என்பது தோன்றா எழுவாய்—

தொல்காப்பியம்: ''எழுத்தெனப்படுப...என்ப'' இதில் என்ப என்னும் பயனிலைக்குப் 'புலவர்' என்பது தோன்றா எழுவாய்.

(2) உலக: முருகா உண்டாயா என்பதில் உணவை என்பது தோன்றாச் செயப்படு பொருள்.

தொல்: ''வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்'' (வேற். ம. 33) என்னும் சூத்திரத்தில் ஆகு பெயர்கள் என்பது தோன்றாச் செயப்படுபொருள்.

(3) உலக: 'இச்செய்யுளை எழுது' என்பதில் 'பேனாவால்' என்பது தோன்றாக் கருவி.

தொல்; 'நுண்ணிதின் உணர்ந்தோர்' (நூன் மரபு.7) என்பதில் 'அறிவான்' என்பது தோன்றா ஞாபகக் கருவி.

(4) உலக: "பசிக்கிறது; சாப்பாடு கொண்டுவா' என் பதில் 'எனக்கு' என்பது தோன்றாக் கோடற் பொருள்

தொல்: "உட்பெறு புள்ளி யுருவாகும்மே' (நூன் 14) என்பதற்கு 'அரையளவு குறுகும் மகரம்' (நூன். 13) என்பது தோன்றாக் கோடற் பொருள்.

(5) உலக: 'அண்ணன் எங்கேஎன்ற பரதனுக்குக் காட்டிற்குச் சென்றான் என்றாள்கைகேயி' என்னும் தொடரில் 'அயோத்தியினின்றும்' என்பது தோன்றா நீக்கப் பொருள்.

தொல்: மென்மையும் இடைமையும் வரூஉங் காலை
இன்மை வேண்டும் என்மனார் புலவர் (புணரி 29.)
என்பதில் 'இன்மை வேண்டும்' என்பதற்கு 'அம்மின் இறுதி மகரம் அவ்விடத்தினின்றும் இல்லாமை வேண்டும்' என்பது பொருளாதலின் 'அவ்விடத்தினின்றும்' என்பது தோன்றா நீக்கப் பொருள்.

(6) உலக: ஒருவன் தன் நண்பனைத்தேடி அவன் வீட்டிற்குச் சென்று அவன் தாயிடம் 'நண்பன் இருக்கிறானா?' என்று வினவினால் வீட்டில் என்பது தோன்றா இடப் பொருளாகும்.

தொல்: "கவவோ டியையின் ஔவும் ஆகும்" (மொழி மரபு. 37)
இச்சூத்திரத்தில் 'மொழியிறுதிக்கண்' என்பது தோன்றா இடப் பொருளாகும்.

தோன்றா வேற்றுமைகள் (எழுவாய்த் தவிர) வினை கொண்டு முடியும் காலத்தில்தான் வருவன. அதனால் ஆறாம் வேற்றுமை தோன்றா வேற்றுமையாக வாராது. விளி தோன்றாமையில்லை.

உருபு நிற்கும் இடம்.

70. கூறிய முறையி னுருபுநிலை திரியா
தீறுபெயர்க் காகு மியற்கைய வென்ப. (8)

(கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறு பெயர்க்கு ஆகும் இயற்கைய என்ப)

ஆ. மொ.
இல.
In the said order the case signs, with out being changed, have the nature of standing at the end of the nouns - say the learned.

க சு.

The case - markers mentioned above are suffixed to the end of nouns with out any modification of form.

பி. இ. நூ.

நேமி. 40.

தோற்றும் பெயர் முன்னர் ஏழும் தொடர்ந்தியலும்
ஏற்ற பொருள் செய் யிடத்து.

நன். 291.

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை

இல. 193. ஷை ஷை

இளம்.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், உருபேற்றலும் பெயரது இலக்கணமும் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: மேல் அவைதாம், ஐ ஒடு கு இன் அது கண் என்றோதிய முறையாற் கிடந்த உருபு முறைமையின் திரியாதே பெயரது ஈற்றுக்கண் வந்து நிற்கும் இயல்பினையுடைய, எ-று.

வரலாறு: சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு சாத்தனின் சாத்தனது, சாத்தன்கண் என வரும்.

[1] நிலை திரியாது என்றது, இவை இடைச் சொல்லாகலால் தம்மீறுதிரிதல் என்னும் இலக்கணமுடைய சொல்லோ எனின்;

---

1. இடையியல் 3 ஆம் சூத்திரத்தில் இடைச் சொற்கள் (1) மொழியின் முன்னும் பின்னும் அடுத்து வருதல் (2) ஈறு திரிதல் (3) தன்னுடன் பிறிதொரு இடைச்சொல் சேர்ந்து வருதல் என்னும் மூன்றுவகையில் வரும் என்பது கூறப்பட்டது. வேற்றுமையுருபுகளும் இடைச் சொற்களாதலின் அம்மூன்றையும் பெறுமோ எனின் பெயர்க்கீற்றில் மட்டும் வரும் என்பதை ஈறு பெயர்க்காகும் என்பதால் உணர்த்தினார். தில் என்பது ஈறு திரிந்து தில்ல என வருதல் போல் வேற்றுமையுருபுகள் வருமோ எனின் திரியாதே வரும் என்பதற்காக நிலை திரியாது என்றார். செய்யுளில் கு, ஐ என்னும் வேற்றுமையுருபுகள் திரிதலின் வழக்கில் திரியுமோ எனின் திரியா என்பதற்காகவும் நிலை திரியாது என்றார்.

அவை யில என்றற்குக் கூறினான் என்பது. அன்றியும் முன்னர் வேற்றுமை மயங்கியலுள்,

> கு ஐ ஆன் என வரூஉம் இறுதி
> அவ்வொடு சிவணும் செய்யு ளுள்ளே (வேற். மயங். 25)

என்று செய்யுட்கண் திரிபு கூறுபவாகலானும் அது சொல்லினார் என்பது.

சேனா

எழுவாய் வேற்றுமையுணர்த்தி, ஏனை அறுவகை வேற்றுமை யிலக்கணமும் உணர்த்திய எடுத்துக் கொண்டார்.

இ - ள் : பெயர் ஐ ஒடு கு இன் அது கண் என்று கூறப்பட்ட முறைமையையுடைய உருபு தந்நிலை திரியாது பெயர்க் கீறாம் இயல்பையுடைய வென்று சொல்லுவர் ஆசிரியர்; எ - று.

உ - ம் : சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் எனவரும்.

அம்முறை பற்றி அவையெண்ணுப் பெயரான் வழங்கப் படுதலின் 'கூறிய முறையின் உருபு' என்றார். [3]வினைச்சொல் இறுதி நிற்கும் இடைச்சொல், தாம் என வேறு உணரப் படாது அச்சொற் குறுப்பாய் நிற்குமன்றே? இவை யவ்வாறு பெயர்க்கு உறுப்பாகாது தாம் என வேறு உணரப்பட்டு இறுதி நிற்கும் என்பார் 'நிலை திரியாது' என்றார்

---

2. எண்ணுப் பெயரான் வழங்கப்படுதலாவது முதல் வேற்றுமை இரண்டாம் வேற்றுமை முதலியவாக வழங்கப்படுதல்.
3. வினைச்சொல் இறுதி நிற்கும் இடைச் சொல் = விகுதி யிடைச்சொல். (வந்தான் என்பதில் ஆன் விகுதியிடைச் சொல்) தாம் என = இடைச் சொற்கள் என. வந்தான் என்பதில் ஆன் என்பது தனியே தான் இடைச் சொல் என நில்லாமல் வந்தான் என்னும் வினைச் சொல்லின் உறுப்பாகவே யுண்மை காண்க. 'சாத்தனை' என்றால் சாத்தனுக்கு உறுப்பாக நில்லாமல் ஐஎன்பது இரண்டன் உருபு எனத் தோன்றுமாறு நிற்றல் காண்க. வினைச் சொல் விகுதி முதலிய இடைச் சொற்களின் கூட்டால் தான் உருப்பெறுகிறது. பெயர்ச் சொல் உருபு இல்லை யென்றாலும் முழு உருவமைகிறது வேறு பாடுணர்க.

உருபு பெயர் சார்ந்து வரும் எனவே, உருபு ஏற்றலாகிய பெயர்க்கிலக்கணமும் பெறப்பட்டது.

தெய்.

*பெயர்ச் சொற்கண் உருபு நிற்கும் நிலை உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : சொல்லப்பட்ட உருபு முறையானே நின்ற நிலையைத் திரியாது பெயர்க்கு ஈறாகும் இயல்பினையுடைய, எ-று.

முறையானே என்றது அடைவே ஒன்றொன்றாக என்றவாறு. நிலையைத் திரியாது என்றது உருபு ஏற்று நிற்கும் பெயரைத் [1]திரியாது அதன்கண் இயல்பாகி நிற்கும் என்றவாறு.

[2]இச்சூத்திரம் கூறவேண்டா; மேலைச் சூத்திரத்துப் 'பெயர் ஐ ஒடு கு இன் அது கண் விளியென்னும் ஈற்ற' என்பதனாற் பெறுதும் எனின், அது கருதியன்று கூறியது. வடமொழிக்கண் எழுவாயாகிய பெயர் ஈறுகெட்டு உருபு ஏற்கும்; அவ்வாறன்றித் தமிழ் மொழிக்கண் எழுவாயாகிய பெயரின் மேலே உருபுநிற்கும் என்பது அறிவித்தற்கெனக் கொள்க. உதாரணம் மேற்காட்டப் பட்டன. வருகின்ற சூத்திரத்தின்கண்ணும் விளங்கும்.

நச்.

இஃது உருபு நிற்கும் இடம் கூறுகின்றது.

இ-ள்: கூறிய முறையின் உருபு நிலை திரியாது—மேல் ஐ ஒடு கு இன் அது கண் என்று கூறிய முறைமையையுடைய உருபுகள் தத்தம் நிலையில் திரியாது, பெயர்க்கு ஈறு ஆகும் இயற்கைய என்ப—பெயர்க்கு ஈறு ஆகும் இயல்புடைய என்று கூறுவர் ஆசிரியர், எ-று.

உ-ம் : சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் எனவரும்.

இவ்விடைச் சொற்கள் பெயர்க்கு உறுப்பு ஆகாது, தாம் என வேறு உணரப்பட்டு இறுதி நிற்றலின், 'நிலை திரியாது' என்றார். எனவே, [3]வினைக்குத் தாம் என வேறுபடாது நிற்கும் ஆயின.

---

* இத்தொடர் உரைக்கோவையில் இல்லை.

1. திரியாது = திரிக்காது, மாற்றாது

2. இக்கருத்து மற்றையோரிடம் காணப்படாதது.

3. தாம் என வேறுபடாது நிற்றல்—வந்தான் என்பதில் ஆன் என்னும் விகுதி இடைச்சொல் தான் ஓர் இடைச் சொல் எனத் தனித்துத்தன்னை வேறுபடுத்திக் காட்டாமல் வினைவடிவாகவே தன்னை இயைத்துக் காட்டுதல்.

கல்.

என்—எனின், உருபேற்றலும் பெயர்க்கிலக்கணம் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேல் கூறப்பட்ட முறைமையினிடை நின்று வருகின்ற ஐ முதலாகிய உருபும், தத்தம் வாய்பாட்டு நிலைமையின் வேறாகாது திரியாது பெயர்க்கீறாய் வரும் இயல்பினையுடைய என்று சொல்லுவர் ஆசிரியர், எ—று.

உ-ம்: சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் எனவரும்.

மேல் 'கு ஐ ஆன் என வருஉம் இறுதி' என்று செய்யுட்கண் உருபுஈறு திரிபு கூறிகின்றார் ஆதலின், அஃது, ஒழிய வழக்கினுள் திரிபில்லை என்றற்கு 'நிலை திரியாது' எனப்பட்டது என்க.

ஒரு.

என்பது, மேல் ஐ ஒடு கு இன் அது கண் என்று கூறிய முறையையுடைய உருபுகள் தத்தம் நிலை திரியாது பெயர்க்கு ஈறாம் இயல்பையுடைய என்ப.

உ-ம்: சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் எனவரும்.

வெள்

வினைச் சொல்லின் இறுதி நிற்கும் விகுதிகளாகிய இடைச் சொற்கள் அச்சொற்கு உறுப்பாய் நிற்பது போன்று ஒரு சொற்றன்மைப்பட்டு ஒற்றித்து நில்லாமல், இவ்வேற்றுமையுருபுகள் பெயர்க்கு உறுப்பாகாது வேறுபட்டு அவற்றின் இறுதியில் நிற்பன என்பார் 'நிலை திரியாது பெயர்க்கு ஈறாகும்' என்றார். உருபு பெயர்க்கு ஈறாம் எனவே உருபேற்றலாகிய பெயர் இலக்கணமும் பெறப்பட்டது.

ஆதி.

முறையே கூறப்பட்ட வுருபுகள் (பொருள், இடம் பற்றி) நிலை மாறுபடாமல், பெயரின் ஈற்றில் நிற்பதே இயல்பு.

கண்ணில்
கண்ணுக்கு } உருபு ஈற்றில் நின்றது.
கண்ணே

கண்மேல் என்பதை மேல்கண் என்பதும், கண்ணுள் என்பதை உள்கண் என்பதும் முறைகேடு; இதனையே 'நிலை மாறுபடாமல்' என்றார்.

[1]ஏரின் உழுதான், பென்சிலின் எழுதுகிறான் என்பதும் முறைகேடே, இலக்கிய நெறியில் இவை போலி உருபு மயக்கம் ஆயின.

சுப்..

இச்சூத்திரத்தின் பொருள் நால்வர்க்கும் ஒன்றே. 'நிலை திரியாது' என்று கூறுவதன் பயன் உரையாசிரியர் மதத்தில் வேறு; சேனாவரையர், நச்சினார்க்கினியர் இவ்விருவர் மதத்தில் வேறு. 'நிலை திரியாது' என்றது இவை இடைச்சொல்லாகலால் 'தம்மீறு திரிதல் (சொல் 251) என்னும் இலக்கணம் உடைய சொல்லோ எனின், அவை இல என்றற்குக் கூறினான் என்பது. அன்றியும், முன்னர் வேற்றுமை மயங்கியலுள் 'குஐஆன் என வரூஉம் இறுதி அவ்வொடு சிவணும்' (சொல். 108) என்று செய்யுட்கண் திரிபு கூறுப ஆகலானும் அது சொல்லினார் என்பது'' என்று உரையரசிரியர் கூறுகின்றார். சேனாவரையர் ''வினைச்சொல் இறுதி நிற்கும் இடைச்சொல் தாம் என வேறு உணரப்படாது அச்சொற் குறுப்பாய் நிற்குமன்றே, இவை அவ் வாறு பெயர்க் குறுப்பாகாது தாமென வேறு உணரப்பட்டு இறுதி நிற்கும் என்பார் நிலை திரியாது என்றார்'' என்று கூறினர். நச்சினார்க்கினியர் சேனாவரையர் கொள்கையையே உடன் பட்டனர். [1]உருபும் இடைச் சொல்; வினைச் சொல்லிற்கு இறுதி நிற்கும் அன் ஆன் முதலியனவும் இடைச் சொல். உருபுக்கும் பொருள் உள்ளது. அவ்வாறிருக்க, அன், ஆன் முதலியன மாத் திரம் வினைக் குறுப்பாய் நிற்கும்; உருபு பெயர்க்கு உறுப்பாய்

---

1. ஏரின், பென்சிலின் என்பவற்றில் உள்ள இன் உருபு அன்று; சாரியை. உருபு எனக் கொண்டு போலி உருபு மயக்கம் என்பது பொருந்தாது. ''ஏரின் உழாஅர் உழவர்'' என வள்ளுவர் கூற்றும் ஏரினால் என்பதில் ஆல் உருபு தொக இன்சாரியை பெற்ற நிலையில் அமைந்தது; காண்க—சிவ.

1. இம்மறுப்பு பொருந்தாது. உண்டான் என்பதில் ஆன் வினையொடு ஒன்றியது. சாத்தனை என்பதில் ஐஉருபு சேர்ந்திருப்பினும் பெயர்க்கு உறுப்பாகாது. ஏன் எனின் ஐ என்பதால் சாத்தன் உருப் பெறவில்லை. ஆன் என்பதால் உண்டான் என்னும் வினை உருப்பெறு கிறது. உறுப்பு என்பது ஒரு வடிவை முழுமை பெறச் செய்வது—சிவ.

நில்லாது என்று கொள்வதிற் பயனின்மையால், உரையாசிரியரது கூற்றே சிறப்புடைத்து.

உருபு திரியின் "வினையே......தொழில் முதனிலையே" (சொல் 112) என்னும் சூத்திரத்தில் கூறப்பட்ட எண்வகைத் தொழில் முதல் நிலையில் அவ்வுருபு எதனைக் குறிப்பது என்று தெளிவாய் அறிய முடியாமையின், பெயர்ப்பகுதி ஒருவாறு திரியினும் உருபு திரியாது என அறிவித்தற்கு 'நிலை திரியாது' என்றனர் ஆசிரியர் என்பதே உரையாசிரியர் கருத்தாகும்.

உருபைப் பெயர்க்கு முதல் இடை இறுதி இவற்றுள் எவ்விடத்துச் சேர்ப்பது என்ற ஐயந் தோன்ற ஈற்றின்கண்ணே சேர்க்க வேண்டும் என்பதை உணர்த்தற்கு 'ஈறு' என்ற சொல்லைச் சூத்திரத்தில் வழங்கினர். உலகத்திற் சில மொழிகளில் உருபை முதற்கண்ணும் சில மொழிகளில் இடையிலும் சேர்த்தல் காண்க.

சிவ.

நிலை திரியாது என்பதற்கு யாவரும் உருபுகள் தம் நிலை திரியாது எனப்பொருள் கொள்ளத் தெய்வச்சிலையார் எழுவாய் (பெயர்) தம் ஈற்று நிலை திரியாது எனக் கொண்டார். இவர் வடமொழியில் பெயர்கள் உருபு ஏற்கும்போது தம் ஈறு திரிந்தும் வரும் நிலைகண்டு தொல்காப்பியர் இவ்வாறு கூறினார் எனக் கருதுகின்றார். வடமொழியோடு ஒப்பீட்டு முறையில் தொல்காப்பியர் நூல் செய்யவில்லை என்பது முன்னரும் கூறப்பட்டது. ஆதலின் தெய்வச் சிலையார் கூறுவது பொருந்தாது.

இளம்பூரணர் நிலைதிரியாது என்பதற்கு உருபுகள் தம்நிலையினின்றும்—தம் நிலையில்—(ஈறு) திரியாமல் எனப் பொருள் கொள்ளச் சேனாவரையர், இடைச் சொற்கள் என்ற நிலையுடையன வாயினும் வினையுடன் சேர்ந்தபோதுஇடைச்சொல் என்னும் தம் நிலை திரிந்து வினைச்சொல் தன்மையே யெய்துதலின் அவ்விடைச் சொற்கள் தம்நிலை திரிவனவாகும். உருபுகள் அவ்வாறு பெயராகவே மாறிவிடுதல் இல்லையாதலின் 'நிலை திரியாது' என்பதற்கு 'இடைச்சொல் நிலை திரியாமல்' எனக் கொண்டார்.

இடைச் சொற்கள் யாவும் ஈறுதிரிதல் இல்லை. தில் போலும் சிலவே ஈறுதிரிவன. சிலவற்றை நோக்கி வேற்றுமை உருபிடைச் சொற்களுக்கு ஈறுதிரிதல் இல்லை என்றார் ஆசிரியர் என்பது அத்துணைச் சிறப்பின்று ஆதலினாலும், கு. ஐ, ஆன் என்பன செய்யுளில் அகரம் பெற்றுத்திரியும் என வேற்றுமை மயங்கியலில்

(25) ஆசிரியர் கூறுகின்றமையின் உருபுகள் திரிதல் இல்லை என்பது பொருந்தாமையானும் இளம்பூரணர் 'உருபுகள் தம் இறுதிநிலை திரியாது' எனக் கூறியது பொருத்தமில்லை.

இனிச்சேனாவரையர் 'நிலை திரியாது' என்பதற்கு இடைச் சொற்கள் வினைச் சொல்லை உருவாக்கும் போது தாம் இடைச் சொற்கள் என்னும் நிலைதிரிவது போல உருபுகள் திரியாது' எனக் கூறியதும் பொருத்தம் இல்லை. வேற்றுமை—உருபு மயக்கம் உண்மையே காரணம். 'கிழங்கு மணற்கு ஈன்ற முளை' என்பதில் மணற்கு என்பதில் உள்ள நான்கன் உருபு 'மணற்கண்' என ஏழன் உருபின் பொருட்கண் மயங்கியது தன் நிலை திரிந்த தாகும். எனவே உருபு பொருளால் தம் நிலை திரிதல் உண்டு என்பது பெறப்படும். அதனால் சேனாவரையர் கருத்தும் ஏற்பதற்கில்லை.

மற்றவர் போல் 'திரியாது' என்பதைத் தன் வினையாகக் கொள்ளாமல் 'திரிக்காது' எனப் பிற வினையாகக் கொண்டு உருபுகள் தாம் சேர்ந்த பெயர்களின் ஈற்றினைத் திரிக்காமல் எனப் பொருள் கொண்டார் தெய்வச்சிலையார். ஏரால் உழுதான் என்பதை ஏரினால் உழுதான் என்பதும் உண்டு. ஏரினால் என்பதில் ஆல் என்னும் மூன்றன் உருபு பெயர்க்கு இறுதியில் இல்லை (ஏர்+இன்+ஆல்) பெயர்க்குப் பின்னர் இன்சாரியை அமைய அதன் பின்னரே ஆல் அமைந்தது. இந்த இடத்தில் ஆல் உருபு பெயரை பெயரின் தனி நிலையைத் திரித்து விட்டது என்னலாம் இடையில் 'இன் வந்ததால் ஆல் உருபு பெயர்க்கு இறுதியில் வந்ததாமோ என்னும் வினா எழுவது இயல்பு. இன் தான் ஓர் இடைச்சொல் என்பதைக் காட்டிக் கொள்ளாமல் (ஏரின் எனத் தான் வேறு ஏர் வேறு என் பதில்லாமல்ஒன்றிப்) பெயராகவே அமைந்தமையின் அதன் பின் வந்த உருபு பெயரிறுதியில் அமைந்ததாகவே கருதப்படும் என்க.

மற்று நிலை திரியாது' என்பதன் பொருள்தான் யாதெனின் பின் வருவதாகும்:

'கூறிய முறையின் உருபு நிலைதிரியாது' என்னுந் தொடரைக் காணுங்கால் 'நிலை திரியாது' என்பதற்கு "உருபு கள் தத்தம் பொருள் நிலையில்—செயப்படு பொருள், கருவிப் பொருள் முதலியவான பொருள் நிலையில் திரியாமல்'' என்பதே பொருளாகும். 'கிழங்கு மணற்கீன்ற' என்பதில் மணற்கு என நான்கன் உருபு இருந்தாலும் அதற்குரிய பொருளான கோடற் பொருள் இல்லாமல் மணற்கண் என இடப்பொருள கொள்ள

வேண்டுதலின், நான்கன் உருபை நீக்கி ஏழன் உருபையேற்றிப் பொருள் காணுதல் வேண்டும். எனவே உருபு மயங்கி வந்தாலும் வந்த உருபின் பொருள் கொள்ளாமல் வேற்றுருபின் பொருளைக் கொள்ளுவதை நோக்கின் உருபுகள் தம் நிலை (பொருள்நிலை) திரியாமலே இருப்பன என நாம் அறியலாம்.

## தே. ஆண்டியப்பன்

முற்கூறிய உருபுகள் பெயர்க்கு ஈறாகி நின்று வேற்றுமைப் பொருளைத் தரும். அப்போது உருபுநிலை திரிவதில்லை. எ—டு : சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் இந்த இடைச் சொற்கள் பெயரின் உறுப்பல்ல; இவை வேறு உணரப் பட்டு இறுதியில் நிற்பவை. இவற்றால் உருபுநிலை பெறும் பெயரும் திரியாது.

ஈறுஇயல் மருங்கு, ஈறு பெயர்க்காகும், ஈற்று நின்று இயலும் தொகை என்று ஆங்காங்கே ஆசிரியர் வழங்கும் சொற்கள் 'அடங்காத தொடரை' (Exocentric eonstructions) நினைவு படுத்தும். வாள் என்பதும் அழகிய வாள் என்பதும் எழுவாய் ஆகும் தன்மையில் மாறுபடவில்லை. அதனை 'அடங்கு தொடர்' (Endo—nectric constru ction) என்பர். வாளால் என்று உருபேற்றதும் தொடர் விரிவடைகிறது. வாளின் தொழிலும் (Function) மாறுகிறது. பெயரிலிருந்து வினையடைத் தொடர் உருவாகிறது. அதனை அடங்காத் தொடர் என்பர். பெயரின் புறநிலை ஒன்று இவ்வாறு உருவாவதால் ஈறு பெயர்க் காகும் என்றும் கூறலாம். *

பெயர் இலக்கணம் ஒன்று

**71. பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா**
**தொழினிலை யொட்டு மொன்றலங் கடையே** **(9)**

(பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா
தொழில்நிலை ஒட்டும் ஒன்று அலம் கடைஏ)

**ஆ. மொ.**
**இல.**

The nouns never denote tenses, except
those ones which are formed of verbs.

---

* காப்பியர், நெறி பக். 32.

க.சு.

Nouns never denote tense,
except those which are formed on verbs-i.e. verb-nouns.

பி. இ நூ.
நன். 275

தொழிலல்ல காலந்தோற்றா...பெயரே

இளம்.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் அது, பெயர்க்கண்ணே கிடந்ததோர் இலக்கணம் நுதலிற்றாகலின்.

உரை : பெயர்ச்சொல் காலந்தோன்றா; தொழிற்பெயராயிற் காலந்தோன்றும், எ—று.

வரலாறு : சாத்தன் என்பது காலந்தோன்றாது, உண்டான் என்பது காலந்தோன்றிற்று. மற்றுத் தொழிற்பெயராயிற் காலந் தோன்றும்.

அற்றன்று, பெயர்ச்சொல் காலந்தோன்றா எனவே, தொழிற்பெயர் காலந்தோன்றுதலும் தோன்றாமையும் உடைய என்பதாம்.

இனி ஒரு கருத்து. [1]தொழில் நிலைப் பெயர்ச்சொல் காலந் தோன்றா, [2]காலம் ஒட்டுந் தொழிற் பெயர் அல்லாத விடத்து என்றவாறு.

காலந்தோன்றாதன: உண்டல், தின்றல் என்பன; இவை அத்தொழின் மேல் நின்ற பெயர். இனிக்காலம் ஒட்டும் தொழிற் பெயராவன: உண்டான், தின்றான் என்பன; இவை [3]அத் தொழில் செய்வான்மேல் நின்ற பெயர்.

---

1. தொழில்நிலைப் பெயர்ச்சொல்—தொழிற் பெயர்ச் சொல்.
2. காலம் ஒட்டும் தொழிற் பெயர்—வினையாலணையும் பெயர்.
3. தொழில் செய்வான் மேல் நின்ற பெயர்—வினையா லணையும் பெயர்.

இச்சூத்திரத்தில் முதற்கருத்தில் பெயர் நிலைக் கிளவி என்பது பொதுவில் எல்லாப் பெயர்களையும் குறிக்கும். இரண்டாவது கருத்தில் தொழிற் பெயரை மட்டில் குறிக்கும். இரண்டாவதன் கருத்தும் முதற் கண்ணதில் அடங்குமாதலின் இரண்டாம் கருத்துத் தேவையில்லை.

சேனா.

இ—ள்: பெயர்ச்சொல் காலந் தோன்றா; வினைச்சொல் லோடு ஒக்கும் ஒரு கூறு அல்லாதவிடத்து, எ—று.

உ-ம்: சாத்தன், கொற்றன்; உண்டல், தின்றல் எனக் காலந் தோன்றாது நிற்றலும்; உண்டான், தின்றான் எனத் [1]தொழினிலை யொட்டுவன காலந்தோற்றி நிற்றலும் கண்டு கொள்க.

உண்டான், தின்றான் என்னுந் தொடக்கத்துப் படுத்துச் சொல்லப்படும் [2]தொழிற்பெயர் வினைச் சொற்போலத் திணை யும் பாலும் காலமும் முதலாயினவற்றை விளக்கி, அன் ஆன் முதலாகிய ஈற்றவாய் வருதலின் 'தொழினிலை யொட்டும்' என்றார். [3]ஒட்டும் என்பது உவமச்சொல்.

பெயராகிய நிலையையுடையது 'பெயர்நிலை' என அன் மொழித் தொகை. பெயர்—பொருள். [4]தொழில் நிலையுமது. 'காலந் தோன்றா' என்பன ஒரு சொல்லாய்ப் 'பெயர்நிலைக் கிளவி' என்பதற்கு முடிபாயின.

பயனிலை கோடலும் உருபேற்றலும் ஆகிய பெயர் இலக்கணம் [5]ஈண்டுப் பெறப்படுதலின் அவற்றோடியையக் காலந் தோன்றாமையாகிய பெயரிலக்கணமும் ஈண்டே கூறினார். [6]பெரும்பான்மை பற்றிக் காலந்தோன்றாமை பெயரிலக்கண மாயிற்று.

---

1. வினைச்சொல் போல்வன—'உண்டான் வந்தான்' என்னு மிடத்தில் உண்டான் என்பது வினைச்சொல் (முற்று) போல் இருந்தாலும் உண்டானாகிய ஒருவன எனப்படு தலின் பெயராயிற்று.
2. தொழிற்பெயர்—வினைப் பெயர். அதாவது வினையா லணையும் பெயர். தொழிற்பெயர் என்பது தனித் தொழிற் பெயரையும், வினையாலணையும் பெயரையும் குறிக்கும். இடம் நோக்கியுணர்க.
3. ஒட்ட என்பது உவம உருபு
4. தொழிலாகிய நிலையையுடையது — (அன்மொழித் தொகை)
5. ஈண்டு—இவ்வியலில்.
6. பெரும்பான்மை என்றது வினையாலணையும் பெயரை நினைந்து கூறியது.

தெய்.

மேற் [1]பல சூத்திரத்தானும் பெயர் என்று எடுத்தோதிப் போந்தார், அஃது இத்தன்மையது என அதன் இலக்கணங்கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பெயர் நிலைமையுடைய சொல் காலம் தோன்றா; [2]தொழில் நிலையோடு ஒட்டி நிற்கும் பெயரும் ஒருவகையல்லன காலம் தோன்றா; எ—று.

[3]காலந்தோன்றா என்றது மத்திமதீபமாகி நின்றது [4]உம்மை இறந்ததுதழீஇயிற்று. பெயர்க்கு இலக்கணம் பயனிலைகோடலும் உருபு ஏற்றலும், காலந்தோன்றாமையும் ஆம். அவற்றுள் பயனிலை கோடலும், உருபேற்றலும் [4]முற்பட்ட சூத்திரத்தாற் கூறலின் இதனால் காலந் தோன்றாமை கூறப்பட்டது.

பெயராவன தனிப்பெயர், ஒட்டுப்பெயர் என இருவகைபடும். அவற்றுள் தனிப்பெயர் பொருள்மேல் வருவனவும், தொழில் மேல் வருவனவும் என இருவகைப்படும். ஒட்டுப்பெயர் தெரிநிலை வினையொட்டுப் பெயரும், குறிப்புவினையொட்டுப் பெயரும் என இருவகைப்படும். அவற்றுள் பொருள்மேல் வரும் தனிப் பெயர்:—சாத்தன், கொற்றன், யானை, குதிரை, மா, தெங்கு என்பன தொழில்மேல் வரும் தனிப்பெயர்:—உண்டல், தின்றல், கொடுத்தல், எடுத்தல் என்பன. தெரிநிலை வினையொட்டுப்

---

1. 2—7 சூத்திரங்களிற் பெயர் ஆளபட்டமை காண்க.
2. தொழில் நிலையோடு ஒட்டி நிற்கும் பெயர்—வினை யாலனையும் பெயர். அது தெரிநிலை குறிப்பு என இரண்டாம், குறிப்பு வினையாலணையும் பெயராகிய ஒருவகை காலந்தோற்றாது. தெரிநிலை வினையா லணையும் பெயர் காலம் தோற்றும்
3. பெயர் நிலைக்கிளவி காலந்தோன்றா; தொழில் நிலை யொட்டும் ஒன்று அலங்கடை காலந்தோன்றா என இயைதலின் இடைநின்ற காலந்தோன்றா என்பது இடை நிலைத் தீவகமாயிற்று.
4. ஒட்டும் என்பது ஒட்டி நிற்கும் பெயரும் என்னும் பொருளது. உம்மை பெயர்நிலைக் கிளவியும் காலந் தோன்றாது என முன்னர் உள்ளதைத் தழுவுதலின் இறந்தது தழீஇயிற்று.
5. சூ. 4, 7 பர்ர்க்க.

பெயராவன:—தொழிற் பெயரோடு ஒட்டி ஒரு பொருட்குப் பெயராகி வருவன. அவை:-உண்டான், தின்றான், கொடுத்தான், எடுத்தான் என்பன. இவை வினைக் கருத்துள்வழி வினைச் சொல்லாம்; பெயர்க் கருத்துள்வழிப் பெயராம். குறிப்பு-வினையொட்டுப் பெயராவன மற்றொரு பெயரோடு ஒட்டியொரு பொருட்குப் பெயராகி வருவன. அவை குழயன், கோட்டன், கச்சினன், கழலினன் என்பன. இவையும் வினைக் கருத்துள்வழி வினைக் குறிப்பாம்; பெயர்க் கருத்துள் வழிப் பெயராம்.

இவற்றுள் தெரிநிலைவினையொட்டுப் பெயரல்லாதன காலந்தோன்றா: இப்பெயர்கள் சாத்தனை, உண்டலை, உண்டானை, குழலனை என உருபேற்கும்

நச்·

இது பெயர்க்கு ஓர் இலக்கணம் கூறுகின்றது.

†இ-ள்: பெயர்க் கிளவி—பெயர்ப் பெயராகிய சொல்லும், நிலைக்கிளவி—அப்பெயரது நிலையிலே நிற்றலையுடைய சொல்லும், காலந்தோன்றா—காலம் தோன்றாவாய் நிற்கும், தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங்கடையே—ஒருபொருளது புடை பெயர்ச்சியாய்க் காலம் தோன்றுதற்குப் பொருந்தும் [1]ஒரு கூற்றுத் தொழிற்பெயர் அல்லாஇடத்து, எ—று.

பெயர், தொழில்நிலை என்பன [2]ஆகுபெயர். பெயர், பொருள்; தொழில் நிலை, காலம்; ஒட்டும், பொருந்தும்;

இதனால் திணையும் பாலும் காலமும் இடனும் தோன்றும் [3]தொழிற்சொல் படுத்தல் ஓசைபட்டு நின்றால், தொழிற் பெயராய் நின்று பயனிலை கொண்டும் உருபேற்றும் காலத்தைத் தோற்றுவித்தலும் [4]பெயர்ப் பெயரும், பெயரது நிலையிலே

---

† பெயர் நிலைக் கிளவி என்பதைப் பெயர்கிளவி, நிலைக் கிளவி எனப் பிரித்து விளக்கும் சிறப்பு காண்க.

1 தெரிநிலை வினையாலணையும் பெயர்.

2. அன்மொழித் தொகை என்பர் சேனாவரையர்

3. தொழிற்சொல் — வினைச்சொல் 4 தொழிற்பெயர் வினையாலணையும் பெயர்,

4. பெயர்ப்பெயர் — பொருட்பெயர் பெயரது நிலை... சொல் = தொழிற்பெயர்.

நிற்றலையுடைய சொல்லும் காலத்தை யாண்டும் தோற்றுவி யாமையும் கூறினார்.

*இடுகுறியாய்ச் 'சாத்தன், கொற்றன்' எனவரும் பெயர்ப் பெயரும், புடை பெயர்ச்சி மாத்திரம் உணர்த்திநிற்கும் 'உண்டல், தின்றல்' என வரும் வினைப் பெயரும், 'பூசல், வேட்டை' என்றாற் போலப் புடைபெயர்ச்சி விளக்காது நிற்கும் வினைப் பெயரும், ஓசை வேறுபாட்டான் அன்றி 'உண்டவன், உண்ணுமது' என்றாற் போலத்தானே பெயராய்க் காலந் தோன்றி வினை முதல்மேல் நிற்கும் தொழிற் பெயரும்,

''கொலைவர் கொடுமரந் தேய்த்தார்''
அவன் ஏறிற்றுக் குதிரை'' (கலி 12 1, 2)

என்றாற் போல செயல்படு பொருட்கண் காலம் காட்டி நின்ற தொழிற்பெயரும், 'யான் சொன்னவன், உண்பது நாழி' (புறம் !99 5) என்றாற்போலச் செயல்படு பொருள்மேல் பெய ராய்க் காலந்தோன்றி நிற்கும் தொழிற்பெயரும் பிறவாற்றான் வரும் வேற்றுமையும் உணர்க.

கல்.

என்—எனின், இதுவும் பெயர்க்கு ஓர் இலக்கணம் உணர்த்து தல் நுதலிற்று.

இ—ள்: பெயராகிய நிலைமையுடைய சொற்கள் காலந் தோன்றா; யாண்டுமோ எனின், அன்று. காலந் தோன்றுதற்குப் பொருந்தும் ஒரு கூற்றுத் தொழிற் பெயரல்லாத விடத்து என்ற வாறு.

என்றது பெயர்தாம் பெயர்ப் பெயரும், தொழிற் பெயரும் என இருவகைப்படும். பெயர்ப் பெயராவன சாத்தன், கொற்றன் என ஒரு தொழிலாற் பெயரன்றி அவ்வப் பொருட்கு இடுகுறி யாய் வருவன. இவை காலந்தோன்றா.

தொழிற் பெயராயின் தோன்றும். தொழிற்பெயர் தாமும் தொழிலின்மேல் நின்ற தொழிற்பெயரும்! பொருள்மேல் நின்ற

---

* இப்பகுதியிற் கூறப்பட்ட வினைப்பெயர் தொழிற் பெயர்களின் பொருள் மாறுபாட்டு நுட்பங்களைக் காண்க. கல்லாடர் உரையிலும் காண்க.

தொழிற் பெயரும் என இருவகைப்படும். அவற்றுள் தொழிலின் மேல் நின்றனவும் காலந்தோன்றா; அவை உணல், தின்றல் எனப் பொருளது புடைபெயர்ச்சியை யறிவித்து நிற்கும் என்பது. இவற்றுள் பூசை வேட்டைஎன்றாற் போல்வன வினைச்சொற்கு அடியாய்ப் புடை பெயர்ச்சியை விளக்காது பெயர்ப் பெயர் போல நிற்பனவும் உள என்பது.

இனிப்பொருள்மேல் நின்றனவும், வினைமுதற் பொருள்மேல் நிற்பனவும் செயப்படு பொருள்மேல் நிற்பனவும் என இருவகைப் படும். அவ்விருவகையும் காலந்தோன்றி நிற்கும் என்றவாறு. அவை தாமும் ஓசை வேற்றுமையான் ஒருவழி வினையெனப் பட்டு நிற்பனவும், வினையாகாது பெயரேயாய் நிற்பனவும் என இருவகைப்படும்.

உ-ம்: உண்டான், தின்றான், உண்டது, தின்றது எனப் படுத்தலோசையான் வினையெனப் பட்டுக் காலந்தோன்றி நின்றன உண்டவன், தின்றவன், உண்ணுமது, தின்னுமது என்பன ஓசை வேற்றுமையான் அன்றித் தானே பெயராய்க் காலங்காட்டி நின்றன. இவை வினைமுதற்கண் பாகுபாடு.

'கொலைவர் கொடுமரந் தேய்த்தார்' (கலி-12.1, 2) 'அவன் ஏறிற்று இக்குதிரை' என்றாற் போல்வன வினைப் பெயரே அச் செயப்படு பொருட்கண் காலம் காட்டி நின்றன. 'யான் சொன்னவன்' 'உண்பவைநாழி உடுப்பவை யிரண்டு (புறம் 189 5) என்றாற் போல்வன தாமே செயப்படு பொருள்மேற் பெயராய்க் காலந்தோன்றி நின்றன. இவை செயப்படு பொருட் பாகுபாடு. நிலமும் காலமும் கருவியும் பற்றி வரும் தொழிற்பெயர் விகற்பமும் கொள்க.

உ-ம்: ......உண்டது என்பது இத்தொழிற் பெயர்களின் கால விகற்பம் என அறிக,

பெயர்ப் பெயர் காலந்தோன்றா என்பதற்கு விதியாதோ எனின் இச்சூத்திரத்தான் எய்தவும் பெறும் என்பது.

ஒரு.

என்பது பெயரது நிலையிலே நிற்றலுடைய சொல், காலம் தோன்றாது: ஒரு பொருளது புடை பெயர்ச்சியாய்க் காலம் தோன்றுதற்குப் பொருந்தும் தொழிற்பெயர் அல்லாத இடத்து,

ஒட்டும்—பொருந்தும்.

உ-ம்: சாத்தன் என்றது காலந்தோன்றாது, உண்டான் எனக் காலம் தோன்றி *நிற்றலும் [1]தொழிற் பெயர்.

இனி, 'ஒட்டும் ஒன்றலங்கடையே' என்றதனால் தொழிற் பெயராய்ச் ‡சொல்லும் காலந்தோன்றாதனவும் உள. அவை: உண்டல், தின்றல், பூசல், வேட்டை என்பன. அவை தொழிலது புடை பெயர்ச்சி மாத்திரம் உணர்த்துவதல்லது காலம் தோன்றா.

இனி எல்லாத் தொழிற்பெயரும் காலம் தோன்றும் என்பது படச் சொல்லுதல் குற்றம்.

இனி உண்டான், தின்றான் என்புழித் தொழில்நிலை ஒட்டுவன காலம் தோன்றி நிற்றலும் கண்டு கொள்க.

இரண்டாம் வேற்றுமையும் பொருளும்

72. *இரண்டா குவதே
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யெவ்வழி வரினும் வினையே வினைக் குறிப்
பவ்விரு முதலிற் றோன்று மதுவே;
காப்பி னோப்பி னூர்தியி னிழையி
னொப்பின் புகழின் பழியி னென்றா
பெறலி னிழவின் காதலின் வெகுளியிற்
செறலி னுவத்தலிற் கற்பி னென்றா
வறுத்தலிற் குறைத்தலிற் றொகுத்தலிற் பிரித்தலி
னிறுத்தலி னளவி னெண்ணி னென்றா
வாக்கலிற் சார்தலிற் செலவிற் கன்றலி
னோக்கலி னஞ்சலின் சிதைப்பி னென்றா

---

* நின்றது

‡ நிற்கும் சொல்லும்

1. தொழிற்பெயர் என்பது தேவையில்லை.

* இளம்பூரணர் தவிர மற்றைய உரையாசிரியர் யாவரும் இச்சூத்திரத்தின் முதல் நான்கு வரிகளை ஒரு சூத்திர மாகவும் பின்னருள்ள வரிகளை ஒரு சூத்திரமாகவும் கொள்வர்.

வன்ன பிறவு மம்முதற் பொருள
வென்ன கிளவியு மதன்பால வென்மனார் (10)

(இரண்டு ஆகுவதே
ஐஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;
எவ்வழி வரினும் வினையே வினைக் குறிப்பு
அஇரு முதலின் தோன்றும் அதுவே
காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் [1]பழியின் என்றா
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்றா
அறுத்தலின், குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்றா
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனார்)

ஆ. மொ:
இல.

The second one is the case which is named 'ai' when ever
it occurs, it has verbs and appelative verbs as
predieates (to denote objects)
The learned say that the second case or 'ai' case
denotes the following and such other actions
as their objccts. They are protecting, comparing, riding,
building, searing, praising, despising, acquiring,
losing, loving,
getting angry, conquering, rejoicing, learning
Cutting, shortening, collecting, dividing, weighing,
measuring, counting, making, reaching, going,
hating, looking (at); fearing and destroying

க. சு.

The second
is the case which is named ai;

---

1, பாடம்: பழிப்பின்.

whenever it occurs, it has verbs, or appelatives
as predicates occurring with objects
They say that the accusative case denotes the direct
object expressed as things which are protected,
compared, ridden, made, scored away, praised, despised,
acquired, lost, loved, scorned, destroyed, appriciated,
learned, cut, decreased, collected, separated, weighed,
measured, counted, manufactured,
depended upon, reached, hated,
seen, feared, shattered, etc.

பி. இ. நூ

**வீர.** 34

ஐயென்பது கருமத் திரண்டாவது

**நேமி.** 42.

ஐயென் உருபு இரண்டாவது அதுவினையும்
எய்தும் குறிப்பும் இயல வரும்

**நன்.** 296.

இரண்டா வதனுரு பையே அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி யாகும்

**பிர.** 12,

அண்ணிய கர்மத்து அபிகிதம் ஒன்றே அநபிகிதம்
தண்ணிய ஈச்சிதம் தன்னொடு அநீச்சிதம் தான் இருமை
எண்ணிய நற்கருத்தாவொடு அகதிதம் என்று ஓர் ஐந்தாம்
கண்ணியகாலை அகம்புறம் ஆகும் கரணங்களே

**இல.** 199.

இரண்டா வதன்உருபு ஐயே அதன்பொருள்
இயற்றவும் திரிக்கவும் எய்தவும் படூஉம்
திறத்தவும் பிறவுமாம் செயப்படு பொருளே

இ. கொ. 31, 32

கருத்துண்டாதல் கருத்தின் றாதல்
இருமையு மாதல் ஈருரு பிணைதல்
கருத்தா வாதல் அகநிலை யாதல்
தெரிநிலை ஆதியாய் வருஞ்செயப் படுபொருள்
இயற்றப் படுதல் எய்தப் படுதல்
வேறு படுக்கப் படுதல் ஆதியும்
அவ்வெழு வகையுள் அடங்கும் என்ப
செயப்படு பொருளினும் செப்பிற் பெருகும்.

முத்து. பெ. 55, 56.

ஐயே இரண்டாவதன் உருபு ஆகும்.
காப்பின் ஒப்பின் ஆக்கலின் அழித்தலின்
அடைதலின் நீத்தலின் அஞ்சலின் உடைமையின்
அன்ன பிறவும் அதன்பய னிலையே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இஃது இரண்டாம் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை: இரண்டாம் எண்ணும் முறைமைக்கண்ணது ஐ என்னும் பெயரையுடைய வேற்றுமைச்சொல்; அது யாண்டு வரினும் வினையும் வினைக் குறிப்பும் என அவ்விரண்டையும் தனக்குத் தோற்று நிலமாக உடைத்து என்றவாறு.

அவ்விரண்டும் நிமித்தமாகத் தோன்றும் எனினும் அமையும்.
மரத்தைக் குறைத்தான் என்பது வினை பற்றி வந்தது.
குழையை யுடையன் என்பது வினைக்குறிப்புப் பற்றி வந்தது.

அதுவே என்பது அவ்விரண்டாம் வேற்றுமை தானே என்று தெரித்தவாறு.

இனி அவ்வினையும் வினைக்குறிப்பும் பற்றி அது வருமாற்றுக்கு உதாரணப்பகுதி காட்டுதும்.

ஊரைக்காக்கும், கிளியை யோப்பும், யானையை யூரும், எயிலை யிழைக்கும், தாயை ஒக்கும், ஊரைப் புகழும், நாட்டைப் பழிக்கும். என்றா என்பது எண்ணிடைச் சொல்,

ஊரைப் பெறும், ஊரை யிழக்கும், மனைவியைக் காதலிக்கும், படையை வெகுளும், ஊரைச் செறும், தாயை யுவக்கும், நூலைக் கற்கும் என்றா என்பது எண்ணிடைச் சொல்.

[1]ஞாணை அறுக்கும், மரத்தைக் குறைக்கும், நெல்லைத் தொகுக்கும், வேலியைப் பிரிக்கும், பொன்னை நிறுக்கும், அரிசியை யளக்கும், அடைக்காயை எண்ணும், ஊரையாக்கும், வாய்க்காலைச் சாரும், நெறியைச் செல்லும் சூதினைக் கன்றும், செய்யை நோக்கும், கள்ளரை யஞ்சும், நாட்டைச் சிதைக்கும் எனவரும். என்றாஎன்பன எண்ணிடைச் சொற்கள். [2]ஈண்டுநின்ற 'இன்'கள் எல்லாம் சாரியையாயின.

பிறவும் என்றது இவையல்ல பிறவும் என்றவாறு. வினையும் வினைக் குறிப்பும் பற்றி வருவனவெல்லாம் இரண்டாம் வேற்றுமைப் பொருள். அவை விரலை முடக்கும், நாவினை வளைக்கும் என்பன போல்வன.

ஊரையின்புடையான் என்பது போல்வன வினைக்குறிப்பு.

'அம்முதற்பொருள் என்ன கிளவியும் அதன்பால என்மனார்' என்பது, அவ்வினையும் வினைக்குறிப்பும் பற்றி வருவனவெல்லாம் முதலாய வரூஉம் எவ்வகைப்பட்ட சொல்லும் இவ்விரண்டாம் வேற்றுமைக் கூற்றன என்ப என்றவாறு

சேனா.

("இரண்டாகுவதே...தோன்றுமதுவே")

இ-ள்: பெயர் ஐ ஒடு கு என்னும் சூத்திரத்து ஐ எனப்பெயர் பெற்ற வேற்றுமைச்சொல் இரண்டாவதாம். அஃது யாண்டு வரினும் வினையும் வினைக்குறிப்புமாகிய அவ்விரண்டு முதற் கண்ணும் *தோன்றுமவை பொருளாக வரும், எ—று.

உ-ம்: குடத்தை வனைந்தான், குழையையுடையன் என வரும்.

[1]எண்ணுமுறையான் இரண்டாவது என்பது பெறப்படு மாயினும், இக்குறி தொல்லாசிரியர் வழக்கு என்பது அறிவித்

---

1. ஞாண் — கயிறு
2. காப்பின் ஒப்பின் எனவரும் இன்கள்.
* தோன்றும்: அவை என்பது தாமோதரம்பிள்ளை பதிப்பில் காணப்படுவது. சுப். குறிப்பு பார்க்க.
1. அவைதாம், பெயர் ஐ ஒடு கு (3) என்னும் சூத்திரத்தில் வைத்து எண்ணப்பட்டமுறை. அச்சூத்திரத்திலேயே ஐ என்பது இரண்டாம் வேற்றுமை என்பது பெறப்படு தலின் மீண்டும் இரண்டாகுவதே என்பது ஏன் என்னும் வினாவுக்கு விடையிப்பகுதி.

தற்கு 'ஐயெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி இரண்டாவது' என்றார்.

இது மூன்றாவது முதலாயினவற்றுக்கும் ஒக்கும்.

பெயரிய என்பது பெயர் என்பது முதலாக முடிந்ததோர் பெயரெச்சம்.

தம்மையுணர்ந்துவனவும் பெயர் எனப்படுதலின் 'ஐயெனப் பெயரிய' என்றார்.

[2]வினையே வினைக்குறிப்பு என்றாராயினும் அவற்றின் செயப்படுபொருளே கொள்ளப்படும்; அவ்விரு முதலிற் றோன்றும் என்றமையான், முதலாதற்கும் வேற்றுமைப் பொருளாதற்கும் ஏற்பன அவையே யாகலின். என்னை அவை முதலாதற்கு ஏற்றவாறு எனின், செயப்படுபொருள் முதலாயின தொழிற்குக் காரணம் ஆகலானும், 'ஆயெட்டென்ப தொழில் முதனிலையே'

(சொல் 112)

என அவற்றை முதனிலை யென்று கூறுப வாகலானும் என்பது.

[3]அஃதேல் செயப்படுபொருளாவது வினைமுதல் தொழிற் பயனுறுவது ஆதலால், குழை முதலாயினவற்றிற்கு அவ்விலக்

---

2. தெரிநிலை வினையோ குறிப்பு வினையோ தோன்று தற்குக் காரணம் எட்டு உண்டு. அவை வினையே செய்வது செயப்படுபொருள் (சொல். 112) முதலியவாம். இரண்டாம் வேற்றுமை வினையும் வினைக்குறிப்புமாகிய காரணம் பற்றி வரும் என்றால் அவ்வெட்டுக் காரணம் பற்றிவரும் என்பதாகி விடும். அப்படியின்றிச் செயப்படு பொருளாகிய ஒரு காரணமே பற்றி வரும் எனக் கொள்ள வேண்டும். ஏன் எனின் செயப்படு பொருளே தொழில் நிகழ்ச்சிக்குக் காரணமாதலோடு இரண்டாம் வேற்றுமைப் பொருளாதற்கும் அமைவதாம். இவ்வாறு இப்பகுதிக்கு விளக்கம் கொள்க. முதல்நிலை—காரணம்,

3. குடத்தை வனைந்தான் என்பதில் குயவன் வினைமுதல். அவன் தொழில் வனைதல். வனைதலின் பயன் குட உருவமைதல். அவ்வமைப்பை யுறுவது குடம். இவ்வாறு தெரிநிலை வினைமுற்று பற்றி விளக்க முடியும். அதனால் செயப்படு பொருளாவது வினைமுதல் தொழிற் பயனுறுவது என்னுந் தொடரை அவ்வுதாரணத்தால் விளக்க முடியும். குழையையுடையவன் என்பதில் அவ்வாறு விளக்கம் தர இயலாமையின், குறிப்பு வினையில் செயப்படுபொருள் இல்லையே என்று கொண்டு இப்பகுதி எழுதப்பட்டது.

கணம் ஏலாமையிற் செயப்படு பொருளன்மையான் வினைக் குறிப்பெனல் வேண்டாவெனின், அற்றன்று;

அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய (சொல். 200)

என்றாராகலின், குறிப்புச்சொல் காலமொடு தோன்றித் தொழிற் சொல்லாதலும், குழை முதலாயின தொழிற்பயன் உறுதலும் ஆசிரியர் துணிபாகலின், அவையும் செயப்படு பொருளாம் என்பது. [4]ஆயின, செயப்படு பொருட்கட் டோன்றும் என அமையும், வினையே வினைக்குறிப்பு எனல் வேண்டா வெனின், அங்ஙனம் கூறின், செயபபாடினிது விளங்குஞ் சிறப்புடைத் தெரிநிலை வினைச் செயப்படு பொருளையே கூறினாரோ குறிப்புப் பொருளும் அடங்கப் பொதுவகையாற் கூறினாரோ என்று ஐயமாம்; ஐயம் நீங்க வினையே வினைக்குறிப்பு என்றார் என்பது. [5]வினை வினைக்குறிப்பு என்பன ஈண்டு ஆகுபெயர்.

புகழை நிறுத்தான், புகழை நிறுத்தல், புகழையுடையான், புகழையுடைமை என இரண்டாவது [6]பெயரொடு தொடர்ந்த வழியும் வினைச் செயப்படு பொருளும் குறிப்புச் செயப்படு பொருளும் பற்றியே நிற்கும் என்பார், எவ்வழி வரினும் என்று யாப்புறுத்தார்.

இயற்றப் படுவதும் வேறு படுக்கப்படுவதும் எய்தப் படுவதும் எனச் செயப்படு பொருள் மூன்றாம். [7]இயற்றுதலாவது முன் இல்லதனை யுண்டாக்குதல் [8]வேறு படுத்தலாவது முன் உள்ள

---

4. குறிப்பு வினையும் செயப்படுபொருள் உடையதாயின் வினையெனப் பொதுவில் கூற வேண்டுவதேன் என்னும் வினாவும் விடையும் உள்ளது இப்பகுதி.
5. வினை வினைக்குறிப்பு என்பன அவற்றின் செயப்படு பொருள்களுக்கு ஆகி வந்தமையின் ஆகுபெயர். நச்சினார்க்கினியர், "வினை வினைக்குறிப்பு என்பன ஈண்டு ஆகுபெயர்; அம்முதல் நிலைகளாற் பிறந்த அச்சொற்களை யுணர்த்தினமையின்" என்றார்.
6. பெயர்—தொழிற்பெயர்
7. உ—ம்: வீட்டைக் கட்டினான்
8. உ—ம்: வீட்டையிடித்தான்

தனைத் திரித்தல். [9]எய்தப் படுதலாவது இயற்றுதலும் வேறு படுத்தலும் இன்றித் தொழிற்பயனுறுந் துணையாய் நிற்றல்.

(காப்பின்......அதன்பால என்மனார்)

செயப்படு பொருள் மூன்றனையும் பற்றி வரும் வாய்பாடு களை விவரிக்கின்றார்.

இ-ள்: காப்பு முதலாகச் சிதைப்பு ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தெட்டுப் பொருளும் அவை போல்வன பிறவும் ஆகிய அம்முதற் பொருள்மேல் வரும் எல்லாச் சொல்லும் இரண்டாம் வேற்றுமைப்பால என்று சொல்லுவர் புலவர்; எ-று.

என்றா என்பது எண்ணிடைச் சொல்.

[10]இன் எல்லாம் புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக் குதவாது (சொல் 250) எண்ணின்கண் வந்தன. முன்னர் வருவன வற்றிற்கும் இது ஒக்கும்.

[11]அம்முதல் என்றது கூறப்பட்ட செயப்படு பொருள் என்ற வாறு.

உ-ம்: எயிலை யிழைத்தான் என்பது இயற்றப் படுவது. கிளியையோப்பும், பொருளை யிழக்கும், நாணையறுக்கும், மரத்தைக் குறைக்கும், நெல்லைத் தொகுக்கும், வேலியைப் பிரிக்கும், அறத்தை யாக்கும், நாட்டைச் சிதைக்கும் என்பன வேறுபடுக்கப்படுவன. குறைத்தல் சுருக்குதலும் சிறிது இழக்கச்

9. உ-ம்: வீட்டையடைந்தான், வீட்டை வாங்கினான்

10. காப்பினும் ஒப்பினும் என எண்ணப்படுதலின் இன் எண்ணின்கண் வந்தன என்றார். சாரியைகளிற் சில பொருள் தருவன—பொருளுக்கு உதவியாக அமைவன. எல்லாம் என்னும்சொல் எல்லா நம்மையும் என நம் சாரியை பெறும்போது உயர்திணையாகவும், எல்லா வற்றையும் என வற்றுச் சாரியை பெறும்போது அஃறிணையாகவும் கருதப்படும். இவற்றுள் நம், வற்று என்பன உயர்திணை அஃறிணை எனப் பொருள்பெற றுதவின. அவைபோல் இல்லாமல் இங்கு இன்சாரியை வாளா எண்ணின்கண் வந்ததாம்.

11. அம்முதற் பொருள என்ன கிளவியும்—அச்செயப்படு பொருளாகிய பொருள்களையுடைய எவ்வகைச் சொற் களும்,

செய்தலுமாம். அறுத்தல் சிறிது இழவாமல் சினையையாயினும் முதலையாயினும் இருகூறு செய்தல்.

ஊரைக் காக்கும் தந்தையை ஒக்கும், தேரையூரும், குரிசிலைப் புகழும், நாட்டைப் பழிக்கும், புதல்வரைப்பெறும், மனைவியைக் காதலிக்கும், பகைவரை வெகுளும், செற்றாரைச்செறும், நட்டாரை யுவக்கும், நூலைக் கற்கும், பொன்னை நிறுக்கும், அரிசியையளக்கும், அடைக்காயை எண்ணும், ஊரைச் சாரும். நெறியைச் செல்லும், சூதினைக் கன்றும், கணையை நோக்கும், கள்வரை யஞ்சும் என்பன எய்தப்படுவன. வெகுளலும் செறலும் கொலைப் பொருளவாய வழி வேறுபடுக்கப்படுவனவாம். செறல் வெகுளியது காரியம்,

இயற்றப்படுவது ஒரு தன்மைத் தாகலின் அதற்கு ஒரு வாய்பாடே கூறினார். ஏனைய பல இலக்கணத்த வாகலின் பல வாய்பாட்டான் *விதந்து கூறினார்.

அன்னபிறவும் என்றதனால், பகைவரைப் பணித்தான், சோற்றையட்டான், குழையை யுடையான், பொருளையிலன் என்னுந் தொடக்கத்தன கொள்க.

காப்பு முதலாயின பொருள்பற்றி யோதப்பட்டமையான் ஊரைப் புரக்கும், ஊரையளிக்கும், தந்தையை நிகர்க்கும், தந்தையை யொட்டும், தேரைச் செலுத்தும், தேரைக் கடாவும் என்பன போல்வனவெல்லாம் கொள்க.

இயற்றப்படுதல் முதலாகிய வேறுபாடு குறிப்பு வினைச் செயப்படு பொருட்கண் ஏற்பன கொள்க.

தெய்.

("இரண்டாகுவதே...தோன்று மதுவே")

நிறுத்த முறையானே இரண்டாம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இரண்டாம் வேற்றுமையாவது [1]ஐ எனக் குறித்த வேற்றுமைச் சொல். அஃதியாதானும் ஒரு பெயர் வரினும்

---

* விரித்து (பாடம்)

1. பாடம்: ஐ என்று குறிபெற்ற

வினையும் வினைக்குறிப்புமாகிய அவ்விரண்டு முதற்கண்ணும் தோன்றும், எ—று.

ஐகார வேற்றுமை இரண்டாவது என்னும் குறியும் பெற்றது. [2]வினையென்பது செயல். வினைக்குறிப்பு என்பது அவ்வினையினாற் குறிக்கப்பட்ட பொருள். அஃதாவது செயப்படுபொருள். முதல் என்பதனை வடநூலர்சிரியர் [3]காரகம் என்ப. அஃது தொழிலை யுண்டாக்குவது. அது பல் வகைத்து: செய்வானும், செயலும், செயப்படு பொருளும், கருவியும், கொள்வானும், பயனும், காலமும், இடமும் என.

> வினையே செய்வது செயப்படு பொருளே
> நிலனே காலங் கருவி யென்றா
> இன்னதற் கிதுபய னாக வேன்னும்
> அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
> ஆயெட் டென்ப தொழில் முதல் நிலையே

என எட்டு என்றாராகலின் அலற்றுள் இது செயப்படுபொருள் மேலும் செயல் மேலும் வரும். குடத்தை வனைந்தான் என்பது செயப்படு பொருள்மேல் வந்தது. வனைதலைச் செய்தான் என்பது செயல்மேல் வந்தது. தொழில் முதனிலை யெட்டென்றமையால் காரகப் பொருள் மேல் வரும் வேற்றுமையெல்லாம் வினையான் முடியும் என்று கொள்க.

("காப்பின்...அதன்பால என்மனார்")

இரண்டாம் வேற்றுமைப் பொருள் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: காப்பு முதலாகச் சிதைப்பு ஈறாக ஓதப்பட்டன வற்றினும், அத்தன்மைய பிறவினும் வரும் சொல்லும், செய்ப்படு பொருளவாகி வரும் எல்லாச் சொல்லும் இரண்டாம் வேற்றுமைப் பாலன, எ—று.

---

2. வினை, வினைக்குறிப்பு என்பனவற்றிற்கு மற்றையோர் தெரிநிலை வினை குறிப்பு வினை எனக்கொள்ள இவர் செய்வது, செயப்படு பொருள் எனப் பொருள் கொண்டது பொருத்தம் இல்லை என்பர் கு. சுந்தர மூர்த்தி.
3. காரகம்—வினை பற்றிய காரணம்.

காப்பு என்பது காவற் றொழிலையும், காக்கப்படும் பொருளையும் உணர்த்தும். ஏனைய தொழிலும் பொருளும் உணர்த்துமாறு அறிந்து கொள்க. [4]அன்ன பிறவினும் என 'இன்' செய்யுள் விகாரத்தால் தொக்கது.

இவையெல்லாம் வகுத்துக் கூற வேண்டா; 'வினைக் குறிப்பு' என அடங்கும் எனின், அடங்கும் எனினும், செயப்படு பொருள் [5]காரிய காரணம் தோன்றி நிற்பனவும் தோன்றாது நிற்பனவும் என இருவகைப்படும் என்றற்கு வேறு ஓதினார் என்க. [6]ஆடையை நெய்தான், குடத்தை வனைந்தான் இவை காரண காரியம் தோன்ற நின்றன. [7]ஊரைக்காத்தான் என்பது தோன்றாது நின்றது. ஈண்டு ஓதினவெல்லாம் தொழிற்சொல். ஆகலின், [8]இவற்றை முடிக்குஞ் சொல்லும் இவையடியாகப் பிறந்த சொல் என்க. ஊரைக்காக்கும் என்பது காக்கப்படும் பொருள்மேல் வந்தது. காவலைக் காக்கும் என்பது காவல் தொழில்மேல் வந்தது. தந்தையை யொக்கும், தேரையூரும். இழையென்பது அணிகலன்; [9]ஆடகத்தைப் பூணும். அன்றியும் நூலை யிழைக்கும, கிளியை ஒப்பும், கொடுப்பாரைப் புகழும், கொடாதாரைப் பழிக்கும், புதல்வனைப் பெறும், பொருளை யிழக்கும், அகத்தைக் காதலிக்கும், பகைவரை வெகுளும், செற்றாரைச் செறும், நட்டாரையுவக்கும், நூலைக்கற்கும்,

---

4. காப்பின்...சிதைப்பின் என வந்தமைக்கேற்ப அன்ன பிறவினும் என வருதல் வேண்டும்; அவ்வாறின்றிப் பிறவும் என வந்தமையின் இன் செய்யுள் விகாரத்தால் தொக்கது என்றார்.
5. காரணகாரியம் என்றிருப்பது நன்று. காரண காரியம்— காரணத்தால் விளையும் காரியம்.
6. ஆடையை நெய்தான் = நெய்தல் காரணத்தால் ஆடைக் காரியம் விளைந்தது. (வனைந்த காரணத்தால் குடம் விளைந்தது )
7. ஊரைக்காத்தான்-காத்தல் காரணத்தால் ஊர் விளைய வில்லை; முன்பே உள்ளது. அதனால் காரியம் தோன்ற வில்லை.
8. காப்பின் என்பதனடியாகக் காத்தான், காக்கும் முதலி யன பிறக்கும் பிறவும் இப்படியே.
9. பாடம் : ஆரத்தைப்பூணும்

வினையை யறுக்கும், ஆசையைக் குறைக்கும், பலவற்றைத் தொகுக்கும், சிலவற்றைப் பிரிக்கும், பொன்னை நிறுக்கும், அரிசியை யளக்கும், அடைக்காயை எண்ணும், அறத்தை யாக்கும், தூணைச்சாரும், நெறியைச் செல்லும், சூதினைக் கன்றும், [10]கனணயை நோக்கும், [11]கள்வரையஞ்சும், அறிவைச் சிதைக்கும்.

அன்ன பிறவும் என்றதனால், இசையைப் பாடும் பகைவரைப் பணிக்கும் எனவும்; குழையையுடையன், வலியையுடையன், கல்வியையுடையன், காவலையுடையன் என ஆறாம் வேற்றுமைப் பொருள் மொழிமாற்றாகி வருவனவும் கொள்க. பிறவும் அன்ன.

அம் முதற் பொருள என்ன கிளவியும் என்றதனால், செயப்படுபொருளேயன்றி [12]அதற்குக் காரணமாகிய பொருள் மேலும் பொருளினது உறுப்பின் மேலும் பொருள் வருவன் கொள்க, மண்ணை வனைந்தான், [13]நூலை நெய்தான் இவை காரணம் விளிம்பை நெய்தான் : உறுப்பு. சுவரை எழுதினான்: இடம். பிறவும் அன்ன.

நச்.

("இரண்டாகுவதே......தோன்றுமதுவே")

இது முறையே இரண்டாவது இப்பொருட்கண் வரும் என்கின்றது.

இ—ள் : ஐ எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி இரண்டாகுவதே—'பெயர் ஐ ஒ டு கு இன் அது கண்' என்னும் சூத்திரத்து ஐ எனப் பெயர் பெற்ற வேற்றுமைச்சொல் இரண்டாவது ஆம்; அது எவ்வழிவரினும்—அஃது யாண்டுவரினும், வினையே வினைக்குறிப்பு அவ் இரு முதலின் தோன்றும்—வினைச்சொல் லினும் வினைக் குறிப்புச் சொல்லினும் பிறந்த செயப்படு

10. பாடம் : கருணையை நோக்கும்
11. பாடம் : கள்வர்க்கஞ்சும்—(இது தவறு ஐ உருபு இன்மையின்)
12. பொருளினது உறுப்பின்மேலும் பொருள் நிகழும் இடத்தின் மேலும் வருவன கொள்க என்பதும் பாடம்.
13. நூலை நெய்தான்—நெய்வதற்கு நூல் காரணமாதலின் செயப்படு பொருள் அதன் காரணத்தின் மேல் வந்தது.

பொருளாகிய அவ்விரண்டு காரணத்தின் கண்ணும் தோன்றும்; எ—று.

[1]பெயரிய என்பது 'கவிரம் பெயரிய' (அகம் 198) என்றாற் போல நின்றது.

[2]வினை வினைக்குறிப்பு என்பன ஈண்டு ஆகுபெயர்; அம் முதனிலைகளால் பிறந்த அச்சொற்களை உணர்த்தலின்.

முதல என்றது காரணத்தை. 'ஆயெட் டென்ப தொழில் 'முதனிலையே' (வேற். மய 29) என்றமையால், அக்காரணங்கள் எட்டு உள வேனும் ஏற்புழிக் கோடல் என்பதனால் செயப்படு பொருளே ஈண்டுக்கோடும்

காரியத்தை நிகழ்த்துவிப்பது காரணம்.

ஒரு வினை முதல் செய்யும் தொழிலினை உறுவது செயப் படுபொருள்.

உ-ம்: குடத்தை வனைந்தான், குழையையுடையன் என வரும். எவ்வுழிவரினும் என்றதனான், புகழை நிறுத்தல், புகழை உடைமை என வினைப் பெயரிற் புடை பெயர்ச்சி பற்றியும் முடியும்.

இயற்றப்படுவதும், வேறுபடுக்கப்படுவதும், எய்தப்படுவதும் எனச் செயப்படுபொருள் மூன்றாம். அவை முறையே இல்ல தனை உண்டாக்கலும், உள்ளதனைத் திரித்தலும், தொழிற் பயனுறுந் துணையாய் நிற்றலும் ஆம். இவ்வுருபை முடித்தற்கு மேலிற் 'காப்பு' முதலிய வாய்பாடு பற்றி வரும் பொருள்களை இம்மூன்று கூற்றானும் பகுக்கின்றார், ஈண்டு[3] வினை மாத்திரை யும் வினைப் பெயருமாகப் பகுப்பர்.

குடத்தை வனைந்தான் என்றது மேல்வரும் 'இழை' என்னும் இயற்றப்படும் பொருள். அஃது எயிலை யிழைத்தான் என வரும்.

---

1. கவிரம் என்னும் பெயரையுடைய
2. இதற்குச் சேனா வரையர் கூற்றும் அடிக்குறிப்பும் பார்க்க.
3. வினை மாத்திரைப் பகுத்தது: இழை என்பது. வினைப் பெயராகப் பகுத்தது: காப்பு ஒப்பு முதலிய தொழிற் பெயர் வடிவில் பகுக்கப்பட்ட மற்றவை. (இழை என்பது வினை. கா என்பது வினை. காப்பு என்பது வினைப் பெயர்)

என்றது, எயிலை இழைத்தலைச் செய்தான் என்னும் பொருட்டு. இழை என்னும் வினை மாத்திரையை உணர்த்தும் முதனிலைப் பெயர் நின்று முன்னர் இழைத்தல் என வினைப் பெயரையும் தோற்றுவித்து, 'இழைத்தலை' என்னும் உருபையும் ஏற்பித்துச் 'செய்தான்' என வினையொழிந்த காரணங்கள் ஏழானும் நிகழும் காரியத்தினையும் தோற்றுவித்து நிற்றலின், [4] 'இழை' என்னும் முதனிலைப் பெயரை வேற்றுமைப் பொருளாக எடுத்து ஓதினார். இப்பொருட்கண் தோன்றிய 'செய்தான்' என்னும் காரியத்துடன் அல்லது 'எயிலை' என்னும் இரண்டாவது முடியாமை உணர்க. என்னை? செய்தற்கு இழைத்தல் செயப்படு பொருள் நீர்மைத்தாய்க் காரணமாய் நிற்றலானும், ஒழிந்த காரணங்கள் தன்கண் நிகழ்ந்து காரியமாம் தன்மை இழைத்தற்கின்றாம் ஆதலானும் என்பது. இவ்வாறே மேலிற் சூத்திரத்து ஒழிந்த பொருள்களையும் விரிக்க.

இனி, வினைக் குறிப்பிற்கும் 'குழையையுடையன்' என்புழி உடையன் எனக் கருதுதல் வினை; அக்கருத்தை நிகழ்த்துகின்றான் வினை முதல்; அக்குழை அவன் கருத்து நிகழ்த்தப்படும் பொருளாய்க் கிடக்கின்ற தன்மை செயப்படு பொருள். இவ்வாறே ஒழிந்தனவும் குறிப்பால் காண்க.

(காப்பின்......அதன்பால என்மனார்)

இஃது அதனை முடிக்கும் பொருள் வேறுபாடு கூறுகின்றது.

இ-ள்· காப்பின்...சிதைப்பின் என்றா—காப்பு முதலாகச் சிதைப்பு ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தெட்டுப் பொருளும், அன்ன பிறவும் அம்முதற்பொருள என்ன கிளவியும்—அவை

---

4. முதல் நிலைப் பெயர்: முதல் நிலை பகுதி, பகுதியள வான பெயர். முன்னர் இழை என்பது வினையையுணர்த்தும் சொல்லாகக் கூறியவர் இங்கு முதல் நிலைப் பெயர் என்றமையின் வினை மாத்திரை என அவர் அங்குக் கூறியதும் வினைப் பெயரையே என்றும், அப்பெயர் முதல்நிலைத்தொழிற் பெயர் என்றும் கொண்டு, 'வினை மாத்திரையும் வினைப் பெயருமாகப் பகுப்பர்' என்பதற்கு முதல் நிலைத் தொழிற்பெயரும் தொழிற் பெயருமாக (விகுதியுடன் சேர்ந்த தொழிற் பெயருமாக)ப்பகுப்பர் என்பதாகப் பொருள் கொள்க.

போல்வன பிற பொருளும் ஆகிய அச்செயப்படு பொருள் மேல் வரும் எல்லாச் சொல்லும், அதன் பால என்மனார்—அவ்விரண் டாம் வேற்றுமையின் கூற்றன என்று கூறுவர் புலவர். எ-று.

உ-ம்: எயிலை இழைத்தான்; இவ்வியற்றப்படுவது ஒரு தன்மைத்து ஆகலின் ஒருவாய்ப்பாடே கூறினார்.

கிளியை ஒப்பும், பொருளை இழக்கும் இவற்றிற்கு வேறு பாடு, ஒரு தொழில் உறுவிக்கப்பட்டுத் தானே போதலும் தொழிற் பயன் உற்ற மாத்திரையாய் ஒருவன் கொண்டு போகப் போதலும்.

நாணையறுக்கும், மரத்தைக் குறைக்கும், இவற்றிற்கு வேறு பாடு, சிறிது இழவாமல் வேறுபடுத்தலும் சிறிது இழக்க வேறு படுத்தலும் பெருமையைச் சுருக்குதலும்.

நெல்லைத் தொகுக்கும், வேலியைப் பிரிக்கும்: இவற்றிற்கு வேறுபாடு விரிந்தது தொகுத்தலும், தொகுத்தது விரித்தலும். அறத்தையாக்கும். நாட்டைச் சிதைக்கும்: இவற்றிற்கு வேறுபாடு மிகுத்தலும் கெடுத்தலும். இவ்வெட்டும் வேறு படுக்கப்படுவன.

ஊரைக் காக்கும், தந்தையை ஒக்கும், தேரையூரும், குரிசிலைப் புகழும், நாட்டைப் பழிக்கும். புதல்வனைப் பெறும், மனைவியைக் காதலிக்கும், பகைவரை வெகுளும், செற்றாரைச் செறும், நட்டாரையுவக்கும், நூலைக்கற்கும், பொன்னை நிறுக்கும், அரிசியையளக்கும், அடைக்காயை எண்ணும், ஊரைச் சாரும், நெறியைச் செல்லும், சூதினைக் கன்றும், கணையை நோக்கும், கள்ளரை அஞ்சும் எனப் பத்தொன்பதும் எய்தப் படுவன. இவை தாம் தொழில் உறுவனவும் தொழிற் பயன் உறுவனவுமாய் வரும் வேறுபாடு உணர்க.

வெகுடலும் செறலும் கொலைப் பொருளாய வழி வேறு படுக்கப்படுவன. செறல் வெகுளியது காரியம். உவத்தல் காதலது காரியம்.

இனிச் செய்வான் கருத்து இல்வழி நிகழும் செயப்படு பொரு ளும், செய்வானும் செயப்படு பொருளும் தானேயாய் நிற்பனவும் கொள்க.

உ-ம்: சோற்றைக் குழைத்தான், சாத்தன் தன்னைக் குத்தி னான் என வரும்.

இன்னும் செயப்படு பொருள் தன்கண் தொழில் நிகழ்ந்தும் நிகழாதும் வரும். அறுத்தல் முதலியன தன்கண் நிகழ்வன. சார்தல் முதலியன தன்கண் நிகழாதன.

அன்ன பிறவும் என்றதனால் பகைவரைப் பணித்தான், சோற்றை அட்டான், குழையையுடையன், பொருளை இலன் என்றாற் போல்வன கொள்க.

*[5]இச்சூத்திரம் தொகுத்த[6]மொழியின் வகுத்தனர் கோடல்.

கல்.

என் நுதலிற்றோ வெனின், எழுவாய் வேற்றுமை யதிகாரம் உணர்த்தினார், இனி அம்முறையானே இரண்டாம் வேற்றுமை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இரண்டாம் எண்ணு முறைக்கண்ணதாகிய ஐ என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல் யாதானும் ஓர் இடத்து வரினும் வினையும் வினைக் குறிப்பும் என்றும் சொல்லப் படுகின்றது. இரண்டும் அடியாக வரும் பொருள் பற்றிச் சொல்லிற் 'காப்பு' என்பது முதலாய் சிதைப்பு ஈறாய் ஓதப்பட்ட இவையும் இவை போல்வன பிறவுமாகிய அவ்வவ்வினை வினைக் குறிப்பு என்னா நின்ற முதற்பொருளைப் பற்றி வருகின்ற எல்லாச் சொற்களும் இரண்டாவதன் பொருள வென்பர் புலவர், எ—று.

உ-ம்: மரத்தைக் குறைத்தான் என்பது வினை. குழையை யுடையன் என்பது வினைக்குறிப்பு. காப்பு—என்பது ஊரைக் காக்கும் என்பது. ஒப்பு—தாயை யொக்கும் என்பது.

ஊர்தி: யானையை யூரும் என்பது.
இழை: எயிலை யிழைக்கும்
ஒப்பு—கிளியை யோப்பும் என்பது. இவை வினை.
புகழ்: ஊரைப் புகழும். பழி: நாட்டைப் பழிக்கும். பெறல: ஊரைப் பெறும். இழவு: ஊரை யிழக்கும்.

---

5. இத்தொடர் சொல்லதிகார உரைக் கோவையில் காணப் படவில்லை.
6. பாடம்: மொழியான்.
* இத்தொடர் உரைக்கோவையில் இல்லை.

காதல்: தாயைக் காதலன். இது வினைக் குறிப்பு.
வெகுளி: படையை வெகுளும். செறல்: செற்றாரைச் செறும்.
உவத்தல்: தாயை யுவக்கும்—இது வினைக்குறிப்பு.

கற்பு: நூலைக் கற்கும். அறுத்தல்: ஞாணை யறுக்கும். குறைத்தல்: மரத்தைக் குறைக்கும். தொகுத்தல்: நெல்லைத் தொகுக்கும். பிரித்தல்: வேலியைப் பிரிக்கும். நிறுத்தல்: பொன்னை நிறுக்கும். அளவு: அரிசியை யளக்கும். எண்: அடைக் காயை எண்ணும். ஆக்கல்: அறத்தை யாக்கும். சார்தல்: வாய்க் காலைச் சாரும். செலவு: நெறியைச் செல்லும். கன்றல்: சூதினைக் கன்றும். நோக்கல்: சேயை நோக்கும். அஞ்சல்: கள்ளரை யஞ்சும். சிதைப்பு: நாட்டைச் சிதைக்கும் எனவும், அன்ன பிறவும் என்றதனால் விரலை முடக்கும், நாவினை [1]வணக்கும் என வருவனவும் கொள்க. இவை வினை.

அறிவினை யுடையன்; ஊரையின்புறும்: இவை வினைக் குறிப்பு. பிறவும் அன்ன.

காப்பின் என்பது முதலாக இன் எல்லாம் உருபும் அன்று; சாரியையும் அன்று; அசைநிலை எனக் கொள்க. இடைநின்ற என்றா என்பன எண்ணிடைச் சொற்களாம்.

மற்றைய வேற்றுமை போல் இதுபடும் பொருண்மை யுணர்த்தாது முடிபுணர்த்தியது. என்னை? இம்முடிபு ஏனை வேற்றுமைக்கும் உளவால் எனின், ஈண்டு முடிபு அன்று உணர்த் தியது; வினை வினைக் குறிப்பின் மேலிட்டு அதுபடும் செயப்படு பொருளினை உணர்திற்றாக உரைக்கப்படும். செயப்படு பொருண்மையாவ தென்னையெனின், ஒருவன் செய்யுந் தொழிலினைத் தானுறுதல் எனக் கொள்க. அத்தொழிலினை யுறுவது இதுவேயோ? அத்தொழில் செய்வானும் கருவியும் செய் கின்ற காலமும் இடனும் என இன்னோரன்னவும் அத்தொழில் உறுமால் எனின், அவையுறும் எனினும் பெரும்பான்மையும் இதன் கண்ணது என்பது கருத்து.

[2]வினை யென்னாது வினைக் குறிப்பு என்றது என்னையோ வெனின், மரங்குறைத்தான் என்புழிக் குறைக்கப்படுதல் என்பது

---

1. வணக்கும் — வளைக்கும்
2. வினையென்னாது — வினை என்று மட்டும் கூறாமல்.

போலாகாது குழையையுடையன் என்புழிக்குழையின் உடைமைப் பாடு செயப்படு பொருளாய் விளங்கி நில்லாமையின் வேறு கூறினார் என்பது.

அச்செயப்படு பொருள் தான் இல்லதொன்றாய் உண்டாக்கப் படுவதும், உள்ளது ஒன்றாய் உடல் வேறுபடுக்கப்படுவதும், உள்ளதொன்றாக ஒரு தொழில் உறுவிக்கப்படுவதும் உள்ள தொன்றாய் ஒன்றனால் உறப்படுவதும் எனப் பலவகையாம்.

இல்ல தொன்றுண்டாக்கல் எயிலை யிழைத்தான் என்பது.

உள்ள தொன்றனை யுடல் வேறாக்கல்: மரத்தைக் குறைத் தான் என்பது.

உள்ளது ஒன்று ஓர் தொழில் உறுவித்தல்: கிளியை ஓப்பும் என்பது.

உள்ளது ஒன்றனை ஒன்றுறுதல்: நூல் நூற்றான் என்பது. பிறவும் அன்ன.

இன்னும் செயப்படு பொருள்தான், தன்கண்ணும் ஓர் தொழில் நிகழ்ந்து செயப்படு பொருளாவனவும், தன்கண் தொழில் நிகழாது செயப்படு பொருளாவனவும் என இருவகைய.

தன்கண்ணுந் தொழில் நிகழ்ந்தது: அறுத்தல், குறைத்தல் என்பனவாம். அறுத்தல் குறைத்தல் ஆகிய அவ்விருதொழில் மரம் முதலியதன் கண்ணும் நிகழ்ந்தனவாகலின்.

தன்கண் நிகழாதது; வாய்க்காலைச் சாரும் என்றாற் போல்வன. பிறவும் அன்ன.

இன்னும் இரண்டாவதன் செயப்படுபொருள் தெரிநிலைச் செயப்படுபொருளும் தெரியாநிலைச் செயப்படுபொருளும் என இருவகைத்தாம்.

‡தெரிநிலை: மரத்தைக் குறைத்தான் என்பது. தெரியாநிலை: சாத்தனால் மரங்குறைக்கப்பட்டது என்பது. மற்றிஃது எழுவா யன்றோ வெனின், சொன்னிலை யன்னதாயினும் சாத்தனான் என நின்ற வுருபினை நோக்கப் பொருள்நிலை அன்னதன்றென

---

‡ மரங்குறைத்தான் என்பதில் எதை என்னும் வினாவுக்கு மரம் என்பது செயப்படுபொருளாகத் தெரியவருகிறது. மரங்குறைக்கப்பட்டது என்பதில் எதை என்னும் வினா இல்லை குறிப்பாகவே செயப்படு பொருள் அறியப்படு கிறது. எனவே இது தெரியாநிலை.

வுணர்க. சோற்றையட்டான் எனச் செய்வான் கருத்துள்வழிச் செயப்படுபொருளாதலும், சோற்றைக் குழைத்தான் எனக் கருத்தில் வழியாதலும் என இருவகைய.

இனிச் செய்வானும் செயப்படு பொருளும் என்னும் இரண்டும் ஒன்றேயாயும் வரும். உ-ம்: சாத்தன் தன்னைக் குத்தினான் என வரும்,

இனிச் செயப்படு பொருட்கு ஏதுவாயதூஉம் செயப்படு பொருளாய் வரும். அவை கற்கப்படும் ஆசிரியர், கற்கப்படா ஆசிரியர் எனவரும்.

மற்றும் இதன் கருத்து விகற்ப முறையிற் கொள்க.

ஒரு·

("இரண்டாகுவதே......தோன்றுமதுவே)

என்பது பெயர் ஐ ஒடு கு என்னும் சூத்திரத்து ஐ எனப் பெயர்பெற்ற வேற்றுமைச்சொல் இரண்டாவதாம்; அஃதி யாண்டுவரினும் வினையும் வினைக்குறிப்புமாகிய இரண்டு முதற் கண்ணும் தோன்றுமவை பொருளாக என்றவாறு.

உ-ம்: குடத்தை வனைந்தான், குழையை யுடையன் என வரும்.

'பெயரிய' என்பது பெயர் என்பது முதனிலையாக முடிந்த தோர் பெயரெச்சம். தன்னையுணர்த்துவனவும் பெயர் எனப் படுதலின் 'ஐ எனப் பெயரிய' என்றார். வினையே வினைக் குறிப்பு என்றாராயினும் அவற்றின் செயப்படு பொருளே கொள்ளப்படும். செயப்படுபொருளாவது ஒரு வினை செய்யும் தொழிலினையுறுவது.

'இவ்விரு முதலிற்றோன்றும்' என்றதனால் முதலாதற்கும் வேற்றுமைப் பொருளாதற்கும் ஏற்பன அவையே யாதலின் முதல் காரணம் அவை. முதலாதற்கேற்றவாறு என்னை எனின்,செயபடு பொருள் முதலாயின தொழிற்குக் காரணம் ஆகலான் 'ஆயெட் டென்ப தொழின் முதனிலையே' (சொல் 112) என்னுமவற்றை முதனிலை யென்று கூறுபவாகலான். அஃதேற் செயப்படு பொரு ளாவது தொழிற்பயனுறுவ தாகலான் குழை முதலாயின வற்றிற்கு அவ்விலக்கணம் ஏறாமையிற் செயப்படு பொருளன்மை யான் வினைக் குறிப்பு எனல் வேண்டாவெனின், அற்றன்று: "அம்முக் காலமும் குறிப்பொடு கொள்ளும் மெய்ந்நிலையுடைய"

என்றாராகலின் குறிப்புச்சொற் காலமொடு தோன்றிற் றொழில் சேரலாதலும் குழை முதலாயின தொழிற் பயனுறு தலும் ஆசிரியரது துணிபு ஆதலின் அவையும் செயப்படு பொருளாம் என்பது. ஆயின் செயப்படு பொருட்கட்டோன்று மென அமையும் வினையே வினைக் குறிப்பெனல் வேண்டாவெ னின், தெரிநிலைவினைச் செயப்படு பொருளையே கூறினாரோ குறிப்புச்சொற் பொருளு மடங்கப் பொதுவகையாற் கூறினாரோ என்றைய மாகாமையின் வினையே வினைக்குறிப் பென்றது. வினை வினைக் குறிப்பென்பன ஈண்டு ஆகுபெயர். எவ்வழி வரினும் என்றதனால், புகழை நிறுத்தான், புகழை நிறுத்தல்; புகழையுடையான், புகழையுடைமை என இரண்டாவது பெயரொடு தொடர்ந்த வழியும்வினைச் செயப்படு பொருளும் குறிப்புச் செயப்படு பொருளும் பற்றியே நிற்கும்.

செயப்படுபொருள் இயற்றப்படுவதும், வேறுபடுக்கப் படுவதும், எய்தப்படுவதும் என மூன்றாம். இயற்றப்படுதலாவது முன் இல்லாததனையுண்டாக்குவது. வேறுபடுத்தல்: முன் உள்ள தனைக் குறித்தல்* எய்தப்படுவது தொழிற்பயனுறுந் துணை யாய் நிற்றல்.

இவ்வுருபை முடித்தற்கும் மேற் 'காப்பு' முதலிய வாய்பாடு பற்றிவரும் பொருள்களை யிம்மூன்று கூற்றானும் பகுக்கின்றார், வினைமாத்திரையும் வினைப் பெயருமாகப் பகுப்பர்.

[1]ஈண்டு, குடத்தை வனைந்தான் என்றலும் மேல் வரும் 'இழை' என்னும் இயற்றப்படும் பொருளை. அது, எயிலை யிழைத்தான் என வரும். என்றது எயிலை இழைத்தலைச் செய்தான் என்னும் பொருட்டு. இழை என்னும் வினைமாத்திரை யுணர்த்தும் பெயர்நிலை முன்னர் இழைத்தல் என வினைப் பெயரைத் தோற்றுவித்து இழைத்தலை என வுரிமையும் ஏற்பித்துச் செய்தான் என வினையொழிந்த காரணங்கள் ஏழா னும் நிகழும் காரியத்தினையும் தோற்றுவித்து நிற்றலின், இழை என்னும் முதல் நிலைப் பெயரை வேற்றுமைப் பொருளாக எடுத்தோதினார். இப் பொருட்கண் தோன்றிய செய்தான்

* திரித்தல்—சேனா. பாடம். அதுவே நன்று. குறித்தல்—குறைத்தல் என்றிருப்பது நன்று.

1. இப்பகுதி நச்சினார்க்கினியரைத் தழுவியதாம்.

என்னும் காரியத்துடனல்லது எயிலை என்னும் இரண்டாவது முடியாமையுணர்க

இவ்வாறே மேலிற் சூத்திரத்தில் ஒழிந்த பொருள்களையும் விவரிக்க. இனி வினைக் குறிப்பிற்குங் 'குழையையுடையன்' என்புழி 'உடையம்' எனக் கருதல் வினை. அக்கருத்தை நிகழ்த்து கின்றான் வினைமுதல் அக்குழையவன் கருத்து நிகழ்த்தப்படும் பொருளாய்க் கிடக்கின்ற தன்மை செயப்படு பொருள். இவ் வாறே யொழிந்தனவும் குறிப்பாற் காண்க.

("காப்பின்...அதன்பால என்மனார்")

என்பது செயப்படுபொருள் மூன்றனையும் பற்றி வரும் வாய்பாடுகளை விவரிக்கின்றார்.

காப்பு முதலாகச் சிதைப்பின் ஈறாகச்சொல்லப்பட்ட இருபத் தெட்டுப் பொருளும் அவை போல்வன பிறவுமாகிய அச்செயப் படுபொருள்மேல் வரும் எல்லாச் சொல்லும் அவ்விரண்டாம் வேற்றுமைப் பால என்று சொல்லுவர் புலவர்.

என்றா எண்ணிடைச் சொல். இன் எல்லாம் புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதவா எண்ணின்கண் வந்தன. அம்முதல் என்றது மேற்கூறப்பட்ட செயப்படு பொருள்.

உ-ம்: எயிலை யிழைத்தான் என இயற்றப்படுவது. இஃது ஒரு தன்மைத் தாகலின் ஒரு வாய்பாடே கூறினார்.

கிளியை யோப்பும், பொருளை இழக்கும்: இவற்றிற்கு வேறு பாடு ஓர் தொழில் உறுவிக்கப்பட்டுத் தானே போதலும் தொழிற் பெயருற்ற மாத்திரையாய் ஒருவன் கொண்டு போதலும்.

நாணையறுக்கும், மரத்தைக் குறைக்கும்; இவற்றிற்கு வேறு பாடு சிறிது இழவாமல் வேறுபடுத்தலும், சிறிது இழக்க வேறு படுத்தலும் பெருமையைச் சுருக்குதலும்.

நெல்லைத் தொகுக்கும், வேலியைப் பிரிக்கும்: இவற்றிற்கு வேறுபாடு விரிந்தது தொகுத்தலும், தொகுத்தது விரித்தலும்.

அறத்தை யாக்கும், நாட்டைச் சிதைக்கும்: இவற்றிற்கு வேறுபாடு மிகுதலும் கெடுதலும்.

இவ்வெட்டும் வேறுபடுக்கப்படுவன.

ஊரைக் காக்கும், தந்தையை யொக்கும், தேரையூரும், குரிசிலைப் புகழும், நாட்டைப் பழிக்கும், புதல்வனைப் பெறும்,

மனைவியைக் காதலிக்கும், பகைவரை வெகுளும், செற்றாரைச் செறும், நாட்டாரை யுவக்கும், நூலைக் கற்கும், பொன்னை நிறுக்கும், அரிசியை யளக்கும், அடைக்காயை எண்ணும், ஊரைச் சாரும், நெறியைச் செல்லும், சூதினைக் கன்றும், கணையை நோக்கும், கள்வரையஞ்சும் எனப்பத்தொன்பதும் எய்தப்படுவன. இவைதாம் தொழில் உறுவனவும் தொழிற் பயன் உறுவனவுமாய் வரும் வேறுபாடும் உணர்க.

வெகுடலும் செறலும் கொலைப் பொருளாம் வழி வேறு படுக்கப்படுவனவாம். செறல் வெகுளியது காரியம். உவத்தல் காதலது காரியம். வேறுபடுக்கப்படுவதும் எய்தப்படுவதும் பல்லிலக்கணத்தன வாதலிற் பலவாய்பாட்டான் விரித்துக் கூறினார்.

அன்ன பிறவும் என்றதனான் பகைவரைப் பணிந்தான், சோற்றையட்டான், குழையை யுடையவன், பொருளையிலன், என்னுந் தொடக்கத்தன கொள்க. இயற்றப் படுதல் முதலாகிய வேறுபாடு குறிப்பு வினைச் செயப்படு பொருட்கண் ஏற்பன கொள்க.

சுப்.

'இரண்டாகுவதே ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' என்பதன் பொருளில் 'முதல் மூவருக்கும் மாறுபாடில்லை. 'வினையே வினைக்குறிப் பவ்விரு முதலிற்றோன்றும்' என்பதன் தாற்பர்யார்த்தமாகிய வினைச் செயப்படு பொருளினும், வினைக் குறிப்புச் செயப்படு பொருளினும் தோன்றும் என்ப திலும் அம்மூவருக்கும் மாறுபாடில்லை.

ஆனால், 'வினையே வினைக் குறிப்பவ்விரு முதல்' என்ப தற்கு உரையாசிரியர் "வினை வினைக்குறிப்பு அவ்விரண்டை யும் தோற்று நிலமாகக் கொண்டது அல்லது அவ்விரண்டையும் நிமித்தமாகக் கொண்டது" என்று இருவகையாகப் பொருள் கொண்டனர். வினை வினைக்குறிப்புகளைத் தோற்று நிலமாகக் கொள்வது என்ற இவ்விலக்கணம் ஒடு. கு, இன், கண் இவற்றுக்கும் பொருந்தும். "வினையே செய்வது......ஆயெட் டென்ப தொழில் முதனிலையே" (சொல் 112) என்னும் சூத்திரத் தின்கண் முதனிலை என்பதற்குக் காரணம் என்று சேனாவரை யர் பொருள் உணர்த்தினமையான் இங்கும் முதல் என்பதற்குக் காரணம் என்று பொருள் கொள்ளுவதே தக்கதென்று தோன்று

கிறது. அவ்வாறாயின் செயப்படுபொருள் வினை, வினைக் குறிப்பு இவற்றால் உணர்த்தப்படும் தொழிலுக்குக் காரணமே யன்றி, வினையும் வினைக்குறிப்பும் செயப்படு பொருளுக்குக் காரணமாகா. சேனாவரையர் 'வினையும் வினைக்குறிப்புமாகிய அவ்விரண்டு முதல் என்று பொருள் கூறி ''வினையே வினைக் குறிப் பென்றாராயினும் அவற்றின் செயப்படு பொருளே கொள்ளப்படும்'' என்று கூறுகின்றார் நச்சினார்க்கினியர் ''வினைச் சொல்லினும் வினைக் குறிப்புச் சொல்லினும் பிறந்த செயப்படு பொருளாகிய அவ் விரண்டு காரணம்'' என்கின்றார். இவ் விரண்டனுள் நச்சினார்க்கினியர் கூறுவதே பொருத்தமானது.

1. மூவர் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர். ஏன் எனின், வினை, வினைக்குறிப்பு இவ் விரண்டு சொல்லையும் வினைக்குக் காரணம், வினைக்குறிப்புக்குக் காரணம் என்று சேனாவரையருக்கு ஆகுபெயராக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இருவரும் முதல் என்பது முதனிலை என்பதன் ஏகதேசமாகக் கொண்டு அதற்குக் காரணம் என்று பொருள் கொண்டனர்.

''வினையே செய்வது...தொழில் முதனிலையே''(சொல் 112) என்னுஞ் சூத்திரத்தில் தொழில் முதனிலை எட்டு என்று கூறி யிருக்கும்போது இச்சூத்திரத்தில் முதல் என்பதற்குச் செயப்படு பொருள் என்று எவ்வாறு பொருள் கொள்ளலாம் எனின், செய்வது முதல் வேற்றுமையாற் கூறப்பட்டதனாலும், நிலன் காலம் முதலியன மூன்று முதலிய மற்றை வேற்றுமைகளால் கூறப்படுமாதலாலும், எஞ்சியிருக்கும் செயப்படு பொருளே இங்குக் கூறியுள்ள முதலுக்குப் பொருள் என்று கொண்டனர் என்க. நச்சினார்க்கினியர் செயப்படு பொருள் என்ற சொல்லை ஏற்புழிக் கோடலால் வந்ததாகக் கூறுகின்றார். அன்றியும் அச் சூத்திரத்தில் செய்வது என்பதற்குப் பின் செயப்படு பொருள் கூறப்பட்டமையானும் அம்முறை பற்றி ஈண்டுச் செயப்படு பொருள் கொள்ளப்பட்டது எனினுமமையும். தெய்வச்சிலையார் வினை, வினைக்குறிப்பு இரண்டற்கும் கொண்ட பொருள் சிறந்ததன்று.

*ஐ ஒடுமுதலிய வேற்றுமைகளுக்கு இரண்டாவது மூன்றாவது முதலிய வேற்றுமை என்ற பெயர் வடமொழியில் அதே பொருள்

---

* இரண்டாம் வேற்றுமை முதலியவற்றை இரண்டாவது முதலிய எண்ணிக்கையில் பெயரமைத்தவர் தொல் காப்பியர்க்கு முன்னோர். அவர் வழித்தொல்காப்பியர்

கொண்ட பிரத்தியங்களுக்குத் துவீதியை திருதீயை முதலிய பெயரை யொத்துள்ளன. 'துதியை திருதியை யென்றாற்போலத் தொல்காப்பியரும் இரண்டாகுவதே, மூன்றாகுவதே என மொழி பெயர்த்துக் கூறுவர்,' என்று பிரயோக விவேகநூலார் கூறுவதும் காண்க.

இச்சூத்திரத்தில் ஐ என்னும் சொல்லை யுத்தேசித்து அதன் பெயர் இரண்டாம் வேற்றுமையென்றும், அது செயப்படு பொரு ளில் வரும் என்றும் இரண்டு விதிப்பது வாக்கியபேதம் அன்றோ என்ற ஐயம் தோன்றலாம் அதற்கு இரண்டாம் வேற்றுமை என்னும் பெயர் 'அவைதாம், பெயர் ஐ ஒடு கு' (சொல். 64) என்னும் சூத்திரத்தானே விதிக்கப்பட்டது. அச்சூத்திரத்தால் விதிக்கப்பட்ட 'இரண்டாம் வேற்றுமையென்ற பெயரை இச் சூத்திரம் அநுவதித்து அது செயப்படுபொருளில் வரும் என்பதை மாத்திரம் விதிக்கின்றது என்று கொள்க அங்ஙனம் கூறாது 'இரண்டாகுவதே' என்பதை 'ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' என்பதற்கு அடைமொழியாகவும், 'வினையே வினைக்குறி பவ்விரு முதலில் தோன்றுமது' என்பதை விதேயமாகவும் கொள்ளின் அவ்வையமும்நிகழாது. இம்முறையை வருஞ்சூத்திரங் களுக்கும் கொள்க.

பாடம்· சேனாவரையம்-தாமோதரம்பிள்ளை பதிப்பு "அவ் விரண்டு முதற்கண்ணும் தோன்றும், அவை பொருளாக வரும்" சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப்பதிப்பு "அவ்விரண்டு முதற் கண்ணும் தோன்றுமவை பொருளாக வரும்"

பின் பாடத்தின்படி சூத்திரத்திலுள்ள அவ்விரு முதலிற் தோன்றுமது என்பது பயனிலையாய் இருக்க வேண்டும். அதற்கு எழுவாய் சூத்திரத்திற் காணப்படவில்லை. வேற்றுமைக் கிளவியை யெழுவாயாகக் கொள்ளின், அஃது இரண்டாகுவதே என்பதற்கு அன்றி இதற்கு எழுவாயாகாது மேலும் சேனாவரையத்திலுள்ள 'அஃது...அவ்விரண்டு முதற்கண்ணும் தோன்றுமவை பொருளாக வரும்' என்ற வாக்கியத்தில் 'அவ்விரண்டு முதற்கண்ணும் தோன்றுமவை' என்பது 'அஃது என்பதனோடும் அந்நுவயிக்க

---

அமைத்தார். தமிழ் வழக்கையொட்டியே சமக்கிருத மொழியில் 'துவிதீயை' போலும் வழக்கை மேற் கொண்டனர். பிரயோக விவேக நூலார் கூற்றுப் பொருந்தாது—சிவ.

வில்லை. 'அஃது' என்பதனோடு அந்நுவயிக்குமாயின் 'தோன்றுமவை' என்பதற்குப் பிரத்தியாகத் 'தோன்றுமது' என்றிருத்தல் வேண்டும். அவ்விரண்டு முதற்கண்ணும் தோன்றுதலையுடையது உருபேயன்றிப் பொருளன்றாதலாற் 'பொருளாக' என்பதனோடும் அந்நுவயிக்காது. ஆதலால் சேனாவரையத்தில் தாமோதரம் பிள்ளை பாடமே பொருத்தமானது என்று தோன்றுகிறது. அவை என்பதற்கு வினைமுதல் வினைக்குறிப்புமுதல் என்பன பொருளாகும்.

சிவ.

வினையும் வினைக்குறிப்புமாகிய அவ்விரண்டு முதற்கண்ணும் தோன்றும்; அவை பொருளாக வரும்'' என்னும் பாடத்தில் அது என்னும் எழுவாய்க்குத் தோன்றும் என்பது பயனிலையாக அமைய, 'அவை பொருளாக வரும்' என்பது வருவிக்கப்பட்டதாகும்,

'தோன்றுமவை பொருளாகவரும்' என்னும் பாடத்தில் 'அது' என்னும் எழுவாய்க்கு 'வரும்' எள்பது பயனிலை. தோன்றும் என்பதற்கு வரும் என்பது பொருள். தோன்றுமவை பொருளாக' என்பது வருவிக்கப்பட்டது.

ச. வே. சுப்பிரமணியன்

இரண்டாம் வேற்றுமையுருபு வந்தால் அது செயப்படு பொருளாகத்தான் அமையமுடியும் அதனால்தான் அதைச் செயப்படு பொருள் என்றே அழைக்கின்றார்கள். வாக்கிய அமைப்புகள் செயப்படு பொருளை வைத்துப் பார்த்தால் எந்தெந்த நிலைகளில் அமையும் என்பதைத்தான் இவ்வகைகளும் பகுப்புகளும் உணர்த்துகின்றன எனத் தோன்றுகிறது.

இன்று பேச்சு வழக்கில் 'ஐ'—'அ' 'எ' என்ற நிலைகளில் அமைகின்றது. 'அவனைக் கண்டேன்' என்பதை 'அவனக் கண்டேன், 'சோற்றைத் தின்றான்' என்பதைச் 'சோற்றெத் திண்ணான்' என்று பேசுவதைக் கேட்கிறோம். (இலக்கணத் தொகை, சொல் பக், 87)

செ. வை. சண்முகம்

இரண்டாம் வேற்றுமையின் பொதுத் தன்மையை 'எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு, அவ்விரு முதலில் தோன்றும்' என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு உரை

யாசிரியர்கள் பலரும் செயப்படு பொருளைக் கொண்டு முடியும் என்றே விளக்கியுள்ளனர்.

இரண்டாம் வேற்றுமை கொண்டு முடியும் சொற்களாக விதந்தோதிய சொற்களில் குறிப்பு வினை ஒன்றுகூட இல்லை. தெய்வச்சிலையார் ஒழிந்த உரையாசிரியர்கள் 'குழையையுடையன்' என்று குறிப்பு வினைக்குதாரணம் காட்டியுள்ளார்களே தவிரத் தொல்காப்பியர் ஏன் விதந்து சொல்லவில்லை என்பதற்குக் காரணம் காட்டவில்லை. தெய்வச்சிலையார் கருத்துப் படி உடைமைப் பொருள் அடிப்படையாக ஆறாம் வேற்றுமைக்கு வருவது, இங்கு மொழி மாற்றாகத்தான் இரண்டாம் வேற்றுமைக்கு வந்துள்ள தாகையால் குறிப்பு வினையை விதந்து ஓத வில்லை. 'அன்னபிறவும்' என்றதனால் வலிமையுடையன், கல்வியையுடையன், காவலையுடையன் என ஆறாம் வேற்றுமைப் பொருள் 'மொழி மாற்று' ஆகி வருவனவும் கொள்க' என்பது அவர் கூற்று. இன்று பரக்கப் பேசப்படும் மொழிமாற்றிலக்கணத்தின் அடிப்படையில் தெய்வச்சிலையார் நினைத்துப் பார்த்திருப்பதும் அதனைக் குறிக்க 'மொழிமாற்று' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதும் அவரின் தனிச் சிறப்பாகும்.

தொல்காப்பியர் இங்குக் கூறியுள்ள எல்லா வினைகளையும் செயப்படு பொருள் குன்றாவினை (transitive verb) என்று கொள்ள முடியாது. ஒத்தல் (ஒப்பின்) செல்லல் (செலவின்) அஞ்சல் போன்றவை இரண்டாம் வேற்றுமையைக் கொண்டு முடியினும் செயப்படுபொருள் குன்றா வினையாகா. செயப்படு பொருள் குன்றாவினையாயின் அவ்வாக்கியத்தைச் செயப்பாட்டு வினைவாக்கியமாக மாற்ற முடியும்.

1. சாத்தன் கொற்றனைக் கொன்றான்
   சாத்தனால் கொற்றன் கொல்லப்பட்டான்

2. சாத்தன் கொற்றனை ஒத்தான்
   சாத்தனால் கொற்றன் ஒக்கப்பட்டான்.

இரண்டாவது வாக்கியத்தில் வரும் வினை செயப்படு பொருள் குன்றிய வினை (Intransitive verb) ஆக இருப்பதால்தான் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்ற முடியவில்லை. எனவே செயப்படுபொருள் குன்றிய வினைகள் இரண்டாம் வேற்றுமையை ஏற்பது புறநிலையில் தானே தவிரப் புதைநிலையில் அன்று. செயப்படு பொருள் குன்றியவினைகள் வேறு வேற்றுமை

ஏற்று வருதலையும் காணலாம். உதாரணமாக 'ஒத்தல்' ஐந்தாம் வேற்றுமையையும் (சாத்தன் கொற்றனின் நல்லன் = சாத்தன் கொற்றனைப் போன்று நல்ல பண்பையுடையன்—இது உவமப் பொருவாகும்), செல்லல் ஏழாம் வேற்றுமையையும் (அவன் ஊரைச் சென்றான் = அவன் ஊர்க்கண் சென்றான்) ஏற்று வருதலையும் காணலாம், (தொல்காப்பிய மொழியியல் பக் 289 - 291)

தே. ஆண்டியப்பன்

வினை என்பது செயல்; வினைக்குறிப்பு என்பது அவ்வினையினால் குறிக்கப்பட்ட செயப்படு பொருள் என்பர் சிலையார். தொழில் முதனிலை என்னும் நோக்கில் செயலும் செயப்படு பொருளும் இரண்டாம் வேற்றுமை தோன்றக் காரணமாயின. அதுவே அவர் கூறும் கருத்து. எ-டு: வனைதலைச் செய்தான்—செயல்மேல் வந்தது. வினை கொண்டும் குறிப்பு வினை கொண்டும் முடிவதைப் பிறர் எடுத்துக் கூறுவர்.

எ-டு: குடத்தை வனைந்தான்
பந்தை உதைத்தான் } வினைகொண்டு முடிந்தது.

எந்தையும் இலமே
பசப்பித்துச் சென்றாரை யுடையையோ } குறிப்புவினை கொண்டது.

காப்பு ஒப்பு என்றெல்லாம் தொல்காப்பியர் 28 வினைகளை எடுத்துப் பேசுகிறார். இனியர் அவற்றை எல்லாம் மூன்று பிரிவில் விளக்க விரும்புகிறார் (1) இயற்றப்படுவது (2) வேறுபடுக்கப்படுவது (3) எய்தப்படுவது. எயிலை இழைத்தான் என்னும்போது எயில் உருவாகிறது. மதிலை இடித்தான் என்னும்போது இருந்த பொருள் அழிகிறது. தேநீர் அருந்தினான் என்றபோது பயனை அடைகிறான். நூலைப் படித்தான், நூலை எழுதினான் என்று கூறும்போது வேறுபாடு தோன்றும்; ஒன்று அமைந்திருப்பது; மற்றொன்று ஆக்கப்படுவது என்பதையறியலாம்............ அறுத்தல், குறைத்தல். பிரித்தல், சிதைத்தல் என்னுஞ் சொற்கள் தன் வினை வடிவங்களையும் கொண்டவை. அதனால் செயப்படு பொருள் எழுவாய் நிலையில் வருவதற்கும் வாய்ப்பு உண்டு.

அவன் நூலை அறுத்தான்—நூல் அறுந்தது
அவன் கூரையைப் பிரித்தான்—கூரை பிரிந்தது
அவன் பொருளைச் சிதைத்தான்—பொருள் சிதைந்தது.

மற்ற வினைகள் 'படு' என்னுந் துணை வினையோடு நின்று எழுவாயைக் கருவியாக்கும்; அதே தொடர்ப் பொருளை வெளிப்படுத்தும்.

அவன் தோழியைப் பழித்தான்—தோழி அவனால் பழிக்கப்பட்டாள்.

அவன் பணத்தை வீசினான்—பணம் அவனால் வீசப்பட்டது.

இவ்வாறு பல்வேறு நிலையில் சிந்திக்க இரண்டாம் வேற்றுமையிடந்தருகிறது.

காத்தான் என்பது காத்தலைச் செய்தான் என அகநிலையில் வரும். தன்னைக் குத்தினான் எனும்போது தானே கருத்தா ஆகலாம். பசுவைப் பாலைக் கறந்தான் என்று இரண்டு செயப்படு பொருள் இணைந்தும் வரலாம். சோற்றைக் குழைத்தான் எனும் போது கருத்தின்றியே செயல் நிகழ்வது உண்டு. கருவியை யுடையன், காவலையுடையன் என்று ஆறாம் வேற்றுமைப் பொருள் மொழி மாற்றாகவும் வரும் எனக் கொள்க என்பார் சிலையார். இவையாவும் புறநிலைச் செய்தியிலிருந்து பொருளமைதிக் கோட்பாடு (Sementic theory) வளர வழி கோலும். (காப்பியர் நெறி. பக். 33-35)

### மூன்றாம் வேற்றுமையும் பொருளும்

* **73.** **மூன்றா குவதே**
**யொடுவெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி**
**வினைமுதல் கருவி யனைமுதற் றதுவே**
**அதனி னியற லதற்றகு கிளவி**
**யதன்வினைப் படுத லதனி னாத**
**லதனிற் கோட லதனொடு மயங்க**
**லதனொ டியைந்த வொருவினைக் கிளவி**
**யதனொ டியைந்த வேறுவினைக் கிளவி**
**யதனொ டியைந்த வொப்ப லொப்புரை**
**யின்னா னேது வீங்கென வரூஉ**
**மன்ன பிறவு மதன்பால வென்மனார்** (11)

---

* இளம்பூரணர் தவிர மற்றைய உரையாசிரியர் யாவரும் இச்சூத்திரத்தின் முதல் மூன்று வரிகளை ஒரு சூத்திர மாகவும், பின்னர் உள்ளவரிகளை ஒரு சூத்திரமாகவும், கொள்வர்.

மூன்று ஆகுவதே
ஒடு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினை முதல் கருவி அனைமுதற்று அதுவே.
அதனின் இயறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனின் ஆதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி
அதனொடு இயைந்த வேறுவினைக் கிளவி
அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை
இன்ஆன் ஏது ஈங்குகளன வருஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.) (11)

ஆ. மொ.

இல.

The third one is the case which is
named as 'Odu' which has agent
or instrument as basis.

The learned say that it operates on that which
serves as material cause, that to
which it fits,
that by which something is done,
that by which one flourishes, that by
which something is got, that
with which something is mixed,
that which acts with
another in company, that which acts
with another which is inactive,
that to which something unsuitable is
compared and that which is having 'in'
and 'an' to denote causes.

க. சு.

The third
is the case which is named - oṭu.
It denotes the agent or instrument of action.
They say that the case denotes
the object that serves as material cause,

the object that serves as an appropriate cause,
that by which something is done,
that by which something happens,
that by which something is obtained,
that with which something is mixed,
that which acts with another in company,
that which does not act with another in company,
that to which something unsuitable is compared,
that which has-iṉ and aṉ to denote cause,
and other similar things.

பி. இ. நூ.

வீர. 40

புறமகமாம் கரணம்.

நேமி. 42

ஆன் ஒடு மூன்றாவது தான் வினை முதலும்
ஏனைக் கருவியுமாம் ஈங்கு

நன். 297

மூன்றா வதன்உருபு ஆல் ஆன் ஒடு ஒடு
கருவி கருத்தா உடன்நிகழ்வு அதன் பொருள்.

இல. 200

ஷை ஷை

பிர. 12

கண்ணிய கர்லை அகம்புற மாகும் கரணங்களே.

இ. கொ : 33, 34, 35

அகம்புறம் ஒற்றுமை ஆகும் கருவி
முதல்துணை ஞாபகம் காரகம் ஏது
வினையே நிமித்தம் வேற்றுமை வினைமுதல்
காலம் ஆதிகளை இம்மூன்றனுள் கருதுவர்
கருவியை இன்னும் கழறிற் பெருகும்
கருவி கருத்தா உடனிகழ் வன்றியும்
மூன்றாம் உருபுகள் தோன்றும் பலவினும்

தொன். 58

மூன்றா வதனுருபு ஆல் ஆன் ஒடு ஒடு
கருவி கருத்தா உடனிகழ் வதன் பொருள்.

**முத்து.** பெ. 57, 58

ஆல் ஆன் ஒடுஒடு மூன்றன துருபே
கருவி உடன்நிகழ்வு கருத்தா அதன்பொருள்.

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், முறையானே மூன்றாம் வேற்றுமை யுணர்த்துதல் நுதலிற்று.

உரை : மூன்றாம் எண்ணு முறைமைக்கண்ணது ஒடு என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல் ; அது வினை முதலும் கருவியும் என இரண்டினையும் தனக்குப் பொருளாக வுடையது, எ-று.

வரலாறு : நாயாற்கோட்பட்டான் என்பது வினைமுதல் பற்றி வந்தது. வேலால் எறிந்தான் என்பது கருவி பற்றி வந்தது.

இனி, அவ்வினைமுதலும் கருவியும் பற்றி வருமாற்றை விரிக்கின்றார்:-

அதனினியறல் : தச்சன் செய்த [1]சிறுமாவையம் (குறுந் 61) இது தச்சனாற் செய்யப்பட்டது என்பதாம்.

அதற்றகு கிளவி : [2]வாயாற்றக்கது வாய்ச்சி என்பது
அதன் வினைப்படுதல் : நாயாற்கோட்பட்டான் என்பது
அதனின் ஆதல் : வாணிகத்தான் ஆயினான் என்பது
அதனிற் கோடல் : [3]காணத்தாற் கொண்ட அரிசி என்பது
அதனொடு மயங்கல் : எள்ளொடு விராஅய அரிசி என்பது

அதனொடு இயைந்த ஒரு வினைக் கிளவி : சாத்தனொடு வந்தான் கொற்றன் என்பது.

அதனொடு இயைந்த வேறு வினைக் கிளவி : மலையொடு பொருத மாஅல் யானை என்பது

---

1. சிறுமாவையம் = தேர்.
2. வாயால் தக்கது வாய்ச்சி : வாயால் தகுதிப்பாடுடையது சொல், வாய்க் கூர்மையால் தகுதிப்பாடுடையது வாய்ச்சி (= மரம் செதுக்கும் கோடாரி)
3. காணம்—காசு, கொள்ளு எனும் பயறு. பண்டமாற்று நிலையில் காணத்தால் கொண்ட அரிசி என்க.

அதனொடு இயைந்த ஒப்புஅல் ஒப்பு உரை: முத்தொடு முழாக்கோத்து என்பது. ஒவ்வாததனை[4] ஒப்பித்தல் ஒப்பல் ஒப்புரை.

[6]இன்னான் என்புழியும், ஏது வினைக்கண்ணும் வரும் மூன்றாம் வேற்றுமை. இன்னான் என்பது, கண்ணாற்[5] கொத்தை, காலான் முடவன் என்பன. ஏது என்பதுமுயற்சியான் பிறத்தலான் சொல்லு நிலையாது என்பது.

அன்ன பிறவும் என்றதனால் பிறவும் வருவன எல்லாம் கொள்க.

சேனா.

("மூன்றாகுவதே...அனைமுதற்றதுவே")

இ-ள்: மேல் ஒடு எனப் பெயர் கொடுத்தோதிய வேற்றுமைச் சொல் மூன்றாவதாம். அது வினைமுதலும் கருவியுமாகிய இரண்டு முதலையும் பொருளாகவுடைத்து, எ—று.

[1]மேல் ஐ ஒடு கு வ் வென்றோதியவழி ஆன் உருபுந் தழுவப் பட்டமையான், ஈண்டும் அவ்வாறே கொள்ளப்படும். படவே, மூன்றாவதாதலும், வினைமுதல் கருவிப் பொருட்டாதலும் ஆன் உருபிற்கும் எய்தும்.

வினைமுதலாவது கருவி முதலாயின காரணங்களைத் தொழிற்படுத்துவது. கருவியாவது வினைமுதற் றொழிற் பயனைச் செயப்படு பொருட்கண் உய்ப்பது.

அனை என்பது அத்தன்மையவாகிய [2]முதல் என அவற்றது இலக்கணத்திற்குத் [3]தோற்றுவாய் செய்தவாறு.

[4]முதல் என்பதற்கு மேலே யுரைத்தாம்.

உ-ம்: கொடியொடு[5]துவக்குண்டான், ஊசியொடு [6]குயின்ற தூசும்பட்டும் எனவும்; அகத்தியனால் தமிழ் உரைக்கப்பட்டது, வேலான் எறிந்தான் எனவும் வரும்.

---

4. ஒப்பித்தல்—சேர்த்தல்
5. கொத்தை—குருடு 6. இன்னான்—இத்தன்மையன்
1. சூ. 3. 2. முதல்—காரணம் 3. தோற்றுவாய் = தோன்றுமிடம்.
4. சூ. 11-ல் 5. துவக்குண்டான் = கட்டப்பட்டான்
6. குயின்ற—தைக்கப்பட்ட

[7]பிற பொருளும் உளவேனும் வினை முதல் கருவி சிறந்தமையான் 'வினை முதல் கருவி யனை முதற்று' என்றார்.

[8]வினை முதல் கருவிக்கண் ஒடு என் உருபு இக்காலத்து அருகியல்லது வாராது.

உ-ம்: அதனின் இயறல்: மண்ணான் இயன்ற குடம் என்பது மண் முதற் காரணம். முதற் காரணம் என்பது காரியத்தோடு ஒற்றுமையுடையது.

அதன் தகுகிளவி: வாயாற் றக்கது வாய்ச்சி. அறிவான் அமைந்த சான்றோர் என்பன. இவை கருவிப் பாற்படும்.

அதன் வினைப்படுதல்: சாத்தனான் முடியும் இக்கருமம் என்பது. இது வினைமுதற் பாற்படும்.

அதனின் ஆதல்: வாணிகத்தான் ஆயினான் என்பது.

அதனின் கோடல்: காணத்தாற் கொண்டவரிசி என்பது. இவையும் கருவிப் பாற்படும்.

இவையைந்து பொருளும் ஒடு உருபிற்குஞ் சிறுபான்மையுரிய வாயினும் பெரும்பான்மை பற்றி [9]ஆன் உருபிற்கேயுரிய போலக் கூறினார்.

அதனொடு மயங்கல்: *எண்ணொடு விராஅய வரிசி என்பது.

அதனொடு இயைந்த ஒரு வினைக் கிளவி: ஆசிரியனொடு வந்த மாணாக்கன் என்பது. வருதல் தொழில் இருவர்க்கும் ஒத்தலின் ஒருவினைக் கிளவியாயிற்று.

அதனொடு இயைந்த வேறு வினைக் கிளவி: மலையொடு பொருத மால் யானை என்பது. பொருதல் யானைக் கல்லது இன்மையின் வேறு வினைக் கிளவியாயிற்று.

அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை: பொன்னொ டிரும்பு அனையர் நின்னொடு பிறரே என்பது. [10]ஒப்பல்லதனை ஒப்பாகக்

7. பிறபொருள் = உடனிகழ்ச்சி, ஏதுப்பொருள்கள்
8. தொல்காப்பியர் காலத்துப் பெருக வழங்கியதாகும். (''அதனினியறல்......அதன்பால என்மனார்'')
9. அதனின் என்பதற்கு அதனான் என்பது பொருள். எனவே அதனின் என்பது ஆன் உருபிற்குரியதாயிற்று.
10. பொன்னும் இரும்பும் மனிதர்க்கு ஒப்பாகாதன. 11

* எண் — எள்

கூறலின் ஒப்பல் ஒப்புரையாயிற்று. இம்மூன்றற்கும் உடன் நிகழ்தல் பொது என்பதூஉம் அவை ஒடு என் உருபிற்கேயுரிய என்பதூஉம் உணர்த்திய, அதனொடு இயைதல் [11]மூன்றற்கும் கூறினார். அதனொடு மயங்கற்கும் ஈது ஒக்கும்.

எல்லாப் பொருட்கண்ணும் அது வென்றது உருபு ஏற்கும் பெயர்ப் பொருளை. அதற்கு வினையுடைமையின் (சொல். 76) என்பதற்கும் ஈது ஒக்கும்.

[11]இன்னான் ஏது என்பது முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது என்பது. அதனின் ஆதல் [12]காரக ஏது முற்கூறப்பட்டமையான் இது[13] ஞாபக ஏதுவாம். இப்பொருள் ஆன் உருபிற்கும் இன் உருபிற்கும் உரித்து என்பது விளக்கிய ஏது என்னாது இன்னான் ஏது என்றார். இன்னான் என்பது உம்மைத் தொகை; அவற்றது ஏதுப் பொருண்மை என்றவாறு.

[14]என என்பதனை மாற்றி ஏது என்பதன் பின்கொடுத்து' 'ஈங்கு வரூஉம் அன்ன பிறவும்' என இயைக்க. ஈங்ஙனம் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

---

11. அதனொ டியைந்த ஒரு வினைக் கிளவி, அதனொடியைந்த வேறு வினைக் கிளவி, அதனொடியைந்த ஒப்பல் ஒப்புரை என்பன மூன்று
11. இன்னான் ஏது என்பது பற்றி கருத்து விளக்கங்களை உரையிறுதியில் காண்க.
12. காரகம்—தொழிலைச் செய்விப்பது; வெளிப்படையாகத் தெரியும் தொழில் பற்றியது. வாணிகத்தான் ஆயினான் என்பதில் ஆக்கத்திற்குக் காரணம் வாணிகத் தொழில் என்பது வெளிப்படையாகத் தெரிதல் காண்க.
13. ஞாபகம்—அறிவு—அறிவாற் பெறவைப்பது. முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது என்பதில் ஒலித்தோற்றத்துக்கு முயற்சி காரணம்என்பதும் அது நிலையாமைக்குப் ''பிறந்தது அழியும்'' என்னும் கோட்பாடு உண்மையறிந்த அறிவு காரணம் என்பதும் அறிவால் உணரப் படுதலும் காண்க
14. இன்னான் ஏது என இங்கு வரூஉம் அன்ன பிறவும் என இயைக்க.

[16]அதனின் இயறல் என்பதற்குத் 'தச்சன் செய்த சிறுமாவை யும்' என்றும், இன்னான் என்பதற்குக் 'கண்ணாற் கொத்தை, காலான் முடவன்' என்றும் உதாரணம் காட்டினாரால் உரை யாசிரியர் எனின், அற்றன்று; தச்சன் செய்த சிறுமாவையம் என்பது 'வினைமுதல் கருவி யனை முதற்று' (சொல் 73) என்புழி யடங்கு மாதலான் ஈண்டும் பாற்படுக்க வேண்டாமையானும், சினை விகாரத்தை முதன்மேல் ஏற்றிக்கூறும் பொருண்மை இன்னான் என்பதனாற் பெறப்படாமையானும் அது போலியுரை யென்க,

[16]ஒடுவும் ஆனும் இரண்டு வேற்றுமையாகற்பால எனின், அற்றன்று. வேற்றுமை மயக்கமாவது ஒரு வேற்றுமையது ஒரு பொருட்கண்ணாக சில பொருட்கண்ணாக ஏனைவேற்றுமையுஞ் சேறலன்றே? அவ்வாறன்றிச் சிறிது ஒழித்து எல்லாப் பொருட் கண்ணும் இரண்டுருபுஞ் சேறலானும், வட நூலுள் பொருள் வேற்றுமையல்லது உருபு வேற்றுமையான் ஒரு வேற்றுமையாக ஓதப்படாமையானும் ஈண்டெல்லா ஆசிரியரும் ஒரு வேற்றுமை யாகவே ஓதினார் என்க,

[17]வடநூலொடு *மாறுகொளக்கூறாமைக் கூறல் ஆசிரியர்க்கு மேற்கோளாயின் விளிவேற்றுமையை எழுவாய் வேற்றுமைக்கண் அடக்கற் பாலராவர்; அவ்வாறு அடக்கல் இலர் எனின், அற்றன்று; விளிவேற்றுமையை எழுவாய் வேற்றுமைக்கண் அடக்கல் ஆண்டு எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததன்று,

ஏழியல் முறையது எதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரம் என்று
ஓதிய புலவனும் உளன்ஒரு வகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்

---

15. இப்பகுதிக்கு உரையிறுதியில் சுந்தரமூர்த்தி விளக்கம் காண்க.

* மாறுகொள்ளாமைக் கூறல்—பாடம்

17. ''வடநூலுள் பொருள் வேற்றுமை...ஓதப்படாமை யானும்'' என்று கூறியதால் ஆசிரியர்க்கு வடநூலுள் மாறுகொள்ளாமை கருத்தாகும் என்பது பெறப்படு தலின் இவ்வினாவிடை எழுதப்பட்டன. வடமொழிக்கு முதன்மை கொடுத்தவர் சேனாவரையராதலின் இவ் வாறு எழுதினார். உரையிறுதியில் பி. கு. பார்க்க.

என்பகவாகலின், ஐந்திர நூலார் விளிவேற்றுமையை எட்டாம் வேற்றுமையாக நேர்ந்தார் என்பது பெறப்படும். ஆசிரியர் அவர் மதம் பற்றிக் கூறினாராகலின் அதனொடு மாறுகொள்ளாது என்பது. இக்கருத்து விளக்கியவன்றே, பாயிரத்துள் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனக் கூறிற் றென்க.

அன்னபிறவும் என்றதனால், கண்ணாற் கொத்தை, தூங்கு கையான் ஓங்கு நடைய (புறம். 22) மதியோடொக்கும் முகம், சூலொடு கழுதை பாரஞ்சுமந்தது என்பன போல்வன கொள்க.

நெய்.

("மூன்றாகுவதே......அனை முதற்றதுவே")

மூன்றாம் வேற்றுமை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மூன்றாம் வேற்றுமையாவது ஒடு வெனப் பெயர் பெற்ற வேற்றுமைச்சொல். அது வினை முதலும் கருவியும் ஆகிய அவ்விரண்டு காரகத்தையும் உடைத்து எ-று.

ஈண்டு முதல் என்பது காரகம். கருத்தாவின் கண்ணும், கருவியின் கண்ணும் வரும் என்றவாறு. கொடியொடு[1] தொடக் குண்டான்: இதுவினை முதல். ஊசியொடு குயின்ற தூசும்பட்டும்: இது கருவி.

("அதனினியறல்...அதன்பால என்மனார்")

இதுவும் மூன்றாம் வேற்றுமைக் குரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அதனினியறல் முதலாக ஒப்பல் ஒப்புரை ஈறாக எடுத் தோதப்பட்ட சொல்லினான் வரும் பொருண்மையும், இன் ஆன் ஏது என இவ்விடத்து வரும் அத்தன்மைய பிற சொற்களும் மூன்றாம் வேற்றுமைப் பாலன, எ-று.

அதனின் இயறலாவது, இயலப்படுவதற்குக் காரணமாகிய பொருள்மேல் உதாரண வாய்பாட்டான் வந்தது.[2] மண்ணினான் இயன்ற குடம், அரிசியானாய சோறு

1. தொடக்குண்டான் = கட்டுண்டான்.
2. இயலப்படுவது குடம், அதற்குக் காரணம் மண். அதன் மேல் உருபு மண்ணான்.

[3]அதற்றகு கிளவியாவது, அதனாற் றகுதியை யுடைத்தாயிற் றென்னும் பொருண்மை தோன்ற வருவது. கண்ணான் நல்லன், குணத்தான் நல்லன், நிறத்தான் நல்லன் என உறுப்பும் பண்பும் பற்றி வருவன.

அதன் வினைப் படுதலாவது, ஒன்றன் தொழில்மேல் வருதல். புலிபாய்தலாற்பட்டான், [4]ஓட்டாற் கடிது குதிரை என்பன.

அதனின் ஆதலாவது, ஆக்கத்திற்கு ஏதுவாகி வருவது. வாணிகத்தின் ஆயினான், எருப் பெய்து இளங்களை கட்டமை யாற் பைங்கூழ் நல்ல வாயின.

அதனிற் கோடலாவது, ஒன்றனானே ஒன்றைக் கோடல். காணத்தாற் கொண்ட அரிசி.

அதனொடு மயங்கலாவது, ஒன்றோ டொன்று விரவி வருதல். பாலொடு கலந்த நீர்.

அதனொடு இயைந்த ஒரு வினைக் கிளவியாவது, ஒரு வினை யான் இரு பொருள் முடிவது. படையொடு வந்தான் அரசன்.

அதனொடு இயைந்த வேறு வினைக் கிளவியாவது, வேறு வினையுடையன இரண்டு சொல் ஒரு வினையொடு தொடர்வது. [4]காவோடு அறக்குளம் தொட்டான்.

[5]அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரையாவது, உவமையின்றி இதுவும் அதுவும் ஒக்கும் என அளவினாலும் நிறையினாலும் எண்ணினாலும் வருவன. இதனொடு ஒக்கும் இது, இக்கூற்றோ டொக்கும் இக்*கூற்று.

[6]இன் என்பது இன் என்னும் சொல். ஆன் என்பது ஆன் என்னும் சொல். ஏது என்பது ஏது என்னும் சொல். அன்ன பிற

---

3. அதன்தகு—அதன் தகுதி—தகுதியாவது நன்மை.
4. ஓட்டு = ஓட்டம்.
4. கா—சோலை. இது அமைத்தான் என வருவது; குளம் தொட்டான் என வருவது. எனவே இருவேறு வினை களையுடைய இவை காவோடு குளம் தொட்டான் என ஒன்றன் வினையால் வந்தன.
5. மற்றையோர் உரையின் மாறுபட்டது இது.
6. இப்பகுதி மற்றவர் கொள்ளாதது.
* கூறு (பாடம்)

வாவன: காரணம் நிமித்தம் துணை மாறு என்பன. இவையும் மூன்றாம் வேற்றுமைப் பொருளுணர்த்தும் உருபுகளும் பொருள் உணர்த்தும் சொற்களுமாம் என்றவாறு. புகையுண்மையின் நெருப்புண்மையறிக, புகையேதுவாக நெருப்புண்மையறிக, புகை காரணமாக நெருப்புண்மையறிக, புகை நிமித்தமாக நெருப்புண்மையறிக, சுக்கிரீவன் துணையாக இலங்கை கொண்டான், ''அனையை[8]யாகன் மாறே மன்னுயிர் எல்லாம் நின்னஞ்சும்மே'' (புறம்.20)

இன்னும் அன்ன பிறவும் என்றதனான் ஓடு, ஆல் என வரும் உருபும் கொள்க.

''என்னோ டிருப்பினும் இருக்க் இளங்கொடி
தன்னோ டெடுப்பினும் தகைக்குநர் இல்'' (மணிமேகலை. சிறைவிடுகாதை 35, 36)

''கணிகொண்டலர்ந்த நறவேங்கை யோடும் கமழ்கின்ற காந்தளிதழால்
அணிகொண்ட'' (சூளாமணி—அரசியல் 167) என்புழி

ஓடு வந்தது. ஆன் வந்துழியெல்லாம் ஆல் வருதல் [9]வழக்கினிற் கண்டு கொள்க.

நச்.

(''மூன்றாகுவதே......அனைமுதற்றதுவே'')

இது முறையானே மூன்றாவது இப்பொருட்கண் வரும் என்கின்றது.

இ-ள்: ஒடு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி மூன்று ஆகுவதே—மேல் ஒடு எனப் பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச் சொல் மூன்றாவதாம். அது வினைமுதல் கருவி அனை முதற்று—அது வினைமுதலும் கருவியுமாகிய அவ்விரண்டு காரணத்தையும் பொருளாக வுடைத்து, எ-று.

---

7. மாறு இஃது இடைச் சொல்; ஆகலான் என்னும் பொருளில் ஆன் என்பதற்கு வருவது.
8. ஆகன் மாறு—ஆகலான்
9. வழக்கு—பிற்கால வழக்காகக் கொள்க. இக்காலத்தில் ஆன் அருகியும் ஆல் பெருகியும் வழங்கும்.

மேல் 'அதனின் இயறல்' முதலியன ஆன் உருபிற்கு ஏற்ப உடம்பொடு புணர்த்துச் சூத்திரஞ் செய்தலின், அவற்றிற்கு முற்கொண்ட ஒடு என்பதற்கும் ஆல் என்பதற்கும் வினைமுதல் கருவி கொள்க, ஆன் ஆலாய்த் திரிந்தும் நிற்கும்.

வினைமுதல் கருத்தா என்பன ஒன்று. கருத்தா நின்று தன்னை யொழிந்த கருவி முதலிய காரணங்கள் ஏழனையும் காரியத்தின்கண் நிகழ்த்துதலின், அதனை வினைமுதல் என்றார்.

இஃது இயற்றும் வினைமுதலும் ஏவும் வினை முதலும் என இருவகைப்படும். கொடியொடு துவக்குண்டான் என்பது இயற்றும் வினைமுதல். அது' கொடி தன்னொடு துவக்குதலைச் செம்யப்பட்டான் சாத்தன்' என்னும் பொருட்டு. கொடியினது நிகழ்ச்சி ஈண்டுக்கருவி. கொடி சாத்தனைத் தொழில் உறுவிக்குங்கால் தான் அவனை நீங்கா உடன்நிகழ்ச்சியை விளக்கிற்று ஒடு என் உருபு. அரசனால் இயற்றப்பட்ட தேவகுலம் என்பது ஏவும் வினைமுதல்.

இனி, 'கருவி காரணம் ஏது நிமித்தம் என்பன தம்முள் வேறுபாடு உடையவேனும் ஒத்த *பொருளன. அக்காரணம் முதற்காரணம் துணைக் காரணமும் என இருவகைப்படும். முதற்காரணமாவது காரியத்தோடு ஒற்றுமையுடையது. துணைக்காரணமாவது அம்முதற் காரணத்திற்குத் துணையாகிய வினை முதலிய எட்டும். அக்கருவியாவது வினை முதற்றொழிற் பயனைச் செயப்படு பொருட்கண் உய்ப்பது. அதுவும் இயற்றுதற் கருவியாகிய காரகக் கருவியும், அறிதற் கருவியாகிய ஞாபகக் கருவியும் என இருவகைப்படும். ஊசியொடு குயின்ற தூசும் பட்டும் என்பது காரகக் கருவி. அஃது ஊசிகொண்டு சாத்தன் குயிலுதலைச் செய்யப்பட்ட தூசும் பட்டும் என்னும் பொருட்டு. சாத்தன் தொழிற் பயனை ஊசி தூசிலும் பட்டிலும் நிகழ்த்திற்று. இது துணைக் காரணம்.

மண்ணான் இயன்றகுடம்: முதற்காரணம். இதுவும் காரகக் கருவி.

உணர்வினான் உணர்ந்தான், புகையினான் எரியுள்ளது உணர்ந்தான்: இவை ஞாபகக் கருவி. இவற்றிற்கு உணர்வு முதற்

---

* பாடம்: பொருட்டு. (பொருளன என்பதே நன்று. பன்மையாதலின்)

காரணம். காரகமாவது தொழிலை இயற்றுவிப்பது; ஞாபக மாவது அறிவிப்பது.

இனி ஆல்: அகத்தியனால் தமிழ் உரைக்கப்பட்டது. வேலால் எறிந்தான் எனவும், ஒடு,

"உலகத்தோ டொட்ட ஒழுகல்' (குறள். 140)
"காவோ டறக்குளம் தொட்டானும்" (திரிகடுகம். 70)
"நாவீற்றிருந்த புலமா மகளோடு நன்பொற
பூவீற்றிருந்த திருமாமகள்" (சீவக. 30)

எனவும் வரும்.

'இது நனிபயக்கும் இதனான் என்னும்' இஃது ஆன் வந்தது.

("அதனினியறல்...அதன் பால என்மனார்")

இஃது அதனை முடிக்கவரும் பொருள் வேறுபாடு கூறுகின்றது.

இ-ள் : அதனின் இயறல்—ஒன்றான் ஒன்று பண்ணப்படுதல் என்னும் பொருண்மை, அதற்கு கிளவி—ஒன்றினான் ஒன்று தகுதல் என்னும் பொருண்மை, அதன் வினைப்படுதல்—ஒன்றனான் ஒன்று தொழிலுறுதல் என்னும் பொருண்மை, அதனின் ஆதல்-ஒன்றனான் ஒன்று ஆதல் என்னும் பொருண்மை, அதனிற்கோடல்—ஒன்றனான் ஒன்றைக் கோடல் என்னும் பொருண்மை, அதனொடு மயங்கல்—ஒன்றனோடு ஒன்று மயங்குதல் என்னும் பொருண்மை, அதனொடு இயைந்த ஒரு வினைக் கிளவி—ஒன்றனோடு ஒன்று இயைந்த ஒரு வினையாகல் என்னும் பொருண்மை. அதனோடியைந்த வேறுவினைக் கிளவி-ஒன்றனோடு ஒன்று இயைந்த வேறு வினையாகல் என்னும் பொருண்மை, அதனோடியைந்த ஒப்பல் ஒப்புரை—ஒன்றனோடு ஒன்று இயைந்த ஒப்பு அல்லாத ஒப்பினை யுரைத்தல் என்னும் பொருண்மை, இன் ஆன் ஏது—இன்னும் ஆனும் ஆகிய ஏதுப் பொருண்மை, எனா வரூஉம்—என்று சொல்லப்பட்டு வரும் பத்தும், ஈங்கு வரூஉம் அன்ன பிறவும்—வினை முதலும் கருவியு மாகிய பொருளிடத்து வரும் அவைபோல்வனபிறபொருள்களும், அதன்பால என்மனார்—அம் மூன்றாவதன் கூற்றன என்று கூறுவர் புலவர் : எ-று.

உ-ம் : மண்ணான் இயன்ற குடம், வாயான் தக்கது வாய்ச்சி, அறிவான் அமைந்த சான்றோர், இவை கருவி. நாயாற்கோட் பட்டான், சாத்தனான் முடியும் இக்கருமம்: இவை வினை முதல்.

வாணிகத்தான் ஆயினான், காணத்தாற் கொண்ட அரிசி. இவை கருவி ; ஆன் உருபான் வந்தன.

எண்ணொடு விராய அரிசி, ஆசிரியனொடு வந்த மாணாக்கன், மலையொடு பொருத மாஅல் யானை (மலைக்கு வினையின்மையின் இது வேறு வினையாயிற்று)

பொன்னொடு இரும்பு அனையர் நின்னொடு பிறரே (பொன்னொடு இரும்பை உவமித்தலை ஒப்பார் நின்னோடு பிறரை யுவக்குமிடத்து என்றவாறு)—இவை வினை முதல். ஒடு உருபான் வந்தன.

முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது—இதனுள் முயற்சியின் என்பது காரகவேது. பிறத்தலான் ஒலி நிலையாது என்பது ஞாபக வேது. ஐந்தாவதற்குரிய ஏதுவும் ஈண்டு ஓதினது ஏதுவை வரையறுத்தற்கு.

அன்ன பிறவும் என்றதனால் கண்ணாற் கொத்தை ; இது சினை வினை முதற்கு ஏறியது.

''உறழ் மணியான் உயர் மருப்பின'' (புறம். 22)
''பெண்டகையாற் பேரமர்க் கட்டு'' (குறள். 1083)

இவை ஆன் ஒடுவாயின.

''மனத்தொடு வாய்மை மொழியின்'' (குறள் 295) ஓடு ஆன் ஆயிற்று.

மதியொடு ஒக்கும் முகம்ः இஃது ஒப்பு

சூலொடு கழுதை பாரஞ் சுமந்தது. இது கட்புலனாகா ஒரு வினை ஒடு. இவை முதலாயின கொள்க. இவற்றின் வேறுபாடு உய்த்து உணர்க.

கல்.

என்னுதலிற்றோ வெனின், மேல் நிறுத்த முறையானே மூன்றாம் வேற்றுமை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

பொருள்ः மூன்றாம் எண்ணுமுறைக்கண்ணதாகிய ஒடு என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல் வினைமுதல் கருவியாகிய காரணங்களை யுடைத்து அஃது வருமாற்றைச் சொல்லின், ஒன்றனால் ஒன்று பண்ணப்படும் பொருண்மை,

ஒன்றனால் ஒன்று தகுதல் என்னும் பொருண்மை, ஒன்றனால் ஒன்று தொழிலுறுதல் என்னும் பொருண்மை, ஒன்றனால் ஒன்று ஆதல் என்னும் பொருண்மை, ஒன்றனான் ஒன்றைக் கோடல் என்னும் பொருண்மை, ஒன்றனோ டொன்று மயங்கல் என்னும் பொருண்மை, ஒன்றனோ டொன்றியைந்து ஒரு வினை யாதல் என்னும் பொருண்மை, ஒன்றனோடொன்றியைந்துவேறு வினையாதல் என்னும் பொருண்மை, ஒன்றனோடொன்றியைந்து ஒப்பல்லா ஒப்பினை யுரைத்தல் என்னும் பொருண்மை, இத் தன்மையான் என்னும் பொருண்மை, ஏதுப் பொருண்மை என்னும் இவையும், இப்பெற்றியானே இதனிடத்து வருகின்ற அத்தன்மையான பிற பொருள்களும் அம்மூன்றாவதன் கூற்றன என்று சொல்வர் புலவர், எ-று.

மூன்றாவதற்குருபு ஒடுவும் ஆனும் என இருவகைத்து. ஆன் என்பது எடுத்தோதிற்றிலர் எனினும் 'அதனினியறல் அதற்றகு கிளவி' என ஓதிய வாய்பாட்டாற் பெறுதும் என்பது.

வினை முதல் கருவி யென்றோதிய பொருண்மை இவ் விரண்டுருபிற்கும் ஒக்கும் என்பது.

உ-ம்: வினை முதல்; கொடியொடு துவக்குண்டான், நாயாற் கோட்பட்டான் கருவி: ஊசியொடு குயின்ற தூசும் பட்டும், வேலான் எறிந்தான் என வரும்.

[1]அதனின் இயறல்: தச்சன் செய்த சிறுமாவையம் என்பது.

அதற்றகு கிளவி: வாயாற்றக்கது வாய்ச்சி என்பது.

அதன் வினைப் படுதல்: நாயாற் கோட்பட்டான், சாத்த னான் முடியும் இக்‡காரியம் என்பன.

அதனின் ஆதல்: வாணிகத்தான் ஆயினான் என்பது.

அதனிற் கோடல்: காணத்தாற் கொண்ட அரிசி என்பது.

அதனொடு மயங்கல்: எண்ணொடு விராய அரிசி என்பது.

அதனொடுடியைந்த ஒரு வினைக் கிளவி: சாத்தனொடு வந்தான் என்பது.

---

1. இளம்பூரணரைத் தழுவியது.

‡ கருமம் (பாடம்)

அதனொடியைந்த வேறுவினைக் கிளவி: மலையொடு பொருத மால்யானை என்பது. காவொடு அறக்குளந் தொட்டல் என்பது. வேறு வினை என்பது ஒன்றன் கண்ணே வினையாதல்.

[2]அதனொ டியைந்த ஒப்பல் ஒப்புரை: நூலொடு நார் இயைந்தது போலும், முத்தொடு முழாக் கோத்தது போலும் என்பன.

[3]இன்னான் என்பது இத்தன்மையான் என ஒருவன் பெற்றி கூறல். அஃது கண்ணாற் கொத்தை, காலான் முடவன் என்பன. ஏது: முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது என்பது.

அதனின் இயறல் முதலாக அதனிற் கோடல் ஈறாக ஓதிய பொருண்மையெல்லாம் சூத்திரத்துள் ஆன் உருபின் சுவடுபட ஓதினமையின் பெரும்பான்மை ஆனுருபிற்கே யுரியவாம்; சிறுபான்மை †ஒடு உருபிற்கும் வருவனவுளவேற் கொள்க.

இவற்றுள் அதனின் இயறல், அதன் வினைப்படுதல் என்றோதிய இரண்டும் வினைமுதற்பாகுபாடு. அதனிற் கோடல் கருவியின் பாகுபாடு போலும். அதற்றகு கிளவியும், அதனா னாதலும் ஏதுவின் பாகுபாடு. அதனொடு மயங்கல் முதலாக அதனொடியைந்த ஒப்பல் ஒப்புரை யீறாக ஓதின எல்லாம் ஒடு உருபு கொடுத்தோதினமையின் பெரும்பான்மையும் ஒடு வுருபிற்கேயுரிய; சிறுபான்மை ஆன் உருபிற்கும் வருவனவுளவேற் கொள்க.

இன்னான் என்னும் பொருண்மையும், ஏதுவென்னும் பொருண்மையும் [4]ஓர் உருபின் எடுத்தோதாமையின் வழக்கிற் கேற்றவாறு கொள்ளப்படும்.

---

2. இளம்பூரணரைத் தழுவியது
3. இளம்பூரணர் கருத்து
† 'பெரும்பான்மை; ஒடுவுருபிற்கும்' என்பது உரைக் கோவையிற் காணப்படுவது
4. இன்னானின் ஏதுவின் என ஆன் உருபின் பொருள் படவோ இன்னானொடு ஏதுவொடு என ஒடுஉருபு சேர்த்தோ ஓதாமையின்

[5]முன்னும் ஏதுவின் பாகுபாடு ஓதிவைத்தும் பின்னும் ஏது வென ஓதியது, அவ்வாறொழிய வருவனவற்றைக் கருதிப் போலும். அவ் ஏது காரக ஏதுவும், ஞாபக ஏதுவும் என இருவகைத்து. முயற்சியிற் பிறத்தல் காரகம். பிறத்தலான் இசை நிலையாது என்பது ஞாபகம். அஞ்ஞாபகத்தைப் போலும் ஈண்டு ஏது என ஓதியது. அன்ன பிறவும் என்றது சூத்திரத்துள் எடுத்தோதின பாகுபாட்டின் ஒழிந்தனவும் பிற பொருட்பாடுங் கருதிப்போலும். அவையெல்லாம் வந்தவழிக் கண்டுகொள்க.

ஒரு.

(மூன்றாகுவதே...அனைமுதற் றதுவே)

என்பது மேல் ஒடு எனப்பெயர் கொடுத்தோதிய வேற்றுமைச் சொல் மூன்றாவதாம்;அது வினைமுதலும் கருவியுமாகிய இரண்டு காரணத்தையும்பொருளாகவுடைத்து மேல் தன்னிலை முதலியன ஆன் உருபிற்கேற்ப உடம்பொடு புணர்த்துச் சூத்திரஞ்செய்தலின் அவற்றிற்கு முன்னர்க்கொண்ட ஒடு என்பதற்கும் ஆன் என்ப தற்கும் வினைமுதல் கருவி கொள்க.

[6]ஆன் ஆலாய்த் திரிந்து நிற்கும். வினைமுதல் கருத்தா என்ற லும் ஒன்று. கருத்தா நின்று தன்னை யொழிந்த கருவி முதலிய காரணங்கள் ஏழனையும் காரியத்தின்கண் நிகழ்த்துவது வினை முதல்; அது இயற்றும் வினை முதலும் ஏவும் வினை முதலும் என இருவகைப்படும்.

உ-ம்: கொடியொடு துவக்குண்டான் என்பது இயற்றும் வினை முதல். அது கொடி தன்னோடு தொடக்குறவைச் செயப் பட்டான் சாத்தன் என்னும் பொருட்டு. கொடியினது நிகழ்ச்சி யீண்டு கருவி. கொடி சாத்தனைத் தொழில் உறுவிக்குங்கால் தான் அவனை நீங்காவுடன் நிகழ்ச்சியை விளக்கிற்று. ஒடு என் உருபு. அரசனால் இயற்றப்பட்ட தேவகுலம் என்பதும் வினை முதல்.

---

5. அதனினியறல், அதனினாதல், அதனிற்கோடல் என முன்னர்க் கூறப்பட்டனவும் ஏதுவையே குறிக்கப் பின்னரும் ஏது எனத் தனித்துக் கூறியது ஏன் எனின் அவற்றுள் அடங்காது ஒழிந்து வருவனவற்றைக் கருதிப் போலும்.
6. இவ்வுரையாசிரியர் மிகப் பிற்காலத்தவர் என்பதற்கு இஃதோர் சான்று.

இனிக்கருவி, காரணம், ஏது, நிமித்தம் என்பன தம்முள் வேறுபாடுடைய வேனும் ஒத்த பொருட்டு. அக்காரணம் முதற்காரணமும் துணைக்காரணமும் என இருவகைப்படும். முதற்காரணமாவது காரியத்தோடு ஒற்றுமையுடையது. துணைக்காரணமாவது அம்முதற்காரணத்திற்குத் துணையாகிய வினை முதலிய எட்டும். கருவியாவது வினைமுதற் றொழிற்பயனைச் செயப்படுபொருட்கண் உய்ப்பது. அதுவும் இயற்றுதற்குக் கருவியாகிய காரணக் கருவியும் ஞாபகக் கருவியும் என இருவகைப்படும். ஊசியொடு குயின்ற தூசும் பட்டும் என்பது காரகக்கருவி. அது ஊசி கொண்டு சாத்தன் குயிலுதலைச் செய்யப்பட்ட தூசும் பட்டும் என்னும் பொருட்டு. சாத்தன் தொழிற் பயனை ஊசி, தூசிலும் பட்டிலும் நிகழ்த்தியது. மண்ணான் இயன்ற குடம் என்பது முதற்காரணம். இதுவும் காரகக் கருவி.

உணர்வினான் உணராதான், புகையினால் எரியுள்ளது உணர்ந்தான் இவை ஞாபகக் கருவி. இவற்றிற்கு உணர்வு முதற் காரணம்.

காரகமாவது தொழிலை இயற்றுவிப்பது. ஞாபகமாவது அறிவிப்பது.

இனிஆன்: அகத்தியனான் தமிழ் உரைக்கப்பட்டது; வேலான் எறிந்தான் எனவரும்.

வினைமுதல் கருவிக்கண் ஒடு என் உருபு இக்காலத்து அருகியல்லது வாராது.

ஒடு: ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல்'' (குறள் 140)

''காவோடு அறக்குளந் தொட்டானும்'' (திரிகடுகம் 40)

''நாவீற்றிருந்த புலமா மகளோடு நன்பொன்
பூவீற்றிருந்த'' (சிவக 30)

எனவும் வரும்.

(''அதனின் இயறல்...அதன்பால என்மனார்'')

உ-ம்: அதனின் இயறல் மண்ணான் இயன்ற குடம்.

அதற்கு கிளவி: வாயால் தக்கது வாய்ச்சி, அறிவான் அமைந்த சான்றோர்—இவை கருவிப்படும்.

அதன் வினைப் படுதல்: நாயால் கோட்பட்டான், சாத்தனான் முடியும் இக்கருமம்—இவை வினைமுதற் பாற்படும்.

அதனின் ஆதல் என்பது வாணிகத்தான் ஆயினான்.

அதனிற்கோடல்: காணாத்தாற் கொண்ட அரிசி—இவையும் கருவிப்பாற்படும்.

இவையைந்து பொருளும் 'ஒடு' உருபிற்கும் சிறுபான்மை உரியவாயினும், பெரும்பான்மை பற்றி 'ஆன்' உருபிற்கே உரிய போலக் கூறினார்.

அதனொடு மயங்கல்: எள்ளொடு விராய அரிசி

அதனொடு இயைந்த ஒரு வினைக்கிளவி: ஆசிரியனொடு வந்தான் மாணாக்கன்; வருதல் தொழில் இருவர்க்கும் ஒத்தலின் ஒருவினைக் கிளவியாயிற்று.

அதனொடு இயைந்த வேறுவினைக் கிளவி: மலையொடு பொருத மால் யானை; மலைக்கு வினையின்மையின் இது வேறு வினைக் கிளவியாயிற்று.

அதனொடு இயைந்த ஒப்பு அல் ஒப்புரை: பொன்னொடு இரும்பு அனையர் நின்னொடு பிறர்; ஒப்பில்லதனை ஒப்பாகக் கூறுதலின் ஒப்பல் ஒப்புரையாயிற்று.

இந்நான்கற்கும் உடன் நிகழ்தல் தொழில் பொது என்ப தூஉம், அவை ஒடுஎனும் உருபிற்கேயுரிய என்பதூஉம் உணர்த்திய அதனோடியைதல் நான்கற்கும் கூறினார்.

இன்னான்ஏது: இன்னும் ஆனும் ஏதுவின்கண் வரும். முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது, தவத்தாற் பெற்றான் வீடு. அதனின் ஆதல் எனக் காரகஏது முன் கூறப்பட்டமையான் இது ஞாபக ஏதுவாம்.

ஐந்தாவதற்குரிய இன் உருபு ஈண்டுச் சொல்லியது இன்னும் ஆனும் ஏதுப் பொருண்மைக்கு உரியன என்று வரையறை செய்தற் பொருட்டு. இன்னான் என்பது உம்மைத் தொகை.

இன்னான் என்பது, கண்ணாற் கொத்தை அவன், காலான் முடவன் அவன் என்றுமாம், சினை வினை முதற்கேறியவாறு.

என என்பதனை மாற்றி, ஏது என்பதன்பின் கொடுத்து இங்கு வரூஉம் அன்ன பிறவும் என அமைக்க.

'உறழ் மணியான் உயர் மருப்பின'
'பெண்டகையாற் பேரமர்க் கட்டு'

இவை ஆன் ஒடு உருபாயிற்று.

'மனத்தொடு வாய்மை மொழியின்'
இது ஒடு ஆன் ஆயிற்று.
அன்ன பிறவும் என்றதனால்,
'தூங்கு கையான் ஓங்கு நடைய'
'மதியொடு ஒக்கும் முகம்'
'சூலொடு கழுதை பாரஞ் சுமந்தது'
இது கட்புலன் ஆகா ஒருவினை ஒடு என்று அறிக.

ஆதி.

("மூன்றாகுவதே......அனை முதற் றதுவே")

ஒடு எனப் பெயர் கொண்ட உருபு மூன்றாம் வேற்றுமையாகும். அது வினைக்கு முதல் ஆகிய கருத்தா கருவியாகிய துணைப் பொருள் இவற்றை முதலாகக் கொண்டது.

முதற்று—சிறப்பாகவுடையது. ஒடு தற்காலத்தில் ஓடு என நீண்டு வருகின்றது.

அவளோடு எல்லாம் போம்—முதற்பொருள்
செழியனோடு தேவியும் இறந்தான்—முதற்பொருள்
பாம்பொடு பழகேல்—கருவிப் பொருள்
வீணையோடு வந்தாள்—கருவிப் பொருள்

ஒடு—ஓடு இச்சொற்கள் உடனிகழ்ச்சிப் பொருள் காட்டி நிற்பன. ஆயின் பிற்காலத்தில் ஆல் ஆன் உருபுகளையும் மூன்றாம் வேற்றுமையிற் சேர்த்தனர். அதன் பொருளும் 'கருவி கருத்தா வுடனிகழ்ச்சி' ஆயிற்று. கருவி முதல் கருவி, துணைக் கருவி என இரண்டாகவும், கருத்தா ஏவுதற் கருத்தா, இயற்று தற்கருத்தா என இரண்டாகவும் வகுத்தனர்.

மண்ணாற் செய்த குடம்—மண் முதற்கருவி
சக்கரத்தால் செய்யப்பட்ட குடம்—சக்கரம் துணைக்கருவி.
அரசனாற் கட்டப்பட்ட மனை—அரசன் ஏவுதற்கருத்தா.

கொத்தனால் கட்டப்பட்ட மனை—கொத்தன் இயற்றுதல் கருத்தா. இன்னும் இதற்கு மேலும் பலப்பல பாரிப்பார்.

ஆய்வு: தொல் ஆசிரியர் ஒடு மட்டும் மூன்றாம் உருபாகக் காட்டி, கருத்தா கருவி என இரு பொருளில் வருவதாகக் கூறினார். ஆயின், ஒடு உருபு உடனிகழ்ச்சிப் பொருளாகச் சிறந்து நிற்கிறது. கருவி கருத்தாவாகவும் பொருள் பெற வகையாகிறது.

பிந்தியோர் ஆன் ஆல் ஒடு ஓடு என உருபு காட்டிக் கருவி கருத்தா உடனிகழ்ச்சியெனப் பொருள் கூறினர். இது அறிவு தெளிவுக்கு ஒவ்வாது எவ்வாறு? ஆல், ஒடு கருவி கருத்தா உடனிகழ்ச்சி. இவை வெவ்வேறு பொருள்கள்.

வாளால் வெட்டினான்—வாள் ஒரு கருவி. அதனால், வெட்டினான் என்பதை வாளொடு வெட்டினான் என்று கூற லாகாது. வாளொடு வந்தான் எனின் உடனிகழ்ச்சிப் பொருளே ஆங்கு உள்ளது. (தொல். ஆசிரியர் கருத்துப்படி இது கருவி) பின்னவர்கள் கருவியும் உடனிகழ்ச்சியும் ஒன்றாக மூன்றாம் வேற்றுமையாக்கக் காரணம் என்னை? வடமொழி முறையே.

| வேற்றுமை: தமிழில் | வடமொழியில் |
|---|---|
| ராமனால் | ராம்ஸே |
| ராமனொடு | ராம்ஸே |
| ராமனின் | ராம்ஸே |

ஆல் ஆன் ஒடு ஒடு இன் நின்று இவற்றுக்கெல்லாம் வட மொழி உருபு 'ஸே' என்பதாம். வெவ்வேறு பொருள்தரும் ஆல் உருபு ஒடு உருபு இரண்டையும் ஒன்றாக்கி மூன்றாம் வேற்றுமை ஆக்கியுள்ளார்கள்.

இது தவறு. ஒன்று செய்திருக்கலாம்—ஆல் ஆன் உருபுகளை ஐந்தாம் வேற்றுமையுடன் இணைத்திருக்கலாம். ஏன்? அவற்றுள் பொருள் ஒற்றுமையுண்டு.

ஏரின் உழார் உழவர்—ஏரால் உழார் உழவர். கல்வியிற் பெரியவர் கம்பர், கல்வியாற் பெரியர் கம்பர், கொடையில் சிறந்தோர், கொடையாற் சிறந்தோர், சொல்லிற்சுடுவேன் சொல்லினாற் சுடுவேன், பென்சிலில் எழுதுகிறான் பென்சிலால் எழுதுகிறேன். நாவிற் சுட்டவடு நவினாற் சுட்டவடு;

இவ்வாறு ஆல் உருபு தரும் பொருளை இன்உருபு தருகிறது. நாம் உருபு மயக்கமாகக் கொள்கிறோம். இரண்டனையும் இணைத்தால் வேற்றுமைப் பொருள்—நீங்கல் ஒப்பு எல்லை கருவி கருத்தா ஆதியாகும்.

இவ்வாறன்றி உடனிகழ்ச்சியையும் கருவியையும் இணைத் திருப்பது முற்றும் ஒவ்வாது.

வேற்றுமை—உருபு அல்லது பொருளைக் கொண்டு கணிக்கப் பெறல் வேண்டும்.

("அதனின் இயறல்......அதன்பால என்மனார்")

இவ்வாறு 10 பொருளில் வருவதாகப் பாரித்து உரைக்கிறார்.

மண்ணால் செய்த குடம்
அறிவால் வந்த பேருரை
உடல் உறுதியால் வென்றார்
அரிசியால் செய்த உப்புமா
கயிற்றால் பிணிக்கப் பட்டான்
சூதினால் கெட்டான்
அரிசியோடு மஞ்சள் பூக்கலந்தார்
மலையோடு யானை மோதியது
தேவரோடு ஒப்பர் கயவர்
விலங்கொடு மக்கள் —கல்லாரோடு கற்றார்
முயற்சியிற் கிடைத்த வெற்றி
பேசலால் மட்டும் வெற்றி கிட்டாது

குறிப்பு: இங்குக் குறிக்கப்பட்ட ஆல்உருபு யாவும் இன்ன நின்று பொருள்தரமுடியும் ஆதலின் தொல் ஆசிரியர் முறைப்படி ஒடு ஓடு மூன்றாம் வேற்றுமையாகக் கொண்டு, ஆல் ஆன் ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபாசக் கோடலே நேர்மையாகும். அஃதின்றேல் தனி ஒரு வேற்றுமை காண்டல் வேண்டும். இன் ஆன் ஏது. ஏதுப்பொருள் ஐந்தாம் வேற்றுமை. ஆன்சொல்லுருபு.

சிவ.

**அதனின் இயறல்**

அதனின் இயறல் என்பதற்குத் 'தச்சன்செய்த சிறுமாவையம்' என உதாரணம் காட்டினர் இளம்பூரணர். தச்சனான் செய்யப் பட்ட தேர் என்பது அதன்பொருள். அவரைச் சார்ந்து கல்லாட னாரும் காட்டினர். சேனாவரையர் அதனை மறுத்தார். "மூன்றாம் வேற்றுமைப் பொருளாக வினைமுதல் கருவி ஆகிய இரண்டு கூறப்பட்டனவற்றுள் தச்சனால் செய்யப்பட்ட வையம் என்பது வினைமுதலில் அடங்கும். அதையே திரும்பவும் அதன் பகுதியிற் சேர்த்தல் வேண்டுவதின்று." (இயற்றும் வினைமுதல் ஏவும் வினைமுதல் இரண்டும் வினைமுதல் என்பதில் அடங்கும். தச்சன் இயற்றும் வினைமுதல். அதனால் முதலில் உள்ள வினை முதல் என்பதில் அடங்கும்) என்னும் கருத்தில் மறுத்தார் அவர். அவரது நோக்கம். 'ஒவ்வொரு வேற்றுமைச் சூத்திரத்தும் முன்னர்க் கூறப்படும் பொருள்களில் வெளிப்படையாக அடக்க முடியாதவற்றை மட்டும் விவரித்து அவற்றை முன்னர்க் கூறிய

பொருள்களின் பாற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து ஆதலின் அதற்கேற்ப உரை வகுக்க வேண்டும்'' என்பதே.

'சாத்தனான் முடியும் இக்கருமம்' என்பதில் சாத்தன் ஏவுதற் கருத்தாவா இயற்றுதற் கருத்தாவா என்பது வெளிப்படவில்லை. அதனால் நேரே வினை முதற் பொருளில் சேர்க்க இயலவில்லை. அன்றியும் முடியும் என்பதால் செயல் நிகழ்ச்சியும் இல்லை, எனவே இதில் முடிப்பது சாத்தன் ஆதலால் வினை முதலிலேயே அடக்க வேண்டும். அதாவது வினை முதற்பாற் படுக்க வேண்டும். எனவே அதன் வினைப்படுதல் என்பதுக்கு அவ் வுதாரணம் காட்டப்படுவது வினைமுதற்பாற்படும்.

வாளான் வெட்டினான் என்பதில் கருவி வெளிப்படையாகத் தெரிவது. மண்ணான் இயன்ற குடம் என்பதில் மண் என்பது துணையாக அமையாமல் அதுவே குடமாக இயலுதலின் இது எதன்பாற் சார்த்தப்படும் என்ற கேள்விக்கு விடை கருவியின் பாற் சார்த்தப்படும் என்பதாகவின் அதனின் இயறல் என்பது கருவியின்பாற்படுக்கப்படுவதாம். இப்படிச் சேனாவரையர் கருதியதால்,

> ''அதனின் இயறல் என்பதற்குத் தச்சன் செய்த சிறுமா வையம் என்று......உதாரணம் காட்டினரால் உரையாசிரியர் எனின் அற்றன்று. தச்சன் செய்த சிறுமாவையம் என்பது வினைமுதல் கருவியனைமுதற்று என்புழி அடங்குமாதலான் ......அது போலியுரை என்க''

என்றார். இக்கூற்று பொருந்துவதே.

## அதனொடியைந்த ஒப்பல் ஒப்புரை

அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை: இதற்கு இளம் பூரணரும் கல்லாடனாரும் 'முத்தொடு முழாக் கோத்தது போலும்' என்பதை உதாரணமாகக் காட்டினர். வடிவாற் சிறியதும் பெரியதுமாய் இருக்கும் அவ்விரண்டையும் கோத்தல் என்பது பொருந்தாது. அவற்றைக் கோத்தது போலும் என வந்தமையின் ஒப்பில்லாதவற்றை ஒப்பித்ததாகக் கருதவேண்டும். அதாவது சேராதவற்றைச் சேர்ப்பித்ததாகக் கொள்ளவேண்டும். ஒப்பு என்பதற்கு உவமையெனக் கொள்ளாமல் சேர்த்தல் எனப் பொருள் கொண்டனர் அவ்விருவரும். 'பூவொடு நார் இயைந்தது

போலும்' எனக் கல்லாடனார் மேலும் ஓர் உதாரணம் இதற்குக் காட்டியதும் காண்க.

சேனாவரையர், நச்சினார்க்கினியர், ஒருவர் ஆகியோர் ஒப்புமையாகாதவற்றை ஒப்புமையாக்கிக் கூறுதல் எனக் கொண்டு "பொன்னொடிரும்பனையர் நின்னொடு பிறரே" என உதாரணம் காட்டினர். "பொன்னொடு இரும்பை உவமித்தலை ஒப்பார் நின்னொடு பிறரை உவமிக்குமிடத்து என்றவாறு" என நச்சினார்க்கினியர் அதன் பொருளும் எழுதினார். அப்பொருளினும் "பொன்னொடு நோக்க இரும்பு எவ்வளவு தாழ்ந்ததோ அவ்வளவு தாழ்ந்தவர் நின்னொடு நோக்கப் பிறர்" எனப் பொருள் கொள்வதே சிறக்கும்.* இப்பொருளால் பொன்னுக்கும் இரும்புக்கும் ஒப்புமை இதில் கூறப்படவில்லையென்பது புலப்படும். படவே ஒப்பல் ஒப்புரைக்கு அவ்வுதாரணம் பொருந்தாது என்பதும் புலப்படும்.

இனித் தெய்வச் சிலையார் "அதனொடியைந்த ஒப்பல் ஒப்புரையாவது: உவமையின்றி இதுவும் அதுவும் ஒக்கும் என அளவினாலும் நிறையினாலும் எண்ணினாலும் வருவன. இதனொடு ஒக்கும் இது, இக்கூற்றோடொக்கும் இக்கூறு" என்பர்.

ஒப்பு என்பதற்குச் சேர்த்தல் என்னும் பொருள் கொள்வதை விட ஒப்புமை என்றே பொருள்கொள்வது சிறக்கும். ஆதலின் இளம்பூரணர் காட்டிய உதாரணத்தினும் தெய்வச்சிலையார் காட்டிய உதாரணமே சிறக்கும் என்னலாம்.

### இன்னான் ஏது

இன்னான் ஏது என்பதை இன்னான், ஏது எனத் தனித்தனிப் பிரித்து ஒருவனைப்பற்றி இன்னதன்மையன் எனச் சொல்லுமிடத்தும், ஒன்றற்கு ஏதுகாட்டுமிடத்தும் மூன்றாம் வேற்றுமைப் பொருள் வரும் என்றார் இளம்பூரணர். உதாரணங்களாகக் கண்ணாற் கொத்தை, காலான் முடவன் என்பனவற்றையும், முயற்சியிற் பிறத்தலால் சொல் நிலையாது என்பதையும் காட்டினர். கல்லாடனாரும் இவர் கருத்தினரே.

---

* "விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்" என்னும் குறளுக்குப் பரிமேலழகர் உரை காண்க.

சேனாவரையர், "தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமை ஏதுப்பொருளில் வரும்எனக் கூறவந்தவர் அவ்வேதுப் பொருளில் மூன்றாம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையுமாகிய இரண்டும் வரும் என்பதைத் தெரிவிக்கவேண்டி 'ஏது' எனத் தனித்துக் கூறாமல் 'இன் ஆன் ஏது' என ஐந்தன் உருபையும் மூன்றன் உருபையும் இணைத்து ஏதுப் பொருளைக் கூறினார்." எனக் கொண்டு, ஏதுவுக்கு மட்டும் இளம்பூரணரோடு ஒத்து'முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது' என்பதை உதாரணமாகக் காட்டி னார். இவ்வுதாரணம் காட்டியதுகொண்டு இவரது கருத்து 'இன்னும், ஆனும் ஒரே தொடரில் அமையவேண்டும் என்ப தாகும்' எனக் கருதலாம். ஒலியின் பிறப்புக்கு முயற்சியும், அதன் நிலையாமைக்கு முயற்சியிற் பிறத்தலும் காரணமாக இயைந்துக் காணுதல் வேண்டும். நச்சினார்க்கினியர்க்கும் ஒருவர்க்கும், இன் னும் ஆனும் ஒரு தொடரிலேயே அமைய வேண்டும் என்னும் கருத்தில்லை என்பது அவர்கள் உதாரணங்கள் மூலம் அறியலாம். முயற்சியிற் பிறத்தலான் ஒலிநிலையாது என்பதை ஞாபக ஏது வுக்குரியதாகச் சேனாவரையர் கூறியதால், முயற்சியின்என்ற ஏது வும் பிறத்தலான் என்ற ஏதுவும் ஞாபக ஏதுக்கள் என்பது அவர் கருத்தென்னலாம். நச்சினார்க்கினியர் முயற்சியிற் பிறத்தல் என்பதைக் காரக ஏதுவாகவும் பிறத்தலான் என் பதை ஞாபக ஏதுவாகவும் கூறினார். இங்கே பேசப்படுவது ஆன் உருபின் ஏதுப் பொருண்மையாதலின் 'பிறத்தலான் நிலை யாது' என்பதை, மட்டில் உதாரணமாகக் கொண்டார். நச்சி னார்க்கினியர் என்னலாம். ஒருவரும், அவ்வுதாரணத்துடன் 'தவத்தாற் பெற்றான் வீடு' என ஆன் உருபுக்கு மட்டும் உதாரணம் ஒன்று உடன் காட்டினார்.

இனி இளம்பூரணர், இன்னான் என்பதற்குக் கண்ணாற் கொத்தை, காலான் முடவன் எனக்காட்டிய உதாரணங்கள் பொருந்தா எனச் சேனாவரையர் மறுத்தார். கண்ணாற் கொத்தை காலான் முடவன் என்பனவற்றில் சினைவிகாரங்கள் முதல்மேல் ஏற்றிச் சொல்லப்பட்டன. இன்னான் என்னும் சொல்லில் சினை விகாரம் முதல்மேல் ஏற்றிச் சொல்லப்படும் என்னும் பொருள் அமையவில்லை. ஆதலின் அவ்வுதாரணங்கள் அமையா என்றார். சுப்பிரமணிய சாஸ்திரியார் சேனாவரை யரைப் பின் வருமாறு மறுத்தார்.

> "சேனாவரையர் கூறியுள்ள பொருள் 'ஏது' என்ப தினாலேயே கிடைக்கும். இன்னான் என்பது வேண்டா. உரையாசிரியர் இன்னான் என்பதற்கு இவ்வாறுள்ளான் என்று பொருள் கொண்டு அதற்கு உதாரணமாகக்

கண்ணாற்கொத்தை, காலான் முடவன் என்னும் இவற்றைக் கூறியது பொருத்தமானதே. அன்ன பிறவும் என்பதனாற் கண்ணாற்கொத்தை முதலியவற்றை அடக்கிய சேனாவரையர், சூத்திரத்தினுள் 'இன்னான்' என்பதற்கு அவற்றை உதாரணமாகக் காட்டிய உரையாசிரியர் கொள்கையை மறுத்தது பொருந்துமா?''

என்பது அவர் கூற்று. அவரை மறுப்பது போலக் கணேசய்யர், ''அங்ஙனமாயின் ஐம்பாலும் அடங்குதற்கேற்ற ஒரு சொல்லாற் கூறாது ஒரு பாலாற் கூறுதல் சிறப்பாகுமா?'' என வினவுவர். ஒருபாற் சொல் மற்றைப் பாற் சொற்களைத் தழுவுதல் உண்மையின் அவ்வினா தேவையற்றது, இன்னான் என்ற மாத்திரையில் இன்னாள், இன்னார், இன்னது, இன்ன என்பனவும் தழுவப்படும் ஆதலின்.

இனித் தெய்வச் சிலையார் 'இன்னான் ஏது' என்பதற்கு இன் என்னும் சொல், ஆன் என்னும் சொல், ஏது என்னும் சொல் எனக் கொண்டு, புகையுண்மையின் நெருப்புண்மையறிக, புகையுண்மையான் நெருப்புண்மையறிக, புகையேதுவாக நெருப்புண்மையறிக என உதாரணம் காட்டினார். இவரைச் சுப்பிரமணிய சாஸ்திரியார், ''மூன்றாம் வேற்றுமைப் பொருளின் விரிவைக் கூறும் இச்சூத்திரத்தில் இவ்வாறு கூறுவது பொருத்தமன்று'' என்று மறுத்தார். இம்மறுப்பு பொருந்துவதே.

## கு. சுந்தரமூர்த்தி

சேனாவரையரின், ''ஓடுவும் ஆனும் இரண்டு'' என்பது முதல் ''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனக் கூறிற்றென்க'' என்பது வரையுள்ள பகுதிக்கு விளக்கம் கு. சுந்தரமூர்த்தியவர்கள் தெளிவாக எழுதியுள்ளமையின் அப்படியே தரப்படுகின்றது.

மூன்றாம் வேற்றுமைக்குரிய உருபு ஒடு என முன்னர்க் கூறப்படினும் இந்நூற்பாவால் 'ஆன்' என்பதும் உண்டு எனத் தெரிகின்றது. இங்ஙனம் இரண்டு உருபுகள் ஒரு வேற்றுமைக்கண் இருத்தலாகாது ; அங்ஙனம் ஈர் உருபுகள் இருப்பின் அவற்றை இரு வேற்றுமையாகவே கொள்ளல் வேண்டும் என ஒரு மாணாக்கண் சேனாவரையரிடத்துக் கேட்க, அதற்குள் இன்னொரு மாணாக்கன், இது வேற்றுமை மயக்கமாக இருக்கலாம் எனக்கூற, அதன் பின் சேனாவரையர் தரும் அமைதி

யாக இப்பகுதி அமைந்துள்ளது. ஆதலால்தான் 'ஒடுவும் ஆனும் இரண்டு வேற்றுமையாகற்பால எனின், அற்றன்று எனக் கூறியவர், உடனே 'வேற்றுமை மயக்கமாவது' யாதென விளக்கந் தருகின்றனர். இனி அவர் விளக்கம் வருமாறு :-

ஒடு ஆன் என்பனவற்றை ஒவ்வொரு வேற்றுமையாகக் கொண்டால், அவ்விரண்டு உருபுகளும் வேறு வேறு பொருளி லேயே வருதல் வேண்டும். ஆனால் இவ்விரு உருபுகளுமோ ஒரு பொருளிலேயே வருகின்றன. அதனால் இவ்விரு உருபுகளுள் யாதேனும் ஒன்றை இம் மூன்றாம் வேற்றுமைக் குரியதாக்கிப் பிறிதோர் உருபைப் பிறிதோர் வேற்றுமைக் குரியதாக்கி அது இதன்கண் வந்து மயங்குதலின் வேற்றுமை மயக்கமாயிற்று என்று கூறலாம் என்பது மாணாக்கன் நினைவு. இதற்குச் சேனாவரையர் இரண்டு விதமாக விடைதருகின்றார்.

(1) வேற்றுமை மயக்கமாவது. ஓர் உருபு ஒரு பொருளிலோ அன்றிச் சில பொருளிலோ வரினும் அவ்வுருபு ஏனைய வேற்று மைக் குரிய பொருளையும் உணர்த்தல் வேண்டும். ஆனால் இவ் வீருருபுகளும் பெரும்பாலும் ஓர் உருபு உணர்த்துகின்ற பொரு ளையே பிறிதோர் உருபும் உணர்த்துதலின் இது வேற்றுமை மயக்கம் இன்றாம்.

(2) ஒவ்வொரு உருபும் ஒவ்வொரு பொருளை உணர்த்தின், அவற்றை இரு வேற்றுமையாகக் கொள்ளலாமேயன்றி ஈருருபு களும் சேர்ந்து ஒரு பொருளையே யுணர்த்தின், அவற்றை இரண்டு வேற்றுமையாகக் கொள்ளுதல் வடமொழியிலும் இல்லை.

இங்ஙனம் சேனாவரையர் கூறவே பிறிதொரு மாணாக்கன் எழுந்து, வடமொழியில் பொருள் வேற்றுமை கருதியல்லது உருபு வேற்றுமை கருதி ஒவ்வொரு வேற்றுமையாகக் கூறாராயினும், தமிழ் நூலில் அங்ஙனம் கூறினால் இழுக்கென்னை என்று வின வினன். அதற்குச் சேனாவரையர், தொல்காப்பியருக்கு வட நூலொடு மாறு கொள்ளாது கூறலே கருத்தாதலின், உருபு வேற்றுமை கருதி ஒவ்வொரு வேற்றுமையாகக் கொள்ள வில்லை என்றனர்.

அதனைக் கேட்ட மாணாக்கன் வடநூலொடு மாறு கொள்ளாமைக் கூறலே ஆசிரியருக்குக் கருத்தாயின், விளி வேற்றுமையையும் எழுவாய் வேற்றுமைக்கண் அடக்கி வேற்றுமை ஏழ் என்றே கொண்டிருப்பர். அங்ஙனம் அடக்காது

எட்டென்று கூறியிருத்தலே வடநூலொடு மாறுபடவும் நூல் செய்தல் ஆசிரியர்க்குக் கருத்தெனத் தோன்றுகிறது என்று கூறினன். அதற்கு இறுதியாகச் சேனாவரையர் விடை தந்தனர். அது வருமாறு;—

வடமொழியின்கண் விளிவேற்றுமையை எழுவாய் வேற்றுமைக்கண் அடக்கி வேற்றுமை ஏழ் என்று கூறுபவரும் உண்டு. அதன்கண் அடக்காது வேற்றுமை எட்டு என்பாரும் உண்டு. இவற்றுள் முன்னைய கருத்தைச் சேர்ந்தவர் பிருகற்பதி. பின்னைய கருத்தைச் சேர்ந்தவர் ஐந்திர நூலார். தொல்காப்பியர், ஐந்திர நூலார் கொள்கையைத் தழுவி வேற்றுமை எட்டென்றாராகலின் வடநூலொடு மாறு கொண்டு தொல்காப்பியர் நூல் செய்தார் என்றல் பொருந்தாதாம். இவ்வைந்திர நூலைத் தழுவி ஆசிரியர் நூல் செய்திருத்தல் பற்றியே பாயிரத்துள் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனக் கூறப்பட்டுள்ளது என்றார்.

பி. கு.

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்றதற்குச் சிவஞான முனிவர் கூறுவது:

"அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன் என்னாது ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்றது என்னையெனின், அகத்தியம் நிறைந்தமை எல்லாரானும் தெளியப்பட்டமையின் வடமொழியிலும் வல்லனாயினான் என்பது விளக்கிய அங்ஙனம் கூறினார் என்பது. இவ்வாறன்றி ஐந்திரத்தின் வழித்தோன்றிய நூல் என்பது விளக்கிய 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்றார் என்பாரை, ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனவே ஐந்திரம் முதல் நூல் என்பது அமைந்திருப்ப 'முந்துநூல் கண்டு' எனக் கூறியது எற்றுக்கெனக் கூறி மறுக்க."—பாயிர விருத்தி.

தொல்காப்பியர் தம் முன்னோர் கூற்றாக 'வேற்றுமை தாமே ஏழென மொழிப' என்றும், தம்கொள்கையாக 'விளி கொள்வதன்கண் விளியொ டெட்டே' என்றும் கூறினார். ஆதலின் வடமொழி நூல்பார்த்துக் கூறியதாகக்கொள்வது பொருந்தாது. தொல்காப்பியம் காலம் அறியப்படாதது. தொல்காப்பியத்தையும் அதன் முன்னூல்களையும் பார்த்தே வடமொழியிலக்கணங்கள் தோன்றின். ஏன் எனின் அவை காலக் கணிப்புக்குரியன.

## தே. ஆண்டியப்பன்

வினைமுதல் எப்போதும் உயிருள்ள பொருளாக அமையும். சிலபோது காற்று கிளையை ஒடித்தது; காற்றால் கிளை ஒடிந்தது என இயற்கையாற்றலையும் வினை முதலாக எடுத்துக் கொள்வதுண்டு. கருவி எப்படியும் அமையலாம்.

இன்னான் என்பதை இன். ஆன் என்னும் உருபுகளாகக் கருது வாரும் உண்டு. ஆனால் பொருள் பற்றிய பாகுபாட்டில் உருபு பற்றிய செய்திகளைத் தந்தார் என்று கூறலாமா?

ஐவரொடு சினைஇ, நீரொடு நிறைந்த கண், கடுங்காலொடு கரைசேர, அம்பொடு துளங்கின, நம்மொடு நீங்க, பொழுதொடு கரப்ப, நெஞ்சமொடு நினைந்து எனவரும் வழக்குகளையும் இலக்கியத்தில் காணலாம்*

## செ. வை. சண்முகம்

"வினை முதல் என்பது...செயப்பாட்டு வினைவாக்கியத்தில் வரும் வேற்றுமைத் தொடராகும். அது புதை நிலையில் எழு வாயாக அமைந்திருக்கும். கருவி என்பது தான் (வாளான் வெட்டி னான்) புதை நிலையிலும் மூன்றாம் வேற்றுமை ஏற்று வரும். எனவே, வினை முதலும் கருவியும் புதைநிலையில் வேறு படுவ தால்தான் தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமையை இரண் டாகப் பிரித்தார்.

மேலும் புறநிலையில் அமைந்துள்ள வாக்கியமும் பண்பில் மாறுபடுதலைக் காணலாம், வினை முதலாக வருவதை எழு வாயாக மாற்றினால் செயப்படு பொருள் வினைமுற்று செய் வினை முற்றாகும் (அகத்தியனால் தமிழ் உரைக்கப்பட்டது— அகத்தியன் தமிழ் உரைத்தான்) கருவியாக வருவதை எழுவாயாக மாற்றினால் வினையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது (கத்தி யால் வெட்டினான்—கத்தி வெட்டியது)"

*பின்வருவன அவர் எழுதியவற்றின் சுருக்கம்:*

உடனிகழ்ச்சியாக வரும் வாக்கியம் உம்மை விரிவாக்கியத்தி லிருந்து (Conjunctive co-ordinate Sentences) வேறுபட்டது.

---

* சில பொருளுக்கேற்றவாறு ஆன் உருபின் பொருளில் வருதலைக் காண்க.

உம்மை விரிவாக்கியத்தில் இரண்டு பெயரும் தனித்தனியே வினையை ஏற்றுவரும்.

சாத்தனும் கொற்றனும் வந்தனர். இது உம்மை விரிவாக்கியம். இது சாத்தன் வந்தான் கொற்றன் வந்தான் என்னும் இரண்டு வாக்கியங்களின் சேர்க்கை. ஆசிரியனொடு மாணாக்கன் வந்தான். இது ஆசிரியன் வந்தான் மாணாக்கன் வந்தான் என இரண்டு வாக்கியத்தின் சேர்க்கை போலக் காணப்பட்டாலும் ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் வந்தான் என்ற ஒருமை வினை தான் உண்டு. சாத்தனும் கொற்றனும் வந்தார் என்பதில் வந்தார் எனப் பன்மை வினையுண்டு. அதனால் அப்பன்மை வினையைச் சாத்தன் வந்தான் கொற்றன் வந்தான் என முடிக்கலாம். எனவே உடனிகழ்ச்சியை உம்மை விரிவாக்கியத்தின் வேறுபட்டது என்ன வேண்டும்.

அதனொடு மயங்கல், அதனோ டியைந்த ஒரு வினைக்கிளவி, அதனொடியைந்த வேறுவினைக் கிளவி, அதனொடியைந்த ஒப்பல் ஒப்புரை என்னும் நான்கும் ஒடு உருபினவாயினும் அதனொடியைந்த ஒரு வினைக் கிளவியே உடனிகழ்ச்சிப் பொருளதாகும் என்று கூறிய அவர், மேலும் கூறியதாவது :—

''அதனொடு மயங்கல்' என்ற வாய்பாட்டில், உயிரில் பொருளைக் குறிக்கும் பெயர்ச்சொல் மட்டுமே வந்து புதைநிலையில் மயங்குதல் (கலத்தல்) என்ற பொருளைக் குறிக்கும் வினை மட்டுமே அமைந்திருக்கும். பாலொடு தேன் கலந்தது என்பது இதற்கு உதாரணமாகும். இதைப் 'பாலில் தேன் கலந்தது' என்று ஏழாம் வேற்றுமையிலும் கூற முடியும். உடனிகழ்ச்சியில் வரும் ஒடு உருபிற்குப் பதிலாக ஏழாம் வேற்றுமையுருபைப் பெய்தால் சரியான வாக்கியமாகக் கருத முடியாது. (ஆசிரியனில் மாணவன் வந்தான்) எனவே அதனொடு மயங்கலும் உடனிகழ்ச்சியும் வெவ்வேறு அடிப்படையை உடையனவாகக் கருத வேண்டும்.''

அதனொடிறைந்த வேறு வினைக் கிளவி என்பதற்குச் சேனாவரையர் 'மலையொடு பொருத மால்யானை' என்ற உதாரணத்தைக் காட்டி 'மலைக்கு வினையின்மையின் இது வேறுவினையாயிற்று' என்று விளக்கியுள்ளார். அதாவது எழுவாயாக வருகிற பெயர்ச் சொல்லே தொழிற் பட்டும் மற்ற பெயர்ச்சொல் தொழிலற்றும் இருக்கும். இங்கு வருகிற எழுவாய் தொழிற்படுவதால் அது உயிருள்ள பொருளைக் குறிக்கும் சொல்லாக (animate

nouns) எப்போதும் இருக்கும்‡. எனவே அதனொடு மயங்கல் வாக்கியத்யிலிருந்து இது மாறுபட்டிருக்க வேண்டும்.

"தொல்காப்பியர் 'இன்னான் ஏது' என்று ஒரு வகையைக் குறிப்பதாலும், "மூன்றினும் ஐந்தினும் தோன்றக் கூறிய ஆக்கமொடு புணர்ந்த ஏதுக்கிளவி" என்று வேற்றுமை மயங்கியலிற் குறிப்பதாலும் மூன்றாம் வேற்றுமை ஏதுப் பொருளில்வரும் என்பது புலப்படும். 'வாணிகத்தான் ஆயினான்', 'முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது' போன்ற உதாரணங் களை உரையாசிரியர்கள் தருவர். வாணிகத்தின் ஆயினான் என்பது ஒரு தனி வாக்கியம் போலத் தோன்றினும் இது ஒரு கூட்டு வாக்கியத்தின் சுருக்கமே என்ற கருத்து குறிப்பிடத் தக்கது. தொல்காப்பியரும் இக்கருத்தினர் என்பது வேறு சில நூற்பாக்களால் தெளிவாகிறது. ஆக்கம் என்பது செயற்கை யாக வருவது என்பதைச் "செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்" என்பதாலும், அவ்வாக்கச் சொல்லிற்குக் காரணக் கிளவி முதலாகவுடையது என்பதை அடுத்த நூற்பாவாலும் குறிப்பிட்டுள்ளார். எனவே, 'வாணிகத்தான் ஆயினான்' என்பது, 'வாணிகத்தான் செல்வன் ஆயினான்' என்று பொருள்படும். இவ்வாக்கியமும் கூட்டு வாக்கியத்திலிருந்து பிறந்தது என்பது 'வாணிகம் செய்ததால் செல்வன் ஆயினான்' என்ற வாக்கியமும் அதே பொருளைத் தருவதால் உணரலாம். எனவே 'வாணிகத் தான் ஆயினான்' என்பது, 'வாணிகம் செய்ததால் செல்வன் ஆயினான்' என்பதிலிருந்து உண்டாயிருக்க வேண்டும். தொழிற் பெயர் கெடும்போது அது ஏற்றிருக்கும் வேற்றுமையுருபு அத் தொழிற்பெயர் வாக்கியத்தில் (வாணிகம் செய்ததால்) வரும் எழுவாயோடு சேருவது வழக்கம். இதே முறையில்தான் வாணி கத்தான் செல்வன் ஆயினான்→ வாணிகத்தான் ஆயினான் என்று உண்டாயிருக்க வேண்டும். எனவே, ஏது வாக்கியம் கூட்டுவாக் கியம் என்பது தெளிவு." (தொல்காப்பிய மொழியியல், பக் 296)

---

$ அதனொடு மயங்கல் வாக்கியத்தில் எழுவாய் உயிரில் லாத பொருட் சொல்லாகவே இருக்கும் என்பது கருத்துப் போலும். அவர்களோடு கலந்தான் என்பதைக் காணின் அது ஆய்வுக்குரியதாகும் — சிவ.

நான்காம் வேற்றுமையும் பொருளும்

*74. நான்கா குவதே
குவ்வெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யெப்பொரு ளாயினுங் [1]கொள்ளு மதுவே
யதற்குவினை யுடைமையி னதற்குடம் படுதலி
னதற்குப் படுபொருளி னதுவாகு கிளவியி
னதற்கியாப் புடைமையி னதற்பொருட் டாதலி
னட்பிற் பகையிற் காதலிற் சிறப்பினென்
றப்பொருட் கிளவியு மதன்பால வென்மனார் (12)

[நான்கு ஆகுவதே
குஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொருள் ஆயினும் கொள்ளும் அதுவே
அதற்குவினை உடைமையின் அதற்கு உடம்படுதலின்
அதற்குப் படுபொருளின் அது ஆகு கிளவியின்
அதற்கு யாப்பு உடைமையின் அதற் பொருட்டு ஆதலின்
நட்பின் பகையின் காதலின் சிறப்பின்என்று
அப்பொருட் கிளவியும் அதன்பால என்மனார்.]

ஆ மொ:
இல.

The fourth one is the ease which is named as 'ku' which serves to receive anything.
The learned say that for which some action takes place, that to which someone agrees, that which is apportioned to somebody, that which is transformed, that which is suitable to somebody, that for which something is done, and to express friendship, enmity, love and greatness-these and such others belong to this case.

---

* இச்சூத்திரத்தின் முதல் மூன்று வரிகளை ஒரு சூத்திரமாகவும், பின்னர் உள்ள வரிகளை ஒரு சூத்திரமாகவும் கொள்வர் இளம்பூரணரைத் தவிர மற்றையுரையாசிரியர்.

1. பாடம்=கொள்ளுமற்றதுவே

க. சு.

The fourth is the ease which is named-ku. What ever substance it may be, it (denotes) receiving.
They say that the ease denotes the object for which an action is done, that to which one subjects himself, that to which something is apportioned, that which is transformed, that which is suitable to something, that for which something is done, and to express friendship, enmity, love and greatness and so on.

பி. இ. நூ.

வீர. 40.

சீரணங்கு ஆர்வங் கிடப்பு இரப்பாங் கோளி
தேமொழியே

நேமி. 43.

ஓதுங் குகரவுருபு நான்காவது அஃது
யாதிடத்தும் ஈபொருளை ஏற்குமாம்.

நன் 298.

நான்கா வதற்குருபு ஆகும் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியின் இதற்கிதெனல் பொருளே.

இல. 201.

ஷை ஷை

பிர. 13.

பெடைமயிலே அறிரா கருத்தாவும் பிரேரகமும்
கொடையெதிர் கூற்ற நுமந்தாவுமாம் என்பர்
கொள்பவனே.

இ. கொ : 36, 37, 55

கேளாது ஏற்றல் கேட்டே ஏற்றல்
ஏலாது ஏற்றல் ஈவோன் ஏற்றல்
உயர்ந்தோன் ஏற்றல் இழிந்தோன் ஏற்றல்
ஒப்போன் ஏற்றல் உணர்வின்று ஏற்றல்
விருப்பாய் ஏற்றல் வெறுப்பாய் ஏற்றல்
ஆதியாப் பலவும் அறைந்தனர் கொள்வோன்.
கொள்வோனை இன்னும் கூறிற் பெருகும்.
கொள்வோனை விட்டுக் குப்பல பொருளாம்.

**தொன்.** 59

நன்னூல் 298 ஆம் சூத்திரமே.

**முத்து. பெ.** 59, 60

குவ்வே நான்கனது உருபாகும்மே.
கொடைபகை சிறப்புக் காதல் தகுதி
அதுவாதல் முறைபொருட்டு அதன் பயனிலையே

**இளம்**

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், முறையானே நான்காம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

உரை: நான்காம் எண்ணு முறைக்கண்ணது 'கு' என்னும் பெயரையுடைய வேற்றுமைக் கிளவி, ஈவதோர் பொருளை யேற்க நிற்கும் அதுவே என்பது.

வரலாறு: சாத்தற்குச் சோறு என வரும். 'எப்பொருளாயினும்' என்றார் மூன்றிடத்துப் பன்மை நோக்கி.

அதற்கு வினையுடைமை: [1]கரும்பிற்கு வேலி என்பது.

[2]அதற்குடம்படுதல்: சாத்தற்கு [3]மகள் உடம்பட்டார் சான்றோர் என்பது.

[4]அதற்குப் படுபொருள்: சாத்தற்குப் படுபொருள் கொற்றன் என்பது.

அதுவாகு கிளவி: [5]கடிசூத்திரத்திற்குப் பொன் என்பது.

[6]அதற்கியாப்புடைமை: கைக்கியாப்புடையது கடகம் என்பது.

அதன் பொருட்டாதல்: கூழுக்குக் குற்றேவல் செய்யும் என்பது.

நட்பு: நாய்க்கு நட்புடையான் என்பது.
பகை: மக்கட்குப் பகை பாம்பு என்பது,
காதல்: தாய்க்குக் காதலன் என்பது.
சிறப்பு: வடுகரரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர் என்பது.

---

1. கரும்புக்கு வேலி காவல் வினையுடையது. தெய்வச்சிலையார் உரை பார்க்க.
3. மகளை மணமுடிக்க உடம்பட்டார்.
5. கடிசூத்திரம்—அரைஞாண்.
2. சேனாவரையர் உரை பார்க்க.
4. தெய்வச்சிலையார் உரை மாறுபாடு காண்க.
6. யாப்பு—வலி என்பர் தெய்வச்சிலையார்-பார்க்க

[6]'அப்பொருட்கிளவி' என்பது ஈண்டு ஏற்ற பொருளல்லனவும் வேற்றுமைக்கு உரிமை காட்டுவான் சொல்லினான் என்பது. ஏற்ற பொருண்மை விதந்து கூறினான் என்பது, சிறப்பு நோக்கி.

பிறவும் அதன்பாலஆவன : பண்ணுக்குத் தக்கது பாடல், பூவிற்குத் தக்கது வண்டு என்பன போல்வன.

'இன்' எல்லாம் சாரியை.

சேனா.

("நான்காகுவதே...கொள்ளும் அதுவே") :

இ-ள் : மேல் 'கு' எனப் பெயர் கொடுத்தோதப்பட்ட வேற்றுமைச் சொல் நான்காவதாம். அது யாதானும் ஒரு பொருளாயினும் அதனை யேற்று நிற்கும், எ-று.

உ-ம் : அந்தணற்கு ஆவைக் கொடுத்தான் என வரும்.

மாணாக்கற்கு நூற்பொருள் உரைத்தான் எனக் கொடைப் பொருளவாகிய சொல்லானன்றிப் பிற வாய்பாட்டாற் கூறப் படுவனவும், மாணாக்கற்கு அறிவு கொடுத்தான் எனக் கொடுப்பான் பொருளாய்க் கொள்வான் கட்செல்லாது ஆண்டுத் தோன்றும் பொருளும் எல்லாம் அடங்குதற்கு 'எப்பொருளாயினும்' என்றார்.

[1]பிற பொருளும் உளவாயினும், கோடற்பொருள் சிறந்தமையின் 'எப்பொருளாயினும் கொள்ளும்' என்றார்.

("அதற்குவினை......அதன்பால என்மனார்")

இ—ள் : அதற்கு வினையுடைமை: கரும்பிற்கு வேலி என்பது. வினை—ஈண்டு உபகாரம். அதற்குடம்படுதல்: சாத்தற்கு மகள் உடம்பட்டார் என்பது. [2]சான்றோர் கொலைக் குடம்பட்டார் என்பதுமது. அதற்குப்படுபொருளாவது பொதுவாகிய பொருளைப் பகுக்குங்கால் ஒரு பங்கிற்படும் பொருள். அது

---

6. அப்பொருட்கிளவி — அன்ன பொருட்கிளவி — அவை போலும் பொருள்தரும் கிளவி.

1. அதற்கு வினையுடைமை முதலியன நேரே கோடற் பொருளனவல்ல ; அவை கோடற் பொருளின்பாற் படுக்கப்படுவன. அவை உதவி, விளக்கம் முதலிய பொருளுடையன.

சாத்தற்குக் கூறு கொற்றன் என்பது. அதுவாகு கிளவி : கடி சூத்திரத்திற்குப் பொன் என்பது; பொன் கடி சூத்திரமாய்த் திரியுமாகலின் அதுவாகு கிளவி என்றார்; கிளவி பொருள். அதற்கு யாப்புடைமை : கைக்கு யாப்புடையது கடகம் என்பது. அதற் பொருட்டாதல்: கூழிற்குக் குற்றேவல் செய்யும் என்பது.

நட்பு : அவற்குநட்டான்; அவற்குத்தமன் என்பன.
பகை : அவற்குப பகை, அவற்கு மாற்றான் என்பன.
காதல் : நட்டார்க்குக் காதலன், புதல்வற்கு அன்புறும் என்பன.
சிறப்பு: வடுகரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர், கற்பார்க்குச் சிறந்தது செவி என்பன.

[3]அப்பொருள் என்றது அன்ன பொருளை. இவ்வாடையும் அந்நூலான் இயன்றது என்றது போல. எனவே அன்ன பிறவும் என்றவாறாம்.

அப்பொருட்கிளவியும் என்றதனால் பிணிக்கு மருந்து, நட்டார்க்குத் தோற்கும், அவற்குத் தக்காள் இவள், உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர் என்பன போல்வனவெல்லாம் கொள்க.

தெய்.

(''நான்காகுவதே...கொள்ளும் அதுவே'')

---

2. சான்றோர்—வீரர். வீரர் தம்மைக் கொல்லுதற்குத் தாம் உடம்பட்டார் என்பது பொருள். கொலையேற்பாரும் உடம்படுவாரும் சான்றோரேயாதலின் சாத்தற்கு மகள் உடப்பட்டார் என்பதை நோக்க வேறுபட்டிருத்தலின் அதற்குடம்படுதலில் அடக்கி 'என்பதும் அது' என்றார்.

3. இவ்வாடையும் அந்நூலான் (அதே நூலால்) இயன்றது' என்றால் அவ்வாடையின் நூலாலேயே எள்பது பொருளன்று. அவ்வாடையின் நூல்போலும் நூலால் என்பது பொருள். எனவே அந்நூல் என்பதற்கு அன்ன (அது போன்ற) எனப் பொருள் கொள்வதுபோல, அப்பொருள் என்பதற்கும் அன்ன பொருள் எனப்பொருள் கொள்ளல் வேண்டும்.

நான்காம் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: நான்காம் வேற்றுமையாவது 'கு' எனப் பெயர் பெற்ற வேற்றுமைச் சொல். அது யாதனும் ஒரு பொருளாயினும் ஏற்று நிற்கும் நிலைமைத்து, என்றவாறு; எனவே ஏற்கும் பொருண்மைக்கண் வரும், எ-று.

அந்தணர்க்குக் கொடுத்தான் என வரும்.

("அதற்கு வினை...அதன்பால என்மனார்")

இதுவும் நான்காம் வேற்றுமைக்கண் வரும் பொருள் வேறு பாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அதற்கு வினையுடைமை முதலாகச் சிறப்பு ஈறாகச் சொல்லப்பட்டவற்றின்கண் அப்பொருள்பட வருஞ் சொல்லும், நான்காம் வேற்றுமைப் பாலன, எ-று.

உம்மை எச்சவும்மை.

அதற்கு வினையுடைமையின் என்பது மேற்சொல்லப்பட்ட கொடைப் பொருண்மையேயன்றி [1]உருபேற்கும் பொருட்கு வினையாதல் உடைமை கூறும் வழியும் நான்காம் வேற்றுமைப் பாலனவாம், எ-று. உ-ம்: அவர்க்குப் போக்குண்டு, அவர்க்கு வரவுண்டு இவை வினை. கரும்பிற்கு உழுதான் என்பதும் அது.

அதற்கு உடன்படுதல் என்பது உடம்பாடு கூறும் வழியும் நான்காவதாம் எ—று. உ-ம்: கொலைக் குடம்பட்டான்.

[2]அதற்குப் படுபொருளாவது உருபேற்கும் பொருட்கு இயல்பு கூறும் வழியும் நான்காவதாம்: எ—று. உ-ம் இதற்கு நிறம் கருமை, இதற்கு வடிவு வட்டம், இதற்கு அளவு நெடுமை, இதற்குச் சுவை கார்ப்பு, இச்சொற்குப் பொருள் இது, இவ் வாடைக்கு விலையிது எனவும், இவ்வாறு வருவனவும் கொள்க. இன்னும் அதற்குப் படுபொருள் என்றதனான், உடைப்பொருளும்

1. உருபேற்கும் பொருள்-அவர்க்கு என்பது, அதற்கு வினை யாதல் உடைமை என்பது போக்கு என்பது. போதல் அதற்குரிய வினை. வினையாதலுடைமை என்றாலும் அவ்வினையும் தொழிற் பெயராவதே என அறிக.
2. மற்றையோர் உரைக்கு இது வேறுபட்டது

அவ்விடத்திற்கு ஆம் பொருளும் காலத்திற்கு ஆம் பொருளும் ஆகி வருவனவும் கொள்க. அதற்குச் சோறுண்டு, ஈழத்திற் கேற்றின பண்டம், காலத்திற்கு வைத்த விதை எனவரும்.

அதுவாகுகிளவி ஒன்றொன்றாகத் திரிந்து வரும் பொருட்கு வருவது: கடிசூத்திரத்திற்குப் பொன் *கும்மாயத்திற்குப் பயறு.

[3]அதற்கி யாப்புடைமையாவது உருபேற்கும் பொருட்கு வலி யாதல் உடைமை. யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம் பெற்ற, யாக்கை (நாலடி 28) என்ற வழி வலி எனப் பொருளா யிற்று. உ-ம்: போர்க்கு வலி குதிரை, நினக்கு வலி வாள் என வரும்.

அதற்பொருட் டாகலின் என்பது ஒரு பொருட்டாக என்பது பட வருதல். உ-ம்: கூழிற்குக் குற்றேவல் செய்யும், கூலிக்கு ஒலிக்கும்.

நட்பு: அவற்குத்துணை, அவற்கு நட்பு என வரும்.
பகை: அவற்குப்பகை.
காதல்: மகற்குக் காதலன்.

சிறப்பு என்பது இன்றியமையாமை பற்றி வரும். உ-ம்: 'யாம் உமக்குச் சிறந்தனம் ஆதல் அறிந்தனிராயின்' எனவும், 'நிலத்திற்கணியென்ப நெல்லும் கரும்பும்' (நான்மணி. 9) எனவும் வரும்.

உம்மையாற் கொள்ளப்படுவன: †இவ்வூர்க்கு அவ்வூர் காதம், $நாளைக்கு வரும், இவர்க்குத் தகும் இது, இவர்க்கு நன்மை பயக்கும், அவற்குப் பிறந்த மகன்.

பிறவும் இந்நிகரன வெல்லாம் கொள்க.

நச்.

(''நான் கா குவதே...........கொள்ளு மதுவே'')

இது முறையானே நான்காவது இப்பொருட்கண் வரும் என் கின்றது.

---

* கும்மாயம்—பாயசம்

3. மற்றையோர் உரைக்கு இது வேறுபட்டது.

† $ இவை வேற்றுமை மயக்கம். நான்கன் உருபிருந்தாலும் முறையே ஐந்தன் பொருளும் ஏழன் பொருளும் தருவன.

இ-ள்: கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி நான்காகு வதே—மேல் 'கு' எனப் பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்று மைச் சொல் நான்காவதாம், அது எப்பொருளாயினும் கொள்ளும்—அஃது யாதானும் ஒரு பொருளாயினும் அதனைத் தான் ஏற்று நிற்கும். எ-று.

உ-ம்: அந்தணற்கு ஆவைக் கொடுத்தான் என வரும். மாணாக்கற்கு நூற்பொருள் உரைத்தான் எனக் கொடைப் பொருளவாகிய சொல்லானன்றிப் பிறவாய்பாட்டால் கூறுவன வும், மாணாக்கற்கு அறிவு கொடுத்தான் எனக் கொடுப்பான் பொருளாய்க் கொள்வான்கண் செல்லாது ஆண்டுத் தோன்றும் பொருளும் அடங்குதற்கு எப்பொருளாயினும்' என்றார்.

("அதற்குவினை......அதன்பால என்மனார்")

இஃது அதனை முடிக்க வரும் பொருள் வேறுபாடு கூறு கின்றது.

இ-ள்: அதற்கு வினை உடைமை—ஒன்றற்கு ஒன்று பயன் படுதல், அதற்கு உடம்படுதல்—ஒன்றற்கு ஒரு பொருளை மேற் கொடுப்பதாக உடம்படுதல், அதற்குப் படுபொருள்—ஒன்றற்கு உரிமை உடையவாகப் பொதுவாகிய பொருளைக் கூறு இடப் படுதல், அது ஆகு கிளவி—உருபு ஏற்கும் பொருள் தானேயாய்த் திரிவதோர் பொருண்மை, அதற்கு யாப்புடைமை—ஒன்றற்கு ஒன்று பொருத்தம் உடைத்தாதல்; அதற் பொருட்டு ஆதல்—ஒரு பொருளினை மேற் பெறுதல் காரணமாக ஒரு தொழில் நிகழ்தல், நட்பு—ஒன்றற்கு ஒன்று நட்பாதல், பகை—ஒன்றற்கு ஒன்று பகையாதல், காதல்—ஒன்றற்கு ஒன்று காதல் உடைத் தாதல், சிறப்பு—ஒன்றற்கு ஒன்று சிறத்தல், என்ற கிளவியும்— என்று சொல்லப்பட்ட பொருள்களும், அப்பொருளும்—அன்ன பொருள்களும், அதன்பால என்மனார்—அந்நான்கன் உருபின் கூற்றன என்று கூறுவர் புலவர், எ—று.

உ-ம்: கரும்பிற்கு வேலி; 'நிலத்துக்கணி யென்ப நெல்லும் கரும்பும்' (நான்மணி. 9) என்பதும் அது. வினை—உபகாரம். சாத்தற்கு மகள் உடம்பட்டார்; சான்றோர் கொலைக்கு உடம்பட்டார் என்பதும் அது. சாத்தற்குக் கூறு கொற்றன்; கடிசூத்திரத்திற்குப் பொன்; பொன் கடிசூத்திரமாய்த் திரியும் ஆதலின் 'அதுவாகு கிளவி' என்றார். கிளவி—பொருள். கைக்கி

யாப்புடையது கடகம்; உண்டி வெய்யோர்க்கு உறுபிணி எளிது (முதுமொழி 77) என்பதும் அது. கூழிற்குக் குற்றேவல் செய்யும். அவற்கு நட்டான்; அவற்குத்தமன் என்பதும் அது. அவற்குப் பகை; 'கள்வர்க்குத் தள்ளும் உயிர்நிலை' (குறள் 290) என்பது மது. ‡நட்டார்க்குக்காதலன்; புதல்வற்கு அன்புறும் என்பது மது. வடுகரசர்க்குச் சிறந்தார் சோழிய வரசர்; கற்பார்க்குச் சிறந்தது செவி என்பதும் அது.

அப்பொருளும் என்றதனானே, இச்சொற்குப் பொருள் இது, அவர்க்குச் சோறு உண்டு, நினக்கு வலி வாள், அவ்வூர்க்கு இவ்வூர் காதம், 'மனைக்குப் பாழ்வாணுதல் இன்மை' (நான்மணி 20), 'போர்க்குப் புணைமன்' (பு. வெ. மா. 80)'; பிணிக்கு மருந்து (குறள் 1102), நட்டார்க்குத் தோற்றலை நாணாதோன் (கலி 4) 10, 11), தன் சீர் இயல் நல்லாள் தானவற் கீன்ற மைந்தன், அவற்குத் தக்காள் இவள், உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர் (இறை. கள. 14. உரை) என்றாற் போல்வன கொள்க.

கல்.

என்னுதலிற்றோவெனின், நிறுத்த முறையானே நான்காம் வேற்றுமை யுணர்த்துதல் நுதலிற்று.

பொருள்: நான்காம் என்னும் எண்ணுமுறைக்கண்ண தாகிய குவ்வென்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல் யாதொரு பொருளையாயினும் ஒரு பொருள் ஈவதோர் பொருளினையேற்பதாக வுணர்த்தி நிற்கும். இன்னும் அதுதான் வரும் பொருட் பாகுபாட்டினைச் சொல்லின் பயன் படுதல் என்னும் பொருண்மை, ஒன்றற்கொன்று பொருள் மேற்கொடுப்பதாக உடம்படுதல் என்னும் பொருண்மை, ஒன்றற்கு ஒரு பொருள் உரிமையுள் வழிக் கூறிடப்படுதல் என்னும் பொருண்மை, அம்முதுற் பொருட்டாய் ஆகலான் என்னும் பொருண்மை, ஒன்றற்கொன்று பொருத்த முடைத் தாதல் என்னும் பொருண்மை, ஒரு பொருளினை மேற்பெறுதல் காரணமாக ஒரு தொழில் நிகழ்தல் என்னும் பொருண்மை, ஒன்றற்கொன்று நட்பாதல் என்னும் பொருண்மை, பகையாதல் என்னும் பொருண்மை, ஒன்றற்கொன்று காதல் உடைத்தாதல் என்னும் பொருண்மை, ஒன்றற்கொன்று சிறத்தல் என்னும் பொருண்மை என்று சொல்லப்பட்ட அப்பொருள் மேல் வரும்

‡ நாட்டார்க்கு (பாடம்)—உரைக்கோவையில் உள்ளது.

சொற்களும் நான்காம் உருபின் கூற்றன என்று கூறுவர் புலவர் என்றவாறு.

எப்பொருளாயினும் என்றது மூன்றிடத்துப் பொருள்களது பன்மை நோக்கி. சொற்கள் பொருள்களை உணர்த்துதல் உரிமை நோக்கிச் சொற்றன்மேல் வினைப்பட 'எப்பொருளாயினும் கொள்ளும் என்று கூறினார் எனினும் கோடலையுணர்த்தும் என்ற வாறாகக் கொள்க.

உ-ம்: சாத்தற்குச் சோறு கொடுத்தான் என்பது.

அதற்கு வினையுடைமை: கரும்பிற்கு வேலி, மயிர்க்கு எண்ணெய் என்பன.

அதற்குடம்படுதல்: சாத்தற்கு மகள் உடம்பட்டார் சான்றோர் என்பது.

அதற்குப் படுபொருள்: சாத்தற்குப் படுபொருள் கொற்றன் என்பது.

அதுவாகு கிளவி: கடி சூத்திரத்துக்குப் பொன் என்பது.

அதற்கியாப்புடைமை: கைக்கியாப்புடையது கடகம்.

[1]அதற்பொருட்டாதல்: கூழிற்குக் குற்றேவல் செய்யும் [2]என வறிக.

நட்பு: அவற்கு நட்புடையன், அவற்குத் தமன் என்பன.

பகை: மக்கட்குப் பகை பாம்பு, அவற்குப் பகை, அவற்கு மாற்றான் என்பன.

காதல்: நட்டார்க்குக் காதலன், தாய்க்குக் காதலன் என்பன.

சிறப்பு: வடுகரசர்க்குச் சிறந்தோர் சோழிய வரசர், கற்பார்க்குச் சிறந்தது செவி என்பனவாம்.

அதற்கு வினையுடைமை முதலாகக் கூறப்பட்டனவெல்லாம் முன் கூறிய கொடைப் பொருளின் பாகுபாடல்ல; பிற பொரு

---

1. கழகப் பதிப்பில் (1964) இதற்கு உதாரணம் காட்டப்பட வில்லை. உரைக்கோவையில் அடிக்குறிப்பாக 'அதற்குப் பொருட்டாக்கல் வரிசைக்குழும்' என்பது காணப்படு கிறது. தெளிவில்லை.
2. என்பன (பாடம்)

ளெனவறிக. அவற்றுள் அதற்குடம்படுதல் அதற்குப் படுபொருள் என்னும் இரண்டும் கொடைநீர்மையும் சிறிதுடைய.

உம்மையால் பிறவும் அதன்பால பலவுள. அவை: பண்ணிற்குத் தக்கது பாட்டு, பூவிற்குத் தக்கது வண்டு என்பன போல வரும். பிறவும் அன்ன.

உம்மை யிறந்தது தழீஇய எச்சவும்மை யாகலான் இந்நிகரன கோடற்குடம்படாதால் எனின், இறந்தது தழீஇய வதனையே இரட்டுற மொழிதல் என்னும் ஞாபகத்தினான் எதிரது தழீஇயதும் ஆக்கிக் கூறப்பட்டது எனக் கொள்க.

ஒரு·

("நான்காகுவதே......கொள்ளுமற் றதுவே")

என்பது மேல் 'கு' எனப் பெயர் கொடுத்தோதப்பட்ட வேற்றுமைக் கிளவி நான்காவதாம். அஃதியாதானும் ஒரு பொருளாயினும் அதனைத் தான் ஏற்று நிற்கும் என்றவாறு.

உ-ம்: அந்தணர்க்கு ஆவைக் கொடுத்தான் எனவரும் மாணாக்கர்க்கு நூற்பொருளை யுரைத்தான் எனக் கொடைப் பொருளவாகிய சொல்லானன்றிப் பிறவாய் பட்டாற் கூறப்படு வனவும், மாணாக்கர்க்கு அறிவு கொடுத்தான் எனக் கொடுப்பான் பொருளாய்க் கொள்வான்கட் செல்லாது ஆண்டுத் தோன்றும் பொருளும் அடங்குதற்கு 'எப்பொருளாயினும்' என்றார்.

("அதற்குவினை......அதன்பால என்மனார்")

என்பது அதற்கு வினையுடைமை: கரும்பிற்கு வேலி, மயிர்க்கு எண்ணெய், மேனிக்கு மஞ்சள், உயிர்க்கு உண்டி என்பன. வினை யீண்டு உபகாரம். அதற்குடம் படுதலின்: சாத்தற்கு மக்கள் உடம்பட்டார், சான்றோர் கொலைக்கு உடம் பட்டார் என்பன. அதற்குப் படு பொருளின்: சாத்தற்குக் கூறு கொற்றன், கொற்றற்குக் கூறு தேவன் என்பன; பொதுவாகிய பொருளைப் பகுக்குங்கால் ஒருவர்க்குப் படும் பொருள் என வறிக. அதுவாகுகிளவியின்: கடிசூத்திரத்திற்குப் பொன்; பொன் கடி சூத்திரமாய்த் திரியும் ஆதலின் அதுவாகுகிளவி என்றார். கிளவி-பொருள். அதற்கு யாப்புடைமையின்: கைக்கு யாப்புடையது கடகம் என்பது. அதற் பொருட்டாகலின்: கூழிற்குக் குற்றேவல் செய்யும், வரிசைக்கு உழும் என்பன. நட்பின்: அவற்கு

நட்டான், அவற்குத் தமன் என்பன. பகையின்: அவற்குப் பகை, அவற்கு மாற்றான் என்பன. காதலின்: நட்டார்க்குக் காதலன், புதல்வர்க் கன்புறும்என்பன. சிறப்பின்: வடுகரரசர்க்குச் சிறந்தார் சோழிய வரசர், கற்பார்க்குச் சிறந்தது செவி என்பன.

அப்பொருள் என்றது அன்ன பொருளது; அன்ன பிறவும் என வாகும். அது, 'அவ்வாடையும் அந்நூலால் இயன்றது' என்றது போலக் கொள்க அப்பொருட் கிளவி என்றதனாற் பிணிக்கு மருந்து, நட்டார்க்குத் தோற்றலை நாணாதோன், அவற்குத் தக்கானிவன், உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர், இச்சொற்குப் பொருள் இது, அவருக்குச் சோறுண்டு, நினக்கு வலி வாள், மக்கட்குப் பகை பாம்பு, இவ்வூர்க்கு அவ்வூர் காதம், மனைக்குப் பாழ் வாணுதலின்மை என்பன கொள்க.

ஆதி

உ - ம்: அதற்கு வினையுடைமையின்: தோட்டத்துக்கு வேலி யிட்டார்.
அவர்க்குச் செல்வாக்குண்டு.
அதற்கு உடம்படுதலின்: திருமணத்திற் கிசைந்தார்.
அதற்குப் படுபொருளின்: செய்யுளுக்குப் பொருள் கூறினார்.
அதுவாகுகிளவியின்: தாலிக்குப் பொன் கொடுத்தார்.
அதற்கு யாப்புடைமையின்: அரசர்க்குத் தக்க ஆசனம்.
அதற் பொருட்டாதலின்: கூலிக்கு வேலை செய்தான்.
நட்பின்: கணவனுக்குத் துணை மனைவி.
பகையின்: பாம்புக்குப் பகை கீரி.
காதலின்: ஆணுக்கு நாட்டம் பெண் மேல்.
சிறப்பின்: படிப்புக்கு நல்ல பரிசு கிடைத்தது.

சுப்.

கொடை என்பதில் இரண்டு அம்சங்கள் உள்ளன. பிறரை அடையச் செய்தல் ஒன்று; தன்னை விட்டு நீங்குதல் மற்றொன்று. பொதுவாக எவ்வொரு கொடையிலும் இவ்விரண்டும் இருக்க வேண்டும். மாணாக்கற்கு அறிவு கொடுத்தான் என்னுமிடத்துக் கொடைப்பொருள் அறிவு. அதனை மாணாக்கன் பால் அடைவித்த போதிலும் அஃது ஆசிரியனை விட்டு நீங்கவில்லை. அவ்விடத்தும் நான்காம் வேற்றுமை வரும் என்றற்கு 'எப்பொருளாயினும்' என்றார் என்று சேனாவரையர் கூறுகின்றார். உரையாசிரியர் 'எப்பொருளாயினும் என்றார், மூன்றிடத்துப் பன்மை நோக்கி' என்று பயன் கூறியுள்ளார். செலவும் கொடையும்

'ஏனையிரண்டும் ஏனையிடத்த' (சொல் 30) என்னுஞ் சூத்திரப் படி, தன்மை முன்னிலைக்கு வாராவிடினும்'எப்பொருளாயினும்' என்று இக்சூத்திரத்திற் கூறியிருத்தலால் கொடை மூன்றிடத்திற் கும் வரும் என்பதே *அவர் கருத்துப் போலும்.

## தே. ஆண்டியப்பன்

முதலில் ஒரு பொதுப் பொருளை அறிவித்து விட்டுப் பின்னர்ச் சிறப்புப் பொருளை எடுத்துக் காட்ட விழைகிறார். 'எப்பொருளாயினும் கொள்ளும் அதுவே' என்பது பொதுப் பொருள். அதற்கு வினையுடைமை, அதற்குப் படுபொருள் போன்றவை சிறப்புப் பொருளைக் குறிக்கும்.

*ஆடைக்கு விலை, விலைக்கு ஆடை, சொல்லுக்குப்பொருள், கூழுக்குப் பாட்டு முதலிய பெயர்த் தொடர்கள் பெயர்+உருபு+ பெயர் என்ற உருவில் இருப்பினும் இவற்றை முழுத் தொடரி லிருந்து வருவித்துக் காட்டலாம்.

'வினையுடைமை' என்பதை 'உபகாரம்' என்னும் பொருளில் விளக்க முற்பட்டோர் 'கரும்பிற்கு வேலி' என்பதை எடுத்துக் காட்டுவர். வினையுடைமை என்பதற்கு 'வினையை எதிர் நோக்கிய நிலை' என்று கூறலாம்.

## செ. வை. சண்முகம்

'எப்பொருளாயினும் கொள்ளும் அதுவே' என்று நான்காம் வேற்றுமையின் பொதுப்பண்பாகக் கூறியதை உரையாசிரியர்கள் கொடைப் பொருளை உணர்த்துவதாக விளக்கிச் "சாத்தற்குச் சோறு கொடுத்தான், அந்தணர்க்கு ஆவைக் கொடுத்தான் ஆகிய

---

* அவர்—இளம்பூரணர். 'ஏனையிரண்டும் ஏனையிடத்த' (சொல். 30) என்னும் சூத்திரத்தில் "இனி இச்சூத்திரம் கொடுத்தல் கோடற் பொருண்மை மூன்றிடத்தும் சொல் நிகழுமாறு கூறியது என்பாரும் உளர்" எனப் பிறர் கருத்தெழுதியவர் மறாது சென்றமையின் கொடை மூன்றிடத்துக்கும் வரும் என்ற கருத்தையும் ஏற்றவரே என்பது புலனாம்—சிவ.

* ஆடைக்கு விலை—ஆடைக்குத் தரப்படும் விலை, விலைக்கு ஆடை—விலைக்கு விற்கப்படும் ஆடை. சொல் லுக்குப்பொருள்—சொல்லுக்குப் பொருந்திய பொருள். கூழுக்குப் பாட்டு—கூழுக்காகப் பாடப்படும் பாட்டு.

உதாரணங்களைக் காட்டியுள்ளனர். ஆனால் கொண்டு முடியும் சொற்களைப் பற்றிப் பேசும் அடுத்த நூற்பாவில் கொடைப் பொருளைத் தரும் ஒரு சொல்லைக்கூடக் குறிப்பிடவில்லை. எனவே, தமிழ் வேற்றுமைகளில் நான்காம் வேற்றுமையே பயிற்சி மிகுதியாயும் ஏனைய பல வேற்றுமையின் பொருளிலும் வருகின்றது என்ற தன்மையைக் குறிப்பதாகக் கொள்ளலாமா என்பது கருதத்தக்கது.

'வினையுடைமை' என்பதைச் சேனாவரையர் 'உபகாரம் உடைமை' என்றும், நச்சினார்க்கினியர், 'ஒன்றற்கு ஒன்று படுதல்' என்றும் விளக்கி, இருவரும் 'கரும்பிற்கு வேலி' என்ற உதாரணத்தைத் தந்துள்ளனர். இது 'வினையுடைமை' என்பதன் சரியான பொருளாகத் தோன்றவில்லை. 'கரும்பிற்கு வேலி, என்பதைப் 'பொருட்டு' என்ற பொருளில் அடக்குவதே பொருந்தும். தெய்வச்சிலையார் 'வினையாதல் உடைமை' என்று கொண்டு, 'அவர்க்குப் போக்கு உண்டு' என்ற உதாரணத்தைக் காட்டியுள்ளது பொருத்தமாகத் தோன்றுகின்றது.

'கடி சூத்திரத்துக்குப் பொன்' என்பதைப்'பொன் கடி சூத்திர மாக ஆகும்' என்றும், இதில் ஆக்கச்சொல் இருப்பதால் கூட்டு வாக்கியமாகவும் கொள்ளவேண்டும்.

பொருட்டு என்பதை Purposive என்று தனி வேற்றுமை யாகக் கருத வேண்டும் என்ற கருத்து வளர்ந்து வருகின்றது. நான்காம் வேற்றுமை புணர்த்தும் ஏனைய பொருள் களுக்குரிய வாக்கியங்கள் எப்பொழுதும் கூட்டு வாக்கியமாகவே இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. ஆனால் 'பொருட்டு' வாக்கியம் எப்பொழுதும் கூட்டு வாக்கியமாகவே இருக்கும். 'கூழிற்குக் குற்றேவல் செய்யும்' என்பது பொருட்டுவிற்குக் காட்டப்படும் உதாரணம். கூழ் பெறற்குக் குற்றேவல் செய்யும், அல்லது கூழ்பெறுவான் குற்றேவல் செய்யும் என்ற வாக்கியமும் ஒரே பொருளைத் தருவதால் புதைநிலை வாக்கியம் 'கூழ் பெறற்குக் குற்றேவல் செய்யும்' என்பது போன்றே அமைந் திருக்க வேண்டும்.

பொருட்டுப் பொருளில் வரும் நான்காம் வேற்றுமை ஏற்ற பெயரைப் பெயரெச்சத் தொடராக மாற்ற முடியாது. 'குற்றேவல் செய்யும் கூழ்' என்ற வாக்கியம் தமிழில் அமையாது. இதற்கு ஒரு காரணம் கூழ் என்பது ஒரு வாக்கியத்தின் கூறாகவும் இருப்பதேயாகும். ஒரு தனி வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொற்

களிலிருந்தே பெயரெச்சத் தொடர் உண்டாக்க முடியும் என்பது மாற்றிலக்கணத்தார் கண்ட உண்மையாகும்.

ஐந்தாம் வேற்றுமையும் பொருளும்

* **75.** **ஐந்தா குவதே**
**இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
**யிதனி னிற்றி தென்னு மதுவே**
**வண்ணம் வடிவே யளவே சுவையே**
**தண்மை வெம்மை யச்ச மென்றா**
**நன்மை தீமை சிறுமை பெருமை**
**வன்மை மென்மை கடுமை யென்றா**
**முதுமை யிளமை சிறத்த விழித்தல்**
**புதுமை பழமை யாக்க மென்றா**
**வின்மை யுடைமை நாற்றந் தீர்தல்**
**பன்மை சின்மை பற்று விடுதலென்**
**றன்ன பிறவு மதன்பால வென்மனார்** **(13)**

[ஐந்து ஆகுவதே
இன்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றுஇது என்னும் அதுவே;
வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்றா
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை என்றா
முதுமை இளமை சிறத்தல் இழித்தல்
புதுமை பழமை ஆக்கம் என்றா
இன்மை உடைமை நாற்றம் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதல்என்று
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.]

ஆ. மொ.
இல.

The fifth one is the case which is named as 'in' which denotes the nature of a thing in its relation to another.

---

* இளம்பூரணரைத் தவிர மற்றையோர் முதல் மூன்று வரிகளை ஒரு சூத்திரமாகவும், பின்னர் உள்ள வரிகளை ஒரு சூத்திரமாகவும் கொள்வர்.

The learned say that it is used to express the colour, shape, measure, taste, coolness, hotness, fear, goodness, evil, smallness, largeness, hardness, softness, ferocity, agedness, youth, superiority, inferiority, newness, oldness, resource, poverty, wealth, smell, separation, multitude, fewness, and detachment and such others.

க சு.

The fifth is the ease which is named - iṉ. It denotes the nature of a thing in relation to another. They say that the ease denotes colour, shape, measure, taste, coolness, hotness, fear, goodness, leadness, smallness, largeness, hardness, softness, ferocity, agedness, youth, superiority, inferiority, newness, oldness, source, absence, presence, smell, separation, many-ness, few-ness, absence of attachment, and other similar (qualities).

பி. இ. நூ.

வீர. 40

..................அசலஞ்சலமாம்
பூரண மாகும் அவதி.

நன். 299

ஐந்தா வதனுருபு இல்லும் இன்னும்
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப்பொருளே.

தொன். 60

ஷை ஷை

பிர. 11

அபாதானம் ஆகும் சலம் அசலம்

இல. 202

ஐந்தா வதற்கு உருபுஇன்னும் இல்லும்
நீங்கல் ஒப்பு எல்லைஏதுப் பொருள்வயின்
இதனின் இற்றிது எனவரல் அதன்பொருள்

இ. கொ. 38, 39

நிலைத்திணை இயங்குதிணை பண்பு ஆதியின்
நீக்கம் வரும்என நிகழ்த்தினர் புலவர்
நீக்கம் இன்னும் நினைக்கிற் பெருகும்
நீக்கம் இன்றியும் நிகழ்த்தும் இன்னே.

முத்து. பெ. 61, 62

இல்லும் இன்னும் ஐந்தா வதன்உருபே
அச்சம் ஆக்கம் அதனொடு தீர்தல்
பற்றுவிடல் நீங்கல் ஒப்புஎல்லை ஏது
பிறவும் அதன்பொருள் நிலையா கும்மே.

இளம்

இச்சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், முறையானே ஐந்தாம் வேற்றுமை யுணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** ஐந்தாம் எண்ணு முறைக்கண்ணது 'இன்' என்னும் பெயரையுடைய வேற்றுமைக் கிளவி; இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருள் என்பதனைப் பயப்பவரும் அது என்றவாறு.

[1] வரலாறு: காக்கையிற் கரிது களம்பழம் என வரும். இதனின் என்பது காக்கையின் என்பது; இற்று என்பது கரிது என்பது; இது என்பது களம்பழம். எனவே பொரூஉப் பொருளைத் தனக்குப் பொருளாக வுடைத்து என்றவாறு.

ஐந்தாம் வேற்றுமை நான்கு பொருள் உடைத்து; பொரூஉப் பொருளும், நீக்கமும், எல்லையும் ஏதுவும் என.

அவற்றுள் பொரூஉப் பொருளை எடுத்துக் கூறினார் சிறப்புடைமையின்; ஒழிந்தன வற்றைப் போக்கிச் சொல்லுதும்.

வண்ணம்: காக்கையிற் கரிது களம்பழம் என்பது.
வடிவு: இதனின் வட்டம் இது என்பது.
அளவு: இதனின் நெடிது இது என்பது.
சுவை: இதனிற் றீவிது இது என்பது.
தண்மை: இதனிற் றண்ணிது இது என்பது.
வெம்மை: இதனின வெய்யது இது என்பது.
அச்சம்: கள்ளரின் அஞ்சும் என்பது.
என்றா என்பது எண்ணிடைச் சொல்.

---

1. 'இதனின் இற்று இது' என்பதில் பொரூஉப் பொருள் மட்டும் உள்ளதாக இளம்பூரணர் கொண்டார். சேனாவரையர் பொரூஉப் பொருளும், எல்லைப் பொருளும் உள்ளனவாகக் கொண்டார். அதனை அவர் உரையிற் காண்க.

நன்மை : இதனின் நன்று இது என்பது.
தீமை : இதனிற்றீது இது என்பது.
சிறுமை : இதனிற் சிறிது இது என்பது.
பெருமை : இதனிற் பெரிது இது என்பது.
வன்மை : இதனின் வலிது இது என்பது.
மென்மை : இதனின் மெலிது இது என்பது.
கடுமை : இதனிற் கடிது இது என்பது.

என்றா என்பது எண்ணிடைச் சொல்.

முதுமை : இவனின் மூத்தான் இவன் என்பது.
இளமை : இவனின் இளையான் இவன் என்பது.
சிறத்தல் : இவனிற் சிறந்தான் இவன் என்பது.
இழித்தல் : இவனின் இழிந்தான் இவன் என்பது.
புதுமை : இவனிற் புதியன் இவன் என்பது.
பழமை : இவனிற் பழைய னிவனென்பது.
ஆக்கம் : இவனினாயினா னிவ னென்பது.

என்றா என்பது எண்ணிடைச் சொல்.

இன்மை : இவனின் இலன் இவன் என்பது.
உடைமை : இவனின் உடையன் இவன் என்பது.
நாற்றம் : இதனின் நாறும் இது என்பது.
இவையெல்லாம் பொரூஉப் பொருள்.
தீர்தல் : ஊரிற்றீர்ந்தான் என்பது. இது நீக்கம்.
பன்மை : இவரிற் பலர் இவர் என்பது.
சின்மை : இவரிற் சிலர் இவர் என்பது.

இவையும் பொரூஉப் பொருள்.

பற்று விடுதல் ஊரிற்பற்று விட்டான்; இதுவும் நீக்கம் என்பது.

[2] அன்ன பிறவும் என்றதனான் எல்லைப் பொருளும் ஏதுப் பொருளும் கொள்க. எல்லை: கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு என்பன. ஏது: முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது என்பது.

---

2. வண்ணமுதலாகக் கூறப்பட்டவற்றுள் பொரூஉவும் நீக்கமுமே கூறப்பட்டன எனக்கொண்டு இவ்வாறு எழுதினார். சேனாவரையர் மாறுபாடு அவர் உரையிற் காண்க.

சேனா

("ஐந்தாகுவதே...என்னுமதுவே")

இ—ள் : மேல் இன் எனப் பெயர் கொடுத்தோதப்பட்ட வேற்றுமைச் சொல் ஐந்தாவதாம்; அஃது இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருள் என்னும் பொருண்மையை உணர்த்தும், எ—று

ஐந்தாவது நான்கு பொருண்மையுடைத்து. பொருவும், எல்லையும், நீக்கமும், ஏதுவும் என. அவற்றுள் பொருவு இரு வகைப்படும்; உறழ் பொருவும் உவமப் பொருவும் என. ஏதுவும் இருவகைப்படும்; ஞாபக ஏதுவும் காரக ஏதுவும் என. அவற்றுள் ஞாபக ஏதுப் பொருண்மை [1]மேலே கூறப்பட்டது. காரக ஏதுப் பொருண்மை அச்சம் ஆக்கம் என்பனவற்றாற் பெறப் படும். [2]ஏனை யிரண்டும் இதனின் இற்றிது என்பதனாற் கொள்ளப்படும், அவ்விரண்டனையும் அஃது இருமுறையான் உணர்த்துமாகலான். எல்லைப் பொருள் : [3]கருவூரின் கிழக்கு, இதனினூஉங்கு என வரும். கிழக்கு ஊங்கு என்பன வினைக்குறிப் பல்லவேனும் இற்று என்னும் பொருள்பட நிற்றலின் இற்று என்றலேயாம். பொரூஉப் பொருட்குதாரணம் முன்னர்ப் பெறப்படும்.

("வண்ணம்......என்மனார்")

---

1. மூன்றாம் வேற்றுமைச் சூத்திரத்தில்.
2. ஏனை இரண்டு—பொரூஉவும், எல்லையும். இதனின் இற்று இது என்பதில் அவ்விரு பொருளும் அடங்கி யுள்ளன. இதைப் போல இத்தன்மைத்து இது எனப் பொரூஉப் பொருளும், இதனை நோக்க இது இன்ன அளவினது, என்னும் எல்லைப் பொருளும் அமைந்தது 'இதனின இற்று இது' என்பது.
3. இற்று என்பது இததன்மைத்து எனக்குறிப்பு வினை முற்று. இதனின் இற்று என்பதற் கேற்பக் கருவூரின் கிழக்கு என்றால் கிழக்கு என்பது வினைக்குறிப்பாக இல்லையே என்னும் ஐயம் எழுதலின் கிழக்கு என்பது வினைக்குறிப்பில்லையாயினும் கிழக்காகிய எல்லைத் தன்மையுடையது என்னுமாறு அமைந்துள்ளமையின் பொருந்தும் என்பதாம்.

இ-ள்: வண்ணம் முதலாகப் பற்றுவிடுதல் ஈறாகச் சொல்லப் பட்டனவும் அவை போல்வன பிறவும் ஐந்தாம் வேற்றுமைத் திறத்தனவாம், எ—று.

வண்ணம் வெண்மை கருமை முதலாயின. வடிவு வட்டம் சதுர முதலாயின. அளவு நெடுமை குறுமை முதலாயின. சுவை கைப்பு புளிப்பு முதலாயின. நாற்றம் நறுநாற்றம் தீநாற்றம் முதலாயின.

உ-ம்: காக்கையிற் கரிது களம்பழம், இதனின் வட்டம் இது, இதனின் நெடிது இது, இதனிற்றீவிதிது. இதனிற்றண்ணிதிது, இதனின் வெய்திது, இதனினன்றிது, இதனிற்றீதிது, இதனிற் சிறிதிது, இதனிற் பெரிதிது, இதனின் வலிதிது, இதனின் மெலி திது, இதனிற் கடிதிது, இதனின் முதிதுஇது இதனின் இளை திது, இதனிற் சிறந்ததிது, இதனின் இழிந்ததிது, இதனிற் புதிதிது, இதனிற் பழைதிது, இவனின் இலன் இவன், இவனின் உடையன் இவன், இதனின் நாறும் இது, இதனிற் பல இவை, இதனிற் சில இவை எனவும்; அச்சம் கள்ளரின் அஞ்சும் எனவும்; ஆக்கம் வாணிகத்தினான் ஆயினான் எனவும்; தீர்தல் ஊரிற்றீர்ந்தான் எனவும்; பற்றுவிடுதல் காமத்திற் பற்று விட்டான் எனவும் வரும்.

அச்சம் முதலிய நான்கும் ஒழித்து, ஒழிந்த இருபத்து நான்கும் ஒத்த பண்பு வேறுபாடு பற்றிப் பொரூஉப் பொருள் விரித்த வாறு.

'அன்ன பிறவும்' என்றதனால், அவனின் அளியன் இவன், அதனிற் சேய்த்திது, இகழ்ச்சியிற் கெட்டான், மகிழ்ச்சியின்மைந் துற்றான் என்பன போல்வன கொள்க.

பலவாய்பாட்டோடு வழக்கின்கட் பயின்று வருதல் உடைமையாற் பொரூஉப் பொருள் இதற்குச் சிறப்புடைத்தாக லின் பெரும்பான்மையும் அதனையே விரித்தார்.

தெய்.

("ஐந்தாகுவதே.........என்னு மதுவே")

ஐந்தாம் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஐந்தாம் வேற்றுமையாவது இன் என்று பெயர் கொடுத் தோதப்பட்ட வேற்றுமைச் சொல்; அஃது இப்

பொருளின் இத்தன்மைத்து இப்பொருள் என உணர்த்தும், எ-று.

எனவே இவ்வாய் பாட்டான் வரும் பொருண்மை யெல்லாம் ஐந்தாவதாம், எ-று.

அவையாவன : நீங்க நிற்பதூஉம், பொருவும், ஏதுவும், என்பன. அவற்றுள் நீங்க நிற்பது பொருள் நீங்கி நிற்பதூஉம் இடம் நீங்கி நிற்பதூஉம் என இருவகைப்படும். பொருவும் மிகுதலும் குறைதலும் ஒத்தலும் என மூன்று வகைப்படும். அவற்றுள் பொருவும் ஏதுவும் வருகின்ற 'சூத்திரத்தால் கூறுத லானும், 'பல் பொருட் கேற்பின் நல்லது கோடல்என்பதனானும்' [1]இச்சூத்திரம் 'நீங்க நிற்பது' குறித்தது என்பது கொள்ளப்படும்.

உ-ம்: வரையினின்று வீழாநின்றது அருவி.

("வண்ணம்......அதன் பால என்மனார்")

ஐந்தாம் வேற்றுமைப் பொருள் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: வண்ணம் முதலாகப் பற்று விடுதல் ஈறாக ஓதப் பட்டனவும் அத்தன்மைய பிறவும் ஐந்தாம் [2]வேற்றுமை யாவன, எ—று.

யாதானும் ஒன்றைப் பொருவிக் கூறும்வழி, பண்பினாதல், தொழிலினாதல், பொருளினாதல் கூறல் வேண்டுதலின் அவை யெல்லாம் எடுத்தோதப்பட்டன.

உ-ம்: இதனிற் கரிது, இதனின் வட்டம், இதனின் நெடிது, இதனிற் கைக்கும், இதனிற்றண்ணிது, இதனின்வெய்து, இதனின் அஞ்சும், இதனின் நன்று, இதனிற்றீது, இதனிற் சிறிது, இதனிற் பெரிது, இதனின் வலிது, இதனின் மெலிது, இதனிற் கடிது,

---

1. முன்னர் 'எனவே இவ்வாய் பாட்டான்......ஐந்தாவதாம் எ-று' எவிறவர் 'இச்சூத்திரம் நீங்க நிற்பது குறித்தது' என்று கூறுவதுமாறு பாடுடையது போல் தோன்றினும் முன்னர் உரைத்தது பொதுக்கருத்து ; பின்னர் உரைத்தது சூத்திரச் சிறப்புக் கருத்து எனக் கொள்க. மற்றையோர் பொரூஉ என்றோ பொரூஉவும் எல்லையும் என்றோ கொள்ள இவர் நீங்கல் ஒன்றே இச்சூத்திரம் உணர்த்தும் பொருளாகக் கொண்டார்.
2. வேற்றுமைப்பாலன — (பாடம்).

இதனின் முதிது, இதனின் இளைது இதனிற் சிறந்தது, இதனின் இழிந்தது, இதனிற் புதிது, இதனிற் பழைது: இதனின் ஆக்கம், இவனின் இலன் இவனின் உடையன், இதனின் நாறும், இதனிற் நீரும், இவரிற் பலர் இவர், இவற்றிற் சில ஏறும், இதனிற் பற்று விடும்.

அன்ன பிறவும் என்றதனான் இவனிற் காக்கும், இவனிற் பண்ணும், இவனிற் பாடும் என வருவன கொள்க. இவற்றுட் பெரிது என்பது மிகுதி குறித்து நின்றது. ஏனையவும் இவ்வாறு நோக்கிக் கொள்க. இவையெல்லாம் ஒப்புக் குறித்துழி உவமையாம். ஏதுக்குறித்துழிக் கரிதாயிற்று, வட்டமாயிற்று என உதாரணங் காட்ட உருபேற்ற பொருளெல்லாம் ஏதுவாம்.

* நச்.

("ஐந்தாகுவதே......என்னுமதுவே")

இது, முறையானே ஐந்தாவது இப்பொருட்கண் வரும் என்கின்றது.

இ-ள்: இன் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி ஐந்தாகுவதே—மேல் இன் எனப் பெயர் கொடுத்தோதிய வேற்றுமைச் சொல் ஐந்தாவதாம், அது இதனின் இற்று இது என்னும்—அஃது இப்பொருளின் இத்தன்மையாய் இருக்கும் இப்பொருள் என்னும் பொருண்மையை யுணர்த்தும், எ—று.

ஐந்தாவது பொருவும் எல்லையும் நீக்கமும் ஏதுவும் என நான்கு வகைப்படும். பொரு, உறழ் பொருவும் உவமப் பொருவும் என இரு வகைப்படும் உறழ்தல் ஒன்றனான் ஒன்றை மிகுத்தல். ஏதுவும் ஞாபக ஏதுவும் காரக ஏதுவும் என இரு வகைப்படும். ஞாபக ஏது முன் கூறிற்று. காரக ஏது 'அச்சம் ஆக்கம்' என்பன வற்றால் பெறப்படும். நீக்கப் பொருண்மை 'தீர்தல் பற்று விடுதல்' என்பனவற்றால் பெறப்படும். ஏனை யிரண்டும் இதனின் இற்றிது' என்பதனால் பெறப்படும், அவ்விரண்டனை, யும் அஃது இருமுறையான் உணர்த்தும் ஆதலின். எல்லைப் பொருள் கருவூரின் கிழக்கு இவ்வூர், இதனின் ஊங்கு எனவரும். இவையும் இற்று என்னும் பொருள்.

("வண்ணம்......அதன்பால என்மனார்")

இஃது, அதனை முடிக்க வரும் பொருள் வேறுபாடு கூறுகின்றது.

---

* இவர் உரை சேனாவரையரைத் தழுவியது. கல்லாடனாரும், ஒருவரும் அங்ஙனே கூறுவர்.

இ-ள்: வண்ணம்...விடுதல் என்று—வண்ணம் முதலாகப் பற்றுவிடுதல் ஈறாகச் சொல்லப்பட்ட பொருள்களும், அன்ன பிறவும் அதன்பால என்மனார்—அவை போல்வன பிற பொருள் களும் ஐந்தாம் வேற்றுமைத் திறத்தன என்று கூறுவர் புலவர் எ-று.

வண்ணம் வெண்மை கருமை முதலியன. வடிவு வட்டம் சதுரம் முதலியன. அளவு நெடுமை குறுமை முதலியன. சுவை கைப்பு புளிப்பு முதலியன. நாற்றம் நறுநாற்றம் தீநாற்றம் முதலியன.

உ-ம்: காக்கையிற் கரிது களம்பழம்; இதனின் என்பது, காக்கை; இற்று என்பது கரிது, இது என்பது களம்பழம். இதனின் வட்டம் இது; இதனின் நெடிது இது; இதனின் தீவிது இது; இதனின் தண்ணிது இது; இதனின் வெய்யது இது; இதனின் நன்று இது; இதனின் தீது இது; இதனின் சிறிது இது; இதனின் பெரிது இது; இதனின் வலிது இது; இதனின் மெலிது இது; இதனின் கடிது இது; இதனின் முதிது இது; இதனின் இளைது இது; இதனின் சிறந்தது இது; இதனின் இழிந்தது இது; இதனின் புதிது இது; இதனின் பழைது இது; இவனின் இலன் இவன்; இவனின் உடையன் இவன்; இதனின் நாறும் இது; இதனிற் பல இவை; இதனிற் சில இவை. இவற்றிற்கு இருவகைப்பொருளும் விரிக்க. அச்சம், கள்ளரின் அஞ்சும்; ஆக்கம், வாணிகத்தின் ஆயினான்: ''கோட்டிற் செய்த கொடிஞ்சி நெடுந்தேர்'' (பொரு. 163) என்பதும் அது. நீத்தல், ஊரிற்றீர்ந்தான், தலையின் இழிந்த மயிர் அனையர் (குறள். 964) எனவரும். பற்றுவிடுதல் காமத்திற் பற்று விட்டான் என வரும்.

'அன்ன பிறவும்' என்றதனான் அவனின் அளியன் இவன், அதனிற்சேய்த்து இது; இகழ்ச்சியிற் கெட்டான் (குறள்.539). மகிழ்ச்சியின்மைந்துற்றான் (குறள் 539) என்பன போல்வன கொள்க.

கல்.

என்னுதலிற்றோ வெனின், நிறுத்த முறையானே ஐந்தாம் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஐந்தாம் எண்ணுமுறைமைக் கண்ணதாகிய இன் என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல் இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருள் என வரூஉம் பொரூஉப் பொருளினைத் தனக்குப் பொருளாக வுடைத்து; அதுவரு மாற்றை விரிப்பின், வண்ணம் முதலாகப் பற்றுவிடுதல் ஈறாகச் சொல்லப் பட்ட இப்பொருண்மைகளும் பிற பொருண்மைகளும் அவ்வைந்தாவதின் கூற்றன என்று சொல்லுவர் புலவர்; என்றவாறு.

இனி ஐந்தாவது பொரூஉப் பொருளும், நீக்கப் பொருளும் எல்லைப் பொருளும், ஏதுப்பொருளும் என நால்வகைய. அவற்றுள் பொரூஉப் பொருள் சிறப்புடைமையின் முன்னர் எடுத்தோதப் பட்டது. பொரூஉ என்பது ஒன்றை யொன்றின் மிகுத்துக் கூறல். இதனின் ஒழிவாகிய உவமமும் [1]இரட்டுற மொழிதல் என்னும் ஞாபகத்தான் ஈண்டே கொள்ளப்படும். நீக்கம் உதாரணப்பகுதி கூறுகின்ற வழிக்கொள்ள வைத்தார் என்பது. எல்லையும எதுவும் அன்ன பிறவாற் கொள்ளவைத்தார் எ-று.

உ-ம்: காக்கையிற் கரிது களாம்பழம் என்றாற் போல்வன; இதனின் என்பது காக்கையின் என்பது; இற்று என்பது கரிது என்பது; இது என்பது களாம்பழம் என்பது; என்றது காக்கை யினும் கரியது களாம்பழம் என்று மிகுத்துக் கூறியவாறாயிற்று; உவமத்திற்கும் இதுவே யுதாரணமாம். காக்கையைப் போலக் கரிது களாம்பழம் என்றவாறாம்.

இனி வண்ணம்என்பது ஐந்துவகைப்படும்; கருமை முதலியன வாம். உ-ம்: காக்கையிற் கரிது களாம்பழம் என்றாற் போல்வன.

வடிவென்பது முப்பத்திரண்டு வகைத்து; அவை வட்டம் சதுரம் கோணம் முதலியன. உ-ம்: இதனின் வட்டம் இது என்பது

அளவு: நெடுமை குறுமை நீளம் எனப்பலவாம் இதனின் நெடிதிது என்பது.

சுவை அறுவகைப்படும். அவை கைப்பு முதலாயின. இதனிற்றீவிது இது என்பது.

---

1. இரட்டுற மொழிதல் என்னும் உத்தியான் என்பதையே ஞாபகத்தான் என்றார்.

தண்மை : இதனிற்றண்ணிது இது என்பது.
வெம்மை : இதனின் வெய்யது இது என்பது.
அச்சம் ; கள்ளரின் அஞ்சும் என்பது. இஃது ஏது வின்கண்ணும் வரும்
நன்மை : இதனின் நன்று இது என்பது.
தீமை : இதனிற்றீது இது என்பது.
சிறுமை : இதனிற் சிறிது இது என்பது.
பெருமை : இதனிற் பெரிது இது என்பது.
வன்மை : இதனின் வலிது இது என்பது
மென்மை : இதனின் மெலிது இது.
கடுமை : இதனிற் கடிது இது என்பது.
முதுமை: இதனின் மூத்தது இது, இவனின் மூத்தோன் இவன் என்பன.
இளமை : இவனின் இளையோன் இவன் என்பது. இதனின் இளைதிது, முதிது எனவரும்.
சிறத்தல் : இவனிற் சிறந்தவன் இவன், இதனிற் சிறந்தது இது என்பன.
இழித்தல் : இவனின் இழிந்தவன் இவன், இதனின் இழிந்தது இது என்பன.
புதுமை : இவனிற் புதியன் இவன் இதனிற் புதிது இது என்பன.
பழமை : இவனிற் பழையன் இவன், இதனிற் பழைது இது என்பன.
ஆக்கம் : இவனின் ஆயினான் இவன், வாணிகத்தின் ஆயினான் இவன் என்பன. இது ஏதுப் பொருட்கண்ணும் வரும்

இன்மை : இவனின் இலன் இவன் என்பது.
உடைமை : இவனின் உடையன் இவன் என்பது.
நாற்றம் : இதனின் நாறும் இது என்பது.
இவையெல்லாம் பொரூஉப் பொருளவாம்.
தீர்தல் : ஊரிற்றீர்ந்தான் என்பது.
பன்மை : இவரிற்பலர் இவர், இதனிற் பல இவை என்பன.
சின்மை : இவரிற் சிலர் இவர், இதனிற் சில இவை என்பன. இவையும் பொரூஉப் பொருளனவாம்.
பற்றுவிடுதல் : ஊரிற்பற்று விட்டான், காமத்திற் பற்று விட்டான் என்பன. இவை நீக்கம்.

மருவூரின் மேற்கு, கருவூரின் கிழக்கு என்பன இவை எல்லைப் பொருளனவாம்.

முயற்சியிற் பிறத்தலின் இசை நிலையாகாது என்பது ஏதுப் பொருளது.

[1]'அன்ன பிறவும்' என்றது எடுத்தோதினது பொரூஉப் பொருளின் பாகுபாட்டினும், நீக்கப்பொருளின் பாகுபாட்டினும் ஒழிந்தவற்றிற்கும் பிறபொருட் பாகுபாட்டிற்கும் புறனடையென வுணர்க.

ஒரு.

(''ஐந்தாகுவதே......என்னுமதுவே'')

என்பது மேல் இன் எனப் பெயர் கொடுத் தோதப்பட்ட வேற்றுமைக் கிளவி ஐந்தாவது; அஃது இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருள் என்னும் பொருண்மையை யுணர்த்தும். ஐந்தாவது பொருவும் எல்லையும் நீக்கமும் ஏதுவும் என்று நான்கு பொருண்மைத்து. அவற்றுட் பொரு இருவகைப்படும். உறழ்பொருவும் உவமைப் பொருவும் என. உறழ்தல் ஒன்றின் ஒன்றை மிகுத்தல். ஏதுவும் இரு வகைப்படும், ஞாபக ஏதுவும் காரக ஏதுவும் என. அவற்றுள் ஞாபக ஏதுப் பொருண்மை மேலே கூறப்பட்டது. காரக ஏதுப் பொருண்மை 'அச்சம் ஆக்கம்' என்பவற்றாற் பெறப்படும். நீக்கப் பொருண்மை தீர்தல், பற்று விடுதல் என்பனவற்றாற் பெறப்படும். ஏனையிரண்டும் 'இதனின் இற்றிது' என்பதனாற் கொள்ளப்படும், அஃது இரு முறையான் உணர்த்தும் ஆகலான். எல்லைப் பொருள் கருவூரின் கிழக்கு, இவ்வூர் இதனினூங்கு உளது. கிழக்கு, ஊங்கு என்பன அவை வினைக்குறிப்பல்லவேனும் 'இற்று' என்னும் பொருள்பட நிற்றலின் இற்று என்றவேயாம். பொரூஉப் பொருட்குதாரணம் முன்னர்க் காட்டுதும்.

(''வண்ணம்...அதன்பால என்மனார்'')

என்பது வண்ணம் முதலாகப் பற்று விடுதல் ஈறாகச் சொல்லப்பட்டனவும் அவை போல்வன பிறவும் ஐந்தாம் வேற்றுமைத் திறத்தனவாம் என்று கூறுவர்.

---

1. இளம்பூரணரைத் தழுவியது.

வண்ணம் வெண்மை கருமை முதலாயின. வடிவு வட்டம் சதுரம் முதலாயின. சுவை கைப்பு புளிப்பு முதலாயின. நாற்றம் [1]பூதி நாற்றம், என்பு நாற்றம் முதலாயின.

உ-ம்: காக்கையிற் கரிது களம்பழம் என்புழி இதனின் என்பது, காக்கையின்; இற்று என்பது கரிது; இதுவென்பது களம்பழம். இதனின் வட்டம் இது; இதனிற் சிறிதிது. இதனிற் பெரிதிது; இதனின் வலிதிது; இதனின் மெலிதிது; இதனிற் கடிதிது; இதனின் முதிதிது; இதனின் இளைதிது; இதனிற் சிறந்ததிது; இதனின் இழிந்ததிது; இதனிற் புதிதிது; இதனிற் பழைதிது; இவனின் இலன் இவன்; இவனின் உடையன் இவன்; இதனின் உறும் இது; இதனிற் பல இவை; இதனிற் சில இவை. இவற்றிற்கு இருவகைப் பொருவும் விரிக்க. அச்சம் கள்ளரின் அஞ்சும். ஆக்கம் வாணிகத்தின் ஆயினான். தீர்தல் ஊரிற்றீர்ந் தான், தலையின் இழிந்த மயிரனையர் (குறள். 964).பற்றுவிடுதல் காமத்திற் பற்றுவிட்டான் என வரும்.

அன்னபிறவும் என்றதனால் அவனின் அளியன் இவன், அதனிற் சேய்த்து இது இகழ்ச்சியிற் கெட்டான், மகிழ்ச்சியின் மைந்துற்றான் என்பன போல்வன கொள்க. அவற்றுட் பொரூஉப்பொருள் பெருஞ்சிறப்பிற் றாகலான் முன் வைத்துப் பல வாய்பாற்டான் விரித்தார்.

ஆதி.

இதனின் இது இற்று என்பது ஒன்றுடன் ஒனறைத் தொடர்பு படுத்தி—எனப் பொருளாம்.

உ-ம்: அவனின் மிக்கான் இவன்.

சென்னையின் தெற்கில் திருவான்மியூர்.
செல்வத்தில் மிக்கார் சிறப்படைவர்.
குயிலின் கரியது காக்கை.
சதுரத்தின் வட்டமே சிறந்தது.
அரையின் மிக்கது முக்கால்.
மிட்டாயின் இனிப்பது தேன்.
நீரின் தண்ணியது பனிக்கட்டி.
வெயிலின் வெய்யது தீ.

---

1. பூதி—புழுதி, விபூதி. என்பு—எலும்பு

தீயின் அஞ்சற்குரியவர் தீயர்.
அறிஞரின் நல்லவர் அறவோர்.
பேதையின் தீயவன் கயவன்.
கடுகின் சிறியது தினை.
விலங்கிற் பெரியது யானை.
பொன்னின் வலியது இரும்பு.
பஞ்சின் மெல்லியது மலர்.
அடியின் கடியது கடி.
பெதும்பையின் மூப்பு மடந்தை.
மடந்தையின் இளமை மங்கை.
செய்யுளிற் சிறந்தவர் கம்பர்.
அழிவின் இழிவு வறுமை.
அரும்பினும் புதுமை தருவது மலர்.
யாவினும் பழையது பரம்பொருள்.
செல்வத்தின் ஆக்கம் கல்வி.
இன்மையின் இன்மை விருந்து ஒழிப்பு.
உடைமையின் உடைமை அறிவுடைமை.
மலரினும் மணப்பது புகழ்.
அச்சத்தினும் தீர்க்க வேண்டியது அழுக்காறு.
பாண்டவரின் பலர் கௌரவர்.
வறியரின் சிலர் செல்வர்.
பணத்தின் பற்று பாழ்படுத்தும்.
வெறுப்பின் துறவு நிலைக்காது.

ஆசிரியர் இவ்வாறு பாரித் துரைத்ததை நன்னூலார் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என நான்கு மட்டும் கூறித் தெளிவாகவும் சுருக்கமாகவும் காட்டினார். (நன். 293)

ஆய்வு: ஆல் ஆன் உருபுகளைத் தொல்—ஆசிரியர் சொல்லாமல் விடுத்தது ஒரு குறையே. நன்னூலார் அதனை ஐந்தொடு சேர்க்காமல் மூன்றனொடு சேர்த்ததும் குறையே. இன்—ஆல் எனப் பெரிதும் ஏதுப் பொருள் தரல் கண்டு அன்பர்கள் நன்கு ஆராய வேண்டுகிறோம்.

மு. வரதராசனார்

வேற்றுமைப் பொருள் வேறு; அப்பொருளை யுணர்த்த வரும் உருபு வேறு. இந்த வேறுபாட்டை யுணர்தல் இன்றியமையாதது. திராவிட மொழிகளில் கருவிப் பொருளை மூன்றாம் வேற்றுமை யென்றும், இடப்பொருளை ஏழாம் வேற்றுமை

யென்றும் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இடத்தில் இருத்தலையே ஏழாம் வேற்றுமை குறிக்கின்றது. இடத்திலிருந்து நீங்குதலை (நீங்கற் பொருளை) ஐந்தாம் வேற்றுமை குறிக்கின்றது. இதுவே இலக்கண நூலார் ஐந்தாம் வேற்றுமைக்கும் ஏழாம் வேற்றுமைக்கும் கூறும் வேறுபாடாகும். ஆனால் ஏழாம் வேற்றுமைக்குரிய 'இல்' உருபே இங்கும் வருகின்றது என்பதையும், நீங்கற் பொருளைக் குறிக்க வேறு வினைச் சொற்கள் வேண்டியிருக்கின்றன என்பதையும் மறுப்பார் இல்லை. எனவே ஐந்தாம் வேற்றுமையில் நீங்கற் பொருளுக்கென ஓர் உருபு இல்லை என்பது வெளிப்படை. 'இல்' உருபையே யன்றி மற்ற ஏழாம் வேற்றுமை உருபுகளையும் இவ்வாறு நீங்கற் பொருள் தரும் வினைச் சொற்களைச் சேர்த்து ஐந்தாம் வேற்றுமை யாக்கலாம். எனவே இவ்விரு வேற்றுமைகளும் வேறு வேறு எனக் கொள்வது பயனற்றுப் போகின்றது.

மரத்தில் உள்ளது—மரத்ின்கண் உள்ளது

மரத்திலிருந்து வீழ்ந்தது—மரத்தின்கண் நின்று வீழ்ந்தது.

இவற்றில் வினைச் சொற்களே நீங்கற் பொருள் தர வல்லன; இடப்பொருளை ஏழன் உருபே தரவல்லது என்பது விளங்கும்.

ஒப்புப் பொருளும் எல்லைப் பொருளும் இடப்பொருளோடு தொடர்புள்ளவை.

இம்மூன்று பொருளல்லாத கருவிப் பொருள் மூன்றாம் வேற்றுமையாதலின், ஐந்தாம் வேற்றுமையென உருபு வேறுபாடு பற்றித் தனியே வகுத்தல் பயனற்றது. இவற்றை ஆராய்வார்க்கு ஓர் உண்மை விளங்கும். அதாவது:—

திராவிடமொழியில் வேற்றுமைகளை எட்டாகப் பாகுபாடு செய்தது. திராவிட மொழியியலுக்கு ஒத்ததன் றென்பதாகும். எனவே வடமொழியியல் வேற்றுமை எட்டாதல் கண்ட இலக்கணப்புலவர் தமிழிற்கும் அம்முறையை வகுத்து விட்டனர் என்பர் கால்டுவெல்.* (மொழிநூல். பக். 177, 178)

**சிவ.**

தொல்காப்பியர் காலத்தில் ஐந்தாம் வேற்றுமை யுருபு இன் மட்டும்; ஏழாம் வேற்றுமையுருபு கண் மட்டும் இருந்தன.

---

* டாக்டர் மு. வரதராசனார் மொழிநூல், கழகப் பதிப்பு (1970)

பின்னரே இன் என்பதும் அதன் திரிபாகிய இல் என்பதும் ஐந்தாவதற்கும் ஏழாவதற்கும் உருபாயின. பிற்கால வழக்கை வைத்துப் பேசுவது தொல்காப்பியர் காலத்துக்கு ஒவ்வாது; எனினும் பிற்கால வழக்கை வைத்தே பார்க்குமிடத்தும் அவ் விரண்டு வேற்றுமைகளின் இன்றியமையாமை விளங்கும்.

மரத்தின் இருந்தது—ஏழாம் வேற்றுமை

மரத்தின் வீழ்ந்தது—ஐந்தாம் வேற்றுமை

இவற்றில் இன்என்பது (சாரியையன்று) ஏழாவதும் ஐந்தாவதும் தருவதோர் உருபு எனக் கொள்வோம். மரத்தின் இருந்தது என்பதில் இருத்தற்கு மரம் இடமாக அமைந்தது. மரத்தின் வீழ்ந்தது என்பதில் வீழ்தற்கு இடம் மரம் ஆகாது. மரத்தில் முன்னமேயே இருந்த ஒன்று வீழ்ந்தது என வருதலின் மரத்துக் கும் அப்பொருளுக்கும் உள்ள பிரிவையே-நீக்கத்தையே வீழ்ந்தது என்பது காட்டுகிறது. மரத்தின் இடமாக இருந்து வீழ்தலின் மரம் என்பது இடத்தைக் குறிக்கும் என்ற கருத்தில் கால்டுவெல் கூறினார் ஆனால் தொடர் அமைப்பை நோக்கின்—பொருள் தருமாற்றை நோக்கின் மரத்தின் வீழ்ந்தது என்பதில் இடநோக்கம் இன்றிப் பிரிவு—நீங்கல் நோக்கமேயிருப்பது புலப் படும். வேற்றுமைப் பொருள் யாவும் பின்வரும் வினை அல்லது பெயர்ச் சொற்களின் பொருளமைதி கொண்டே விளக்கப்படுவன என்பதை மறத்தல் கூடாது.

இவ்வாறே ஒப்பு, எல்லை, ஏது (கருவி)ப் பொருள்களையும் வேறுபாடு அறிந்து அமைக்க.

**தே. ஆண்டியப்பன்**

கள்ளரின் அஞ்சும், வாணிபத்தின் ஆகும் என்பவை ஏது குறித்து வரும். ஆனால் இவை 'இதனின் இற்று இது' என்னும் வடிவில் அமையவில்லை. கள்ளரை யஞ்சும், வாணிபத்தால் ஆகும் என்று பிறவேற்றுமையிலும் வருபவையாகும்.*

---

* கள்ளரை யஞ்சும், கள்ளர்க்கு அஞ்சும், கள்ளரின் அஞ்சும் என்பனவற்றைக் கள்ளரைக் கண்டு அஞ்சும், கள்ளர்க்கு (பொதுவான தன்மை குறித்து) அஞ்சும், கள்ளரின் கொடுமை காரணமாக அஞ்சும் எனப் பொருள் கொள்வதற்கு ஏற்ப வேற்றுமைப் பொருளைக் கொள்ளவேண்டும். கள்ளரின் காரணமாக ஒருவன் அச்சம் ஆகிய இதைக் கொள்ளும் என விரித்துக் கண்டால் 'இதனின் இற்று' என்னும் வடிவில் அமைவ தைக் காணலாம். இதனின் இற்று என்பது வாய்பாடு; இவரின் இவர் முதலியவும் அடக்கியது அது. —சிவ.

பேரமர் உண்கண் இவளினும் பிரிக, தென்புலங் காவலின் ஒரீஇ, காமத்திற்பற்று விட்டான் என்னுந் தொடச்சுத்தன நீக்கம் குறித்து நிற்பவை. இவையும் பொது வடிவோடு பொருந்தி வர வில்லை. †இற்று என்னுமிடத்தில் பிறவினைகளையும் அமைத்துக் கொள்ளின் ஓரளவு பொருந்தும். எ—டு: காவலின் ஒரீஇ நின்றான்.

ஆறாம் வேற்றுமையும் பொருளும்.

76. ஆறா குவதே
யதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினு மிதன திதுவெனு
மன்ன கிளவிக் கிழமைத் ததுவே
இயற்கையி னுடைமையின் முறைமையின் கிழமையின்
செயற்கையின் முதுமையின் வினையி னென்றா
கருவியிற் றுணையிற் கலத்தின் முதலி
னொருவழி யுறுப்பிற் குழூஉவி னென்றா
தெரிந்துமொழிச் செய்தியி னிலையின் வீழ்ச்சியின்
றிரிந்துவேறு படூஉம் பிறவு மன்ன
கூறிய மருங்கின் தோன்றுங் கிளவி
யாறன் பால வென்மனார் புலவர். (14)

(ஆறுஆகுவதே
அது எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதனது இது எனும்
அன்ன கிளவிக் கிழமைத்து அதுவே;
இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்
செயற்கையின் முதுமையின் வினையின் என்றா
கருவியின் துணையின் கலத்தின் முதலின்
ஒருவழி யுறுப்பின் குழூஉவின் என்றா
தெரிந்துமொழிச் செய்தியின் நிலையின் வீழ்ச்சியின்
திரிந்துவேறு படூஉம் பிறவும் அன்ன
கூறிய மருங்கின் தோன்றும் கிளவி
ஆறன் பால என்மனார் புலவர்.)

---

† தேவையான வினைகளை அமைத்துப் பொருள் காணுவதே நன்று.

* இச்சூத்திரத்தின் முன்னைய நான்குவரிகளை ஒரு சூத்திரமாகவும், பின்னைய வரிகளை ஒரு சூத்திரமாகவும் கொள்வர், இளம்பூரணரை யொழிந்த மற்றையுரை யாசிரியர்,

ஆ. மொ.
இல.

The sixth one is the case which is termed as 'athu' which denotes the relationship in things, attached inseparably or separably.
The scholars say that the words which indicate the relationship towards nature, possession, kinship, connection, activity, maturity, occupation, instrument, association, document, capital, limb, group, composition, state, residence,
and such others comprise the species of relation.

க. சு.

The sixth
is the case which is named—atu.
It denotes the relation (Kilamai) between things
(which are) either inseperable or separable.
Scholars say that the sixth case denotes
the nature, possession, kinship, relationship,
action, maturity, occupation,
instrument, association, document, capital,
limb, group, composition,
state, residence, and such others
that come under the category of the species of relation.

பி. இ. நூ.

வீர. 35

ஆன் ஆள் ஆர் அள் அது இன் ஆறிற்கு உடைப்பின்குவ்வேல்.
நூல்நாடிய பதமா நுவல் ஆதாரம்.

நேமி. 19.

அது என்பது ஆறாம் உருபாம் இதனது
இதுஎன் கிழமை இரண்டெய்தும்.

நன். 300.

ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
புன்மைக் கவ்வும் உருபாம் பண்புஉறுப்பு

ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபின் ஆக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

**தொன்.** 61. ஷை ஷை

**இல.** 203.

ஆறன் ஒருமைக் கதுவும் ஆதுவும்
பன்மைக் கவ்வும் உருபாம் பண்புறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபின் ஆக்கமாந் தற்கிழமையும்
பொருளிடம் காலமாம் பிறிதின் கிழமையின்
இதனது இதுவென வருஉம் அதனது பொருளே.

**இ. கொ.** 40, 41

ஒற்றுமை வேற்றுமை உரைக்கப் படும்குறை
ஒற்றுமை ஆவதோர் பொருளே யாகும்
ஒன்றாய்த் தோன்றல் உரிமையாய்த் தோன்றல்
வேறாய்த் தோன்றல் எனவேற் றுமையாம்
ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபின் ஆக்கம் சினைகுணம் தொழில்என
ஓர்அறு வகையாம் ஒன்றாய்த் தோன்றல்
பொருளிடம் காலம் இருவகை நூலென
உரிமையாய்த் தோன்றல் வேறிடத் துச்செலும்
நிலைமையில் உடைமைகள் பலவும் ஆகும்
குறையை இன்னும் கூறிற் பெருகும்.

**முத்து** வெ. 63, 64

ஒருமைக்கு அதுவும் ஆதுவும் பன்மைக்கு
அவ்வும் ஆறாவதற்குரு பாகும்.
அதன்பொருள் குணம்உறுப்பு ஒன்றன் கூட்டம்
திரிபின் ஆக்கமொடு பலவின் ஈட்டமாம்
தற்கிழ மையும் பிறிதின் கிழமையும்
ஆகும் என்மனார் அறிந்திசி னோரே.

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், முறையானே ஆறாம் வேற்றுமை யுணர்த்துதல் நுதலிற்று.

உரை: ஆறாம் எண்ணு முறைக்கண்ணது அது என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல், தன்னொடு தொடர்ந்த தோர், பொருளையும் தன்னின் வேறாயதோர் பொருளையும் 'இதனது இது' என்று கிழமை செப்பி நிற்றல் ஆறாம் வேற்று மையது இலக்கணம் என்றவாறு. அதுவே என்பது அப்பொருளை விரிப்பான் தெரித்தவாறு.

[1]'இதனது இது' என்னும் கிளவிக் கிழமைத்து என்னாது, 'அன்ன' என்றதனான், இதற்குப் பிறிதும் ஒரு பொருள் உண்டு என்க. அஃதியாதோ வெனில், அவன, அவள என்னும் ஈற்றகரம்.

தன்னினும் என்புழித் தற்கிழமை ஐந்து வகைப்படும். ஒன்று பல குழீஇய தற்கிழமையும், வேறு பல குழீஇய தற்கிழமையும், ஒன்றியற் கிழமையும், உறுப்பின் கிழமையும், மெய் திரிந்தாய கிழமையும் என.

ஒன்று பலகுழீஇய தற்கிழமையது: எட்குப்பை என்பது.

வேறு பல குழீஇய தற்கிழமையது: படையது குழாம் என்பது.

ஒன்றியற் கிழமையது: நிலத்தினது அகலம் என்பது.
உறுப்பின் கிழமையது: யானையது கோடு என்பது.
மெய் திரிந்தாய கிழமையது: எள்ளினது சாந்து என்பது.
[2]பிறிதின் கிழமை இதுபோலப் பகுதிப்படாது.
இனி, அவ்விரண்டு கிழமையும் ஒட்டுமாறு காட்டுதும்.

இயற்கை: சாத்தனது இயற்கை என்பது.
உடைமை: சாத்தனது உடைமை என்பது.
முறைமை: ஆவினது கன்று என்பது.
கிழமை: சாத்தனது கிழமை என்பது.

---

1. 'இதனது இது' என்பது 'இதன இவை' என்பதையும் அடக்கியது எனக்கொண்டு, இதனதுஇது என்பதுஒருமைக் குரியதாகவும் 'இதனஇவை' என்பதைப் பன்மைக் குரியதாகவும் கொண்டு இவ்வாறு எழுதினார். அவன, அவள என்பனபன்மை. அவன கைகள் எனவரும்.
2. சேனாவரையர் முதலியோர் பகுதிப்படும் என்பர். அவர் தம் உரைகளிற் காண்க. கல்லாடனார், இளம்பூரணர் கருத்தினர்.

செயற்கை: சாத்தனது செயற்கை என்பது.
முதுமை: அவனது முதுமை என்பது.
வினை: அவனது வினை என்பது.
கருவி: சாத்தனது வாள் என்பது.
துணை: அவனது துணை என்பது.
கலம்: சாத்தனது கலம் என்பது. கலம் என்பது [3]ஒற்றிக் கலத்தை.

முதல்: சாத்தனது முதல் என்பது.
ஒருவழியுறுப்பு: யானையது கோடு என்பது.
குழூஉ: படையது குழூஉ என்பது. சாத்தனது சொல் என்பதும் அது.
தெரிந்து மொழிச் செய்தி: கபிலரது பாட்டு என்பது.
நிலை: சாத்தனது நிலை என்பது.
வாழ்ச்சி: சாத்தனது வாழ்ச்சி என்பது.
திரிந்து வேறுபட்டது: எள்ளினது சாந்து என்பது. சாத்தனது சொல் என்பது மது.

பிறவும் என்பது புறனடை. கூறிய மருங்கிற் றோன்றும் கிளவி ஆறன்பால என்பது, இரு கிழமையும் பற்றி வருவனவும் பிறவும் அதன்பால என்றவாறு.

சேனா.

'ஆறாகுவதே......கிழமைத்ததுவே'')

இ-ள்: அதுவெனப் பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச் சொல் ஆறாவதாம். அது உடையதாய் நிற்கும் தன்னானும் பிறிதொன்றானும் இதனது இது என்பது பட நிற்கும் கிளவியிற் றோன்றும் கிழமைப் பொருளாக வுடைத்து, எ—று.

எனவே, ஆறாவது கிழமைப் பொருட்டென்றும், அக்கிழமை தன்னான் வந்த தற்கிழமையும் பிறிதான் வந்த பிறிதின் கிழமையும் என இரண்டென்றும் கூறியவாறாம்.

[4]தன் என்றது தன்னோடு ஒற்றுமையுடைய பொருளை; பிறிது என்றது தன்னின் வேறாய பொருளை.

---

3. இக்காலத்துப் போக்கியப் பத்திரம். இதற்குக் கல்லாடனார் விளக்கம் பார்க்க.
4. தனது கை என்பது தன்னோடு ஒற்றுமையுடையது. தனது ஆடை என்பது தன்னோடு பிறிதாயது.

அஃதேல் தன்னினும் பிறிதினும் ஆகிய கிழமைத்து என்னாது 'இதனது இது எனும் அன்ன கிளவிக் கிழமைத்து' என்றது என்னையெனின், பொருட் கிழமையும், பண்புக் கிழமையும், தொழிற் கிழமையும், அவை போல்வனவும் எனக் கிழமை தாம் பல. [2]அவற்றுள் ஒன்று சுட்டாது 'இதனது இது' என்னும் சொல்லாற் றோன்றும் கிழமை மாத்திரம் சுட்டும் என்றற்கு 'இதனது இதுவெனும் அன்ன கிளவிக் கிழமைத்து' என்றார்.

[3]'இதன இவை' என்னும் பன்மையுருபுத் தொடரும் அடங்குதற்கு அன்ன கிளவி என்றார்.

ஒன்று பல குழீஇய தற்கிழமையும், வேறு பல குழீஇய தற்கிழமையும், ஒன்றியற் கிழமையும், உறுப்பின் கிழமையும், மெய் திரிந்தாய தற்கிழமையும் எனத் தற்கிழமை ஐந்து வகைப் படும்.

[4]பொருளின் கிழமையும், நிலத்தின் கிழமையும், காலத்தின் கிழமையும் எனப் பிறிதின் கிழமை மூவகைப்படும். அவற்றிற்கு உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

(''இயற்கையின்...என்மனார் புலவர்)''

இ-ள்: இயற்கை முதலாக வாழ்ச்சியீறாகச் சொல்லப்பட்டனவும், திரிந்து வேறுபடூஉம் அன்ன பிறவுமாகிய மேற்கூறப்பட்ட கிழமைப் பொருட்கண் தோன்றும் சொல் எல்லாம் ஆறாம் வேற்றுமைத் திறத்தன வென்று சொல்லுவர் புலவர்; எ-று.

'திரிந்து வேறுபடூஉம் அன்ன பிறவும்' என்றாரேனும் திரிந்து வேறுபடுதல், அன்ன பிறவும் என்றதனால் தழுவப்படுவனவற்றுள் ஒருசாரனவற்றிற்கே கொள்க.

---

2. 'இதனது இது' என்பது வாய்பாடு. கிழமைகள் பலவும் அடக்குதற்குப் பொது நிலையில் இவ்வாய்பாட்டைக் கூறினார் ஆசிரியர் என்பது இத்தொடரின் கருத்து.
3. அக்கிளவி என்னாது அன்ன கிளவி எனப் பன்மையிற் கூறியது ஏன் என்றால் பன்மை குறித்த அகர உருபும் அடங்குதற்கு என்க.
4. பிறிதின் கிழமை பகுதிப்படாது என்பர் இளம்பூரணர்.

உ-ம்: எள்ளது குப்பை, படையது குழாம் என்பன குழூஉக் கிழமை. [5]இவை முறையானே ஒன்று பல குழீஇயதும் வேறுபல குழீஇயதும் ஆம்.

சாத்தனது இயற்கை, நிலத்தது அகலம் என்பன இயற்கைக் கிழமை, சாத்தனது நிலைமை, சாத்தனது இல்லாமை என்பன நிலைக்கிழமை. இவை ஒன்றியற் கிழமை.

யானையது கோடு, புலியது உகிர் என்பன உறுப்பின்கிழமை. உறுப்பாவது பொருளின் [6]ஏகதேசம் என்பது அறிவித்தற்கு 'ஒரு வழியுறுப்பு' என்றார்.

சாத்தனது செயற்கை, சாத்தனது கற்றறிவு என்பன செயற்கைக் கிழமை.

அரசனது முதுமை, அரசனது முதிர்வு என்பன முதுமைக் கிழமை. முதுமை என்பது பிறிதோர் காரணம் பற்றாது காலம் பற்றி ஒரு தலையாக அப்பொருட்கட்டோன்றும் பருவமாகலின் செயற்கையுள் அடக்காது வேறு கூறினார்.

சாத்தனது தொழில், சாத்தனது செலவு என்பன வினைக் கிழமை. இவை மெய் திரிந்தாயதற்கிழமை.

சாத்தனது உடைமை; சாத்தனது தோட்டம் என்பன உடைமைக் கிழமை.

மறியது தாய், மறியது தந்தை என்பன முறைமைக் கிழமை.

இசையது கருவி, வனைகலத்தது திகிரி என்பன கருவிக் கிழமை.

அவனது துணை, அவனது [6]இணங்கு என்பன துணைக் கிழமை.

நிலத்தது ஒற்றிக்கலம், சாத்தனது [7]விலைத்தீட்டு என்பன கலக்கிழமை.

---

5. அவை (பாடம்)
6. ஏகதேசம்—ஒரு பகுதி, ஓரிடம். ஒரு வழியுறுப்பு—ஓரிடத்து உறுப்பு.
6. இணங்கு—துணைவன், துணைவி
7. விலைத்தீட்டு—விலைப்பத்திரம்

* ஒற்றியது முதல், ஒற்றியது பொருள் என்பன முதற் கிழமை•

கபிலரதுபாட்டு, பரணரது பாட்டியல் என்பன [8]தெரிந்து மொழியாற் செய்யப்படுதலின் 'தெரிந்து மொழிச் செய்தி யாயின. இவை பொருட் பிறிதின் கிழமை.

[9]முருகனது குறிஞ்சி நிலம், வெள்ளியது ஆட்சி என்பன கிழமைக் கிழமை.

[10]காட்டது யானை, யானையது காடு என்பன வாழ்ச்சிக் கிழமை.

அவற்றுள் முருகனது குறிஞ்சிநிலம், யானையது காடு என்பன நிலப்பிறிதின் கிழமை.

காட்டது யானை என்பது பொருட் பிறிதின்கிழமை. [11]ஏனையது காலப் பிறிதின் கிழமை

திரிந்து வேறுபடூஉம் அன்னபிறவும் என்றதனால் எட்சாந்து, கோட்டு நூறு, சாத்தனது ஒப்பு, தொகையதுவிரி, பொருளது

---

* சினையொடு அடுத்து முதல் உணர வருவது முதற் கிழமை என்பர் தெய்வச்சிலையார்.

8. தெரிந்த மொழியால் செய்யப்பட்டமையின் பாட்டு பாட்டியல் நூல் போல்வன தெரிந்துமொழிச் செய்தி எனப்பட்டன.

9. கிழமைக்கிழமை—உரிமைக் கிழமை. குறிஞ்சிநிலம் முருகனுக்குரிமையுடையது; அதுவே முருகனது குறிஞ்சி யென உரிமைப்படுத்தும் உருபுடன் கூறப்படுதலின் கிழமைக் கிழமையாயிற்று. வெள்ளி—சுக்கிரன். சுக்கிர னுக்கு ஆட்சியுரிமையுண்டு. சுக்கிரனது ஆட்சி என உருபுடன் கூறப்படுதவின் உரிமைக் கிழமையாயிற்று.

10. காட்டது யானை—இதில் காடு ஆறாம் வேற்றுமையாக யானை அதன்கண் வாழும் பல பொருளுள் ஒருபொருள் எனவே இது பொருட் பிறிதின் கிழமை.
யானையது காடு—இதில் யானை ஆறாம் வேற்றுமை. அது வாழும் உரிமையுடையது காடாகிய நிலம். அக் காட்டை நீங்கி யானை செல்லும் ஆதலின் காடு நிலப் பிறிதின் கிழமை.

11. ஏனையது—வெள்ளியது ஆட்சி=வெள்ளியது ஆட்சிக் காலம். காலத்தின் ஒரு கூறாக வெள்ளியது ஆட்சிக் காலம் அமைதலின் அது நீங்கின் வேறொன்றன் ஆட்சி வருதலின் இது காலப்பிறிதின் கிழமை.

கேடு, சொல்லது பொருள் என்னுந் தொடக்கத்தன கொள்க. அவற்றுள் எட்சாந்து, [12]கோட்டு நூறு என்பன முதலாயின முழுவதூஉந்திரிதலின் வேறு கூறினார்.

மேற்சொல்லப்பட்ட (சொல் 79) தற்கிழமை பிறிதின்கிழமை யென்பனவற்றை விரித்தவாறு.

தெய்.

("ஆறாகுவதே...கிழமைத்ததுவே)

ஆறாம் வேற்றுமை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஆறாம் வேற்றுமையாவது அதுவெனப் பெயர்பெற்ற வேற்றுமைச் சொல்; அது தன்னினானும் பிறிதினானும் இதனது இது எனவரும் பெற்றிப்பட்ட பொருட் கிழமையை யுடைத்து; எ-று.

தன் என்றது உடையானை. பிறிது என்றது உடைப்பொருளை. ஈண்டுக்கிளவி என்பது பொருள். கிளக்கப்படுவதுகிளவியாயிற்று. கிழமை என்பது உரிமை தன்னோடும் பொருளோடும் உள்ள உரிமை உணரவரும் ஆறாவது என்றவாறு. அதுவென்பது ஒருமை யுணர்த்தும் சொல்லாகலின், வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால் பன்மையுணர்த்தும் அகர உருபும் கொள்க.

உ-ம்: சாத்தனது குழை. சாத்தன குழைகள். உலகத்துக்குழை யுடையாரும் பலர்: குழையும் பல. ஆயினும் இக்குழை இவனது என்னும் உரிமை தோன்ற வந்தவாறு கண்டு கொள்க.

("இயற்கையின் ... என்மனார் புலவர்")

ஆறாம் வேற்றுமைப் பொருள் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: இயற்கை முதலாக வாழ்ச்சி யீறாக எண்ணப்பட்ட கிழமையினும், திரிந்து வேறுபடூஉம் பிறவற்றினும், அத் தன்மையவாகி மேற்சொல்லப்பட்ட இதனது இது என்னும் பொருள் தோன்றும் சொல்லெல்லாம் ஆறாம் வேற்றுமையாவன எ-று.

12. கோட்டு நூறு—சுண்ணாம்புத்தூள். கோடு—மலைப் பகுதியிற் கிடைக்கும் சுண்ணாம்புக்கட்டி.

மேலைச் சூத்திரத்தான், உடையானும் உடைப் பொருளு மாகிய கிழமை எடுத்தோதினார். இச்சூத்திரத்தான் அதனின் வேறுபட்டு வருவன எடுத்தோதினார் என்று கொள்க.

இயற்கை என்பது இயல்பாகிய கிழமை. அஃதாவது பொருட்கு இயல்பாகிய பண்பு. நிலத்தது வலி, நீரது தண்மை, தீயது வெம்மை என வரும்.

உடைமை என்பது உடைப் பொருளின் பாகுபாடு உணர நில்லாது பொதுமை உணர நிற்பது. அப்பொதுக் கிழமையினும் வரும் என்றவாறு. சாத்தனது உடைமை எனவரும். சாத்தனது குழை என்றதனோடு இதனிடை வேற்றுமை என்னையெனின் '[1]சாத்தனது உடைமை குழை' எனவும் வந்து குறிப்பு வினைப் பொருளொடு முடிதலின் வேறு ஓதப்பட்டது, வினைக்குறிப்பு ஓதுகின்ற வழி 'அதுச் சொல் வேற்றுமை யுடைமை யானும், (வினை 16) என்று ஓதினாராகலின். ஈண்டுக் குழை என நிற்றலே யன்றி குழையையுடையன் எனவும் வருதலின் ஈண்டு வேறு படுத்து ஓதல் வேண்டும் என்று உணர்க.

முறைமையென்பது உடையானும் உடைப் பொருளுமின்றி, முறைமையாகிய கிழமையான் வருவது. ஆவினது கன்று, மறியது தாய்.

கிழமை யென்பது உரிமை. அஃதாவது இவற்கு இவள் உரியள் என்னும் பொருள்பட வருவது. முறைமை சார வைத்த தனால் கிழத்தியர் என்று கொள்ளப்படும். அரசனது உரிமை.

செயற்கையாவது செயற்கையான் வருவது. சாத்தனது கல்வி, சாத்தனது கோலம்.

முதுமையென்பது [2]பரிணாமம் குறித்து நிற்கும். சாத்தனது முதுமை. [3]வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால் இளமையும் கொள்க. சாத்தனது இளமை.

---

1. சாத்தனது உடைமை—சாத்தனது உடைமையாகிய பொருள். இதில் பொருளின் பாகுபாடு தெரியவில்லை. சாத்தனது குழை—சாத்தனது குழையென்னும் அணி. இதில் குழை என்னும் பொருள் பாகுபாடு தெரிசிறது. சாத்தனது உடைமை குழை—சாத்தனது உடைமை யாவது குழையாகும். இதில் குழை என்பது குழை யாகும் என்னும் பொருளில் வினைக் குறிப்பாகும்.
2. பரிணாமம்—நிலைமாற்றம்
3. தன்னின முடித்தல் என்பதனால்—பாடம்,

வினை யென்பது தொழில் உணர வருவது. சாத்தனது வரவு.

கருவியென்பது உடைமை குறியாது இதற்கு இது கருவி என்னும் பொருள்பட வருவது. யானையது தோட்டி, வனை கலத்தது திகிரி.

துணை என்பது நட்பின்மேல் வரும். சாத்தனது துணை. இது. வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால் பகையும் கொள்க, சாத்தனது பகை. மாறுபாடும் இனம் ஆகுமோ எனின், மாறுபாடும் அப்பொருள் குறித்தலின் இனமாம்.

[3] கலம் என்பது பாலது கலம். நிலத்தது விளைக்கலம்

[4] முதல் என்பது சினையோடு அடுத்து முதல் உணர வருவது. கொடியது முதல்.

ஒருவழியுறுப்பு என்பது முதலோடு சினையடுத்து வருவது. சண்பகத்துக் கோடு.

குழாம் என்பது பல பொருட்டொகுதி, படையது குழாம், நெல்லது குப்பை.

தெரிந்து மொழிச் செய்தியாவது தெரிந்த மொழியினது செயல் கூறல், பாட்டது கருத்து, பாட்டது பொருள்.

நிலை என்பது அவரவர் நின்ற நிலைமை குறித்து வருவது. சாத்தனது இல்வாழ்க்கை, சாத்தனது தவம்.

வாழ்ச்சியென்பது இடம்பற்றி வரும். யானையது காடு, காட்டது யானை.

திரிந்து வேறுபடுவன: எண்ணது சாந்து, கோட்டது நூறு.

கூறிய மருங்கின் தோன்றுவன: சாத்தனது தோப்பு பொருளது கேடு, ஆவினது பால், கரும்பினது சாறு என இந் நிகரன வெல்லாங் கொள்க.

இன்னும் கூறிய மருங்கிற் றோன்றும் கிளவி என்பதனால் உருபின் பொருள்பட வரும் [5]'உடைய' என்னும் சொல்லும் கொள்க.

---

3. கலம் என்பது பாத்திரம், ஒற்றிக்கலம் (விலைத் தீட்டு) என்னும் பொருள்களில் வந்தது.
4. சேனாவரையர் ஒற்றியது முதல் என உதாரணம் காட்டுவர்.
5. உடைய—என்னுடைய புத்தகம்.

நச்.

("ஆறாகுவதே...கிழமைத்ததுவே")

இது முறையானே ஆறாவது இப்பொருட்கண் வரும் என்கின்றது.

இ-ள்: அது எனப் பெயரிய வேற்றுமைக்கிளவி ஆறு ஆகுவதே—மேல் அது எனப் பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச் சொல் ஆறாவதாம்; அது—அவ்வேற்றுமைச்சொல், தன்னினும்—ஒரு பொருளினது உடைமைப் பொருளாகி நிற்கும் தன்னோடு ஒற்றுமையுடைய பொருளாலும், பிறிதினும்—ஒரு பொருளினது உடைமைப் பொருளாய் நிற்கும் தன்னின் வேறாகிய பொருளாலும், இதனது இது எனும்—இப்பொருளினுடையது இப்பொருள் என்பது பட நிற்கும், அன்ன கிளவிக் கிழமைத்து—அன்ன பொருளால் தோன்றும் கிழமையைப் பொருளாக வுடைத்து, எ று.

ஈண்டுத் 'தன்' என்றது உருபு ஏற்கும் பொருளை. !அன்ன என்றார், 'இதன இவை' என்னும் பன்மை யுருபும் 'அது' என்னும் ஒருமை யுருபும் அடங்குதற்கு.

உ-ம்: சாத்தன ஆடை, தனாது வெல்வேள், யானை வளவன் கொல்லிமீமிசை எனவரும்.

ஒன்று பல குழீஇயதும், வேறுபல குழீஇயதும், ஒன்றியற் கிழமையும், உறுப்பின் கிழமையும், மெய்திரிந்தாயதும் எனத்தற் கிழமை ஐந்து வகைப்படும். *"ஐம்பால் உரிமையும் அதன் தற்கிழமை" என்பது அகத்தியம் ஆதலின்.

பொருளின் கிழமையும், நிலத்தின் கிழமையும், காலத்தின் கிழமையும் எனப் பிறிதின் கிழமை மூவகைப்படும்.

("இயற்கை.........என்மனார் புலவர்")

இஃது, அதனை முடிக்க வரும் பொருள் வேறுபாடு கூறுகின்றது.

இ-ள்: இயற்கை ... வாழ்ச்சியின் — இயற்கை முதலாக வாழ்ச்சி யீறாகச் சொல்லப்பட்டனவும், திரிந்து வேறு படூஉம் அன்ன பிறவும்—ஒருசாரன திரிந்து வேறுபடும் அவை போல்வன பிறவும் ஆகிய, கூறிய மருங்கில் தோன்றும் கிளவி—முற்கூறிய

---

* இச்சூத்திரத்தை ஒருவர் காட்டியுள்ளார். அவர் உரையிற் காண்க,

கிழமைப் பொருட்கண் தோன்றும் சொல் எல்லாம், ஆறன்பால என்மனார் புலவர்—ஆறாம் வேற்றுமைத் திறத்தன என்று கூறுவர் புலவர், எ—று.

உ-ம்: எண்ணது குப்பை; இஃது ஒன்று பல குழீஇய தற்கிழமை.

படையது குழாம்: இது வேறு பல குழீஇய தற்கிழமை.

சாத்தனது இயற்கை, நிலத்தது அகலம்: இவை இயற்கைக் கிழமை,

சாத்தனது நிலைமை, சாத்தனது இல்லாமை: இவை நிலைக் கிழமை.

இந்நான்கும் ஒன்றியற் கிழமை.

ஒரு பொருளின் ஏகதேசம் அறிவித்தற்கு 'ஒருவழியுறுப்பு' என்றார். அவை யானையது கோடு, புலியது உகிர். இவை உறுப்பின் கிழமை.

செயற்கையாவது தன் தன்மை திரிந்து வேறோர் தன்மை யாதல். அவை சாத்தனது செயற்கை, சாத்தனது கற்றறிவு.

*முதுமைக்கிழமை: அரசனது முதுமை, அரசனது முதிர்வு. இஃது அறிவின் முதிர்ச்சி என்பது அறிவித்தற்கு இளமை கூறாராயினார்

வினைக்கிழமை சாத்தனது வினை, சாத்தனது செலவு; இவை மெய் திரிந்தாய தற்கிழமை.

உடைமைக் கிழமை: சாத்தனது உடைமை, சாத்தனது தோட்டம்.

முறைமைக் கிழமை: மறியது தாய், மறியது தந்தை.

கருவிக்கிழமை: இசையது கருவி, வினைக் கலத்தது திகிரி.

துணைக்கிழமை: அவனது துணை, அவனது இணங்கு.

கலமாவது ஓலை. நிலத்தது ஒற்றிக்கலம், சாத்தனது விலைத்தீட்டு. இஃது இரு பொருட்கு உரிமையுடைமையின் உடைமையின் வேறாயிற்று.

---

* முதுமை என்பதை மற்றவர் பருவமாகக் கொண்டனர். அரசனது முதுமை—அரசனது முதிர்ந்த அறிவு.

முதற்கிழமை: ஒற்றியது முதல், ஒற்றியது பொருள்.

தெரிந்து மொழிச் செய்தி: தெரிந்து மொழியால் செயப்படுதலின் தெரிந்து மொழிச் செய்தியாயிற்று; கபிலரது பாட்டு. இது பாரியது பாட்டு எனவும் நிற்றலின் இருபொருட்குரியதாம். பரணரது பாட்டியல்: இதுவும் அது.

இவை பொருட் பிறிதின் கிழமை.

கிழமைக்கிழமை: முருகனது குறிஞ்சி நிலம்; இது நிலப் பிறிதின் கிழமை.

வெள்ளியது ஆட்சி: இது காலப் பிறிதின் கிழமை.

வாழ்ச்சி: காட்டது யானை. இது பொருட் பிறிதின் கிழமை. யானையது காடு. இது நிலப்பிறிதின் கிழமை. வாழ்ச்சி வாழ்தலை யுணர்த்துங்கால் தற்கிழமையும் ஆம்.

'அன்ன பிறவும்' என்றது; எட்சாந்து, கோட்டு நூறு. இவை முழுதுந்திரிந்தன.

சாத்தனது ஒப்பு, தொகையது விரி, பொருளது கேடு, சொல்லது பொருள்: இவை சிறிது திரிந்தன.

கல்.

(''ஆறாகுவதே......என்மனார் புலவர்'')

என்னுதலிற்றோ வெனின், நிறுத்த முறையானே ஆறாம் வேற்றுமையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : ஆறாம் எண்ணு முறைக்கண்ணதாகிய அது என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல் தன்னோடு தொடர்ந்த தோர் பொருளையும் தன்னின் வேறாகிய தோர் பொருளையும் இதனது இது என்னும் கிழமை செப்பி நிற்றலை இலக்கணமாக வுடைத்து; வருமாற்றைச் சொல்லின் இயற்கை என்பது முதலாகத் திரிந்து வேறு படுதல் ஈறாக ஓதப்பட்ட பொருட்பாகுபாடுகளும் பிறவும் அத்தன்மை, தன்னினும் பிறிதினும் என ஓதிய இருவகையிடத்து வரும் பாகுபாடுகளும் அவ்வாறாம் வேற்றுமைக் கூற்றன வென்று சொல்லுவர் புலவர், என்றவாறு.

'இதனது இது என்னும் கிளவி' என்னாது, 'அன்ன' என்றதனான், அஃறிணை ஒருமை தோன்ற வரும் 'ஆது' என்பதும், அது வென்பதன் அஃறிணைப் பன்மை தோன்ற வருவதோர்

அகர உருபும் உண்டு என்று கொள்ளப்படும். அஃதேல் அவை அஃறிணையிருபாற்கும் உரிய உருபாயின், அவ்வாறு போல உயர்திணை முப்பாற்கும் உரிய உருபு கூறாரோ எனின், அவ்வாறு வரும் வழக்கின்மையின் கூறாராயினார் என்பது. நமன், நமள், நமர் என்பனவற்றுள் அன், அள், அர் என்பன உயர்திணை யுருபன்றோ எனின், பிற உருபு போலத் தொகுத்த லும் விரித்தலும் இன்மையானும், தற்கிழமையும் பிறிதின் கிழமை யும் என்னும் இரண்டிடத்தும் வாராமையானும், மற்றைப் பெயரும் உருபுமாகக் கொள்ளாத ஆறாம் வேற்றுமைத் தொகைச் சொற்போல் இருபொருள் நிலைமைத்து ஒரு சொல் என எச்சவியலுள் கூறுகின்றார் என்பது. அஃதேல் உயர்திணைப் பொருட்கு உயர்திணைப் பொருளை யுடைமை செப்புமாறு என்னை யெனின், அதற்கு மேல் வருகின்ற ஓத்தினுள் 'அது வென் வேற்றுமை' யென்புழிக் கூறுவர் என்பது.

தன்னினும் என்புழித் தற்கிழமை ஐந்து வகைப்படும். அவை ஒன்று பல குழீஇய தற்கிழமையும், வேறு பல குழீஇய தற்கிழமை யும், ஒன்றியற் கிழமையும், உறுப்பின் கிழமையும், மெய் திரிந்தாய தற்கிழமையும் என. பிறிதின் கிழமை இது போலப் பகுதிப் படாது என்க.

ஒன்று பலகுழீஇயது எட்குப்பை, எண்ணது குப்பை யென்ற வாறு.

வேறு பல குழீஇயது : படைக்குழாம்.
ஒன்றியற் கிழமை : நிலத்ததகலம், சாத்தன தியற்கை.
உறுப்பின் கிழமை: யானையது கோடு, புலியது உகிர்.
மெய்திரிந்தாயது : எட்சாந்து.
பிறிதின் கிழமை, சாத்தனது தோட்டம் என வரும்.
இனி அவ்விரு கிழமையும் ஒட்டுமாறு :

இயற்கை : சாத்தனதியற்கை. இது தற்கிழமையுள் ஒன்றியற் கிழமை.

உடைமை: சாத்தனது உடைமை, இது பிறிதின் கிழமை. தற்கிழமையும் படும் போலும்.

முறைமை: ஆவினது கன்று. இது பிறிதின் கிழமை.

கிழமை: சாத்தனது கிழமை.

செயற்கை: சாத்தனது செயற்கை. [1]இவ்விரண்டும் தற்கிழமை. ஆகுபெயராய வழிப் பிறிதின் கிழமையுமாம்.

முதுமை: அவனது முதுமை. இது தற்கிழமை.

[2]வினை: சாத்தனது வினை. இதுவும் ஆகுபெயராய வழிப் பிறிதின் கிழமையுமாம்.

கருவி: சாத்தனது வாள். இது பிறிதின் கிழமை.

துணை: சாத்தனது துணை. இதுவுமஃது.

கலம்: சாத்தனது கலம். கலம் என்பதனை ஒற்றிக் கலத்தின் மேற் கொள்க. பிறகலத்தின் மேற்கொள்ளாமைக்குக் காரணம் என்னையெனின், இஃது ஒரு பொருள் இருவர்க் குடைமையாக நிற்கும் வேறுபாட்டதாகலின் என்க. இஃது உரையிற் கோடல். இதுவும் அது.

முதல்: சாத்தனது முதல் இத்தோட்டம் என ஓர்க. இதுவும் ஓர் உடைமை வேறுபாடு எனக் கொள்க. இதுவும் அது.

ஒருவழியுறுப்பு: யானையது கோடு. உறுப்பு என்னாது 'ஒரு வழியுறுப்பு' என்றது ஓர் உறுப்பினை யுடைமையாகக் கருதாது பலவற்றையுங் கருதி உரிமையாகாத பொருள்தானாம் என்பது போலும். இது தற்கிழமையுள் உறுப்பின் கிழமை.

குழுவு: எட்குப்பை, படைக்குழாம் என்பன.
இவை தற்கிழமையுள் ஒன்றுபல குழீஇயதூஉம் வேறு பல குழீஇயதூஉம் ஆம். குழுவென்பது உடல் நோக்கிற்று.

---

1 சாத்தன கிழமை என்புழிச்சாத்தனதுகை முதலியவற்றை யுணர்த்தின் தற்கிழமை. சாத்தனது கிழமைப்பொருளை —மனை, மாடு முதலியவற்றையுணர்த்தின்—ஆகுபெயராதலின்—பிறிதின் கிழமை.செயற்கை என்பதுஅவனது உடலுறுப்பு மாற்றத்தையுணர்த்தின் தற்கிழமை. அல்லது சாத்தனது கற்றறிவு போல்வதுவரின் அதுவாம். சாத்தனது செயற்கையால் விளைந்த பொருளைச் செயற்கை எனின் ஆகுபெயரால் பிறிதின் கிழமையாம்

2 வினை — தொழில் — வினையால் விளைந்த பொருளை உணர்த்தின் பிறிதின் கிழமை.

தெரிந்து மொழிச் செய்தி: கபிலரது பாட்டு, இதுவும் பாரியது பாட்டு எனவும் நிற்றலின் இருபொருட்குரிமையாம். கபிலரது என்புழி மெய்திரிந்தாகிய தன்பாற்படும். பாரியதுஎன நிற்புழிப் பிறிதின் கிழமையாம்.

[4]நிலை: பெண்ணாகத்துப் பெருஞ்சங்கரனாரது நிலை. இஃது ஒன்றியற் கிழமை.

வாழ்ச்சி: சாத்தனது வாழ்ச்சி. இது வாழ்தல் என்னும் தொழில் கருதினவழித் தற்கிழமை; வாழுமிடம் கருதியவழிப் பிறிதின் கிழமையாம்.

திரிந்து வேறுபடுவன: எட்சாந்து, கோட்டு நூறு என்பன. சாத்தனது சொல் என்பதும் பிறவும் ஒருபொருள் முழுவதூஉம் திரியாதன. பரணரது பாட்டியல் என்றாற்போல வருவன எல்லாம் உதாரண வாய்பாடாக எடுத்து ஓதாது திரிந்து வேறு படும் எனப் பொதுப்பட ஒருபொருண்மையாக எடுத்தோதின மையிற் கொள்ளப்படும்.

பிறவும் என்றதனால் சாத்தனது வனப்பு, சாத்தனது ஆண்மை, சாத்தனது நடை, சாத்தனது புத்தகம் எனவரும். பிறவும் அன்ன.

ஒரு.

("ஆறாகுவதே...கிழமைத்ததுவே)

என்பது மேல் 'அது' வென்று பெயர் கொடுத்தோதப் பட்டது வேற்றுமைச்சொல் லாறாவதாம், அது வொரு பொருளின் துடைமைப் பொருளாய் நிற்குந் தன்னொடு ஒற்றுமையுடைய பொருளானும் ஒரு பொருளினது உடைமைப் பொருளாய் நிற்கும் தன்னின் வேறாகிய பொருளானும் 'இப் பொருளினுடையது இப்பொருள்' என்பது பட நிற்கும் அன்ன கிளவியாற் றோன்றும் கிழமைப் பொருளாக வுடைத்து.

---

3 தெரிந்து மொழிச்செய்தி-தெரிந்த மொழியாற் செய்யப் படுவது-செய்யுள். எனவே செய்யுட்கிழமை. கபிலரது பாட்டு என்புழிப் பாட்டு கபிலரது ஆதலின் தற் கிழமை. அப்பாட்டு பாரியைப் பற்றியதாதலின் பாரியது பாட்டு என்பது பிறிதின் கிழமை.

4 பெருஞ்சங்கரனது பெண்ணாகத்து நிலை என்க. உமை யொருபாக நிலை. பிரிக்க இயலாது ஒன்றிய இயற்கை நிலை.

தன்னினும் பிறிதினுமாகிய கிழமைத் தென்னாது 'இதனதிது' வெனும் அன்ன கிளவிக் கிழமைத்து' என்றது என்னை? பொருட்கிழமையும், பண்புக் கிழமையும், தொழிற் கிழமையும் அவை போல்வன பிறவும் எனக் கிழமைதாம் பல. அவற்றுள் ஒன்று சுட்டாது 'இதன் இது' வென்னுஞ் சொல்லாற் றோன்றுங் கிழமை மாத்திரம் சுட்டும் என்றதற்கு 'இதனது இது வெனும் அன்ன கிளவிக் கிழமைத்து' என்றார். ஒருமை மாத்திர மன்றி 'இதனது இவை' என்னும் பன்மையுருபுத் தொடரும் அடங்குதற்கு 'அன்ன கிளவி' என்றார்.

உ-ம்: சாத்தனது ஆடை தனாது வெள்வேல், வானவன் கொல்லிமீமிசை எனவரும்.

தற்கிழமை ஐந்து வகைப்படும் அவை:

> *"ஒன்றுபல குழீஇயதும் வேறுபல குழீஇயதும்
> ஒன்றியற் கிழமையும் உறுப்பின் கிழமையும்
> மெய்திரிந் தாகியதும் என ஐம்பால்
>
> †உரிமையு மதன் தற்கிழமை"

என்பது அகத்தியம் ஆகலின்.

இனிப் பிறிதின் கிழமை மூவகைப்படும். பொருளின் கிழமையும், நிலத்தின் கிழமையும், காலத்தின் கிழமையும் என. இவற்றிற் குதாரணம் முன்னர்க் காட்டுதும்.

(":இயற்கை......என்மனார் புலவர்")

உ-ம்: குழுவின்: எள்ளது குப்பை. இது ஒன்று பல குழீஇய தற்கிழமை. படையது குழாம் இது வேறுபல குழீஇயதற்கிழமை; இது யானை தேர் குதிரை காலான் ஆதலால் வேறாயிற்று.

இயற்கை: சாத்தனது இயற்கை. நிலத்ததகலம் என்பன ஒன்றியற்கிழமை.

நிலை: சாத்தனது நிலைமை, சாத்தனது இல்லாண்மை என்பன நிலைக்கிழமை. இவையும் ஒன்றியற்கிழமை.

உறுப்பு: யானையது கோடு; புலியது உகிர் என்பன உறுப்பின் கிழமை. உறுப்பாவது ஒரு பொருளின் ஏகதேசம் என்பதறிவித்தற்கு ஒருவழியுறுப் பென்றார்.

---

* பிறர் யாரும் இச்சூத்திரம் காட்டவில்லை; நச்சினார்க் கினியர் உரைநடையாகக் காட்டியுள்ளார்.

† உம்மையு மன்ற—எனப்பாடம் உரைக்கோவையில் உள்ளது—தவறு.

செயற்கை: சாத்தனது செயற்கை, சாத்தனது கற்றறிவு என்பன செயற்கைக் கிழமை, அது தன்மை திரிந்து வேறோர் தன்மையாதல்.

முதுமை : அரசனது முதுமை. அரசனது முதிர்வு என்பன முதுமைக் கிழமை. முதுமையென்பது பிறிது ஓர் காரணம் பற்றாது காலம் பற்றி ஒருதலையாகப் பொருட் கட் டோன்றும் பருவமாதலிற் செயற்கையுள் அடக்காது வேறு கூறினார்.

வினை : சாத்தனது தொழில், சாத்தனது செலவு என்பன வினைக் கிழமை. இவை மெய்திரிந்தாய தற்கிழமை.

உடைமை : சாத்தனது தோட்டம், சாத்தனது உடைமை என்பன உடைமைக் கிழமை.

முறைமை : மறியது தாய், மறியது தந்தை என்பன முறைமைக் கிழமை.

கருவி : இசையது கருவி, வனை கலத்தது திகிரி என்பன கருவிக் கிழமை.

அவனது துணை, அவனது இணங்கு என்பன துணைக் கிழமை.

கலம் : கலமாவது ஓலை. நிலத் தொற்றிக்கலம், சாத்தனது விலைத்தீட்டு என்பன கலக்கிழமை.

முதல் : ஒற்றியது முதல். ஒற்றியது பொருள் என்பன முதற் கிழமை.

தெரிந்து மொழிச் செய்தி: கபிலரது பாட்டு. தெரிந்து மொழியாற் செய்யப்படுதலின் தெரிந்து மொழிச் செய்தி யாயிற்று.

பரணரது பாட்டியல் என்பது செய்திக் கிழமை.

இவை பாரியது பாட்டு எனவும் நிற்றலின் இருபொருட் குரியவாம். இவை பொருட் பிறிதின் கிழமை.

முருகனது குறிஞ்சி நிலம், வெள்ளியது ஆட்சி என்பன கிழமைக் கிழமை. இவை முறையே நிலப்பிறிதின் கிழமையும், காலப்பிறிதின் கிழமையும்.

வாழ்ச்சி : காட்டதியானை. இது பொதுப் பிறிதின் கிழமை. யானையதுகாடு. இது நிலப் பிறிதின் கிழமை. இவ்வாழ்ச்சி வாழ்தலை யுணர்த்துங்கால் தற்கிழமையுமாம்.

திரிந்து வேறு படூஉம் அன்ன பிறவும் என்றதனான், எட்சாந்து, கோட்டு நூறு என்பன முழுவதூஉந் திரிந்தன.

சாத்தன் தேர்ப்புரவி, தொகையது விரி, பொருளது கேடு, சொல்லது பொருள்: இவை சிறிது திரிந்தன.

இவ்வாய் பாடுகள் மேற்சொல்லப்பட்ட தற்கிழமை பிறிதின் கிழமை யென்பனவற்றை விரித்தவாறறிக.

ஆதி.

உ-ம் : இயற்கை: கண்ணனது நீலநிறம்.
உடைமை : கண்ணனது பீதாம்பரம்.
முறைமை : கன்றினது தாய்.
சிறுமை : குசேலரது மெலிவு.
செயற்கை : அவனது செல்வச் செருக்கு.
முதுமை : தசரதனது முதுமை

இராமனது இளமை,

வினை : ஏகலைவனது கல்வி முறை :
கருவி : தச்சனது கூலி.
துணை : கண்ணனது சகாயம்.
கலம் : மணிமேகலையது பாத்திரம்.
(கலம் ஓலை நறுக்கு என்பர்)
முதல் : வேரினது மூலம் (முதற் பொருள்)
பட்டினது நூல்.

உறுப்பு : புலியினது நகம்.
குழு : பறவைக் கூட்டம்.
தெரிந்து மொழிச்செய்தி : பரணரது பாட்டு
ஆதித்தரது தமிழ்நடை.

வாழ்ச்சி: கண்ணனது நகர். வாழ்ச்சி—வாழுமிடம், வாழ்வு.

திரிந்து வேறுபடுதல்: நெல்லினது பொரி.

கூறிய மருங்கின் தோன்றும் கிளவி—இஃது ஒத்த பொருளில் வருவன எல்லாம். கரும்புச் சக்கை, மாம்பழம், புலிப்பல், எலி மயிர் போன்றவை.

எனது கை—அது வுருபுமுன் அஃறிணை ஒருமைப் பெயரே வரும். எனாதுகை—முற்கூறியவாறே.

என கைகள்—பன்மைப் பெயர் வருவதாயின் அ உருபு தோன்றுகிறது.

அது—அஃறிணைக்குரியது ஆதலின் எனது குமாரன் என்பது பிழை;என, என்னுடைய என்பதே முறை.

பி. கு.

செ. வை. சண்முகம்

"யானையது கோடு கூரிது என்பது, யானைக்குக் கோடு கூரிது என்னும் வாக்கியத்திலிருந்து வந்ததாகலாம்; யானையது கோடு கூரிது என்பது புறநிலை வாக்கியம். அதன் புதைநிலை வாக்கியம் யானைக்குக் கோடு கூரிது என்பதாகும். எனவே ஆறாவதன் தற்கிழமைப் பொருள் நான்காம் வேற்றுமையைப் புதைநிலையில் கொண்டிருக்கலாம்;

"பிறிதின் கிழமை ஏழாம் வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். சாத்தனது வாள் என்பதைச் சாத்தன்கண் உள்ள வாள் என்று கொண்டு விளக்க வேண்டும்.

"ஆறாம் வேற்றுமை பெயரையே கொண்டு முடியும் என்பதனாலும், நான்காம் வேற்றுமை வினமுடிபுடைய தொடரின் புறநிலை வாக்கியமாகவும், ஏழாம் வேற்றுமை வினை முடிபுடைய தொடரின் புறநிறை வாக்கியமாகவும் அமைதலின் ஆறாம் வேற்றுமையும் வினைத் தொடரைப் புதைநிலையில் கொண்டிருக்கும்." (தொல்காப்பிய மொழியியல் பக். 304, 305)

"உமது சட்டை எனத் தெரிந்துரைக்கும் போது அதுவே தெரிந்து மொழிச்செய்தி என்போம்" என்பர் தே. ஆண்டியப்பன். அவரே தெரிந்து மொழிச் செய்தி என்பதற்குப் பாட்டினது பொருள் என்னும் உதாரணத்தோடு பழத்தினது சுவை என்னும் உதாரணமும் தந்துள்ளார் (காப்பிய நெறி—சொல். பக். 41.) தெரிந்த காரணத்தால் உமது சட்டை என்பது பொருந்தும். பழத்தினது சுவை என்பதைத் தெரிந்த காரணத்தாற் கூறுவது என்பது எப்படிப் பொருந்தும்? காய்க்கும் சுவையுண்டு. இன்ன பழத்தினது இன்னசுவை என்பதே கூற வேண்டுவது. பழத்தினது சுவை என்பது போலவே அவனது இயற்கை முதலியனவும் இருத்தலின தெரிந்து மொழிச் செய்தி என்பதற்கு அவர் கொண்ட கருத்து ஆய்வுக்குரியது.

ஏழாம் வேற்றுமையும் பொருளும்

† 77. ஏழா குவதே
கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் யிடத்தி னிலத்திற் காலத்தி
னனைவகைக் குறிப்பிற் றோன்று மதுவே;
கண்காற் புறமக முள்ளுழை கீழ்மேற்
பின்சா ரயற்புடை தேவகை யெனாஅ
முன்னிடை கடைதலை வலமிடமெனாஅ
வன்ன பிறவு மதன்பால வென்மனார் (15)

*[ஏழ் ஆகுவதே
கண்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே:
கண்கால் புறம் அகம் உள்உழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை எனாஅ
முன்இடை கடைதலை வலம்இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.]*

ஆ. மொ:
இல.

The seventh one is the case which is termed as 'Kaṇ' which, appears to denote action, place and time when a performance takes place.
The learned say that 'Kaṇ', Kāl, puṟam, aham, uḷ, uḷai, Kīḻ, mēl, pin. sār, ayal, Pudai, thĕvahai, mun, idai, Kadai, thalai. valam, idam and such others belong to the seventh case.

க. சு.

The seventh is the case which is named-kaṇ It appeares to denote place and time when an action takes place.

---

† இளம்பூரணரை யொழிந்த மற்றையுரையாசிரியர் யாவரும் இச்சூத்திரத்தின் முதல் நான்கு வரிகளை ஒரு சூத்திரமாகவும் பின்னைய வரிகளை ஒரு சூத்திரமாகவும் கொள்வர்.

They say that

Kaṉ (in at), Kāl (near, at) puṟam (outside akam), (insidel), uḷ (inside), uḷai (near, next to), kil (under, below), mēl (upon, on), Piṉ (behind, after), cār (through, near, at the side of), ayal (near, next to), puṭai (outside, away from), tēvakai (at the place of), muṉ (in front of/before), iṭai (in the middle of), Kaṭai (at the end of), talai (in the beginning of, in front of), valam (to the right of), iṭam (to the left of), and such other (wor ds), belong to that (case).

**பி. இ. நூ**

**வீர.** 35

............ஏழினுக்கே
தானாம் உழைவயின் பக்கல் உழிஇல் கண் சார் பிறவும்.

**நேமி.** 19.

கண்என்பது ஏழாம் உருபாகும் காலநில
நண்ணும் வினையிடத்து நன்கு.

**நன்.** 301, 302.

ஏழன் உருபு கண்ணாதி யாகும்
பொருள்முத லாறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொரு ளென்ப.

கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்
பின்பாடு அளைதேம் உழைவழி உழி யுளி
உள்அகம் புறம்இல் இடப்பொருள் உருபே

**தொன்.** 62

ஷை ஷை

**பிர.** 13.

விடையம் ஒரோவழி மேவுதல் எங்கும் வியாபகம் என்று
அடையஇம் மூன்று வகையான் விரியும் அதிகரணம்.

**இல.** 204.

ஏழன் உருபு கண்ணே அதன்பொருள்
வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பிற் றோன்றலாம் அன்றியும்
கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை யெனாஅ
முன்இடை கடைதலை வலம்இடம் எனாஅ
அன்னபிறவும் அதன்பால என்மனார்

இ. கொ. 42, 43.

உரிமை இருவகை ஓரிடம் எங்கும்
எனநான் கென்றே இயம்புவர் இடனே
காலம் திக்கு ஆகாயம் வெயில்இருள்
நிலம் அருவுருமுதல் நிகழ்த்தப் படும்இடம்
கூட்டிப் பிரித்தல் பிரித்துக் கூட்டல்
இருவரின் முடியும் ஒருவினைத் தொழிற்பெயர்
எனமூ வகைப்படும் இடமல்லா இடம்
இடத்தின் நிகழ்பொருள் இருவகை அருஉரு.

இடத்தின் இலக்கணம் இன்னும் பலவாம்.

முத்து. பெ. 65, 66, 67.

கண்முத லியன ஏழனது உருபாகும்.
அதன்பொருள் பொருள்முதல் ஆறிரு கிழமையின்
இடனாய் நிற்பது என்மனார் புலவர்.

கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை ஆறேவகையெனாஅ
முன்நூல் இடைகடை வலம்இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், முறையானே ஏழாம் வேற்றுமை யுணர்த்துதல் நுதலிற்று.

உரை: ஏழாம் என்னுமுறைக்கண்ணது கண் என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல்; வினை செய்யிடமும் நிலமும் காலமும் என்பன மூன்று பொருட்கண்ணும் வரும் அது, என்றவாறு.

வினைசெய் செய் இடம்: தட்டுப் புடைக்கண் வந்தான் என்பது.

நிலம்: மாடத்துக்கண் இருந்தான் என்பது.

காலம்: மாரியுள் வந்தான் என்பது.

‡இனி அவ்வேற்றுமையுருபு பலவாகலின் அவற்றை விரிக்கின்றார்; அவை வருமாறு:

‡ கண்கால் முதலியன வேற்றுமையுருபல்ல என்பர் சேனாவரையர். அவருரையில் இளப்பூரணரை மறுக்கு மாற்றைக் காண்க, அவை கண் உருபின் இடம்சுட்டும் பொருள்கள் என்பர் அவர். பிற உரையாளர் யாவரும் இளம்பூரணருரையைத் தழுவினர். தெய்வச்சிலையார் விளக்கம் இருவகைக் கருத்துகளையும் தழுவியது.

ஊர்க்கண் இருந்தான், ஊர்க்கால் இருந்தான், ஊர்ப்புறத் திருந்தான், ஊரகத்திருந்தான், ஊருள் இருந்தான், சான்றோ ருழைச் சென்றான், மாடத்தின்கீழ் இருந்தான், மாடத்தின்மேல் இருந்தான், ஏர்ப்பின் சென்றான், காட்டுச்சார் ஓடும், ஊரைய விருந்தான், ஊர்ப்புடையிருந்தான்.

[1]தேவகை என்பது திசைக் கூற்று; அது வடக்கண் வேங் கடம், தெற்கண்குமரி என வரும்.

எனாஅ என்பது எண்ணிடைச் சொல்.

தேர்முன் சென்றான், சான்றோரிடையிருந்தான், கோயிற்கடைச் சென்றான், தந்தைதலைச் சென்றான், கைவலத் துள்ளது கொடுக்கும், கையிடத்திருந்தான் எனவும் வரும்.

[2]அன்ன பிறவும் என்றதனால் 'கிழவோள் தேத்து' என்னுந் தொடக்கத்தன கொள்க.

**சேனா.**

("ஏழாகுவதே...தோன்றுமதுவே")

இ-ள்: கண்ணெனப் பெயர் கொடுத்தோதப்பட்ட வேற் றுமைச் சொல் ஏழாவதாம். அது வினை செய்யா நிற்றலாகிய இடத்தின்கண்ணும் நிலமாகிய இடத்தின் கண்ணும், காலமாகிய இடத்தின்கண்ணும் என அம்மூவகைக் குறிப்பின்கண்ணுந் தோன்றும், எ-று.

எனவே ஏழாவது இடப்பொருண்மைத்து என்றவாறாம்.

'குறிப்பிற்றோன்றுமது' என்றது அவற்றை இடமாகக் குறித்தவழி அவ்வேற்றுமை தோன்றும் என்றவாறு.

எனவே இடமாகக் குறிக்கப் படாதவழி அப்பெயர்க்கண் வேற்றுமை தோன்றாது என்பதாம்.

---

1. தேஎவகை—தேயவகை. வகையென்பது எல்லையைக் குறிக்கும். கண் கால் முதலியவற்றுக்கு அவ்வச் சொல் லாகவே உதாரணம் அமையத் தேவகை என்பதற்கு மட்டில் அச்சொல்லாகவே உதாரணம் அமையக்கூட வில்லை. அதனால் 'தே' என்னாது 'தேவகை' என்றார் —சிவ.
2. கிழவோள் தேஎத்து—கிழவோளிடத்து, கிழவோட்கண் என்பதாம். 'தேம்' என்பதோர் உருபு. இதை நன்னூ லார் மேற்கொண்டார்.

தன்னின முடித்தல் என்பதனான் ஏனை வேற்றுமைச் சொற்களும் அவ்வப் பொருட்கண் குறிப்பில்வழி அவ்வப் பெயர்க்கண் வாராமை கொள்க.

உ-ம்: [3]தட்டுப் புடைக்கண் வந்தான், மாடத்தின்கண் இருந்தான், கூதிர்க்கண் வந்தான் எனவரும்.

("கண்கால்...அதன்பால என்மனார்")

இ-ள்: கண்முதலாக இடம் ஈறாகச் சொல்லப்பட்ட பத்தொன்பது பொருளும் அவை போல்வன பிறவும் ஏழாவதன் திறத்தன, எ-று.

கண்ணென்னும் பொருளாவது 'கண்ணின்று கூறுதலாற்றான் அவனாயின்' (கலி.37) எனவும், 'கண்ணகல் ஞாலம்' எனவும் கண் என்னும்இடைச்சொல்லான் உணர்த்தப்படும் இடப்பொருண்மை. தேவகை என்பது திசைக்கூறு. கண் கால் புறம் அகம் உள் என்பன முதலியனவற்றது பொருள் வேற்றுமை வழக்கு நோக்கியுணர்ந்து கொள்க.

[4]கண்ணின்று சொல்லியானை என்கண் நின்று இவை சொல்லற்பாலை யல்லை என்றும், ஊர்க்காற் செய்யை ஊர்க்கட்செய் என்றும், ஊர்ப்புறத்து நின்ற மரத்தை ஊர்க்கண் மரம் என்றும், எயிலகத்துப் புக்கானை எயிற்கட் புக்கான் என்றும், இல்லுள் இருந்தானை இற்கண் இருந்தான் என்றும், அரசனுழை யிருந்தானை அரசன்கண் இருந்தான் என்றும், ஆலின் கீழ்க் கிடந்த ஆவை ஆலின்கட் கிடந்தது என்றும், மரத்தின் மேல் இருந்த குரங்கை மரத்தின்கண் இருந்தது என்றும், ஏர்ப்பின் சென்றானை ஏர்க்கட் சென்றான் என்றும், காட்டுச்சார் ஓடுவதனைக் காட்டின்கண் ஓடும் என்றும், உறையூர்க் கயல் நின்ற சிராப்பள்ளிக்குன்றை உறையூர்க்கட்குன்று என்றும், எயிற்புடை நின்றாரை எயிற்கண் நின்றார் என்றும், வடபால் வேங்கடம் தென்பால் குமரி என்பனவற்றை வடக்கண் வேங்கடம் தெற்கண் குமரி என்றும், புலிமுன் பட்டானைப் புலிக்கட்பட்டான் என்றும், நூலின் இடையும் கடையும் தலையும் நின்ற மங்கலத்தை நூற்கண் மங்கலம் என்றும், கை வலத்துள்ளதனைக் கைக்கண் உள்ளது என்றும், தன்னிடத்து நிகழ்வதனைத் தன்கண் நிகழ்வது

---

3. தட்டுப்புடை—ஒருவகை விளையாட்டு, முறங்கொண்டு பயிர்களைப் புடைத்தலும் ஆகும்.
4. கண்ணின்று—முன்னிடத்து நின்று.

என்றும் அவ்விடப் பொருள் பற்றி ஏழாம் வேற்றுமை வந்தவாறு கண்டு கொள்க.

எனாஅ என்பது எண்ணிடைச் சொல்

கண் முதலாயினவெல்லாம் உருபு என்றாரால் உரையாசிரிர் எனின், உருபாயின், ஏழாவதற்குக் கண் என்பது உருபாதல் [5]மேலே பெறப்பட்டமையாற் பெயர்த்துங் கண்கால் என்றல் கூறியது கூறிற்றாம் ஆகலானும், [6]ஊர்ப்புறத்திருந்தான், ஊரகத்திருந்தான், கைவலத்துள்ளது கொடுக்கும் எனப் புறம் அகம் வலம் என்பனவற்றுழி அத்துச் சாரியை கொடுத்து உதாரணம் காட்டினமையானும் அவர்க்கு அது கருத்தன்றென்க.

[7]உருபு அல்ல வேல், என்னுழை, என்முன் என நிலைமொழி உருபிற்கோதிய செய்கை பெற்றவாறு என்னையெனின்' 'அதற்

---

5. ஏழாகுவதே கண் எனப் பெயரிய என மேற் கூறப்பட்டமையால் மீண்டும் கண் கால் எனக்கூறியது, கூறியது கூறிற்றாம். இளம்பூரணர் 'ஏழாகுவதே...அதன்பால என்மனார்' என ஒரு சூத்திரம் கொண்டமையால் ஒரே சூத்திரத்தில் கண் இருமுறை வருவது கூறியது கூறலாகும் என்க. சேனாவரையர் முதலியோர் 'கண்கால் எனத் தொடங்கி என்மனார் வரை ஒரு சூத்திரமாகப் பிரித்தலின், இரண்டு சூத்திரத்திலும் கண் கூறியது கூறியது கூறிற்றாகும் எனினும் கண் உருபின் சிறப்பு நோக்கி மீளவும் கூறினார் ஆசிரியர் என அமைதி காணலாம். ஒரே சூத்திரமாகக் கொண்ட இளம்பூரணரை மறுத்தது பொருந்தும்.

6. சாரியை பெயர்க்கும் உருபுக்கும் இடைவரும். ஊர்ப் புறத்திருந்தான் என்பதில் அத்துச் சாரியை புறம் என்பதற்குப் பின்னர் வந்தமையால் புறம் உருபில்லை. இளம்பூரணரே அவ்வுதாரணம் காட்டியுள்ளார். ஆதலின் கண் முதலாயின உருபு இல்லை.

7. யான் என்பது உருபுடன் சேரும்போது என் எனத் திரியும்—என்னை எனக் காண்க. அது போலவே உழை என்பது வந்துழி யான்+உழை என்னுழை எனத் திரிகிறது. அதனால் உழை என்பது உருபு என்பது ஒரு கொள்கையாகக் காட்டப்படுவதைப் பின்வருமாறு மறுக்கிறார். யான் என்பது உருபு வரும்போது மட்டுமல்லாமல் உருபின் பொருள்பட வரும் சொல்லின்

பொருட்டாகலின்' (சொல். 76) எனவும், 'தம்முடைய தண்ணளியும் தாமும்' எனவும் உருபின் பொருள்பட வரும் பிறமொழி வந்துழியும் நிலைமொழி அச்செய்கை பெற்று நிற்றலின் அச்செய்கை உருபு புணர்ச்சிக்கேயென்னும் யாப்புறவின்றென்க.

அன்ன பிறவும் என்றதனால், பொருட்கண் உணர்வு, என் கண் அன்புடையன், மலர்க்கண் நாற்றம், ஆகாயத்துக்கட்பருந்து என்னுந் தொடக்கத்தன கொள்க.

தெய்.

("ஏழாகுவதே......தோன்று மதுவே")

ஏழாம் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : ஏழாம் வேற்றுமையாவது கண் எனப் பெயர் பெற்ற வேற்றுமைச் சொல். அது வினை நிகழுமிடத்து நிலத்தினும், காலத்தினும் அவ்விருவகைக் குறிப்பினும் தோன்றும், எ-று.

---

முன்னரும் திரிதல் உண்டு. யான்+உடைய=என்னுடைய என வரும். 'தம்முடைய தண்ணளியும் தாமும்' என்பதில் தாம்+உடைய=தம்முடைய எனத்(தாம் தம் எனத்) திரிந்தது காண்க. அவ்வாறே யான்+கண்=என் கண் என வருவது போலக் கண் என்னும் உருபின் பொருள்பட வந்த உழை என்பதன் முன்னும் யான் என்பது என் எனத் திரிந்து வந்தது.

உருபு வருமிடத்து நிலைமொழி அடையும் விதியினை உருபின் பொருள்பட வரும் சொல் முன்னரும் அடையும். அது+கு=அதற்கு என ஆவது போல நான்காம் வேற்றுமையுருபின் பொருளைத்தரும் பொருட்டு என்பதன் முன்னரும் அது+பொருட்டு= அதன் பொருட்டு என அன்சாரியை பெறும் விதியை யடைந்தது.

எனவே நிலைமொழி உருபு வருமிடத்து அடையும் விதியினை உருபு வருமிடத்துத்தான் அடையும் என்பதில்லை; உருபின் பொருள் படவரும் சொல்லின் முன்னரும் அடையலாம். ஆதலின் கண்கால் முதலியன உருபல்ல. உருபின் பொருள்பட வருவன.

எனவே, தொழில் நிகழாதவழி, நிலமும், காலமும் ஏழாம் வேற்றுமை யாகா என்ற வாறாம்'

உ-ம் : அரங்கின்கண் வனைந்தான், மாடத்தின்கண் இருந்தான் இவை நிலம். காலைக்கண்[1] வந்தான், மாலைக் கண் [2]வந்தான் இவை காலம். போரின்கண் வந்தான் என்ற வழி இடம் குறித்தான். ஆயின் போர் அட நின்ற விடத்து வந்தான் எனவும் காலம் குறித்தானாயின் பொர நின்ற காலத்து வந்தான் எனவும் நிலமும் காலமும் குறித்துக் கொள்ளக் கிடந்தது. ஆலின் கீழ்க் கிடந்தது ஆ, மேலிருந்தது குரங்கு இவ்வாறு வரும் இடவேறுபாடுங் குறித்துக் கொள்ளப் படும். பிறவும் அன்ன. இவை பொருண்மைக்கண் உருபு புலப் படாமல் இடவேறுபாடு காட்டுவனசில கண்டவற்றை எடுத் தோதுகின்றார் வருகின்ற சூத்திரந்தான்

(''கண்கால்......அதன்பாலஎன்மனார்'')

இஃதுஏழாம் வேற்றுமைப் பொருள் வேறுபாடுஉணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : கண் முதலாக இடம் ஈறாக ஓதப்பட்டனவும் அத் தன்மைய பிறவும் ஏழாம் வேற்றுமைப் பால, எ-று,

இவையெல்லாம் பெயரைச் சார்ந்து தனித்தனிவரின் பெயராகி உருபேற்கும். பெயரைச் சார்ந்து இடமும் காலமும் ஆகிய பொதுமை உணர வரினும், உருபு மாத்திரமாகி நிற்கும். இடம் வேறுபாடு உணர வரின் உருபு புலப்படாது பொருள் உணர, வரும்.

அகத்தை அகத்தொடு புறத்தை புறத்தொடு என்பன தனித்து உருபேற்றன. அரங்கினுள் அகழ்ந்தான், மரத்துழை இருந்தான் என்பன உருபாகி நின்றன.

இனி இடம் வேறுபாடு காட்டுமாறு : கண் என்பது இடம். அரசர்கட் சென்றான் என்பது. நெறிக்கட் சென்றான் என்றாற் போலச்[3] சேறற் றொழிற்கு அரசன் ஆதாரம் ஆதலின்றி அவனிடத்துச் சென்றாள் என உருபு புலப்படாமல் இடம் என்பதோர் பொருள் உணர்த்தியவாறு கண்டு கொள்க.

---

1,2. வனைந்தான் (பாடம்)—உரைக்கோவையில் உள்ளது.
3. சேறற்றொழிற்கு என்பது உரைக்கோவையில் இல்லை,

கால் : ஊர்க்கால் நிவந்த பொதும்பர். ஊரை[4]யடுத் தலாகிய பொருள்மேல் வந்தது.

புறம் : சுவர்ப் புறத்துப் பாவை. பாவைக்கு ஆதாரம் ஆகின்றது சுவாராயினும் அச்சுவரகத்துப் பாவையின்மையின் புறம் என ஒரு பொருள் தோன்ற நின்றது.

அகம்: எயிலகத்துப் புக்கான். புறம் உண்டாகலின் அகம் என ஒரு பொருள் தோன்ற நின்றது.

உள்: சிலையுட் பொருள். சிலைப்புறத்துப் பொருள் இன்மை யின் உள் என ஒரு பொருள் தோன்றி நின்றது.

உழை: அரசனுழையிருந்தான். அரசன் அருகு என ஒரு பொருள் தோன்ற நின்றது.

கீழ்: மாடத்தின் கீழ் இருந்தான். மேல் அன்மை காட்டிற்று.
மேல்: மாடத்தின் மேல் இருந்தான். கீழ் அன்மை காட்டிற்று,
பின்: அரசன்பின் இருந்தான். முன் அன்மை காட்டிற்று.

சார்: காட்டுச்சார் ஓடும் குறுமுயல் காட்டைச் சார்ந்த இடம் என்பது தோன்றிற்று.

அயல்; மனையயல் இருந்தான். மனையல்லாத பிறஇடம் தோன்ற வந்தது.

புடையென்பது பக்கம். எயிற்புடை நின்றான். எயிலின்கண் ஒரு பக்கம் என்பது தோன்றிற்று.

தேவகை என்பது திசைக்கூறு. அரங்கின் வடக்கிருந்தான், தெற்கிருந்தான் என்றவழி வடக்கு, தெற்கு என ஒரு பொருள் தோன்றி நின்றது.

முன்: அரசன் முன் இருந்தான். பின் அன்மை காட்டிற்றி.

இடை கடை தலை என்பன: கலத்தின் இடை நின்றான், கலத்தின் கடை நின்றான், கலத்தின்றலை நின்றான் என மரக் கலத்தின் இடவேறுபாடு காட்டின.

வலம் இடம் என்பன; அரசன் வலத்திருந்தான் அமைச்சன், அரசன் இடத்திருந்தான் சேனாபதி என வலம் இடம் எனச் சில பொருள் தோன்றி நின்றன,

'அன்ன பிறவும்' என்றதனால் இல், வயின், வழி, மாட்டு, தேம், மருங்கு. பால, முதல் என வருவனவெல்லாம் கூறிய நெறியினால் வேறுபாடு உணர்த்துவனவும். உருபு மாத்திரமாகி நிற்பனவும், பெயராகி நிற்பனவும் அறிந்து கொள்க.

---

4, அடுத்தல் என்பது உரைக் கோவையில் இல்லை,

நச்.

("ஏழாகுவதே......தோன்றுமதுவே")

இது முறையானே ஏழாவது இப்பொருட்கண் வரும் என்கின்றது.

இ-ள்: கண் எனப் பெயரிய வேற்றுமைக்கிளவி ஏழாகுவதே— மேல் கண் என்று பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச் சொல் ஏழாவதாம், அது வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின் அனைவகைக் குறிப்பின் தோன்றும்—அது வினை செய்யாநிற்றலாகிய இடத்தின்கண்ணும் வினைநிகழாது வரையறையுடையதோர் நிலமாகிய இடத்தின்கண்ணும் வினை நிகழாது வரையறைப் பட்டு நிற்கும் காலமாகிய இடத்தின் கண்ணும் என மூவகைக் குறிப்பின் கண்ணும் தோன்றும்; எ-று.

எனவே ஏழாவது இடப்பொருட்டாயிற்று.

உ-ம்: தட்டுப்புடைக்கண் வந்தான், மாடத்தின்கண் இருந்தான், கூதிர்க்கண் வந்தான் என வரும் இவை இடமும் இடத்து நிகழ் பொருளும் வேறாய் வந்தன.

குன்றத்தின்கண் குவடு. இஃது அவ்விரண்டும் ஒன்றாய் வந்தது.

'குறிப்பிற்றோன்றும்' என்றது அவற்றையிடம் எனக் கருதிய வழியே அவ்வேழன் உருபு தோன்றுவது; அல்லுழித் தோன்றாது என்றவாறு.

("கண்கால்......அதன்பால என்மனார்")

இஃது இவ்வேழாவதற்கு முடிக்க வரும் பொருள் வேறுபாடு இன்றி உருபின் பாகுபாடே உடைமையின் உருபின் பாகுபாடே கூறுகின்றது.

இ-ள்: கண்—கண் என்னும் பொருளும், கால்...புடை—கால் முதலாகப் புடையீறாகச் சொல்லப்பட்ட உருபுகளும், தேவகை எனா—தேவகை என்னும் திசைக் கூற்றுப் பொருண்மையும், முன்...இடம் எனா—முன் முதலாக இடம் ஈறாக ஓதப்பட்ட உருபுகளும், அன்ன பிறவும்—அவை போல்வன பிற உருபுகளும், அதன் பால என்மனார்—ஏழாவதன் கூற்றன என்று கூறுவர் புலவர், எ-று.

[1]இச்சூத்திரத்தால் கூறிய உருபுகள் ஓர் இடத்தின் ஏகதேசத்தினை வரையறுத்து உணர்த்தும்வழி ஆறாவதனை உணர்த்தியும், ஓர் இடத்தினை வரையறுத்து உணர்த்தாது கண் என்பது போல இடம்என முழுதுணர்வு செல்ல நின்றவழி ஏழாவதனையே யுணர்த்தியும் நிற்கும் சிறப்பின்மை கருதி வேறாக எடுத்தோதினார். ஏழாவதற்கு இம்மூவகைப் பொருட்பாகுபாடு அன்றி வேறு பொருட்பாகுபாடு இன்மையின் [2]முன்னையன போலப் பொருளினைப் பகுத்து ஓதார் ஆயினார்.

ஆசிரியர், ''கூறிய முறையின் உருபு'' (வேற்.8) ''இறுதியும் இடையும்'' (வேற்.ம.20) என்னும்சூத்திரங்களால் பெயர்இறுதிக்கும் முடிக்கும் சொற்கும் முன் நிற்பது உருபு என்று கூறினமையால் [3] பொருளிடை நில்லாமையும் பெற்றாம்.

[4]சிறந்த கண் என்னும் உருபை முற்கூறி, ஈண்டுக் கண் என்பதனைச் சிறப்பில்லா உருபுகளோடு எடுத்து ஓதினார். 'கண்ணகல் ஞாலம்' (நள. சுய 154) என்புழி அக்கண் ஞாலந்

---

1. ஊரகத்திருந்தான் என்பது, 'அகம்' என்பது உள்ளிடம் எனப் பொருள்தரின் ஊரினது உள்ளிடத்திருந்தான் எனப் பொருள் தரும். அப்போது அகம் என்பது ஊர்க்கு ஆறாம் வேற்றுமைப் பொருளமைய வந்தது. அதுவே ஊரில் இருந்தான் எனப் பொருள் தரும் போது ஊர்க்கண் இருந்தான் என்பதுபோல ஏழாம் உருபாக வந்தது. 'ஊரினது அகம்' என்னும்போது அகம் என்பது ஆறாம் வேற்றுமையையுணர்த்தியது என நச்சினார்க்கினியர் கூறியது பொருந்தாது. அதில் 'அகம்' ஊரின் உள்னிடத்தையுணர்ந்தும் பெயர்ச்சொல்; உருபன்று.—சிவ.
2. இரண்டாம் வேற்றுமை முதலியவற்றுக்குக் ''காப்பின் ஒப்பின'' முதலிய சூத்திரங்களாற் பொருட்பாகுபாடு உணத்தியது போல.
3. பொருள் என்பது இடத்து நிகழ் பொருள். குன்றத்துக் கண்குவடு என்பதில் குன்றம் இடம்-குவடு நிகழ்பொருள் குவடுக்கண் என உருபு பொருளில் இல்லாமை காண்க.
4. கண்ணகல்ஞாலம் என்பதில் கண் என்னும் உருபு இருந்தாலும் அது ஞாலத்தையே உணர்த்தும் இடைச்சொல்லாகப் பயன் பட்டமையின் சிறப்பிலலா உருபாயிற்று. (இது சிறந்த கருத்தன்று)

தன்மையே யுணர்த்தி ஓர்இடத்தினை வரையறுத்து உணர்த்தாது நிற்பதோர் இடைச்சொல் என்பது உணர்த்துதற்கு.

[5]தேவகை என்னும் பொருள் வரையறைப்படாது சொல்லுவான் குறிப்பிற்றாய் நிற்றலின் இடத்துள் அடக்காராயினார்.

[6]இவ்விரண்டு பொருட்கும் வேறு ஓர் சூத்திரம் செய்யாது இவ்வுருபுகளுடனே ஓதினார், சூத்திரம் சுருங்குதற்கு.

உ-ம்: ஊர்க்கால் இருந்தான்: ஊர்ப்புறத்து இருந்தான், மாடத் தகத்து இருந்தான், ஊருள் இருந்தான், சான்றோருழைச் சென்றான், மாடத்துகீழ் இருந்தான், மாடத்துமேல் இருந்தான், ஏர்ப்பின் சென்றான். காட்டுச்சார் ஓடும் களிறு, ஊரயல் இருந் தான், ஊர்ப்புடையிருந்தான், வடக்கண் வேங்கடம், தேர்முன் சென்றான்; சான்றோரிடையிருந்தான், கோயிற்கடைச் சென் றான், தந்தைதலைச் சென்றான், கைவலத்துள்ளது கொடுக்கும், கையிடத்துப் பொருள் எனவரும்.

[7]அன்னபிறவால் வருவன: குடத்தில் விளக்கு, ஊரிலேயிருந் தான், 'கிழவோள் தேஎத்து' (இறை. அகப். 8) எனவும், [8]பொருட்கண் உணர்வு, மலர்க்கண் நாற்றம், ஆகாயத்துக்கண் பருந்து எனவும் வரும்.

இன்னும் மணியின்கண் ஒளி, கையின்கண் விரல், நிலத்தின்கண் எழில், ஆடற்கண் அழகு எனக் கிழமையும் சினையும் பண்பும் வினைப் பெயரும் பற்றி வரும்.

[9]இனிக் கண்கால் முதலியன உருபை விளக்குதற்கு அவ் வுருபின் பொருளாய் நின்று, கண்என் உருபு விரித்துக்கொண்டு

---

5. இவ்விளக்கம் தேவைறற்றது.
6. இவ்விரண்டு பொருள் என்றது ஆறாவதும் ஏழாவது மாக வரும் எனக் கூறிய பொருள்களை. தேவகை என்பதும் பிற உருபுகளும் ஆகியவை எனினும் ஆம்.
7. இல், இலே, தேம் என்பன உருபுகள்
8. பொருட்கண் உணர்வு—பொருள் ஓரிடம் உணர்வு ஓரிட மாக அமைந்தன. மலர்க்கண் நாற்றம்—பொருள் முழுதமைந்தது. ஆகாயத்துக்கண் பருந்து—ஆகாயம் என்பது ஓரிடமின்றாயினும் உள்ளது போலக் கருதிக் கூறப்பட்டது.
9. இது முதலாக வருவனவற்றுக்கு உரையிறுதியில் விளக்கம் காண்க.

நிற்கும் எனின், கண் என்னும் உருபின் பொருளாவது, கண் என்னும் இடைச்சொல்லால் உணர்த்தப்படும் இடப்பொருண்மை என்று பொருள் உரைத்தால், பின் வருகின்ற இடப்பொருண் மையை முன்னும் கூறிற்றேயாமாகலின் கூறியது கூறிற்றாம்.

அல்லதூஉம், 'கண்ணகல் ஞாலம்' என்புழிக் கண் என்னும் இடைச் சொல்லான் உணர்த்தும் இடப் பொருண்மைக்கும் இடத்துக்கண் எனக் கண் என் உருபு மீண்டுங் கூறல் வேண்டும்.

அல்லதூஉம், "கண்ணின்று கூறுதல் ஆற்றான் அவனாயின்" (கலி. 37 : 8) என்பதற்கு என்கண் நின்று எனத் தோன்றா எழுவாய் நின்று கண் என் உருபு ஏற்று நின்றதாம்.

அல்லதூஉம், 'வடக்கண் வேங்கடம்' என்புழிக் கண் என் உருபு விதித்தலின் ஒழிந்தவற்றிற்கு ஒவ்வாதாம்.

அல்லதூஉம், ஆலின் கீழ்க் கிடந்தஆ, மரத்தின் மேல் இருந்த குரங்கு என்பன முதலியவற்றிற்குக் கண் என் உருபு கொடுத்து உலகம் வழங்காமை உணர்க.

முன்னர் இரண்டாவது முதலிய உருபுகளை முடித்தற்கு எடுத்தோதிய காப்பு முதலிய பொருள்களைப்போல உருபை முடித்து நில்லாது ஈண்டுக் கூறிய பொருள்கள் கண் என்னும் உருபையே உணர்த்தி நின்றன என்றலின், சேனாவரையரும் இப் பொருள்களை உருபு என்றே கூறினராயிற்று. அங்ஙனம் கூறி அத்துச் சாரியை கொடுத்து உதாரணம் காட்டவே, உருபின் பின்னரும் அத்துச் சாரியை வருதல் தாமும் நேர்ந்தாராயிற்று.

கல்.

என்னுதலிற்றோ வெனின் நிறுத்த முறையானே ஏழாம் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்; ஏழாம் எண்ணு முறைமைக் கண்ணதாகிய கண் என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல், வினை செய் இடமும் நிலமும் காலமும் ஆகிய மூன்று பொருட் கண்ணும் வரும். அதன் உருபு வரும் பாகுபாட்டைச் சொல்லின் கண் என்னும் உருபு முதலாய் புடை என்னும் உருபு ஈறாக ஓதப்பட்ட உருபுகளும், இடையே தேவகை என ஓதிய திசைக் கூற்றுப் பொருண்மையும், பின்னரும் முன் என்னும் உருபு முதலாக இடம் என்னும் உருபு ஈறாக எடுத்தோதப்பட்ட உருபுகளும், அத் தன்மைய பிற உருபுகளும் அவ்வேழாவதன் கூற்றன என்பர் புலவர், எ-று.

வினை செய்யிடம்-ஒரு தொழில் நிகழும் இடம். நிலம் என்பது ஒரு தொழில் நிகழாது வரையறையுடையதோர் இடம். காலம் என்பது ஒரு தொழில் நிகழ்தற்கு இடமாய் வரையறைப்பட்டு நிற்பது. இம்மூன்றன் கண்ணும் ஏழாவது வருமிடத்து இடமும் இடத்து நிகழும் பொருளும் வேறுபட வருவனவும் வேறுபடாமல் வருவனவும் என இருவகைய.

உ-ம்: வினை செய்யிடம்: தட்டுப் புடைக்கண் வந்தான். தட்டுப்புடையுள் வலியுண்டு.

நிலம்: குன்றத்துக்கட் கூகை, குன்றத்துக்கட் குவடு, ஆகாயத்துக்கட் பருந்து.

காலம்: மாரிக்கண் வந்தான், [1]மாரிக்கண்ணாள் வந்தாள் எனவரும்.

கண் என்பது. ஊர்க்கண் இருந்தான்.
கால்: ஊர்க்கால் இருந்தான்.
புறம்: ஊர்ப்புறத்திருந்தான்.
அகம்: மாடத்தகத்திருந்தான்.
உள்: ஊருள் இருந்தான்
உழை: சான்றோருழைச் சென்றான்.
கீழ்: மாடத்துக்கீழ் இருந்தான்.
மேல்: மாடத்துமேல் இருந்தான்.
பின; ஏர்ப்பின் சென்றான்.
சார்: காட்டுச்சார் ஓடுங்களிறு.
அயல்: ஊரயல் இருந்தான்.
புடை: ஊர்ப்புடையிருந்தான்.

இவையெல்லாம் உருபு.

தேவகை என்பது திசைக்கூறு. இது பொருள். திசையென்பது ஆகாயம் போல்வரையறைப்படாதுசொல்லுவான்குறிப்பினவாய் நிற்றலின் வேறு பொருள் என்று, நிலம் என்புழியடக்காது கொண்டு போந்து கூறினார் போலும். வடக்கண் வேங்கடம், தெற்கண்குமரி எனவரும்.

---

1. மாரிக்கண்ணாள்-மாரிக்காலத் தெய்வம். மாரி - கண் + ஆள் எனப்பிரித்து விகுதியால் பெண் தெய்வம் சொள்க. இவ்வுதாரணம் இடமும் இடத்து நிகழ் பொருளும் வேறுபடாமல் வந்ததற்காகும்.

முன்: தேர் முன் சென்றான்
இடை: சான்றோரிடையிருந்தான்
கடை; கோயிற்கடைச் சென்றான்
தலை: தந்தை தலைச் சென்றான்
வலம்: கைவலத்துள்ளது கொடுக்கும்.
இடம்: கையிடத்துப் பொருள்

என வரும்.

பிறவும் என்றதனால், கிழவோள் தேஎத்து. கிழவி[2] மாட்டு என்றாற் போல்வன கொள்க.

ஏனை வேற்றுமை போலப் பொருட் பாகுபாடு அன்றி உருபின் பாகுபாடுண்மையின் அதனை விரித்தோதினார் எனக் கொள்க. ஓதின உருபுகள் எல்லாவற்றினும் கண் என்னும் உருபு சிறந்தமையின் முன் வைத்ததென்பது.

மற்றுப் புறம் அகம் என்பன போல்வன வெல்லாம் பெயராய் [3]ஆறாவதன் பொருண்மையாய் வருகின்றமையின் ஏழன் உருபு ஆமாறு என்னை எனின், அகம், புறம் என்பன ஓரிடத்தினை வரையறுத் துணர்த்தும் வழி ஆறாவதாம்: அவ்வாறின்றிக் கண் என்பது போல் இடம் என முழுதுணர்வு செல்ல நின்றவழி ஏழாவதாம் எனக் கொள்க. இது நோக்கிப் போலும் கண் கால் எனக் கண் என்பதனை இருகாலாவதும் கூறியது என்பது. [4]இவ்வாறன்றிக் கண் என்பது ஓர் இடத்தினை வரையறாது முழுவதும் உணர நிற்கும் உருபு என்றும், அல்லன ஓர் இடங்களையும் வரையறுத்துக் கொண்டு இடப்பொருள் உணர்த்தி நிற்கும் உருபு எனவும் கூறுவதோர் நயம் உண்டு போலும்.

ஒரு.

("ஏழாகுவதே.........தோன்றுமதுவே")

என்பது கண் என்று பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச் சொல் ஏழாவதாம்; அது வினை செய்ய நிற்றலாகிய யிடத்தின்கண்ணும் வினை நிகழாது வரையறையுடையதோர் இடத்தின் கண்ணும், வினை நிகழாது வரையறைப்பட்டு நிற்கும் காலமாகிய இடத்தின் கண்ணும் என

2. மாட்டு—உருபு.
3. நச்சினார்க்கினியர் கூற்றைத் தழுவியது—பொருந்தாது.
4. இப்பகுதி சிறந்த கருத்து.

மூவகைக் குறிப்பின் கண்ணுந் தோன்றும். எனவே, ஏழாவது இடப்பொருட்டாயிற்று.

உ—ம் : தட்டுப்புடைக்கண் வந்தான், மாடத்தின்கண் இருந்தான், கூதிர்க்கண் வந்தான் என வரும். இவை இடமும் இடத்தின் நிகழ் பொருளும் வேறாய் வந்தன. குன்றத்துக் கட்குவடு; இது அவ்விரண்டும் ஒன்றாய் வந்தது. குறிப்பிற் றோன்றும் என்றவற்றையிடம் எனக் கருதியவழி அவ்வேற்றுமை தோன்றுமிடமாகக் குறிக்கப்படாதவழி யப்பெயர்க்கண் அவ்வேற்றுமை தோன்றாது என்பதாம்.

(''கண்கால்........அதன்பால என்மனார்'')

என்பது கண் என்னும் பொருளும் கால் முதலாகப் புடையீறாக ஓதப்பட்ட உருபுகளும் தேவகை என்னும் திசைக் கூற்றுப் பொருண்மையும் முன்முதலாக இடம் ஈறாக ஓதப்பட்ட உருபுகளும் அவை போல்வன பிற உருபுகளும் அவ்வேழாவதன் கூற்றன என்று கூறுவர் புலவர்

சிறந்த கண் என்னும் உருபு முற்கூறி மீட்டும் கண் என்பதனைச் சிறப்பில்லா உருபுகளோடு எடுத்துஓதினார், 'கண்ணகல் ஞாலம்' என்புழி அக் கண், ஞாலந் தன்னையே யுணர்த்தி ஓர் இடத்தினை வரையறுத்து உணர்த்தாது நிற்பதோர் இடைச் சொல்' என்பது உணர்த்துதற்கு.

தேவகை என்னும் பொருள் வரையறைப் படாது சொல்லுவான் குறிப்பிற்றாய் நிற்றலின் நிலத்துள் அடக்காராயினார். அவ்விரண்டு பொருட்கும் வேறோர் சூத்திரஞ் செய்யாது இவ்வுருபுகளுடனே ஓதினார் சூத்திரம் சுருங்குதற்கு.

இச்சூத்திரத்தாற் கூறிய உருபுகள் ஓர் இடத்தின் ஏகதேசத்தினை வரையறுத்துணர்த்தும் வழி ஆறவதனை யுணர்த்தியும், ஓரிடத்தினை வரையறுத்துணர்த்தாது கண் என்பது போல இடம் என முழுதுணர்வு செல நின்றுழி ஏழாவதனையே உணர்த்தியும் நிற்கும் சிறப்பின்மை கருதி வேறாக எடுத்தோதினார்.

உ—ம் : ஊர்க்கால் இருந்தான், ஊர்ப்புறத்திருந்தான், மாடத்தகத்திருந்தான், ஊருள் இருந்தான், சான்றாருழைச் சென்றான், மாடத்துக்கீழ் இருந்தான், மாடத்து மேல் இருந்தான், ஏர்ப்பின் சென்றான், காட்டுச்சார் ஓடுங்களிறு, ஊரயல்

இருந்தான், ஊர்ப்புடையிருந்தான், வடக்கண் வேங்கடம், தெற்கட்குமரி, கீழ்க்கட்கடல், மேற்கண்மலை, தேர் முன் சென்றான், சான்றாரிடையிருந்தான், கோயிற்கடை சென்றான், தந்தைதலைச் சென்றான், கைவலத்துள்ளது கொடுக்கும், கையிடத்துப் பொருள்.

அன்னபிறவால் வருவன, குடத்தில் விளக்கு, ஊரிலேயிருந்தான், கிழவோள்தேத்து, கிழவிமாட்டு எனவும், பொருட்கண் உணர்வு, மலர்க்கண் நாற்றம், ஆகாயத்துக்கட் பருந்து எனவும் வரும்.

இன்னும் மணியின்கண் ஒளி, கையின்கண் விரல், நிறத்தின் கண் எழில், ஆடற்கண் அழகு எனக்கிழமையும் சினையும் பண்பும் வினைப் பெயரும் பற்றி வரும்.

[1] இனிக் கண்கால் முதலான உருபைவிளக்குதற்கு அவ்வுருபின் பொருளாய் நின்று கண்ணென் உருபு விரித்துக்கொண்டு நின்றதெனின் 'கண்' என்னும் உருபின் பொருளாவது கண் என்னும் இடைச் சொல்லான் உணர்த்தப்படும் இடப்பொருண்மை என்று பொருள் உரைத்தாற் பின்வருகின்ற இடப் பொருண்மையை முன்னும் கூறிற்றாம்; ஆதலிற் கூறியது கூறிற்றேயாம்.

அல்லதூஉம் 'கண்ணகல் ஞாலம்' என்புழிக் கண் என்னும் இடைச்சொல்லான் உணர்த்தலே இடப்பொருண்மை குறிக்கும் இடத்துக்கண்ணே, கண் என் உருபு மீட்டும் கூறல் வேண்டும்.

அல்லதூஉம் 'கண்ணின்று கூறுதல் ஆற்றான் அவனாயின்' என்புழி [2] என்கண் நின்று' எனத் தோன்றா எழுவாய் நின்று கண் என் உருபு ஏற்று நின்றதாம்.

அல்லதூஉம், 'வடக்கண் வேங்கடம்' என்புழிக் கண் என் உருபு விரித்தலின் ஒழிந்தவற்றிற்கு ஒவ்வாவாம்.

அல்லதூஉம், 'மரத்தின் கீழ்க் கிடந்தவா' 'மரத்தின் மேல் இருந்த குரங்கு' என்பன முதலியவற்றிற்குக் கண் என் உருபு கொடுத்து உலகம் வழங்காமையும் உணர்க.

---

1. இது நச்சினார்க்கினியரைத் தழுவியெழுதியதாம்
2. கண் இற்றெனத் என்பது உரைக்கோவைப் பாடம்—தவறு.

ஆதலான் கண், கால், புறம், அகம் உள் என்பன. முதலாயின வற்றது பொருள் வேற்றுமை வழக்கு நோக்கி உணர்ந்து கொள்க.

ஆசிரியர் 'கூறிய முறையின் உருபு' 'இறுதியும் இடையும்' என்னும் சூத்திரங்களாற் பெயர் இறுதிக்கு முடிக்கும் சொற்கு முன்னுற நிற்பது உருபு என்று கூறினமையானும் பொருளிடை நில்லாமையும் பெற்றாம்.

உருபிற்குப் பின்னே அத்துச்சாரியை கொடுத்து [1]முடிந்தது பிறிதவண் நிலையலும்' என்பதனாற் கொள்க.

இச்சூத்திரம் ஏழாவதற்கு மூவகைப் பொருட்பாகுபாடன்றி வேறுபொருட்பாகுபாடு இன்மையின் முன்னையன் போலப் பொருளினைப் படுத்து ஓதாது உருபின் பாகுபாடே கூறிய வாறாம்.

*வெள்.

ஏழாம் வேற்றுமைக்குக் கண் என்பது உருபாகும் என்பது மேலே கூறப்பட்டமையால் இச்சூத்திரத்து மீண்டும் கண்கால் எனத் தொடங்குதல் கூறியது கூறலாம் ஆதலானும், இச் சூத்திரத்து வரும் புறம் அகம் வலம் என்பனவற்றுக்கு ஊர்ப் புறத்திருந்தான், ஊரகத்திருந்தான், கைவலத்துள்ளது கொடுக்கும் என உரையாசிரியர் இளம்பூரணர் அவற்றின்பின் அத்துச்சாரியை கொடுத்து உதாரணம் காட்டினமையால் புறம் அகம் வலம் என்பனவற்றை உருபெனக் கொள்ளுதல் அவர்க்குக் கருத்தன் றென்பதும்; ஆசிரியர் உருபேற்கும் பெயர்க்கும் உருபுக்கும் இடையே சாரியைப் பேறு கூறியதன்றி உருபின் பின்னர் சாரியைப் பேறு கூறாமையானும், இச்சூத்திரத்துக் கூறப்படும் கண் கால் புறம் அகம் உள் என்பன முதலாயின உலக வழக்கில் பல்வேறு இடப்பொருள்களில் ஆளப்பெறுதலானும் இவற்றை ஏழாம் வேற்றுமையுருபுகள் எனக்கொள்ளாது ஏழாம் வேற்றுமைப் பொருள் வேறுபாடுகளாகக் கொள்ளுதலே ஏற்புடைத்தாகும் என்பதும் சேனாவரையர் கருத்தாகும். எனினும் கண் கால் முதலிய இவை இடத்தின் பொதுமையுணர வரும் கண் என்னும் உருபின்வழி வாராது அவ்வுருபு நின்ற நிலைக் களத்து நின்று இடவகைகளாகிய சிறப்புப் பொருண்மை

---

* இவர் விளக்கம் சிறப்புடையது.

1. முடித்து (பாடம்)

யுணர்த்தி நிற்றல் காணலாம். அன்றியும், இச்சூத்திரத்துக் குறிப்பிட்ட கண் கால் புறம் அகம் முதலியன, முன் இரண்டாம் வேற்றுமை முதலியவற்றுக்கு எடுத்தோதிய காப்பு முதலிய பொருள்களைப் போல உருபை முடித்து நிற்பனவாகாமல் இடம் பொருளின் பொதுமை யுணர்த்தும் கண் என்னும் உருபின் நிலைக்களத்து நின்று இருவகைகளாகிய பொருள் வகையினைப் புலப்படுத்துவனவாதலின் இவை உருபின் தன்மையும் பொருளின் தன்மையும் ஒருங்குடையன எனக் கொள்ளுதல் பொருத்த முடையதாகும். இவை உருபின் தன்மையுடையனவாதல் பற்றி 'என்னுழை, என்முன்' என நிலைமொழி உருபிற்கேற்ற செய்கை பெற்றும், பொருளின் தன்மை பற்றி 'ஊரகத்திருந்தான்' 'ஊர்ப் புறத்திருந்தான்' என ஈற்றின் சாரியை பெற்றும் வந்தன எனக் கருத வேண்டியுளது.

ஆதி.

(''ஏழாகுவதே......தோன்றுமதுவே'')

கண் எனப் பெயர் கொண்ட வேற்றுமையுருபு ஏழாம் வேற்றுமையாகும். வினை நடைபெறும் பொழுது (நேரம்) நிலம் காலம் இவற்றைச் சார்ந்து இது வருவதாகும்.

போர் முடிவின்கண் வந்தான்—வினை செய்பொழுது.
மனையின்கண் துஞ்சினான்—நிலம்.
ஆடியில் விதைத்தான்—காலம்.

ஏழாம் வேற்றுமை இடம், நேரம், காலத்தைக் குறித்து நிற்கிறது.

(''கண் கால்.........அதன்பால என்மனார்'')

இங்குக் கூறப்பட்ட சொற்கள் எல்லாம் இடப்பொருள் தந்து ஏழாம் வேற்றுமையாக நிற்பன.

வழக்கில் 'இல்' ஏழன் உருபாகப் பெரும்பாலும் பயிலப்படுகின்றது. இடத்தை ஒட்டிக் குறிப்பதெல்லாம் ஏழாம் வேற்றுமை. ஊரில், பெட்டியில், மாலையில், நடப்பில்.

கண்ணில் மை பூசினான்—வேற்றுமை 7.
கண்ணில் நீர் வடிந்தது—வேற்றுமை 5—ஏன்?
அன்ன பிறவும்:—பால், வயின், அண்டை, அருகு, மாட்டு.

சிவ.

நச்சினார்க்கினியத்தில் ''இனிக் கண்கால் முதலியன'' என்பது தொடங்கியுள்ளனவற்றுக்கு விளக்கம்:—

ஊரகத்திருந்தான் என்பதில் அகம் என்பது 'கண்' என்பதன் பொருளாகிய இடம் என்னும் பொருளதாய் இருந்து பின்னர்க் கண் என்பதைக் கொண்டு 'ஊரகத்துக்கண் இருந்தான்' என வருவதைக் காண்கிறோம். அதனால் கண் கால் முதலியன கண் என்னும் உருபை விளக்குவதற்காக அதன் பொருளாகிய இடம் என்றே குறித்து நின்று பின்னர் அவ்வுருபை விரித்து நிற்கும் என்று சிலர் கூறுவர். அதை மறுப்பன பின்வருவன:-

கண் என்பதற்கு இடம் என்னும் பொருள் கொண்டால் ஊர்க்கண் இருந்தான் என்பதை ஊரகத்திருந்தான் எனக் கூறின் பொருந்தும்; மீண்டும் கண் சேர்த்து ஊரகத்துக்கண் இருந்தான் என்றால் அகம் என்பதும் இடம் உணர்த்தக் கண் என்பதும் இடம் உணர்த்தக் கூறியது கூறிற்றாகும்.

கண்ணகல்ஞாலம் என்புழிக் கண் என்பதற்கு இடம் எனக் கொண்டால் அதை விரிக்க வேண்டிப் பின்னரும் கண் சேர்த்துக் கூறுவதானால் கண்கண்ணகல்ஞாலம் எனக்கூற நேரும். அவ்வாறு கூறுதல் இன்று.

'கண்ணின்று கூறுதலாற்றான் அவனாயின்' என்பதில் கண் நின்று என்பது, 'என் கண் நின்று' என்று வருதலின் 'என்' என்னும் *தோன்றா எழுவாய்க்குக் கண் உருபாயிற்று என்பது பெறப்படும். உருபு தோன்றும் பெயரையே சாரும்.

வடக்கண் வேங்கடம் என்பதில் வடவேங்கடம் என்பதைக் கண் உருபு கொடுத்துச் சொல்கிறோம். தேவகைக்கு உருபு விரிக்கப்படுகிறது. அவ்வாறு ஊர்க்கால்கண், ஊரகக்கண் என உருபு விரித்தல் பொருந்தவில்லை.

ஆலின்கண் கிடந்தது, மரத்தின் கண் குரங்கு என்பனவாக உலக வழக்கில் கண் உருபு கொடுத்து வழங்குதல் இல்லை.

சேனாவரையரும் கண் கால் முதலியவற்றை ஏழன் பொருளை முடிக்க வந்த வகைப்பாடுகளாகக் கொள்ளாமல்— அதாவது இரண்டாவது முதலியவற்றின் பொருளை முடிக்கக் 'காப்பின் ஒப்பின்' முதலிய வந்தமை போலக் கொள்ளாமல் உருபுகள் என்றே கொண்டார்.

---

* தோன்றா எழுவாய் என்னாமல் பெயர் என்றே கூறியிருக்கலாம்.

இக்காரணங்களால் கண் கால் முதலியவற்றுக்கு மேலும் கண் கொடுத்துக் கூறக்கூடாது என்பது நச்சினார்க்கினியர் கருத்து.

இவர் மறுப்புகளுள் ஆலின்கண் கிடந்தது, மரத்தின்கண் குரங்கு என்பன போலும் வழக்கு உலகில் இல்லை என்பது தவறு. இவரே 'பெயருந் தொழிலும்' (எழுத். 132) என்னும் சூத்திரத்தின் உரையில் மரத்துக் குரங்கு, மரத்துக்கட் குரங்கு எனக் காட்டியுள்ளார். நச்சினார்க்கினியரின் இம்மறுப்புச் சேனாவரையர்க்காவது எனக் கொண்டு சுப்பிரமணிய சாஸ்திரியார் பின்வருமாறு கூறுவர்:-

சுப்.

இடைச்சொல்லாகிய கண்ணினது பொருளில் உருபாகிய கண் வரும் என்பது சேனாவரையர் கருத்தேயன்றி, அக்கண்ணின் பொருட்குப் பின் இவ்வுருபாகிய கண் வரும் என்பது அவர் கருத்தன்று என்று கூறின் நச்சினார்க்கினியர் சேனாவரையரின் மேற் கூறும் முதல் இரண்டு குற்றமும் நில்லா.

ஆலின்கீழ்க் கிடந்த ஆவை ஆலின்கட் கிடந்தது, மரத்தின் மேலிருந்த குரங்கை மரத்தின்கண் இருந்தது என்று உலகம் வழங்கியுள்ளது எனச் சேனாவரையர் கூறினர்; நச்சினார்க்கினியர் அன்று என மறுப்பர். ஆயின் 'பெயருந் தொழிலும்' (எழுத். 132) என்னுஞ் சூத்திரத்தின் உரையில் மரத்துக்குரங்கு, மரத்துக்கட் குரங்கு என்று அவரே உதாரணமாகக் கூறியதை மறந்தனர். ஆதலின், இச்சூத்திரம் கண்ணென் உருபின் பொருள்களை யுணர்த்துகின்றதா? கண்ணின் பொருளில் வரும் வேறு உருபுகளை உணர்த்துகின்றதா என்று ஆராய்தல் வேண்டும்.

கால் புறம் முதலியன உருபுகளாயின். சேனாவரையர் கூறியவாறே ஊரகத்திருந்தான் என்புழி அத்துச் சாரியை கொடுப்பது பொருந்தாது. ஏன் எனில், சாரியைகள் உயர்திணைப்பெயர்க்கும் அஃறிணைப் பெயர்க்கும் பின்வருமேயன்றி இடைச்சொற்களுக்குப் பின்னர் வாரா என்பது, "அவற்று வழி மருங்கின் சாரியை வருமே" (எழுத். 118) என்னுஞ் சூத்திரத்தால் தெளிவாய் அறியப்படுகின்றது. வேற்றுமையுருபிற்கும் பின்வருஞ் சொற்களுக்குமிடையிற் சாரியை வரும் என்று யாண்டும் விதித்திருப்பதாகத் தெரியவில்லை. மற்ற வேற்றுமையிற் சொல்லுருபுகள் வருமிடத்து அவ்வுருபுகளுக்கு முன்னேதான் சாரியை சேர்ந்துள்ளன. உ-ம்; மரத்திலிருந்து, மரத்தினுடைய.

அன்றியும், கால், புறம் முதலிய சொல்லுருபுகளை விதித்த ஆசிரியர் ஆறாவது வேற்றுமையில் உடைய என்பதையும், ஐந்தாம் வேற்றுமையில் இருந்து என்பதையும் ஏன் கூறிற்றிலர்? என்ற வினாவிற்கு விடையின்மை யறிக. இதனால் நச்சினார்க் கினியர் கூறிய மூன்றாங் குற்றம் ஒழிந்தமை காண்க.

''மேலும் காப்பின் ஒப்பின்'' (சொல்.72) என்ற சூத்திரத்தால் 'ஊரைக் காக்கும்' என்னுமிடத்தில் ஐ என்பது காக்கப்படுதல் என்ற செயப்படு பொருள் விசேடத்தைக் குறிக்கும். அப்பொருள் விசேடம் காக்கும் என்ற வினையின் தொடர்பால் நேரும். இங்கும் 'கண்கால்'... என்ற சூத்திரத்தால் மரத்துக்கட் குரங்கு என்னு மிடத்துக் கண் என்பது மேலிடம் என்ற இடவிசேடத்தைக் குறிக்கும். அப்பொருள் விசேடத்தைக் குறிக்க 'மேல்' என்ற சொல்லின் தொடர்பு அவசியமன்று. ஆயினும் 'காப்பின் ஒப்பின் என்ற சூத்திரம் 'ஐ' உருபுக்குச்செயப்படு பொருள் விசேடத்தைக் கூறியதுபோல் 'கண் கால்' என்ற இச்சூத்திரமும் கண்ணுருபுக்கு இடம்காலம் இவற்றின் விசேடத்தைக் கூறிற்று என்பதில் குற்றம் ஒன்றுமில்லை. மேலும் ஆசிரியர் *71, 73, 75, 77, 79 ஆவது சூத்திரங்களால் இரண்டாம் வேற்றுமை முதல் ஆறாம் வேற்றுமை இறுதியான வேற்றுமைகளின் பொருளைப் பொதுவாய்க் கூறித் தனித்தனி அவற்றையடுத்து 72 74. 76. 78, 80 ஆவது சூத்திரங்களால் அவற்றின் விசேடத்தைக் கூறியது போல, இங்கும் 81 ஆவது சூத்திரத்தால் ஏழாம் வேற்றுமைப் பொருளைப் பொதுவாய்க் கூற 82 ஆவது சூத்திரத்தால் அவ்வேழாம் வேற்றுமைப் பொருளின் விசேடத்தைக் கூறுகின் றார் என்பதே சூதிதிரப்போக்குக்குத் தக்கதாகும்.

பி. கு.

சிவ.

கண்கால் முதலியன உருபு என்பதினும் பொருள் பற்றி யனவே என்பது சிறக்கும். ஒவ்வொரு வேற்றுமைக்கும் முதலில் உருபு கூறிப் பின்னர் அவ்வுருபின் பொருள்பட வருவன பிறவற்றைக் கூறுவதுபோலவே, ஏழாம் வேற்றுமைக்கும் முன்னர் உருபும் உருபின் பொருளும் கூறிய ஆசிரியர், அவ்வுருபின் பொரு

---

* இரண்டாம் சூத்திரமுதல் ஏழாம் சூத்திரம்வரை சூத்திரங்களை இவ்விரண்டாக இவர் கொண்டமையின் எண்கள் இந்நூலில் மாறுபடக் காணப்படும்.

ளாகிய இடப் பொருள் பற்றி வரும் பொருள் வகைகளை விரித்தார் என்பதே நன்று.

காக்கும்: ஊரைக் காக்கும், அதனின் இயறல் மண்ணான் இயன்ற குடம். அதற்கு வினையுடைமை: கரும்புக்கு வேலி, வண்ணம்: காக்கையிற் கரிது களாம்பழம், இயற்கையின்: நிலத்தது அகலம் என இரண்டாம் வேற்றுமை முதலியவற்றின் பொருள் விரிவுகளுள் அவ்வவ்வேற்றுமையுருபுகளைச் சேர்த்து அவ்வவ்ப் பொருள்களைக் கூறுமாறு போலக் கால் முதலிய வற்றிலும் கண் உருபு சேர்த்துக் கூறுதல் வேண்டும். அகம்: ஊர்க் கண் அகத்திருந்தான். புறம்: ஊர்க்கண் புறத்திருந்தான் முதலிய வாகக் கூறுதல் வேண்டும் (கால், சார்: தேம் என்பனவற்றுக்கு அவ்வாறு ஊர்க்கண்கால், ஊர்க்கண் சார், ஊர்க்கண்தேம் எனக் கூறுதல் இயலவில்லை; அவ்வாறும் ஆசிரியர் காலத்தில் வழங்கி யிருக்கலாம்) ஊர்க்கண் அகம் என்றால் ஊரின் அக இடத்தையே குறித்தலின் அகம் என்பது கண் உருபின் பொருளாயிற்று, (ஏனையவும் இவ்வாறே) எனவே கால் முதலியன உருபாகா; உருபின் பாற்படுக்கப்படும் பொருள்களேயாம்.

இனித்தேவகை என்பதற்குத் திசைக்கூறு எனப் பொருள் கொண்டது பொருந்தாது. மற்றையனவெல்லாம் தனிச்சொற்கள் நிலையில் இருக்கத் தேவகை என்பது மட்டில் எல்லைப்பொருளில் அமைந்தது என்பது மற்றொன்று விரித்தல் என்பதாகிவிடும், அதனால் 'தேம்' என்பது கால் முதலிய சொற்போலும் ஓர் சொல்லே எனக் கொள்வதும் 'கிழவோள் தேஎத்து' என உதாரணம் காட்டுவதுமே சிறக்கும். வடக்கண் தெற்கண் என எல்லையைக் குறிப்பது சிறவாது. நன்னூலார் ''கண் கால் கடை யிடை'' நன் 302) என்னும் சூத்திரத்தில் 'தேம்' என்பதையும் சேர்த்தது சிறப்புடையதாம்.

செ. வை. சண்முகம்.

ஏழாம் வேற்றுமை வினைசெய்யிடம், நிலம், காலம் ஆகிய மூன்று பொருளில் வரும் என்று தொல்காப்பியர் கூறுகிறார். தெய்வச்சிலையார் மட்டும் வினைசெய் இடம் என்ற தனிவகை வேண்டாம் என்றும் அதை நிலத்திலும் காலத்திலும் அடக்கி விடலாம் என்றும் கருதுகிறார். ஆனால் அவ்விருவகைப் பெயரி லிருந்தும் வினை செய் இடம் சில சிறப்புப் பண்பு உடைமை யால் தனியாகக் கொள்வதே சிறப்புடையது.

காலத்தை மட்டும் குறிக்கும் பெயர்கள் மூன்றாம் வேற்றுமையை ஏற்காது. விழவால் (வினைசெய் இடம்) உயர்ந்தது சிதம்பரம்; பல்கலைக்கழகத்தால் (இடம்) உயர்ந்தது சிதம்பரம் எனக் கூறலாமேயன்றித் திங்களால் உயர்ந்தது சிதம்பரம் என்று கூற முடியாது.

காலத்தைக் குறிக்கும் சொற்களை இடப்பெயர் ஏற்காமலிருக்க, வினை செய் இடப்பெயர் ஏற்பதைக் காணலாம். விழாவின் போது வந்தான், திங்களின்போது வந்தான் என்பன 'போது' என்பதை ஏற்றுக் கொள்ளப் 'பல்கலைக் கழகத்தின் போது வந்தான்' என்பது ஏற்றுக் கொள்ளாது. எனவே வினை செய் இடம் பெயர்கள் கால இடப்பெயர்களின்றும் மாறுபடுவதால் தனிவகையாகவே கொள்ள வேண்டும்.

உருபுகள் தொகும் என்றல்

*** 78. வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை**
**யீற்றுநின் றியலுந் தொகைவயிற் பிரிந்தே) (16)**

(வேற்றுமைப் பொருளை விரிக்கும் காலை
ஈற்றுநின்று இயலும் தொகை வயின் பிரிந்தே)

**ஆ. மொ.**

அடுத்த சூத்திரத்திற் காண்க.

**பி. இ. நூ.**

**நன்.** 373

தொக்குழி மயங்குந இரண்டு முதல்ஏழ்
எல்லைப் பொருளின் மயங்கும் என்ப

**இல.** 344

ஷை ஷை

**தொன்.** 83

தொகைநிலை விரித்துச் சொல்லுங் கால்எழு
வகைநிலை யளவும் வகுக்கப் படுமே.

---

* இதனையும் அடுத்துவரும் சூத்திரத்தையும் சேர்த்து ஒரு சூத்திரமாகக் கொள்வர் இளம்பூரணர் கல்லாடனாரை யொழிந்த உரையாசிரியர். பிரிந்தே என்பதைப் பிரிந்து எனப் பாடங் கொள்வர் அவர்.

இல. 225

> வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
> ஈற்றுநின் றியலும் தொகைவயிற் பிரிந்து

முத்து. பெ. 68.

ஷ ஷ

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், வேற்றுமைக் கெல்லாம் கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: அக்கூறிய வேற்றுமைகள் தொக்கு முடியவும் வேண்டும்; அத்தொக்க வேற்றுமையுருபு விரியுங்கால் யாண்டு நின்று புலப்படுமோ எனின், மொழியீற்றுக் கண்ணே புலப்படும் என்றவாறு.

மற்று 'ஈறு பெயர்க்காகும் (வேற். 8) என்புழி விளங்காதோ வெனின், விளங்காது. ஆண்டு அது உருபு பெயரதிறுதி வந்து நிற்கும் என்றார்; அங்ஙனம் நின்ற உருபு தொகும். தொகுத்தல் என்பது புலப்படாமையன்றே; மற்று அது பின்பு புலப்படுங்கால் தான் நின்ற ஈற்றே புலப்படும் என்பது சொல்ல வேண்டும் என்பது.

கல்.

என்னுதலிற்றோ வெனின், ஐ முதலிய ஆறு உருபிற்கும் பொதுவாய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : வேற்றுமைச் சொல்லினது பொருளை விரித் துணர்த்துங் காலத்து அல்வேற்றுமைப் பொருள்கள் பெயரது ஈற்றின் கண்ணே நின்று நடக்கும்; தொக்க விடத்து நின்று, எ—று.

உ—ம் : மரங்குறைத்தான் என்பது மரத்தைக் குறைத்தான் என இறுதிக்கண் விரிந்து நின்றது. தாய் மூவர் என்பது தாயோடு மூவர் என விரிந்தது. பிறவும் அன்ன.

இது கூறிய முறையின் என்றதனான் அடங்காதோ வெனின், அஃது உருபு நிற்கும் இடம் கூறியது. அங்ஙனம் நின்ற உருபு விகாரப்பட்டுத் தொக்கு நின்று பின் விரியும் வழியும், பிறாண்டு

விரியாது முன் கூறிய ஈற்றின் கண்ணே விரியும் என முற்கூறிய வதனையே [1]திரிபு படுவழிக் கூறியதெனக் கொள்க.

79. பல்லா றாகப் பொருள்புணர்ந் திசைக்கு
மெல்லாச் சொல்லு முரியவென்ப. (17)

*[பல் ஆறு ஆகப் பொருள் புணர்ந்து இசைக்கும்*
*எல்லாச் சொல்லும் உரிய என்ப]*

ஆ. மொ:

இல.

When the sense of the case is brought out in the compounds where case sense is expressed without the case signs, all the words, which are indispensable to expand the compounds, may be used freely.

க. சு.

When one wants to expand the meanings of the cases it is said that all words which are synonymous with the words found in the collection (tokai) at the end have to be added to the list of words found in each of them.

பி. இ. நூ.

இல. 225

*பல்லா றாகப் பொருள்புணர்ந் திசைக்கும்*
*எல்லாச் சொல்லும் உரிய என்ப.*

முத்து. பெ. 108 ஷை ஷை

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இதுவும் வேற்றுமைக் கண்ணே கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: உருபு தொக்கும் விரிந்தும் நிற்கும் என்றார்; அவ்வுருபேயும் அன்று; ஆண்டுப் பிறசொற்களும் உள, அவ்வுருபே போல வந்து ஒட்ட நிற்பன; அவையெல்லாம் அவ்வுருபே போல ஆண்டே தொகுத்தலும் விரித்தலும் உடையன என்றவாறு.

---

1. திரிபுபடுவழி—தொகுதலாகிய திரிபு படுவழி
தொகையும் விரியும்

குதிரைத்தேர் என்பது குதிரையாற் பூட்டப்பட்ட தேர், ஆன் என்பது ஆண்டு உருபு. பூட்டப்பட்டது [1]என ஆண்டு உருபு அல்லது. ஆண்டு உருபு தொக்கு நின்றாங்கே நிற்கவும் அமையும்; விரித்துக் காட்டவும் அமையும் என்பது.

'பல் ஆறாகப் பொருள் புணர்ந்திசைக்கும்' என்பது பல்லாற்றானும் பொருள் ஏற்ப வந்து ஒட்டுவன என்றவாறு.

(இரண்டாவது வேற்றுமையியல் முற்றிற்று)

கல்.

என்னுதலிற்றோ வெனின் உருபு நோக்கி வரும் சொற்களதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: பல நெறியாக அவ்வவ் வேற்றுமையின் [2]பொருளொடு பொருந்தி யொலிக்கும் எவ்வகைப்பட்ட சொல்லும் வேற்றுமை போலப் பிரியாது இறுதிக்கண் விரிந்து நிற்றற்குரிய என்றவாறு.

விரித்தற்குரிய என்பது முன் நின்ற அதிகாரத்தாற் கொள்க.

